# நெட்டாஜீ சரித்திரம்

ஆசிரியர்

பிரம்மஸ்ரீ, சுப்பிரமணிய சிவம் அவர்கள்

எழுதியது.

சென்னை

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியாரால்

வெளியிடப்பெற்றது.

1930

வு செய்யப்பெற்றது] [விலை அணா 10.

PRINTED AT THE
"ANANDA BODHINI" PRESS,
No. 6. LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

# முன்னுரை

மேனாட்டு மொழிகளில் சரித்திர சம்பந்தமான கதைகள் ஏராளமாக மலிந்து கிடக்கின்றன. முற்காலத்தில் நாட்டு விடுதலைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் உயிரையும் பொருட்படுத்தாமல் தியாக உணர்ச்சியோடு போர் புரிந்த அரசர்கள், வீரர்கள் முதலியோருடைய வரலாறுகளை ஒவ்வொருவரும் தவறாமல் படிக்கவேண்டும். சரித்திரக் கதைகள் படிப்போர் உள்ளங்களில் தேசீய உணர்ச்சியைக் கிளப்பி ஊக்கத்தையும் உற்சாகத்தையும் எழுப்புகின்றன. நமது தமிழ் மொழியில் அத்தகைய நூல்கள் மிக மிகக் குறைவு. தற்காலத்தில் ஆங்கில கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்வி பயிலும் மாணவர்களுக்கு முற்கால இந்திய அரசர்களைப்பற்றியோ வீரர்களைப்பற்றியோ உள்ள உண்மை வரலாறுகள் ஒன்றுமே தெரியாது என்றே கூறவேண்டும். ஆனால் மேனாட்டு அரசர்கள், வீரர்கள் முதலானவர்களின் வரலாறுகளையும், அவர்கள் வாழ்ந்து ஆட்சி புரிந்த ஆண்டுகளையும் மனப்பாடமாக ஒப்புவிப்பார்கள். என்னே காலத்தின் கோலம்!

57593

நமது நாட்டு மக்கட்குத் தேசீய உணர்ச்சியையும், சுதந்தர வேட்கையையும் உண்டாக்கவேண்டும் என்ற நோக்கங்கொண்டு காலஞ்சென்ற தேசபக்தர் பிரம்மஸ்ரீ, சுப்பிரமணிய சிவம் அவர்கள் மகாராஷ்டிர வீரனும் சிவாஜியின் அருந்துணைவனுமான நெட்டாஜியின் வரலாற்றைக் கதாரூபமாக எழுதி 1916—17 ஆண்டுகளில் "பிரபஞ்ச மித்

திரன்'' என்னும் வாரப்பத்திரிகையில் வெளியிட்டு வந்தார்கள். எக்காரணம்பற்றியோ அப்பத்திரிகை நின்றுவிட்டதால் நெட்டாஜியின் சரித்திரமும் அரைகுறையாக நின்றுவிட்டது. பின்னர் யாம் பிரம்மஸ்ரீ சிவம் அவர்களைக் கொண்டே அதைப் பூர்த்தி செய்வித்து, உரிமைபெற்று இப்பொழுது புத்தக வடிவாக வெளியிட்டிருக்கின்றோம். இந்நூலில் அக்காலத்திய சில முஸ்லீம்களின் செய்கைகளைப் பற்றி இரண்டொரு விடங்களில் கொஞ்சம் கடுமையான சொற்கள் காணப்படுகின்றன. அச்சொற்கள் முஸ்லிம் சகோதரர்களின் மீது துவேஷ புத்திகொண்டு கூறப்பட்டவை அன்று என்பது சிறிது ஊன்றி நோக்குவார்க்கும் நன்கு விளங்கும்.

இதில் நற்குணமும் பெருந்தன்மையும் வாய்ந்த முஸ்லிம் அரசர்கள் பாராட்டப்பெற்றிருக்கிறார்கள். அக்காலத்தில் கல்வியற்ற முஸ்லிம் படைவீரர்களின் பொறுப்பற்ற தன்மையை வருணிக்க வந்த ஆசிரியர் உணர்ச்சி மேலீட்டால் கூறியுள்ள வார்த்தைகளால் எம்மீது தப்பெண்ணங் கொள்ளக்கூடாது என்று முஸ்லிம் சகோதரர்கள் எல்லோரையும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

1—5—30 நா. முனிசாமி முதலியார்.

# நேட்டாஜி சரித்திரம்

## அத்தியாயம்—1.

### தேளரி நதிதீரம்

சுமார் 250-வருஷங்களுக்கு முன்பு புனு நகரத்திலிருந்து பம்பாய் மாநகருக்கு இட்டுச் செல்லும் ரஸ்தாவில் உள்ள சவுக்கம் என்ற ஒரு கிராமத்திற்கு வெளியே மூன்று குழந்தைகள் மாலை நேரத்தில் மந்தகாசத்துடன் விளையாடிக் கொண்டிருந்தன. அவர்கள் பக்கத்தில் தேளரி என்னும் திவ்விய நதியானது, தானும் அவர்களுடன் சேர்ந்து விளையாடுவதுபோல சலசல என்ற சிறு சப்தத்துடன் சலித்துக் கொண்டிருந்தது. அக்கிராமமானது சுற்றிலும் மலைப்புறங்களால் சூழப்பட்டு நாலா பக்கங்களிலும் பச்சைப் பசேலென்று பளபளப்பைக் கொடுத்து, மிக்க ரமணீயமா யிருந்தது. சாட்சாத் எம்பெருமானுடைய இரக்க சித்தம் ஜீவராசிகளிடத்தில் பரிபூர்ணமா யிருந்தது என்பதற்குச் சந்தேகமே யில்லை. நன்செய்களும் புன்செய்களும் செழித்துக் கொழுத்து எங்கும் ஏராளமா யிருந்தன. அக்காலத்தில் ஜனங்கள் வறுமை என்பதை யறியார்கள். தேசமானது தனதான்ய புஷ்டியுடன் புன்னகை புரிந்து பூரித்துக் கொண்டிருந்தது. ஈஸ்வரனுல் சமஸ்தகோடி ஜீவராசிகளும் ரட்சிக்கப்பட்டு வறுமைக்கே வறுமை நேரிட்டிருந்தபோதிலும், ஆணவமும் அகந்தையும் மிகுந்த அக்கிரமக்காரர்கள் பலரால், அசுரத்தன்மை வாய்ந்த அநியாயக்காரர்கள் பல

ரால், தேகமே ஆத்மா போகமே மோட்சம் என்ற நீக்கொள் கையையுடைய திருடர்கள் பலரால், ஸ்வயநலப் பேயர்கள் பலரால், விரிவுற்ற புத்தியற்ற மாக்கள் பலரால் ஓரோர் காலத்திலும் ஜீவராசிகள் துன்புறுத்தப்பட்டன என்பதற்குப் பல தேச சரித்திரங்களும் நமக்குச் சான்று கூறுகின்றன. இதே மாதிரியாக இப்பொழுது நமது கதை நடந்த காலத்தில் மகாராஷ்டிர ராஜ்யமானது சீரும் செல்வமுஞ் செழித்து யாதொரு குறைவுமில்லாமல் க்ஷேமமா யிருந்து வந்தபோதிலும் அத்தேசத்து ஜனங்கள் சொல்லற்கரிய சிறுமைகளை யநுபவித்து வந்தார்கள். அப்பொழுது மொகலாய ராஜாங்கமானது பிரபலமா யிருந்தது; மொகலாய ராஜாங்கத்தார் ஜனங்களுக்குச் செய்துவந்த ஹிம்சை போதாதென்று, சிறுசிறு நவாப்புகளும் ஜமீன்தார்களும் பாளையக்காரர்களும் சாதாரண ஏழை ஜனங்களைப் பற்பல விதத்திலும் இம்சித்து வந்தார்கள். ஐஸ்வர்யத்தையும் அதிகாரத்தையும் அடையப் பெற்றவர்கள் அவ்விரண்டையும் பெறுவதற்குக் கூடாமல் இருப்பவர்களை இம்சிக்கும் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் உண்டாவது ஸகஜமே யென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே, ஒரு புறத்தில் ஆக்கமும் அதிகாரமும் அனைவரையும் அடிமைப் படுத்த முயற்சிக்கவே, மறுபக்கத்தில் ஏக்கமும் இல்லாமையும் எங்கும் வியாபித்துக்கொண்டது. நல்லோர் நலிவெய்தினர்; பொல்லார் பொலிவெய்தினர். சாதுக்கள் திண்டாடினார்கள்; சண்டிகள் கொண்டாடினார்கள்.

இவ்விதமாக, கலக்கமாகிய காரிருள் தேசத்தைச் சூழ்ந்துகொள்ள, ஆங்காங்கு இருந்த திரிகால ஞானிகளும் தேச பக்தர்களும் கூடிய சீக்கிரத்தில் சாந்தமும் சமாதானமும் ஸ்வதந்தரமும் ஏற்படும்படியான காலம் உண்டாய் விடும் என்று முழு நம்பிக்கையுடன் எதிர் பார்த்துக்கொண்

டிருந்தார்கள். மகாராஷ்டிர தேசத்தின் மலைப்புறங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் சுற்றுப் பிரதேசங்களிலும் உள்ள சகல ஜனங்களும் பெரியோர்களால் எதிர் பார்க்கப்பட்ட நன்னுள் என்றாளோ? என்று இரவும் பகலும் எப்பொழுதும் இதே எண்ணமா யிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் இதே பேச்சா யிருந்தது. பெரியோர் சிறியோர், தனவந்தர், தரித்திரர், ஆண் பெண் அடங்கலும் இதே நினைப்பாகி, இந்தியா தேசமானது மகம்மதியர்களுடைய கொடுமையினின்றும் விடுபடும் நாள் என்றாளோ? என்று தினந்தோறும் எதிர் பார்த்துக்கொண் டிருந்தார்கள். இப்பொழுது தெளரி நதிக்கரையில் விளையாடிக்கொண்டிருந்த மூன்று மகாராஷ்டிரக் குழந்தைகளின் விளையாட்டிலும் இந்த எண்ணமே பாய்ந்திருந்தது.

இம்மூவருக்குள் மூத்தவனுக்குச் சுமார் வயது பன்னிரண்டு இருக்கலாம்; வயதுக்கு மேற்பட்ட பலத்த சரீரக் கட்டுடையவன். இவன் தனது வலது கையில் ஒரு பெருத்த மூங்கில்தடி யெடுத்து "ஹர, ஹர, மகாதேவ," "ஹர, ஹர மகாதேவ" என்று கூச்சலிட்டுக்கொண்டு அங்கிருந்த ஒரு ஆலமரத்தை ஓங்கி யடித்துக்கொண் டிருந்தான். அந்த ஆலமரமானது அப்பையனுடைய விளையாட்டில் அவனுக்கு எதிரியாகத் தோன்றிற்று போலும்! அதன் பட்டைகள் உரிந்தன. மரத்திலிருந்து, வெள்ளை நிறமுடைய பிசின் போன்ற ரசம் ஒழுகுவதைக் கண்ட அப்பையன், எதிரியின் சரீரத்திலிருந்து ரத்தம் பீரிட்டு ஒழுகுகின்றது என்று களித்தான். இவனுடைய பெயர் நெட்டாஜி. இவன் அம்மரத்துடன் செய்த யுத்தத்தினால் இவனுடைய சரீரத்திலிருந்து வெயர்வை ஆறுக ஓடிக்கொண்டிருந்தது; இவன் தலையில் தரித்திருந்த தலைப்பாகையானது தலையினின்றும் நழுவிக் கீழே விழுந்து கிடந்தது; இவனுடைய கைகளிலும் கால்

களிலுமுள்ள மெல்லிய நரம்புகள் எல்லாம் இரத்த ஓட்டம் மிகுந்து தடித்து வெளியில் காணப்பட்டன.

இவனுடன் அங்கு இருந்த மற்ற இருவரும் சிறு பெண் குழந்தைகள்; ஒரு பெண்ணின் வயது ஒன்பது; மற்றவளின் வயது எழு. மூத்தவள் இவனுடைய சகோதரி; இளையவள் இவனுடைய மாமன் மகள். மூத்தவளுடைய பெயர் கங்காபாய்; இளையவளுடைய பெயர் காசிபாய்: இவ்விருவர்களில் காசிபாய் நெட்டாஜியினுடைய விளையாட்டு யுத்தத்தை மிகவும் கொண்டாடினுள். இவளுடைய கண்களில் ஆத்திரமும் ஆக்கிரோஷமும் பொங்கி வழிந்தன: "நீதான் வீரன். நன்ருகப் போர் புரிந்தாய். நூறு மகம்மதியர்களை நீ கொன்றுவிட்டால் இதோ இந்த புஷ்ப மாலையை உனக்கு இடுவேன்" என்று அவனை ஊக்கிக் கொண்டே அங்குள்ள காட்டுப் புஷ்பங்களை மாலையாகத் தொடுத்துக் கோத்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது கங்காபாய் (இவள் அமரிக்கையான குணமுடையவள்) "ஏ, நெட்டைய்யா! நீ வீட்டிற்கு வரமாட்டாயா? அம்மாள் கோபித்துக் கொள்வாள். நீ அணிந்திருக்கும் அழகிய உடைகளை அலங்கோலப் படுத்திக்கொண் டிருக்கிருய்; உனது நேர்த்தியான தலைப்பாகை புழுதி படிந்து கிடக்கிறது. உனக்குக் களைப்பு மிகுந்து, உனது சரீரத்தினின்றும் வெயர்வை ஒழுகுகின்றது. இப்பொழுது அம்மாள் பார்த்தால்——" என்று சொல்லி முடிப்பதற்குள், காசிபாய் "ஆமாம், அம்மாளையும் கண்டது, ஆட்டுக்குட்டியையும் கண்டது; அவள் கிடக்கிருள். நீ உன் வேலையைப் பார். நமது தேசத்தில் மகம்மதியர்கள் அதிகாரம் வகிக்கும் வரையில் நான் உன்னைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன்; ஞாபகம் இருக்கட்டும்." என்று நெட்டாஜியை மேன்மேலும் உற்சாகப் படுத்தினுள்.

இச்சமயத்தில் ஒரு கிழவி அங்குவந்து காசிபாய் வெகு நேரமாக வீட்டுக்கு வராமல் இருந்ததைப்பற்றி அவளைக் கோபித்துக்கொண்டு அக்குழந்தையை வீட்டுக்கு இட்டுச் செல்லவே, காசிபாய் மற்ற இருவரையும் பார்த்து "நான் போய்வருகிறேன்" என்று கூறிவிட்டு நெட்டாஜியினிடத்தில் பிரத்தியேகமாக "நீ இன்று போதுமானபடி மகம்மதியர்களைக் கொல்லவில்லை. இந்த மாலை இன்று உனக்குத் தகாது. 'நானே தரித்துக் கொள்கிறேன்" என்று தானே தரித்துக்கொண்டு நடந்தாள். பின்னர் நெட்டாஜியும் கீழேவிழுந்து கிடந்த தன்னது தலைப்பாகையை எடுத்துப்புழுதியை யெல்லாம் ஊதியும் உதறியும்விட்டுத் தலையில் தரித்துக் கொண்டு, தனது ஆடைகளை அழகுற அமைத்து அணிந்து கொண்டு, தனது சகோதரியும் தானுமாக சவுக்கம் என்ற கிராமத்திற்குள் தனது வீட்டிற்குச் சென்றான்.

---

## அத்தியாயம்—2.

### துஷ்டர்களுக்கே காலம்

தௌரி நதிக்கரையில் விளையாடிக் கொண்டிருந்த அந்த மூன்று குழந்தைகளின் சம்பாஷணையையும் கேட்டுவிட்டு நாம் நமது சொந்தக் காரியார்த்தமாகச் சென்றுவிட்டோம். பாரத புத்திரர்களின் பராக்கிரமச் செயல்களையே எப்பொழுதும் கவனித்துக் கொள்வதும் அவர்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும் நேர்ந்த காலங்களில் அவர்களை ஊக்கி உற்சாகப்படுத்தி அவர்கள் மறுபடியும் திடச் சித்தத்துடன் தீரச் செயல்களையே செய்யுமாறு போதிப்பதுமே நமது தொழிலாயபோதிலும், நமக்கும் நமது சொந்தக்காரியங்கள் எத்தனை வந்து குறுக்கிட்டு

விடுகின்றன? ஆதலால் ஆறு வருஷங்கள் இக்குழந்தைகளைப் பற்றி நாம் கவனிக்க முடியவில்லை. இப்பொழுது நாம் பார்க்கும்பொழுது நெட்டாஜிக்கு மீசை அரும்புவிட ஆரம்பித்திருக்கின்றது. காசிபாய் தனது பிதாவின் வீட்டை விட்டு முன்போல வெளியே விளையாடவருவதில்லை; ஏனென்றால் இப்பொழுதும் குழந்தையன்று அல்லவா? கங்காபாய் கிரகஸ்த தர்மத்தை வகிக்கும் பருவத்தை அடைந்துவிட்டாள். ஆனால் இன்னும் விவாகமாகவில்லை. பெண்ணின் குடும்ப யோக்கியதைக்குச் சமமான ஒரு குடும்பத்திலல்லவா மாப்பிள்ளை பார்க்கவேண்டும்? கங்காபாயின் பிதா மகாராஷ்டிரர்களுக்குரிய சகல நற்குணங்களும் வீரத்தன்மையும் வாய்க்கப்பெற்றவராயினும், அதிக தனவந்தரன்று. தரித்திரம் வந்துற்ற காலையிலும், உண்மையான புருஷனுக்குத் தன்மதிப்பு என்பது நீங்கிவிடுமா? ஆதலால் அவர் தம்து பெண்ணுக்குத் தக்க வரனைத் தேடிக்கொண்டிருந்தார். ஆதலால், கடைசியாக சவுக்கத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு ஊரில் தம்மினும் தனவந்தராகிய ஒருவருடைய புத்திரனுக்குத் தமது பெண்ணை விவாகம் செய்துகொடுப்பதாக கங்காபாயின் தகப்பனார் நிச்சயித்தார். பிள்ளை வீட்டுக்காரர் பணக்காரரானதால், அங்கேயே விவாகம் நடத்தப்படுமானால், விவாகம் மிகவும் சிறப்பாகவே நடந்தேறும் என்று கருதி, கங்காபாயின் தகப்பனார் தமது பெண்ணை, அடுத்த ஊராகிய மாப்பிள்ளையின் ஊருக்கே இட்டுச் செல்வதெனத் தீர்மானித்தார்.

சென்ற ஆறு வருஷங்களுக்குள்ளாக ஸ்வதந்தரம் அடையவேண்டுமென்ற ஆசையானது தேசமெங்கும் வேரூன்றிக் கொண்டுவிட்டது. டில்லியில் பாதுஷா இந்தியாதேச முழுமைக்கும் சக்கரவர்த்தியெனப் பெயர்பூண்டிருந்தபோதிலும் தேசத்தின் பற்பல பாகங்களிலும் உள்ள

பற்பல சிற்றரசர்களும் நவாப்புகளும் சகித்தற்கரிய அக்கிர மங்களையெல்லாம் செய்துவந்தார்கள். தட்சிண தேசத்தில் பீஜப்பூர் ஸமஸ்தானத்து நவாப்புதான் பிரதானி. இவருடைய ஆக்ஞையானது "சுக்ரீவாக்ஞை" போல நடந்துவந்தது. இவருடைய மகம்மதியப் படைவீரர்கள் செய்யாத அலங்கோலமில்லை. ஹிந்துக் குடிகளுக்குச் சொத்து ஸ்வதந்தரங்கள் சொந்தமாகக் கிடையா. பெண்டு பிள்ளைகள் பந்தோபஸ்தில்லை. ஹிந்துக் குடியானவனாகிய ஏழையொருவன் எங்காவது மகம்மதியர்களுக் கிடையில் அகப்பட்டுக்கொண்டால், வெறிகொண்டு கண்தெரியாது திரியும் அம்முரடர்களிடத்தினின்றும் அவன் உயிருடன் திரும்புவது கஷ்டம். ஹிந்து ஜனங்களை அக்காலத்தில் மகம்மதியர்கள் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக மதிக்கவே யில்லை; மிருகங்கட்குச் சமானமாகக் கருதி யிருந்தார்கள். ஹிந்து ஸ்திரீகள் இத்துடுக்கர்களுக்கு எதிர்ப்பட்டுவிட்டால், பின்னர் பிராணனிலும் பெரிய மானத்தைக் காப்பாற்றிக்கொண்டு அவர்கள் திரும்புவது கிடையாது. இவ்விதமாக ஆண் பெண் அடங்கலும் அவஸ்தைப் பட்டுக்கொண் டிருந்தனரென்றால் இந்த மகம்மதியக் கொடுங்கோலினின்றும் விடுபட்டு ஸ்வதந்தர மநுபவிக்க ஹிந்து ஜனங்கள் இச்சித்தனரென்பது ஆச்சரியமன்று. பீஜப்பூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த படைவீரர்கள்" செய்யும் அக்கிரமங்களைப் பொறுக்கமுடியாது இன்னது செய்வது என அறியாது ஏக்கத்தினால் தூண்டப்பட்டு ஆங்காங்கு சிற்சில மகாராஷ்டிரர்கள் சிறு சிறு கூட்டங்களாகச் சேர்ந்து சிறுதொகையாய மகம்மதியக் கூட்டங்களின்மேற் பாய்ந்து அடித்தும் குத்தியும் கொன்றும் வந்தார்கள். தேசமெங்கும் அதிருப்தி மிகுந்து எப்பொழுது மகம்மதியர்களின் அரசு இறந்து ஒழியுமோ என்று இதே கவலையா யிருந்தார்கள். ஆயினும் அரசாங்க அதிகாரத்திற்

குப் பயந்து மிக்கோரும் மேற்படி கவலையை வெளியில் காட்டிக்கொள்ளார்கள். ஒரு ஹிந்து ஒரு மகம்மதியனைக் காண்பானாயின், அந்த ஹிந்து தன்து இடுப்புவரையிற் குனிந்து இரண்டு கையாலும் வாரிவாரி ஸலாம் செய்ய வேண்டும். அப்படிச்செய்யத் தவறுவானாயின், அந்த ஹிந்துவுக்கு அந்தியகாலம் கிட்டிவிட்டதென்பதற்கு அது ஓர் அடையாளமாகும்.

ஹிந்துக்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளுக்கோ அளவு சங்கியையில்லை. ஆள்வரி, தோல்வரி, எலும்புவரி, நரம்புவரி என்னும்படியாக ஹிந்துக்கள் நாலா பக்கங்களிலும் நாற்பதுகோடி வரிகளினால் நெருக்கப்பட்டார்கள். "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்னும் பழமொழிக் கிணங்க, மகம்மதிய அரசர்களுக்கு விபரீதபுத்தி தோன்றி விட்டது. ஹிந்துக்களையும் மகம்மதியர்களையும் ஒற்றுமைப் படுத்தி ஒன்றுசேர்ப்பதற்கு அக்பர், ஜிஹாங்கீர், ஷாஜஹான் என்னும் மொகலாயச் சக்கரவர்த்திகள் செய்த பெரு முயற்சிகள் என்ன? அவர்களுடைய பாரிய புத்திதான் என்ன? இப்பொழுது இந்த அநாமதேயப் பேர்வழிகள் செய்த அக்கிரமங்கள்தான் என்ன? ஹிந்துக்களும் மகம்மதியர்களும் இந்தியா தேசத்திற்கு இரண்டு புஜங்கள் போன்றவர்கள் என்னும் உண்மையை யறியாது நமது கதை நடந்த காலத்தில் இருந்த மகம்மதியர்கள் இந்துக்களைப் பலவாறாக இம்சித்து அதற்குப் பிரதி பிரயோஜனமாகத் தங்களுடைய ராஜாங்கத்தை இழந்துவிட்டார்கள்.

பீஜப்பூர்ப் படைவீரர்களுக்கும் ஹிந்து ஸ்வதந்தரவாதிகளுக்கும் சண்டை சச்சரவுகள் சவுக்கம் என்ற ஊரைச்சுற்றிலும் கூட அடிக்கடி நடப்பது உண்டு. ஆதலால் கங்காபாயை மணமகனுடைய ஊருக்குத் தக்க துணையின்றி இட்டுச் செல்லுவது நன்று அன்று என்று கருதப்பட்டது.

கங்காபாயின் பெற்றோர்கள் மிகவும் ஏழைகள் என்று முன்னமேயே கூறியுள்ளோம். அவர்களுடன் கூடச் செல்பவர் அநேகராகவாவது தக்க ஆயுதந் தரித்தவர்களாகவாவது இருத்தல் கூடாத காரியமாயிற்று. அவளுடைய பந்துக்களில் பத்து அல்லது பன்னிரண்டு புருஷர்கள் தட்சிண தேசத்து மட்டக் குதிரைகளின்மீது ஏறிக்கொண்டு பலவித சில்லரை ஆயுதங்களாகிய வாள், வேல் முதலியன தரித்தவர்களாய் கங்காபாயைக்கொண்டு செல்லும் குதிரைவண்டிக்கு முன்னும் பின்னுமாகச் சென்றார்கள். இவர்களுள் கங்காபாயின் சகோதரனாகிய நெட்டாஜியும் தனது குழந்தைப் பருவத்து விளையாட்டுத் தோழியாகிய காசிபாயினுடைய பிதாவினிடத்தினின்றும் தான் இரவலாக வாங்கியுள்ள ஒரு பாராசாரிக் குதிரைமீதேறிக்கொண்டு மணமகளின் சகோதரனாகையால் சிறிது கர்வத்துடனும் மிகுந்த உற்சாகத்துடனும் பாலியப் பருவத்து மமதையுடனும் அரையிற்கட்டிய பொற்கச்சையினின்றும் தொங்குகின்ற வாளை இடது கையினால் தாங்கியவண்ணம் கங்காபாயின் குதிரை வண்டிக்கு முன்சென்றும் பிறகு பின்வந்தும் இப்படியே கம்பீரமாகப் போய்க்கொண்டிருந்தான்.

இவர்கள் தௌரி நதிக்கரை யோரமாகவே இரண்டு மைல் தூரம்செல்ல, அங்கு தௌரி நதியானது பாதாள கங்கை என்னும் மற்றொரு நதியிற் கலந்துகொண்டது. ஆதலால் அவர்கள் பாதாளகங்கையின் வலதுகரை யோரமாகச் சிறிது தூரம் செல்லவே, திடீரென்று பிரமித்து நின்றார்கள். எதிரே மகம்மதியப்படை வீரர்களின் பெருங்கூட்டம் ஒன்று தோன்றி விட்டது. உடனே மகாராஷ்டிரர்கள் பயந்து நடுங்கி, வந்த வழியே திரும்பி ஓடிவிடலாமென்று நினைத்துப் பின்புறம் திரும்பினார்கள். அங்கும் மகம்மதியர்களுடைய ஒரு கூட்டம் காணப்பட்டது. மகம்மதியர்களுடைய

தலைவன் மகாராஷ்டிரர்களைப் பார்த்து, "சிறிதேனும் எதிர்த்தால், உங்கள் அனைவரையும் சுட்டுவிடுவோம்" என்றான். மகம்மதியர்களும் தங்களுடைய துப்பாக்கிகளை மகாராஷ்டிரர்களுக்கு நேரே குறிவைத்துப் பிடித்தார்கள். மகாராஷ்டிரர்களில் தைரியம் மிகுந்த இரண்டொருவர் கங்காபாயை எப்படியாவது தப்புவித்து ஊருக்கு இட்டுச்செல்லக் கருதி பக்கத்தில் செல்லும் வழியாக ஓடிவிடலாமென்று நினைத்து கங்காபாயினுடைய குதிரை வண்டியை அந்த ரஸ்தாவினின்றும் திருப்பினார்கள். உடனே வேட்டுச் சத்தங்கள் கேட்டன; மகாராஷ்டிரர்களில் இருவர் காயப்பட்டு விழுந்தனர்; ஒருவன் கொல்லப்பட்டான். மகம்மதியப் பெரும்படைகளை இன்னும் எதிர்த்து நிற்பது வீண் என்று மகாராஷ்டிரர்களுடைய மனத்திற்படவே, காயமடைந்த இருவரும் மற்றவர்களும் தங்கள் தங்களுடைய ஊரை நோக்கி ஓடினார்கள். ஆனால் கங்காபாய் மகம்மதியர்களுடைய நடுவில் விட்டுவிடப்பட்டாள்; அவளை விட்டுச் சிறிதும் நீங்காது அவளுடைய ஆருயிர்ச் சகோதரனாகிய நெட்டாஜியும் அங்கு நின்றான்.

ஆ! பரிதாபம்! கங்காபாய்க்கு மகத்தான துக்கம் உண்டாயிற்று. நெட்டாஜி தனது குதிரையினின்றும் கீழே யிறங்கி அவளுடைய பக்கத்தில் நின்றுகொண்டு அவளைச் சிறிதும் பயப்படவேண்டாமென்றும் தான் ஒரு பொழுதும் அவளைவிட்டுப் பிரிவதில்லையென்றும் அவளுக்கு வேண்டிய தேறுதல்கள் சொல்லிக் கொண்டிருந்தான்.

அழகிய, விலையுயர்ந்த ஆடைகளும் ஆயுதங்களும் அணிந்த ஒரு மகம்மதியன்—இவன் தான் அவர்களின் தலைவன் போலும்—நெட்டாஜியின் பக்கல் வந்து "ஏ! சிறுவனே! நீ சிறிதும் யோசனை செய்யாதே, கவலைப்படாதே;

இப்பொழுது உனக்கு நேரிட்டிருக்கும் சந்தர்ப்பமானது உன்னை நாளையதினமே ஒருவேளை மிகப் பெரிய அதிர்ஷ்ட சாலியாக்கிவிடும்; எப்பொழுது என்ன நேரிடும் என்பதை எவர் கண்டார்? இப்பொழுது உனது சகோதரி எங்களுடன் பீஜப்பூர் நகரத்திற்கு வரப்போகின்ருள். அங்கு ராஜவம்சத்தைச் சேர்ந்த எந்தப் பிரபுவாவது அவளைத் தமக்கு மனையாட்டியாக வரித்துக்கொள்ளலாம். ஆதலால் அந்த ஸமஸ்தான ஸைந்நியத்தில் உயர் பதவிகளும் உனக்குக் கொடுக்கப்படலாம். நீயும் உனது விக்கிரகாராதனை முதலிய மூடப் பேய் வழக்கங்களை விட்டுவிட்டு மகம்மதியனாய் விடுவாயானால் உனது அதிர்ஷ்டத்தை அளக்கவல்லவர் யாவர்? ஆதலால் வாளை உறையிற்போட்டுவிட்டு எங்களுடன் நட'' என்ருன்.

மகம்மதியன் இவ்வளவும் கூறியதுதான் தாமதம்; உடனே நெட்டாஜியினுடைய வாளானது அந்த மகம்மதியனுடைய மார்பில் ஆழமாகப் பாய்ந்தது; அந்த மகம்மதியன் உயிர் நீத்தான். மற்ற மகம்மதியர்கள் கோபாவேசம் மிகுந்தவர்களாகி, எல்லாரும் ஒரே மூச்சாய் நெட்டாஜியின்மேல் பாய்ந்தார்கள். நெட்டாஜியும் தனது வாளை நாலாபக்கங்களிலும் வீசி அநேக மகம்மதியர்களைக் காயப்படுத்திக் கீழே வீழ்த்தினன். ஆயினும் "மூண்டனுக்கு இரண்டுபேர்'' என்னும் பழமொழிக்கொப்ப, இவன் எவ்வளவு சாமர்த்தியசாலியானபோதிலும் எண்ணற்ற மகம்மதியர்களின் முன் இவன் ஒருவன் என்னசெய்வான்? இவன் அடிபட்டு மூர்ச்சையாகிப் பூமியின்மீது சாய்ந்தான். அவன் அப்படிச் சாய்ந்த மாத்திரத்தில் ஒரு மகம்மதியன் அந்த மகாராஷ்டிரனுடைய மார்பில் ஒரு ஈட்டியைக்கொண்டு குத்தப்போனன். அப்பொழுது அருகில் நின்றுகொண்டிருந்த ஒரு உத்தியோகஸ்தன்—இவனும் மகம்மதியன்தான்—இறந்த

வனைக் கொல்லுதல் கௌரவமன்றென்று கூற, அதற்கு அந்த மகம்மதியன் "ஐயா, ஒருவேளை இவன் மூர்ச்சித்திருக்கலாம். நாம் இவனை இப்படியே போட்டுவிட்டுப் போய்விட இவன் மறுபடியும் உயிர்த்தெழுவானானால் இவன் எத்தனை மகம்மதியர்களுடைய மரணத்திற்குக் காரணமாய் விடுவான் என்பதைக் கொஞ்சம் யோசியுங்கள். இவ்வளவு சிறுவனாயிருக்கும்பொழுதே இவனுக்கு இவ்வளவு ரோஷம் இருக்குமானால், இவன் வளர்ந்து பெரியவனாகும் பொழுது இவன் எத்தன்மைய வீரனாகவேண்டும்? ஷேக்ஸாடி என்பவர் "எவன் ஒருவன் எதிரியைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு அவனைக் கொல்லாமல் விடுகிறானோ அவன் தனக்குத் தானே எதிரியாகிறான். கையில் கல்லுமிருந்து, நசுக்குவதற்குச் சௌகரியமாகப் பாம்பின் தலையும் அகப்பட்டுக் கொண்டபொழுது, புத்திசாலியான மனிதன் அதை நசுக்குவதற்கு யோசிக்கவேமாட்டான் என்று கூறியிருக்கிறார்'' என்றான்.

ஆனால் ருஸ்டும் ஸுமான் என்பவன்-இதுதான் அந்த உத்தியோகஸ்தனுடைய பெயர்-தயாளகுணம் மிகுந்தவன்; சத்துருவின் சாமர்த்தியத்தையும் மெச்சும் சமர்த்தன். ஆதலால் நெட்டாஜிக்குக் கங்காபாயினிடத்துள்ள அன்பும் நெட்டாஜியின் சௌரியமும் அந்த மகம்மதிய உத்தியோகஸ்தனுடைய மனத்தைக் கரைத்துவிட்டன.

ருஸ்டும் ஸுமான் "அதே ஷேக்ஸாடி என்பவர்தான் உடலினின்றும் உயிரைப் பிரித்துவிடுதல் கஷ்டமன்றென்றும் ஆனால் இறந்தவர்களை மீண்டும் உயிர்த்தெழுப்புவது முடியாத காரியமென்றும் கூறுகின்றார். வில்லினிடத்தினின்றும் அம்பை எய்வதற்கு புத்தி சாலித்தனம் மாத்திரம் போதாது, மிகப் பொறுமையும் வேண்டும்; ஏனென்றால் அம்பு வில்லினின்றும் விடுபட்டுவிட்டால், திரும்பவும் அந்த

அம்மைத் தடுக்கமுடியுமோ? இச்சிறுவன் உயிருடன் இருப்பதாக வைத்துக்கொண்ட போதிலும்கூட இவனே இப்படி அநியாயமாகக் கொல்வதற்கு நான் சம்மதிக்கமாட்டேன். ஆனால் இவன் இறந்துவிட்டானென்பது நிச்சயம்'' என்று சொல்லிவிடவே, ஒரு மகம்மதியனும் நெட்டாஜியைப் பின்னர் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. அவன் அந்த இடத்திலேயே விழுந்து கிடந்தான். ஆனால் அவன் மரிக்கவில்லை. வெகுநேரம் மூர்ச்சையாகக் கிடந்து பின் கண்விழித்துப் பார்த்தான். இப்பொழுது இருட்டு மிகுந்துவிட்டதினால் எவ்வளவு நேரம் இவன் இங்கு விழுந்து கிடந்தான் என்பது இவனுக்கே தெரியவில்லை. அத்தனை மகம்மதியர்களும் சேர்ந்து அடித்த அடியினால் அவனுக்கு எழுந்திருந்து நிற்பதற்குக்கூட முடியாமல் அவ்வளவு களைத்திருந்தான்.

கடைசியாக மெல்ல எழுந்திருந்து இருட்டில் தான் வந்த வழியைக் குறிப்பிட்டுக்கொண்டு தனது வீடு நோக்கி நடந்து, அடிக்கடி வழியில் ஆங்காங்கு உட்கார்ந்து களைப்பாற்றிக்கொண்டு அர்த்தராத்திரி சமயத்தில் தனது வீடு வந்து சேர்ந்தான். அங்கு அவனுடைய பெற்றோர்கள் தங்களுடைய இரு குழந்தைகளும் ஒரே சமயத்தில் தங்களிடத்திலிருந்து பலாத்காரமாகப் பிரிக்கப்பட்டு விட்டதைப் பற்றி மனம் கலங்கி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அப்பொழுது தூங்காமல் விழித்துக்கொண் டிருந்தார்கள். புதல்வன் அகத்துள் நுழைதலும் பெற்றோருடைய முகங்களில் சிறிது தெளிவுண்டாயிற்று. அவர்கள் புத்திரனை வாரிக் கட்டி யணைத்துக்கொண்டு, அவனுக்கும் அவனுடைய சகோதரிக்கும் நேரிட்ட ஆபத்தைக் கேட்டு அழுது, அவன் சரீரத்திலிருந்த காயங்களுக் கெல்லாம் தேங்காய் எண்ணெய்தடவி அவனைப் படுத்து உறங்க விடுத்தார்கள்.

## அத்தியாயம்—3.

### ஒளிந்து கொள்வதற்கு ஓட்டம்

ஆனால் நெட்டாஜி நெடுநாட்கள் எப்படி சவுக்கத்தில் சௌக்கியமாய் வசிக்கமுடியும்? பீஜப்பூர் ஸமஸ்தானத்தில் ஓர் உயர்ந்த பதவி வகித்த உத்தியோகஸ்தனைக் கொன்றுவிட்டு தைரியமாக எப்படி உலாவித் திரிவது? மகம்மதிய அரசாங்கத்தாரின் சட்டப்படி விதிக்கப்பட வேண்டிய மரண தண்டனைக்கு தப்பமுடியுமோ? அநியாயமாக, துடுக்கத்தனமாக மகம்மதியர்கள் தனது சகோதரியைத் தாக்கித் தூக்கிச் செல்லவே, அவளை ரட்சிக்கும் பொருட்டுத் தான் உத்தியோகஸ்தனைக் கொல்லும்படி நேரிட்டது என்று நியாயம் பேசினால், கேட்பவர் எவர்? ராஜவிரோதியென்று நெட்டாஜி பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவது நிச்சயம். ஆனால் அவன் மறுபடியும் உயிர்த்தெழுந்து தப்புவித்துக்கொண்டு வந்த சங்கதி அவனுடைய பெற்றோரைத் தவிர வேறெவரும் அறியார். ஆதலால் அவனை இரவில் அவ்வூரை விட்டு வெளிப்படுத்தி எங்காவது ஒளித்துவைத்துவிட வேண்டுமென்றும் அவன் உயிர்பெற்று எழுந்து வந்தானென்பதை யொருவரும் அறியலாகாதென்றும் அவனுடைய பிதா தீர்மானித்தார்.

அவ்வூருக்குப் பக்கத்தில் மதேரான் என்று ஒரு மலையுண்டு. அம்மலையினுச்சியில் ஒரு சந்நியாசி வசித்து வந்தார். அவர் நெட்டாஜியின் குடும்பத்தைச் சேர்ந்தவர். தமது பாலியப்பருவத்தில் அவர் ஒரு அசகாய சூராயிருந்தவர். அவர் உலகப் பற்றுக்களை உதறி விட்டுச் சந்நியாசியாகிச் சில வருஷங்கள்தான் ஆயின. அவர் பாரத கண்

டத்திலுள்ள அதிபரிசுத்த புண்ணிய ஸ்தலங்களுக்கெல் லாம் சில வருஷங்களாக யாத்திரை செய்து கடைசியாக மதேரான் மலையின் உச்சியிலுள்ள ஒரு குகையில் வசித்து வந்தார். அம்மலையின் மீது கோட்டை கொத்தளங்கள் கிடையா; அம்மலை வளம் மிகுந்ததுமன்று. ஆதலால் மகம் மதிய அரசாங்கத்தார் அம்மலையைக் கவனிப்பதற்கு அவசிய மில்லாது போயிற்று. ஆகையால் நெட்டாஜியை அன் றிரவே அந்தச் சந்நியாசியினிடத்திற்கு அனுப்பிவிடுவ தென்று அவ்வனுடைய பிதா தீர்மானித்தார்.

அன்றிரவு விடியுமுன், சூக்கிரோதய சமயத்திலேயே நெட்டாஜியினுடைய பிதா நெட்டாஜியை எழுப்பி அவன் உடனே அவ்வூரைவிட்டு அகன்றுவிட வேண்டும் என்று, சமீபத்து மலை யுச்சியிலிருக்கும் சந்நியாசியுடன் எவரும் அறியாமல் வசித்துவர வேண்டுமென்றும் சொன்னார்; இன் னும், நடப்பதற்குப் போதுமான சக்தி யில்லாவிட்டால் அவனை அம்மலை யுச்சிக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வேண்டிய வேலைக்காரர்கள் கிடைப்பார்களென்றும், அவன் உயிருடனிருப்பது ஒருவருக்கும் தெரியக்கூடாதாகையால் பலர் இந்த இரகசியத்தை அறிவது உசிதமன்றென்றும் கூறினார்.

ஆதலால் நெட்டாஜி மிகப் பலவீனமா யிருந்தபோதி லும் கொஞ்சநேரம் படுத்துறங்கியதால் களைதெளிந்து, அம் மலையின் உச்சிக்கு நடந்தே செல்வதாகத் தீர்மானித்து, பெற்றோரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மாறுவேஷம் தரித்து, தனது குடும்பத்தினிடத்தில் அதி விசுவாசமுள்ள வேலைக்காரன் ஒருவனை மாத்திரம் வழித்துணைக்குக் கூட் டிக்கொண்டு, மதேரான் மலையுச்சியை நோக்கி நடந்தான்; ஆறு அல்லது ஏழுமைல் தூரம் செல்லவும், மலையின் அடி வாரம் தென்பட்டது. பின்பு இருவருமாக பாறைகளில்

செதுக்கப்பட்டுள்ள படிக்கட்டுகளின் வழியாக சுமார் இரண்டாயிர அடி உயரம்வரையில் ஏறினார்கள். பின்னர் ஏற்கனவே களைத்திருந்த நெட்டாஜி இதற்குமேல் ஏறமுடியாமல் அங்கு உட்கார்ந்துவிட்டான்.

அப்பொழுது அம்மலையில் வசிக்கும் வனவேடர்களில் சிலர் அம்மார்க்கமாக வரவே, நெட்டாஜிக்குத் துணையாக வந்த ஏஸாஜி தங்கள் இருவரையும் மலையின் உச்சிக்கு எப்படியாவது கொண்டுபோய்ச் சேர்க்கும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டான். களைத்துக் கீழேவிழுந்து படுத்திருக்கும் நெட்டாஜியை மாத்திரம் அவ்வுச்சிக்குத் தூக்கிக் கொண்டு செல்வதற்கே அவர்கள் அளவற்ற திரவியம் கேட்டார்கள்; ஆனால் இவர்கள் இருவரும் அம்மலையின் உச்சியில் வாசம்செய்யும் சந்நியாசியினிடத்திற்குச் செல்கின்றார்கள் என்று கேட்டவுடனே, அவர்கள் இவர்களிடத்திலிருந்து ஒரு பைசாகூட வாங்க மறுத்துவிட்டார்கள்; அவர்களுக்கு அந்தச் சந்நியாசியினிடத்தில் அவ்வளவு பக்தி. அவ்வளவு அதிகமாகக் களைத்திருக்கும் நெட்டாஜியை ஆங்குள்ள செங்குத்தான படிகளின்மீது தூக்கிச்செல்வது நெட்டாஜிக்கு மிகுந்த சிரமத்தையும் வருத்தத்தையும் உண்டாக்குமென்றும் கொஞ்சம் சுற்றுவழியாக வேறொரு பாதை இருக்கிறதென்றும் ஆனால் அது மிகவும் சுகமான வழியென்றும் அவ்வழியாக அவர்கள் நெட்டாஜியைத் தூக்கிக்கொண்டு செல்வதாகவும் கூறினார்கள்.

ஏஸாஜி அந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கவே, அவர்கள் அங்கு இருந்த மரங்களிலிருந்து பெரிய, பலமான கிளைகளாக இரண்டு கிளைகளை ஒடித்து, தங்களுடைய கம்பளியை அவ்விரண்டு கிளைகளுக்கும் நடுவில் விரித்து இருபக்கமும் அக்கிளைகளுடன் சேர்த்துப் பலமாகக்கட்டி, அக்கம்பளியின்மீது நெட்டாஜியைப் படுக்கவைத்துத் தூக்கிக்கொண்டு

ஒரு சுற்றுவழியாக அடர்ந்ததோர் காட்டுக்குள் நுழைந்து சென்றார்கள். அவர்கள் தூக்கிச்செல்லும் மாதிரியும், அப்பொழுது அவர்கள் நடந்த ஜாக்கிரதையான நடையும், அவர்கள் உள்ளன்புடன் கள்ளங் கபடற்றுப்பாடிய பாட்டும் நெட்டாஜியை நித்திரையில் ஆழ்த்திவிட்டன. கடைசியாக மலையுச்சி போய்ச்சேர்ந்தார்கள்; அங்கிருந்ததோர் ஒற்றையடிப் பாதையைப் பிடித்துக்கொண்டு சிறிதுதூரம் சென்றவுடன், அந்தச் சந்நியாசியினுடைய வாசஸ்தலம் தென்பட்டது.

நூற்றுக்கணக்கான வருஷங்களாக வளர்ந்து செழித்துக் கொழுத்துப் பற்பல பெருங்கிளைகளுடன் பரந்து வெகுதூரம் நிழலைப் பரப்பிநிற்கின்றது. ஒரு அரசமரம்—அம்மரத்தின் அடியில் ஒரு தனிப்பாறை. அப்பாறையினுள் இயற்கையிலேயே ஒருசிறு குகை அமைந்திருந்தது. இக்குகைதான் நமது நெட்டாஜி தேடிச்செல்லும் சந்நியாசியின் வாசஸ்தலம். இக்குகைக்குக் கடுவாய்க்குகை என்று ஒரு பிரபலமான பெயருண்டு; ஏனென்றால் இதற்குமுன் இக்குகையில் வாசஞ்செய்து வந்தது ஒரு கடுவாயாகும்; இக்கடுவாய் சுற்றுக் கிராமங்களிலிருந்த எளியவர்களின் கன்று காலிகளையும் நாய்களையும் அடித்துக்கொண்டு போய்விடுவது வழக்கம். நமது சந்நியாசி இம்மலைக்கு வந்து சேர்ந்தவுடன் இக்கடுவாயானது அவரைக்கண்டு அவர்மேல் பாய்ந்தது.

அவர் இதனுடன் கடும்போர்புரிந்து கடைசியில் தமது ஈட்டியினால் கடுவாயின் மார்பில்குத்தி முதுகுவழியாக ஊடுருவிப் பாயும்படி செய்யவே, அக்கடுவாய் இவரை விட்டுவிட்டுக் கீழே விழுந்து மடிந்தது. அவர் உடனே அதன் தோலையுரித்துத் தமக்கு ஆசனமாக்கிக்கொண்டு அந்தக் குகையிலேயே தங்கிக்கொண்டார். அந்தக் குகைக்கு இயற்கையிலேயே ஒரு கதவும் ஜன்னலும் இருந்தன; தரையும்

கல்லினாலேயே அமைக்கப்பெற்றிருந்தது. அம்மலையில் எவ்வளவு கொடுமழை பொழிந்து நாலாபக்கங்களிலும் வெள்ளப்பெருக்கெடுத்து மலையைக் கவிந்துகொண்டாலும், தண்ணீர் அக்குகைக்குள் நுழையாதபடி, தரையானது அதிக உயரமாகவே யிருந்தது.

அப்பாறை யறையில் இருந்த சாமான்களோ வெகு சொற்பம். அச்சந்நியாசி ஆதிகாலத்துச் சந்நியாசிதானே! தற்காலத்து நாகரிகச் சந்நியாசிகளைப்போல அவர் மேஜை நாற்காலியின்மீது ஆசையுறவில்லை; படுப்பதற்கு மெத்தைகளைத் தேடவில்லை. காப்பி போடுவதற்கோ, உப்புமா கிண்டுவதற்கோ அவர் வேண்டிய சாமக்கிரியைகளையாவது "ஸ்டோவ்" என்ற அடுப்பையாவது தேடவில்லை. முகக்ஷவரம் செய்துகொண்டு மினுக்கிக்கொண்டு திரிய அவர் விரும்பவில்லை. ஆதலால் அவரிடத்திருந்த சாமான்கள் அதி சொற்பம். அவர் உட்காருவதற்குக் கல்தரையே ஆசனம்; அவர் படுப்பது அந்தக் கடுவாயின் தோலின்மீது. அவர் பூட்டுப் போட்டுப் பந்தோபஸ்தாக வைக்கும்படியான சாமான்கள் அவரிடத்து ஒன்றும் இல்லை. அவருடைய நீண்ட ஈட்டியொன்று சுவரின் ஒரு புறத்தில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது; அவருடைய வாளாயுதம் ஒன்று ஒரு இருண்ட மூலையில் எவருடைய கண்களுக்குந் தென்படாமல் வைக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் இரண்டு பெரிய "கரீலா" கட்டைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது அச்சந்நியாசிக்கு வயது ஐம்பது ஆகிவிட்டபோதிலும், இன்னும் இந்த "கரீலா" கட்டைகளைக்கொண்டு காலையிலும் மாலையிலும் தேகாப்பியாசம் செய்யாதிருத்தல் இல்லை.

அவரைச் சுற்றிலும் அவரது சரீரத்திலும் சில வஸ்துக்கள் இருந்தன. அவரது பிட்சா பாத்திரம் ஒன்று, அவரது தண்ணீர்ச் செம்பு ஒன்று, நெருப்பை எடுப்பதற்கு உபயோ

கிக்கப்படும் இரும்புக் குறடுகள், இத்தனையும் கீழே கிடந்தன. அவரது கழுத்தைச் சுற்றிலும் துளசிமணி மாலையொன்று தொங்கிக்கொண்டிருந்தது. ஹிமோத்கிரி பர்வதத்தில் ஒரு க்ஷேத்திரத்தைத் தரிசனம் செய்து வந்ததன் அடையாளமாக அவர் தமது வலதுகையில் ஒரு இரும்பு வளையத்தை அணிந்திருந்தார். பெலூச்சி ஸ்தானத்தில் உள்ள மகா காளியின் க்ஷேத்திரம் ஒன்றைத் தரிசித்ததின் அடையாளமாக "ஸ்வர்ண மட்சிகா" என்று சொல்லப்பட்ட லோகத்தைத் தமது ஜடாமகுடத்தில் அணிந்திருந்தார். அவர் தமது மணிக்கட்டில் கட்டியிருந்த ஒரு சங்கமானது இராமேஸ்வரத்திற்கு அவர் யாத்திரை சென்றிருக்கிறார் என்பதைக் காட்டிற்று.

வேலைக்காரனாகிய ஏஸாஜி நெட்டாஜியை இன்னாரென்று அந்த சந்நியாசிக்கு அறிவித்து நெட்டாஜியைப் பற்றியுள்ள சமாச்சாரங்கள் அனைத்தையும் ஆதியோடந்தமாகச்சொல்ல, சந்நியாசி வெகு ஆத்திரத்துடனும் கவனத்துடனும் கேட்டுவிட்டு நெட்டாஜியைத் தமக்குச் சிஷ்யனாகவும் ஞான புத்திரனாகவும் ஏற்றுக் கொள்வதில் தமக்கு ஆட்சேபம் இல்லையென்று தெரிவித்து, அப்படியே நெட்டாஜியை அருகிலழைத்து அஸ்த மஸ்தக சையோகம் செய்தார். ஏஸாஜி தான் வந்தகாரியம் பலித்ததென்று மனமகிழ்ந்து நெட்டாஜியினிடத்திலும் அவனுடைய குருவினிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு, நெட்டாஜியின் பெற்றோருடைய மனக்கவலையை மாற்றுவதற்காக விரைவிற் சென்றான்.

---

## அத்தியாயம்—4.

### மலைவாசம்

ஸ்வாஜி விடைபெற்றுச் சென்ற பிற்பாடு, சந்நியாசி நெட்டாஜிக்குச் சில இதவசனங்கள் கூறி யவனைத் தேற்றி அன்றுபகல் முழுதும் பற்பல விஷயங்களைக் குறித்தும் அவனிடத்தில் பேச்சுக்கொடுத்து அவனுடைய மனத்தின் பக்குவ நிலையை யறிந்து கொண்டார். மாலை நேரமானவுடன், அவர் நெட்டாஜியைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டு அம்மலையைச் சுற்றிலும் நடந்து நெட்டாஜிக்கு ஈஸ்வர சிருஷ்டியின் இயற்கை விநோதங்கள் பலவற்றையும் காண்பித்தார். பர்வதமோ காடாந்தகாரமான ஆரண்ணியங்களால் நிறைந்திருந்தது. ஒரு பெரும்பாறையிலிருந்து ஓரழகிய ஊற்று கொப்பளித்துப் பொங்கி வழிந்து சுற்றிலும் நிறைந்து ஒரு பக்கமாக ஓடிக்கொண்டிருந்தது. இவ்வூற்றுத் தண்ணீர் இரும்புச் சத்துள்ளதென்றும் இதனிடத்திலிருந்து தான் தினந்தோறும் நெட்டாஜி இனிமேல் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்றும் குரு கூறினார். மதேரான் மலைக்கு மேற்குப் பக்கத்திலுள்ள பிரபலகிரியின் பின் பக்கலில் சூரியன் அப்பொழுது அஸ்தமித்துக்கொண் டிருந்தான். ஆகாயத்தில் செவ்வானம் படர்ந்து பொன்னிறம் பூத்துக்கொண்டிருந்தது. நெட்டாஜி இடதுபுறம் திரும்பி நோக்கினான். சுமார் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் அடிக்குக் கீழே மாமரங்களாலும் ஆலமரங்களாலும் அடர்ந்துள்ள ஒரு பெருந்தோப்புக் காணப்பட்டது. அவன் அம்மரங்களினூடே இன்னும் கூர்ந்துபார்த்தான். அவனது கண்களினின்றும் ஒரு

துளி கண்ணீர் சொட்டென்று கீழேவிழுந்தது. இவனுக்கு இப்பொழுது கண்ணீர்வரக் காரணமென்ன? தனது சொந்தக் கிராமமாகிய சவுக்கம் அம்மாங்களினூடே காணப்பட்டது. தனது சொந்த வீடும் அவனுக்குத் தெரிந்தது. பிரியமாக வளர்த்த பெற்றோரைப் பிரிந்திருக்கப் பிள்ளைகள் எப்படிச் சகிப்பார்கள்? இவன் இவ்விதமாகக் கலக்கமடைந்ததை இவனுடைய குரு பார்த்தாரோ? என்னவோ? தெரியாது. ஆயினும் நெட்டாஜி உடனே தனது மனத்தைத் தேற்றிக்கொண்டு, இதற்குள் ஏஸாஜி தனது பெற்றோரிடம் சென்று தனது க்ஷேமத்தைப்பற்றி உரைத்திருப்பானென்றும் அவர்கள் மனம் தேறியிருப்பார்களென்றும் தனது தோழியாகிய காசிபாயும் தன்னை மறக்கவே மாட்டாளென்றும் மனப்பால் குடித்து மகிழ்ந்தான். இவ்விதமாக இவன் சொற்ப நேரத்திற்குள் துன்புற்றுத் தேறவும், இவனுடைய குரு இவனைப்பார்த்து "இதோ, இந்த பிரபலகிரிக்கு வலது பக்கத்தில் பார். சுமார் 25-மைல் தூரத்தில் தெரிகிறதே, அப்பட்டணம்தான் பம்பாய் மாநகர். இப்பொழுது அந்நகரில் ஐரோப்பாவிலிருந்து போர்த்துகேசியர் என்னும் ஒரு ஜாதியார் குடிபுகுந்து வியாபாரம் செய்துவருகிறார்கள். அந்தத் துறைமுகத்தில் நிற்பனவெல்லாம் அவர்களுடைய வியாபாரக் கப்பல்களே. நம்மவர்களுடைய வியாபாரம் மறைந்துவிட்டதே" என்றார். "நம்மவர்களுடைய வியாபாரம் மறைந்துவிட்டதே" என்று அவர் கூறியபொழுது அவருடைய முகம் மாறிற்று; விசனக்குறி விளங்கிற்று; அவருடைய தொனியானது பரிதாபகாமாயிருந்தது; அவர் ஒரு பெருமூச்சும் விட்டார். இச்சொற்கள் நெட்டாஜியின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து பதிந்தன. பின்பு இருவருமாக இன்னும் வெகுதூரம் சுற்றிவிட்டுத் தங்களுடைய குகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

நெட்டாஜிக்கு மலை வாசமானது சுகவாசமாய்விட்டது. தனது சகோதரியின் கதி யாதாயிற்றோ என்ற ஒரு நினைப்பு மாத்திரம் அவனுக்கு அடிக்கடி மனவருத்தத்தை உண்டாக்கி யிராவிடில், ஞானிகள் முட்டிக்கொண்டு சாகும் மோட்ச பதவிகூட தனக்கு வேண்டியதில்லையென்று மலை வாச சுகத்தையே அவன் பெரும் பேரின்பமாகக் கருதியிருப் பான். பற்பலவித செடி கொடிகளினூடே பாய்ந்துலாவும் மலைக்காற்றானது அவனுக்கு ஆநந்தத்தை யளித்து அநேக அற்புத உணர்ச்சிகளை உண்டாக்கின. அவனைச் சுற்றிலும் உள்ள விருட்சங்களெல்லாம் அவனுக்கு அன்பு என்னும் அமிர்தத்தை யளிப்பனபோன்றிருந்தன. மமதையும் அகம் பாவமும் மிக்க மானிடர்களின் கைபடாத மரங்கள், செடி கள், கொடிகள், புதர்கள், இவற்றினூடே அலைந்து திரியும் ஜீவராசிகள் எல்லாம் நெட்டாஜிக்கு அழகுக்கழகாய், அழ கினுமழகாய் வனப்பே வடிவெடுத்து வந்ததுபோலும் தென் பட்டன; ஆழ்ந்த ஆலோசனைகளையெல்லாம் கிளப்பிவிட் டன. அவனது உள்ளத்தில் உவகை மிகுந்து கொந்தளித் துப்பொங்கி வழிந்து அவனது முகத்தையே பிரசன்ன மாக்கிவிட்டது.

தினந்தோறும் மிகுந்த நேரமும் அவனுடைய குரு அவனைச் சரீராப்பியாசத்திலேயே பழக்கிவந்தார்; “கரலா” கட்டைகளைத் தாங்கி வலம் இடமாகவும் இடம் வலமாகவும் முதுகு புறமாகச் சுற்றுவதற்குக் கற்றுக்கொடுத்து அப் படியே வெகுநேரம் செய்யச்சொல்வார்; இரும்பினாலாக்கப் பெற்ற ஒரு வில்லைக் கையில்கொடுத்து அம்பு எய்யும் மாதிரி களைப் பயிற்றுவிப்பார். வளைவாயிருந்த இந்தவில்லை இடது கையினாலும் வலது கையினாலும் மாற்றிமாற்றி நீட்டச் சொல்வார். தினந்தோறும் அவன் நூற்றுக்கணக்கான

“கஸரத்” எடுக்கவேண்டும். இவ்விதமாக இவனுக்குப் பெரும்பாலும் சரீரப்பயிற்சியே பிரதானமாயிற்று. இன்னும் அவனுக்குப் பற்பல ஆயுதப்பிரயோகங்களிலும் பயிற்சி செய்வித்தார். வாள், வில், வேல் இம்மூன்று ஆயுதங்களையும் பிரயோகிப்பதில் எப்பொழுது சிஷ்யன் குருவுக்கு மேற்படுகின்றானோ, அப்பொழுது அந்தச்சிஷ்யன் முற்றுமுணர்ந்தவனாவான் என்று அவர் அடிக்கடி கூறுவார். அவன் இவரிடத்திற்கு வருதற்கு முன்னமேயே தனது கிராமத்திலுள்ள தனது வயதுப்பிள்ளைகளைக் காட்டிலும் சரீராப்பியாசத்தில் தேர்ந்தவனாய் விட்டபடியால், இனிமேல் பயில வேண்டிய அவசியமில்லையென்றும் பெரும் யுத்தங்களில் பெயர் பெறுதற்குத் தான் ஏற்றவனேயென்றும் ஒரு எண்ணம் அவனுக்கு உண்டாயிருந்தது. குரு இதை யறிந்து கொண்டு ஒருநாட் காலையில் இவனைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டுக் கொஞ்சதூரம் சென்றவுடன் ஒரு சிறிய ஈட்டியை இவனிடத்தில் கொடுத்து சுமார் ஐம்பது கஜதூரத்திலுள்ள ஒரு பாறையைச் சுட்டிக்காட்டி “எங்கே? பார்ப்போம் இவ்வீட்டியை அப்பாறையின்மீது எறி” என்றார்.

நெட்டாஜி தனது சாமர்த்தியத்தை குரு அறிய வேண்டுமென்று அதிக சிரமமெடுத்துக் கஷ்டப்பட்டு குறி தப்பாமல் பாறையின் மீது எறிந்தான். குரு அவனைத் தட்டிக்கொடுத்து “உனது வயதிற்கு நீ மிகுந்த சமர்த்தன் தான். இன்னும் சிறிது நாட்கள் சென்றால் இவ்வாயுதப் பிரயோகத்தில் இணையில்லா வீரனாய் விடுவாய்; ஆனால் ஈட்டியை நீ பிடித்த மாதிரியில் பிடித்தால் அனுவசியமாக மிகுந்த சிரமப்படவேண்டும். இனிமேல் நீ இம்மாதிரியாகப் பிடி” என்று சொல்லிவிட்டுத் தமது பெரியதோர் பலத்த ஈட்டியைச் சிறிதும் சிரமமில்லாமல் நெட்டாஜியின் ஈட்டி விழுந்த இடத்தை நோக்கி வீசியெறிந்தார். அது சற்றும்

தவறாமல் அப்படியே நெட்டாஜியின் ஈட்டியின் மேல் விழுந்தது.

பின்னர் அவர் நெட்டாஜியினிடத்தில் ஒரு வாளைக் கொடுத்துத் தமது கையில் "பட்டா" ஏந்தி நெட்டாஜியைப் பார்த்து "எங்கே? உனது வாள் விளையாட்டைப் பார்ப்போம்" என்று எதிரே நிற்க, நெட்டாஜி "நான் எப்படி எனது குருவை யடிப்பேன்?" என்று மிகுந்த விசனத்தோடும் வெட்கத்தோடும் வாளைக் கீழே எறிந்தான். அப்பொழுது குரு புன்னகை புரிந்து "புத்திரா, என் சொற்களுக்கு நீ கீழ்ப்படிய வேண்டியது உனது கடமையல்லவா? வாளைக் கையில் தாங்கி நான் சொல்லியபடி செய்" என்று கூறலும், நெட்டாஜி உடனே தனது வாளெடுத்து முதலில் மெல்ல மெல்ல பயத்துடனும் கூச்சத்துடனும் வீசினான்; பின்னர், வர வர மனந்தேர்ந்து குருவின் வலது புறத்திலும் இடது புறத்திலுமாக மேலும் கீழும் குறிவைத்து வீசி அடிக்க யத்தனித்தான்; ஆனால் அவனால் குருவை யொரு சிறிதும் தொட முடியவில்லை. தன்னுடைய முழுச் சக்தியையும் உபயோகித்து பிரமப் பிரயத்தனம் செய்து நெட்டாஜி பார்த்தான்; ஆயினும் முடியவில்லை. கடைசியாக களைத்து விழுந்து விடுவான்போ லிருந்ததைக்கண்ட குருவானவர் தமது மணிக்கட்டை உள்ளுக்கிழுத்து ஒரு சுழற்றுச் சுழற்றி ஒரே யடியில் நெட்டாஜியினுடைய கத்தியை வெகு தூரத்தில் போய்விழும்படி தட்டிவிட்டார். நெட்டாஜிக்கு இப்பொழுதுதான் புத்திவந்தது; தான் அறிந்தது போதாதென்று அவன் இப்பொழுது தான் அறிந்துகொண்டான்.

இன்னும் இவனுக்கு இவனுடைய குரு எழுதப் படிக்கவும் கற்றுக்கொடுத்தார். இவன் ராமாயணம், பாரதம் முதலான இதிகாசங்களையே அடிக்கடி படிப்பதும்

குருவினிடத்தில் கேட்பதுமா யிருந்தான். இவனுக்குப் பொன்னினிடத்தில் ஆசை யுண்டாகவில்லை; பூமியினிடத்தில் ஆசை யுண்டாகவில்லை; பெண்ணினிடத்தில் ஆசை யுண்டாகவில்லை; ஆனால் ஸ்ரீராமன், பீமன் முதலிய பூர்வ புருஷர்களைப்போலப் புகழ்பெற வேண்டுமென்று இரவும் பகலும் இதே எண்ணமா யிருந்தான்; தசரதர், யுதிஷ்டிரர் முதலிய என்றும் புகழ்பெற்ற அரசர்களைப்போல இப்பொழுதும் இவ்விந்திய நாட்டை எவரேனும் ஒரு ஹிந்து அரசர் அரசாட்சி செய்யாரா? என்று ஏங்கினான். இவ்விருப்பங்களுக்கெல்லாம் இவனுடைய குருவும் அநுகூலமாகவே யிருந்தார். இவர் சிற்சில சமயங்களில் பிரபஞ்சப் பிரக்ஞை யற்று மனத்தை உளமுகப் படுத்தி உபசாந்தத்தில் வீற்றிருப்பார். அப்பொழுது தேசத்தின் பிற்காலம் நற்காலமாவதாக ஆநந்தக் கனவு காண்பார். ஆதலால் இவர் நெட்டாஜியை இவ்விஷயத்தில் மேன்மேலும் உற்சாகப் படுத்துவோராயினர். தேசோத்தாரணத்தின் பொருட்டுத் தாம் தமது புத்திசக்தியினாலும் புஜபலத்தினாலும் வேண்டிய மட்டும் உழைத்திருக்கிறதாகவும் ஆயினும் அப்பொழுதெல்லாம் அதற்கு ஏற்றகாலம் வரவில்லையென்றும் இப்பொழுது அந்நற்காலம் சமீபிக்கின்றதென்றும் நெட்டாஜி மிகப் பெரிய வேலைகளைச் செய்யும்படியாக நேரிடுமென்றும் அவர் நெட்டாஜியினிடத்தில் அடிக்கடி சொல்வதுண்டு. தனக்குச் சாவகாசப்பட்ட நேரங்களில் நெட்டாஜி பாறையின்மேல் உட்கார்ந்துகொண்டு ஒரு கையினால் மோவாய்க் கட்டையைத் தாங்கிக்கொண்டு சுற்றிலுமுள்ள மலைகளையும் பள்ளத் தாக்குக்களையும் பார்த்துக்கொண்டே ஆழ்ந்த ஆலோசனையிலிருப்பான்.

---

# அத்தியாயம்—5.

## சந்நியாசி சமாதி யடைந்தார்

மதேரான் மலைச்சிகரத்தில் இவ்விதமாக இரண்டு வருஷங்கள் சுகவாசத்தில் கழிந்தன. சந்நியாசி வரவர நெடுநேரம் பிரபஞ்சப் பிரக்ஞையற்று பிரம நிஷ்டையில் வீற்றிருப்பதிலேயே விருப்பு மிகுந்தார்; பேசிக்கொண்டேயிருப்பார்; திடீரென்று அவருடைய மனமானது அந்தர் முகப் பட்டுவிடும். முகத்தில் ஒளி வீசும்! நெட்டாஜி அப்பொழுது அவரைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தால், நெட்டாஜியின் மனமானது அவருடைய அழகிய ஆநந்த வடிவத்தினிடத்தில் லயித்துவிடும். இவ்விதமாகச் சின்னாட்கள் கழிந்தன.

கி. பி. 1648-வது வருஷம் கார்த்திகை மாதம் மாரிக்காலம் மாறி, வானம் தெளிவடைந்திருந்தது. காலை நேரம். கதிரவனுடைய கனகநிறக் கிரணங்கள் தழைத்துத் துளிர்த்துள்ள விருட்சங்களின்மீதும் செடி கொடிகளின் மீதும் புல் பூண்டுகளின் மீதும் புன்னகை புரிந்து கொண்டிருந்தன. ஜகத்திற்கு ஜீவநாயகனாகிய செல்வன் அண்டபிண்ட சராசரங்கட்கெல்லாம் ஆதார பூதனாகிய ஆதித்தன், தோன்றினான் தோன்றினானென்று பறை யடிப்பதுபோல், பட்சிசாலங்கள் எல்லாம் கா! கூ! என்று சப்தித்துப் பறந்து கொண்டிருந்தன. மலை அருவிகளின் பக்கத்தில் மான் கன்றுகள் மந்தை மந்தையாக நின்று மகிழ்ச்சி பெருகித் துள்ளிக் குதித்துக் களி மிகுந்திருந்தன. மலை வேடர்கள் தங்களுடைய விற்களையும் அம்புகளையும் தோள்களில் தாங்கிக்கொண்டு, அப்பர்வதப் பிரதேசத்தில் தன்னரசு செலுத்

தப் புறப்பட்டார்கள். நிர்மலமான, நிசப்தமான தென்றல் ஜிலுஜிலு வென்று வீசிக்கொண்டிருந்தது.

இத்தகைய இன்பகரமான சமயத்தில் ஒரு சிறு பாறையின்மீது ஒருவர் அங்கத்தில் கௌபீனத்தைத் தவிர வேறு ஆடை யில்லை, பிரசன்னமான முகம், புன்னகை பொலியும் இதழ்கள், சிறிது திறந்த கண்கள், பார்ப்பவர்கட்கு அவர் கீழ்ப் பார்வையினர்போலத் தோன்றும், ஆனால் உண்மையாக அவர் மேனோக்க முடையவர், பெரிதாக நீண்டு வளர்ந்த தாடிகள் உள்ளவர் (தியாஸாபிக்கல் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கூட அவ்வளவு அடர்ந்ததும் நீண்டதுமான தாடி கிடையாது), கட்டுக்கட்டாக விபூதியணிந்தவர், முரட்டுச் சரீரக் கட்டுடையவர், "ஹர, ஹர, மகாதேவ" என்று அடிக்கடி சொல்பவர்,—வீற்றிருந்தார். அவருடைய பக்கத்தில் ஒரு வாலிபன், அழகிய வடிவினன், அங்கனைகளுக்கு அனங்கனுவோன், தைரியமும் பராக்கிரமமும் ததும்புகின்ற கண்களுள்ளான், ஆழ்ந்த ஆலோசனையைக் காட்டும் அமர்ந்த முகத்தின், அழகிய அரும்பு மீசையான், அகன்று விரிந்து, அமரரையும் சமருக்கு அழைப்பதற்கு வன்மை யுடையதுபோல வாய்ந்த மார்பினன், உருட்டி விட்ட உலக்கைகளைப்போல இருபுறமும் தொங்குகின்ற கைகளையுடையான், யானை நடையான், அரையில் மாத்திரம் ஆடையுடையான், கைகட்டி வாய்பொத்தி வெகு விநயமாக நின்று கொண்டிருந்தான். கீழே பார்த்தவர்போல அரைக் கண்ணுடன் அமர்ந்திருந்த பெரியவர் தமது கண்களை நன்ருகத் திறந்து அவ்வாலிபனைப் பார்த்து அருகில் உட்காரும்படி ஆக்ஞை செய்துவிட்டுச் சற்றுநேரம் இடுப்புக்கு மேலுள்ள தமது உடலை யாட்டிக்கொண்டே மௌனமாயிருந்தார். உடனே மறுபடியும் அவர் அவ்வாலிபனை நன்ருகப் பார்த்து "எனது ஞானபுத்திரா! அங்கம், ஆபதம்,

சத்பாவும், ஸ்தானம் என்னும் சதுர்விதங்களிலும் நீ உண்மையாகவே, என்னிடத்தில் பக்தி பாராட்டுகின்றாயென்பதை யறிவேன். ஸ்தூல திருஷ்டியில் நாம் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து விடும்படியாகக் கூடிய சீக்கிரத்தில் நேரிடும். சர்வசம்ஹார மூர்த்தியாகிய காலனானவன் எனது சரீரத்தைக் குறி வைத்து அம்பு எய்யப்போகிறான். எப்பொழுது, எப்படி நான் இந்தச் சரீரத்தை எறிந்து விட்டுப் போய்விடும்படி நேரிடும் என்பது மாத்திரம் தெரியவில்லை. ஆனால் நான் கூடிய சீக்கிரத்தில், அதுவும் திடீரென்று, போய்விடுவேனென்பது மாத்திரம் நிச்சயம். உன்னையும் ஆபத்துக்கள் சூழப்போகின்றன. ஆனால் நீ தப்பித்துக்கொள்வாய். மகாராஷ்டிர தேசத்திற்காகப் பாடுபடும் மகத்தான பெருமையை நீ அடையப் போகின்றாய். எனது ஆவி இக்கூட்டிலிருந்து நீங்கிவிட்டால், நீ இந்த மலைவாசத்தை விட்டு விட்டு, உனது அதிர்ஷ்ட துரதிர்ஷ்டங்களையநுபவிப்பதற்கு நீ கீழே சென்றுவிடு. உனது உலக வாழ்க்கையில் வஞ்சகம், பயங்காளித்தனம், கொடூரம் இம்மூன்று குணங்களையும் அடியுடன் அழித்துவிடு. சரீர பலத்திலும் யுத்தப் பயிற்சியிலும் மகாராஷ்டிரத் தலைவர்களுக்குள் நீ முதன்மை பெறுவாய். வாளாயுதப் பயிற்சியில் நீ எனக்கு நிகரா யிருக்கின்றாய். இப்பாரத பூமியிலே உனக்கு நிகர் வேறெவரும் இல்லை. ஆதலால் நீ நிகரற்றவன்; இப்பொழுது நீ இன்னும் அப்பியசிக்க வேண்டியதொன்றுண்டு—ஐரோப்பியர்கள் உபயோகிக்கும் துப்பாக்கிப் பயிற்சி. குறி தவறாது அம்பெய்பவனுக்குத் துப்பாக்கிப் பயிற்சியொரு பெரிதோ? போர் புரிவதற்கு மாத்திரம் அன்று, படைகளை யணிவகுக்கவும் கற்றுக் கொடுத்திருக்கிறேன். நீ அடைந்திருக்கும் அறிவையும் சக்தியையும் நல்வழியில் உபயோகப் படுத்து, துன்புறுத்தப்படுபவர்களை

யும் உன் மதத்தையும் உனது தேச ஜனங்களையும் ரட்சிப்பதற்காக வன்றி மற்றெக்காரணத்தினாலும் உனது கத்தி உறையினின்றும் உருவப்படக் கூடாது.

"இப்பொழுது நம் தேசத்திற்கு நற்கால ஆரம்பம். மகாராஷ்டிர தேசத்திற்கு ஸ்வதந்தரத்தை ஏற்படுத்தும் பொருட்டுச் சாட்சாத் பரமசிவனே அவதரித்திருக்கின்றார். அவர் பக்கம் நின்று யுத்தம் செய்வதற்கு எனக்குக் கொடுத்துவைக்கவில்லை. ஆனால் எனது வித்தியா புதல்வனாகிய நீ அவருடைய கோலாகல முயற்சியில் அநுசாரணையாயிருக்கப்போகின்றாயென்று நான் ஆநந்திக்கின்றேன். ஆ! ஆ! அவருடைய ஜெயங்களிலும் தோல்விகளிலும் அவருடன் இருந்து அநுபவிக்கும் ஆநந்தித்திற்கு நிகராக எதைச் சொல்லலாம்? அவருடைய அசகாயப் பிரயத்தனங்களினால் மகம்மதிய ராஜாங்கம் உடைபட்டுவிடும். அவருடைய தந்திரங்கள் என்ன? அவருடைய சூழ்ச்சிகள் என்ன? அவருடைய ஜால சாமர்த்தியங்கள் என்ன? அவருடைய மாயாவித்தைகள் என்ன? அவருடைய ஆண்மை யென்ன? பராக்கிரமம் என்ன? அவர் நவரத்தின கிரீடம் தரிக்கப்பெற்று ஏகச் சக்ரேஸ்வரனாகி, ராஜாராஜர்களையும் தமது அடிபணிந்து நிற்கச் செய்வார். நீ அவருக்கு வலதுகை போன்று சிதறிக் கிடக்கும் ஆரிய தேசத்தைத் திரட்டி யுருட்டி உருச் செய்வாய்" என்று பணித்தருளி சமாதி நிஷ்டையின் பொருட்டுத் தமது கண்களை மூடினார்.

குருகூறிய வசனங்களெல்லாம் நெட்டாஜிக்குப் பசுமரத்தாணிபோலப் பதிந்துகொண்டன. அவனுக்கு ஏதேதோ யோசனைகளை யெல்லாம் கிளப்பிவிட்டன. ஆகையால் நெட்டாஜி அந்த இடத்திலிருந்து எழுந்திருந்து தான் வழக்கமாக உட்கார்ந்து யோசனை செய்யும் பாறையின்மீது

சென்று உட்கார்ந்தான். சிறிதுநேரம் சென்றது. குரு கண் விழித்துப் பார்த்தார். அருகில் நெட்டாஜியைக் காண வில்லை. அங்கிருந்து எழுந்திருந்து சுற்றிலும் ஏறிட்டுப்பார்த் தார். அங்கொரு பாறையின்மீது நெட்டாஜி ஆழ்ந்த யோசனையுடன் வீற்றிருப்பதைக் கண்டவுடன், அவரு டைய முகம் மலர்ந்தது; ஆனால் அவருடைய கண்கள் இரண்டு மூன்று துளி கண்ணீரை விட்டுவிட்டன. அவருக் குச் சந்தோஷம் ஒருபக்கம், விசனம் ஒருபக்கம் உண்டா யின. தமது சிஷ்யன் தேச சேவைசெய்து ஆரியநாட்டை உன்னத நிலைமையில் கொண்டுவரப் போகிறனென்று களித்தார்; இத்தகைய அருமையான, அன்பு மிகுந்த சிஷ் யனைவிட்டுப் பிரியும்படி நேரிடுகின்றதேயென்று சிறிது விசனமடைந்தார். ஆயினும் தமது மனதைத் தேற்றிக் கொண்டு, சிஷ்யனிடத்திற்குச்சென்று அவனை ஆலிங்கனம் செய்து தமது அன்பின் அளவையும் அகமகிழ்ச்சியையும் அவனுக்கு அறிவிக்கக்கருதி, தாம் உட்கார்ந்திருந்த இடத்தி னின்றும் பெயர்ந்து தமது சிஷ்யன் இருக்கும் இடம் நோக்கி அவனுக்குப் பின்புறமாகச் சென்றார்.

நெட்டாஜி அப்பொழுது தான் சேனாதிபதியாக விருப்ப தாகவும் மோகலாய மூர்க்கர்களை முதுகிட்டோடத் துரத் தித் துரத்தி யடித்து ஜெயபேரிகை யடிப்பதாகவும் ஆனால் தனது சரீரத்தியந்தமும் ரத்தமானது ஊற்று போலப் பெருக்கெடுத் தோடுவதாகவும் பகற்கனவு கண்டுகொண் டிருந்தான். திடீரென்று ஒரு கர்ச்சனைகேட்டது. நெட்டாஜி தனது கனவுகலைந்து திடுக்கிட்டுச் சுற்றுமுற்றும்பார்த்தான். சுமார் 30 அடி தூரத்திற்குள்ளாக, கீழே அவனுடைய குரு வும் மேலே ஒரு பெரும்புலியுமாக விழுந்து கிடந்தார்கள். அப்புலியின் நடு உடலில் ஒரு வேலாயுதமானது ஊடுருவிக் கிடந்தது. குருவானவர் சிஷ்யனிடத்திற்கு வந்துகொண்

டிருந்தபொழுது, இப்புலியானது தமது சிஷ்யன்மீது பாயக் கண்டார். ஆதலால் சிஷ்யனுக்கும் புலிக்கும் நடுவே இவர் நின்று கொண்டு தமது வேலாயுதத்தை அப்புலியின்மீது வீசியெறிந்தார். அது தனது மரணாவஸ்தையில் அவர்மீது பாய்ந்து அவருடைய மண்டையைத் தகர்த்துவிட்டது. என்ன ஆச்சரியம்! எத்தகைய சிஷ்ய வாற்சல்லியம்! சிஷ்யனை ரட்சிக்கும்பொருட்டு உயிரையும் விடத்துணியும் குருக்கள் இக்காலத்தில் உண்டா? வித்தையும் இக்காலத்தில் ஒரு விர வியாபார திரவியம் தானே!

உயிர் நீங்கிக்கிடக்கும் குருவின் சரீரத்தைக் கண்டான் நெட்டாஜி; அவன் அடைந்த வருத்தத்தை அளவிட்டுக்கூற எவரால் முடியும்? "ஐயோ இப்பொழுதுதானே என்னுடைய ஆவி சீக்கிரம் பிரிந்துவிடும்'' என்று கூறி எனக்கு இதோபதேசம் செய்தார். நான் மகா பாவியானேனே! என்னுயிரைக் காப்பாற்றும் நிமித்தம் தம்முயிரை இழந்தாரே! என் அப்பா! குருமூர்த்தி! உன்னை எப்பொழுது காண்பேன்? என்னை அநாதையாய் விட்டுப் போய்விட்டாயே! நான் என்செய்வேன்? என் செய்வேன்!'' என்று நெட்டாஜி கண்ணீராறுகப் பெருக்கி உருண்டு புரண்டு கோவென்று கதறியழுதான். அவனுடைய அழுகைச் சத்தத்தைக் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ள மலைவேடர்களெல்லோரும் ஓடிவந்து சங்கதியைத் தெரிந்துகொண்டு, அவர்களும் கூடியழுதார்கள். பின்னர் அவர்கள் அங்கு ஒரு பெரிய ஆலவிருட்சத்தி னடியில் ஆழமாக ஒரு குழிதோண்டி அதில் அம்மகானுடைய சரீரத்தை இறக்கி உட்காரவைத்துச் சமாதி செய்தார்கள்.

---

# அத்தியாயம்—6.

## அயூப்கான் அகப்பட்டுக் கொண்டான்.

சந்நியாசி சமாதி யடைந்துவிட்ட பிறகு நெட்டாஜிக்கு அங்கு என்ன வேலை? சந்நியாசிக்குச் செய்ய வேண்டிய கிரியா பூஜாதிகளெல்லாம் செய்து முடித்த பிற்பாடு, நெட்டாஜி தான் இரண்டு வருஷங்கட்கு முன்னர் விட்டுச் சென்ற, தனது ஸ்வதேசம்நோக்கிப் புறப்பட்டான். முதலாவது சவுக்கத்திற்குச் செல்லவேண்டுமென்று தனது குரு கூறியிருந்த ஆக்ஞையின் பிரகாரம், இவன் முதலாவது அவ்விடத்திற்கே சென்று பெற்றோருடைய ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு பின்னர் தட்சிணதேசம் சென்று டோர்ணு கோட்டைக்குப் போகவேண்டியவன்; அவன் இன்னது செய்வதற்காகப் பிறந்தவன் என்றும் அங்கு அவனுக்குத் தெரியவரும் என்றும் குரு கூறியிருந்தார். நெட்டாஜி புறப்படும்பொழுது தனது குருவினுடைய வேலாயுதத்தையும் வாளாயுதத்தையும் தன்னுடன் எடுத்துக் கொண்டான். கடைசியாக மதேரான் மலைச்சிகரத்தை ஒரு சுற்றுச் சுற்றிப்பார்த்தான். கண்களில் கண்ணீர் பெருகி விட்டது. இரண்டு வருஷங்களாக சாந்தத்தையும் சமாதானத்தையும் அளித்த இடம். தானும் தனது குருவுமாகத் தங்களுடைய அந்தரங்க மனோ பாவங்களை பரஸ்பரம் மாற்றிக்கொண்ட இடம். பச்சைப் பசேலென்று பசுமை பரந்து அதிரமணீயமாய் விளங்கும் இடம், இந்த இடத்தை விட்டு நீங்குவதென்றால், எவருக்குத்தான் மனம் சகிக்கும்?

நெட்டாஜி மலையினின்றும் கீழே இறங்கி இடையிலிருந்த காடுகளையெல்லாம் வெகு வேகமாகக்கடந்து தனது

வீட்டை நோக்கி நடந்தான். இவன் மதன்ரோ மலைக்குப் போவதற்கே காரணம் பீஜப்பூர் சமஸ்தானத்துப் பிரபுக்களில் ஒருவரை இவன் கொன்றுவிட்டதல்லவா? இவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஏராளமான வெகுமதிகள் கொடுப்பதாக பீஜப்பூர் சமஸ்தான அரசாங்கத்தார் பிரசுரித்திருந்தார்கள். இச்சங்கதியும் இவன் காதுக்கு எட்டியிருந்தது. ஆனால் இவன் உயிருடனிருக்கிறானென்று அவ்வூரில் ஒருவருக்குந் தெரியாது; இவனுடைய பெற்றோர்களும் இவனைக் கூட்டிக்கொண்டு சென்று மலையில் சேர்த்து விட்டு வந்த இவன் வீட்டு வேலைக்காரனுமே இவன் பிழைத்திருக்கிற சங்கதியை யறிவார்கள். ஆகலால் இவன் தன்னுடைய வீட்டுக்கு எவருக்குந் தெரியாமல் செல்ல நினைத்து, பால சந்நியாச வடிவங்கொண்டான்; எடுத்துத் தரித்தான் ஒரு மான்தோலைத் தனது முதுகின்மேல்; தனது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் விபூதியினால் அலங்கரித்துக் கொண்டான். அரையில் கௌபீனம் மாத்திரம் தரித்துக் கொண்டான்; வாளாயுதத்தை முதுகுபுறமாகத் தொங்கும் மான்தோலுக்குள் மறைத்துக்கொண்டான். கையில் வேலாயுதத்தைத்தாங்கிக்கொண்டு பைராகியைப்போல"ஜெய ஜெய சங்கரா" என்று கூறிக்கொண்டும் "மகாதேவ, மகாதேவ" என்று கூறிக்கொண்டும் சவுக்கத்திலுள்ள எல்லாத்தெருக்களையும் சுற்றிக்கொண்டு வரும்பொழுது பெரிய அடர்ந்து படர்ந்த ஆலமரம் ஒன்று தென்பட்டது. அவ்வாலமரத்திற்கு அடுத்த வீடுதான் நெட்டாஜியினுடையது அவ்வாலமரம் நின்ற பூமியும் நெட்டாஜிக்குச் சேர்ந்ததே. நெட்டாஜி அவ்வாலமரத்தடிக்குச் சென்றதும், நெட்டாஜியை முன்பு ஒளித்து இட்டுச்சென்ற ஈஸாஜி என்னும் பெயரையுடைய வேலைக்காரக் கிழவன் எதிர்ப்படலுா, நெட்டாஜி தான் அவ்வாலமரத்தடியில் தங்கிச் செல்வதற்கு அவனிடம் அநு

மதி பெற்றுக்கொண்டான். நெட்டாஜி, கிழவனை இன்னு னென்று அறிந்துகொண்டான். கிழவனுக்கு நெட்டாஜி யைத் தெரியவில்லை. நெட்டாஜியினுடைய பெற்றோர் சுவ பாவத்திலேயே தர்மசிந்தை யுடையவர்கள்; பெரியோர் பணிவிடைகளில் பிரியம் மிகுந்தவர்கள். ஆதலால், தங்க ளுடைய ஆலமரத்தடியை நாடி ஒரு சாமியார் வந்திருக்கிறு ரென்று கேள்விப்பட்டதும், புருஷனும் மனைவியுமாக ஓடி வந்து சாமியாரை வெகுவாக உபசரித்தார்கள். இவர்கள் இவ்விதமாக உபசாணைகள் செய்வது நெட்டாஜிக்குச் சுற் றும் பிரியமில்லையாயினும், தனது உண்மை யுருவத்தைச் சிறிது நோமாவது ஒளித்து வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்ததால், மனஞ் சகித்துக்கொண்டு மௌனமா யிருந்தான். கடைசியில் அவர்களைப் பார்த்து நெட்டாஜி, "சென்ற இரண்டு வருஷங்களுக்கு மேலாக உங்களுக்குச் சகிக்கமுடியாத துக்கம் நிவர்த்தியாகும் காலம் சமீபித்து விட்டது. அதன் நிமித்தமே ஈஸ்வான் என்னையனுப்பி யிருக் கிறுர். இன்று இரவு 10 மணிக்குமேல் ஊர் அடங்கின பின் னர் நீங்கள் என்னிடம் வந்தால் அந்தத் துக்கம் நிவர்த்தியா கும் மார்க்கத்தை யுபதேசிக்கின்றேன்" என்றுன். அவர்கள் இருவருஞ் சந்தோஷமிகுந்து சாமியாரைப் பலவிதத்திலும் கொண்டாடி வீட்டுக்குப் போய்விட்டு, இரவு 10 மணிக்கு மேல் சாமியாருடைய உத்திரவு படிக்கே அவரிடஞ் சென் றுர்கள். ஆனல் அப்பொழுது அங்கு அவர்கள் சாமியாரைக் காணவில்லை. அதற்குப் பதிலாக, ஆச்சரியத்துடன் தங்களு டைய அரிய புத்திரனை, இரண்டு வருஷங்களுக்கு முன்பு மதோான் மலைக்கு அனுப்பிவைத்த நெட்டாஜியைக் கண் டார்கள். அவர்கள் அப்பொழுது அடைந்த சந்தோஷத்தை அளவிட்டுக் கூறமுடியுமோ? அன்றிரவு முழுதும் "விடிய விடிய" பேசிக்கொண்டே யிருந்தார்கள். நெட்டாஜி தான்

மலைக்குச் சென்றதுமுதல் திரும்பிவந்தது வரையிலுமுள்ள தன்னுடைய கதையையெல்லாஞ் சொன்னான். அவனுடைய பெற்றோர்கள் ரங்காபாயைக் கண்டு பிடிக்கும்படி தாங்கள் செய்த பிரயத்தனமெல்லாம் பலனில்லாது போயிற்று என்றார்கள்.

நெட்டாஜி தனது பாலியத் தோழியாகிய காசிபாயைப் பற்றி விசாரித்தான். காசிபாய் இப்பொழுது அவ்வூரில் இல்லையென்றும் மகாராஷ்டிர தேசத்தை மகம்மதியக் கொடுங்கோன்மையினின்றும் விடுவித்து இரட்சிப்பதற்கென்று அவதரித்திருப்பதாகச் சொல்லப்படுகின்ற ஸிவாஜி என்னும் மகாராஜர் பீஜப்பூர் ஸமஸ்தானத்தை லட்சியம் செய்யாது டோர்ணு, ராஜகோட்டை, ஸிம்ஹகோட்டை, புரந்தரம், ராஜமாச்சி முதலிய கோட்டைகளைப் பிடித்துக் கொண்டுவிட்டாரென்றும் காசிபாயின் தகப்பனார் மேற்படி ஸிவாஜியின் பக்கம் சேர்ந்திருப்பதாக பீஜப்பூர் அதிகாரிகளால் சந்தேகிக்கப் பட்டு, அவரைப் பிடிப்பதற்கு சில சிப்பாய்கள் அனுப்பப்படவே, அவர் தப்பித்துக்கொண்டு தமது குடும்பத்துடனும் சொத்துக்களுடனும் ராஜமாச்சி என்ற மலைக் கோட்டைக்குச் சென்றுவிட்டாரென்றும் ஆதலால் இப்பொழுது காசிபாய் ராஜமாச்சி கோட்டைக்குள் இருக்கிறாளென்றும் ஆனால் பீஜப்பூர் ஸமஸ்தானத்துப் பெரும் படை யொன்று ராஜமாச்சி கோட்டையைத் தகர்ப்பதற்குச் சென்றுகொண் டிருக்கிறதாக வதந்தியுண்டா யிருக்கிறதென்றும் நெட்டாஜியின் தகப்பனார் நெட்டாஜியினிடத்தில் கூறினார். இவை யெல்லாவற்றையும் வெகு நிதானமாகக் கேட்டுக்கொண்டே யிருந்தான் நெட்டாஜி.

அவனுடைய மனமானது தத்தளிக்க ஆரம்பித்துவிட்டது. தனது பாலியத் தோழி, விளையாட்டுப் பருவத்தி

லேயே தனக்கு வீரத்தை யூட்டிவந்தவள், கண்ணுக்குக் கண்ணுகத் தான் பார்த்து வந்த காசிபாயும் அவளுடைய தகப்பனும் மகம்மதியப் படைகளினுல் எதிர்க்கப்படப் போகின்ற ராஜமாச்சி கோட்டைக்குள் இருக்கின்றுர்கள் என்று கேட்டவுடன், எவ்விதத்திலாலது அவர்களை ரட்சிக்க வேண்டுமென்று சங்கற்பம் செய்துகொண்டான். இவன் செய்யவேண்டிய காரியங்கள் ஈஸ்வர சங்கற்பத்தில் வேறு யிருக்க, இவன் ஆலமரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருக்க முடியுமா? பெற்றேரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

அவன் இன்னும் சந்நியாசி வேஷமே தரித்துக்கொண்டும் மான் தோலினுல் முதுகை மூடிக்கொண்டும் இருந்தான். அவனுடைய வாளாயுதமானது மான் தோலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. சில ரௌத்திர சந்நியாசிகள் கையில் சூலாயுதம் தாங்கி வருவது வழக்கம் தானே! ஆதலால் அவன் பகிரங்கமாகவே தன்னுடைய குருவினுடைய பெரிய வேலாயுதத்தைக் கையில் தாங்கிக்கொண்டிருந்தான். இவ்வித வேஷத்துடன் சிறிது தூரம் சென்றதும் இவன் தனக்கு எதிரே ஒரு குதிரை வீரன் வருவதைக் கண்டு, அவன் தலையை மொட்டை யடித்துக்கொண்டும் தாடி வளர்த்துக்கொண்டு மிருந்ததினுல் மகம்மதியன் என்று அறிந்தும் அவனைச் சிறிதேனும் லட்சியம் செய்யாது சென்றுன். மகம்மதியன் நெட்டாஜியின் போக்கைத் தடுத்து, "அடா விக்கிரகங்களை வணங்குகின்ற வீணப்பயலே! நில், நில், எங்கே போகின்றுய்! சுடுகாட்டுச் சாம்பலைச் சுண்ணும்பு அடித்ததுபோல் பூசி யிருக்கின்ற இந்தச் சோற்றுப் பானையில் இருக்கும் உயிர் உன்னுடையதானுல், நான் கேட்கும் கேள்விக்குச் சரியான விடை கொடு; நான் யார் தெரியுமா? ராஜமாச்சி கோட்டையைத் தகளாக்கத் துணிந்து

வளைந்திருக்கும் துலுக்க வீரர்களின் தலைவன்; என் பெயர் அயூப்கான். அக்கோட்டைக்குச் செல்வதற்கு வழி யெது? ஜல்தி! பதில் சொல்! இக்குதிரையின் காலடியிலிட்டு உன்னைத் துவைத்து விடுவேன்'' என்று அட்டகாசம் செய்தான். நெட்டாஜி அந்த மகம்மதியனுடைய குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு "ஐயா, தங்களுடைய வீரத்தனத்தை வாயினால் பேசியது போதும்; கையினால் சிறிது காண்பிக்க வேண்டுகிறேன். நாம் இருவரும் சரி சமமாக நின்று போர் புரிவது யுத்த முறைமை; தயவு செய்து குதிரையினின்றும் இறங்குங்கள் பார்க்கலாம்'' என்றான். மகம்மதியன் கீழே இறங்கவில்லை; நெட்டாஜியும் கடிவாளத்தை விடவில்லை. மகம்மதியன் குதிரையை அடித்து ஓட்டினான். குதிரையானது பட்ட அடி பொறுக்காது, நெட்டாஜியின் கையினின்றும் விடுவித்துக்கொள்ள விரும்பிய வேகத்தில் தன்மீது உட்கார்ந்திருந்தவனைத் தூக்கித் தரையில் போட்டுவிட்டது.

இப்பொழுது நெட்டாஜி நினைத்திருந்தானானால், அயூப்கானை அதம்பண்ணி யிருக்கலாம்; ஆனால் நெட்டாஜி மகாராஷ்டிர வம்சத்தவன் அல்லவா? ஆரிய ஜாதியில் பிறந்தவனல்லவா? கீழே விழுந்து பிரண்டுகொண்டிருப்பவனை யடிப்பானா? ஆதலால் அவனைத் தூக்கி நிற்கும்படி செய்து, பிறகு நெட்டாஜி அவனை நோக்கி இனிமேல் நீ உன்னுடைய வாளை யுருவி உன்னை ரட்சித்துக்கொள்'' என்றான். அயூப்கான் அரண்டு விட்டான்; அவனுடைய அதிகாரத்வனி அடங்கி விட்டது. அவன் அபயக் குரலுடன், 'ஐயா, தீரனாகிய சந்நியாசியே, எனது வலதுகை தளர்ந்துவிட்டது. தன்னைத்தானே ரட்சித்துக்கொள்ள முடியாத ஒரு எதிரியைத் தாங்கள் உபத்திரவம் செய்யமாட்டீர்களென்று நம்புகிறேன்' என்றான். நெட்டாஜி சுத்த வீரனாய பொழுதிலும் மூட

னல்லன். அந்த மகம்மதியனுடைய வலதுகை உண்மை யில் தளர்ந்துவிட்டதென்று அவன் நினைக்கவில்லை. ஆகை யால் அவன் மகம்மதியனுடைய கத்தியைப் பிடுங்கிக் கொண்டு "சில நிமிஷங்கட்கு முன்னர் நீ ராஜமாச்சி கோட் டைக்கு வழிகேட்டாய். நான் உனக்கு வழிகாட்டுவது மாத்திரம் அன்று, நானும் கூடவே வருகிறேன். ஆகையால் மலைகளின்மீது நடப்பதற்கு தயாராய் விடு; இல்லையேல், உனது சரீரம் காக்கைகளுக்கும் கழுகுகளுக்கும் உணவாய் விடும்" என்முன். "இதென்னடா வம்பு! இவன் விடாத கண்டனு யிருக்கிருனென்று அயூப்கான் யோசனை செய்து, தன்னை விட்டுவிடுவதானுல் ஏராளமான பணம் லஞ்சம் கொடுப்பதாகக் கூறினுன். நெட்டாஜி "நல்லது, நீ கொடுக்க வேண்டிய பணம் இவ்வளவென்று ராஜமாச்சி கோட்டைக் குள் சென்றவுடன் ஏற்பாடு செய்துகொள்ளலாம். ஆயினும் எனக்கே அங்கு செல்வதற்கு வழி தெரியாது; ஆனுல் உனது குதிரைக்காரனுக்குத் தெரியுமல்லவா? வா, போக லாம்" என்முன்.

அயூப்கானுடைய குதிரைக்காரன் பெயர் ராமன்; இவ னும் மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவன்தான்! ஆயினும் வயிற்றுப் பிழைப்புக்காக மகம்மதியனிடத்தில் வேலைக்கு வந்திருந்தான். இவன் தனது ஜாதி வீரனுகிய நெட்டா ஜிக்கு வழி காட்டும்படியான பாக்கியம் கிடைத்தது பற்றி இரட்டிப்புச் சந்தோஷத்துடன் நெட்டாஜியைப் பார்த்து "காண்டல்லா பிரதேசத்தின் வழியாகச் சென்முல் சுலப மாகச் சென்றுவிடலாம்; ஆனுல் அங்கு மகம்மதியர்க ளுடைய பெரும்படையொன்று தங்கி யிருக்கின்றது. ஆத லால் அவ்வழி செல்வது அபாயகரமானது. வேருெரு மலை வழி யிருக்கின்றது; இது நேர்வழி. ஆனுல் இரண் டாயிரம் அடி மலைமீதேறி இரண்டாயிரம் அடி இறங்க

வேண்டும்'' என்று கூறவே, நெட்டாஜி மலை வழியாகச் செல்வது என்று தீர்மானித்தான்.

ஆனால் அயூப்கானுடைய குதிரையை என் செய்வது? குதிரைக்காரன் சமீபத்தில் தன்னுடைய நண்பன் ஒருவன் இருக்கின்றானென்றும் அவனிடத்தில் குதிரையை ஒப்பு வித்து விட்டுப் போகலாமென்றும் திரும்பி வரும்பொழுது—அவன் மகம்மதியர்களுடைய கையில் அகப்படாவிடில்—குதிரையை வாங்கிக்கொண்டு போகலாமென்றும் சொல்லவே, அப்படியே குதிரையை அந்தச் சிநேகிதனிடத்தில் கொண்டுபோய் ஒப்புவித்து விட்டு மூன்று பெயர்களுமாக மலையேற ஆரம்பித்தார்கள். எங்கே அயூப்கான் ஓடி விடுவானோ? என்று குதிரைக்காரனாகிய ராமன் முன்னும் தான் பின்னுமாக இருந்துகொண்டு அயூப்கானை நடுவில் விட்டுச் சென்றான் நெட்டாஜி. ஆனால் அயூப்கான் தப்பியோட எண்ணவில்லை பாவம்! அவனால் மலையேற முடியவில்லை. நெட்டாஜி தனது ஈட்டியினால் அயூப்கானை இரண்டொரு குத்துக் குத்தி ''வேகமாக நட'' என்றான். அயூப்கான் தனது தலைவிதியைத் தானே நொந்துகொண்டு வாடிய முகத்துடனும் கலங்கிய கண்களுடனும் நடந்து சென்றான்.

---

## அத்தியாயம்—7.

### ராஜமாச்சி கோட்டை.

நெட்டாஜி யென்னும் நிகரில்லா வீரன் அயூப்கான் என்னும் அதமனைக் கூட்டிக்கொண்டு ராஜமாச்சி கோட்டையின் வாசலை நெருங்கவே, அங்கு காவலிருந்த மகாராஷ்டிரப் போர்வீரனொருவன் இவர்களைத் தடுத்து நிறுத்தி "நீங்கள் யார்?" என்று கேட்டான். அவன் கேட்ட சத்தத்தில் அயூப்கான் அரண்டுவிட்டான். ஆனால் அயூப்கானுடைய குதிரைக்காரனாகிய ராமன் என்பான் தைரியமாகக் காவலாளியின் முன் நின்று "மகம்மதிய ஜாதியை மறுவுலகத்துக் கனுப்பக் கங்கணங் கட்டிக்கொண்டு தேவர்களும் திடுக்கிடும்படி திக்குவிஜயஞ் செய்து வருகின்ற சிவாஜி மகாராஜரின் சைந்நியத்தைச் சேர்ந்த சூரர்கள் நாங்கள். இதோ எங்களிடம் சிறைபட்டு நிற்கும் இவன், இந்த துடுக்கன், பண்பு நிறைந்த பாரததேசத்தைப் பாழாக்கி, ஆரிய ஜாதியின் பெருமைகளை அழிக்கத் துணிந்த அக்கிரமிகளாகிய மகம்மதியர்களின் தலைவர்களில் ஒருவன். இவன் "வாய்க்கொழுப்பால் அகப்பட்டுக் கொண்டான் இந்த வீரரிடத்தில். இவர் அசகாயசூரர்; மகாராஷ்டிர ஜாதிக்கே மணமூட்டக் கருதி மாநிலத்தில் உற்பவித்தவர்போலத் தோற்றுகிறது" என்றான். ஆயினும் காவலாளி இவர்களை நம்பாமல் யோசனைசெய்து நிற்கவே, நெட்டாஜி "நான் இக்கோட்டையின் சைந்நியாதிபதியை இப்பொழுது பார்த்துத் தீரவேண்டும். அவரிடத்தில் ஒரு அத்தியாவசியமான, ஒரு நிமிஷநேரமேனும் தாமதிக்கக்கூடாத சமாச்சாரம் ஒன்று சொல்லவேண்டும். எங்களை யுள்ளே விடு" என்று கூறவே, காவலாளி "சைந்நியாதிபதி நித்திரைக்

குச் சென்றுவிட்டார். அவரை நித்திரையினின்றும் எழுப்பத் துணிபவர் எவருமிலர். திரியம்பக ராவினுடைய நித்திரையை பங்கஞ்செய்யத் துணிந்தவருள் எவரும் இதுவரை உயிருடன் தப்பியதில்லை. வெருக்கும் அந்தியகாலம் நெருங்கிவிட்டால் தான், அவரை நித்திரையினின்றும் எழுப்புவதற்குத் துணியும்படியான புத்தி அவருக்கு உண்டாகும். நான் பிள்ளைகுட்டிக்காரன், நான்போய் எழுப்பமாட்டேன்" என்றான்.

"நான் கொண்டுவந்திருக்கும் சமாச்சாரம் விடிகிறவரையில் காத்து நின்று சொல்லும்படியானதன்று. இப்பொழுதே—இந்த நிமிஷமே சொல்லித்தீரவேண்டும்; அவ்வளவு முக்கியமானது."

"எங்கே, அந்தச் சமாசாரத்தை என்னிடம் சொல்; அது அவரை இப்பொழுதே எழுப்பிச் சொல்லும்படி அவ்வளவு அவசரமானதா? என்று பார்க்கிறேன்" என்றான் காவலாளி.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே நேரமாய்க்கொண்டிருக்கிறது. நெட்டாஜிக்குக் கோபம் வந்துவிட்டது. "திரியம்பகராவினிடத்தில்தான் நான் சொல்வேன்! அச்சமாச்சாரம் அவ்வளவு ரகசியமானது, அவசியமானது, அவசரமானது; நீ என்னை இன்னும் தடுத்து நிறுத்துவையேயாகில், உனது உயிர் உடலினின்றும் பிரியப்போகின்றதென்பதற்கு ஒரு அறிகுறியாக நீயே நினைத்துக்கொள். நீ பிள்ளை குட்டிக்காரன் என்று சொன்னாயே, அதையும் ஞாபகப் படுத்திக்கொள்" என்று நெட்டாஜி உறுமிக் கூறலும், காவலாளி பயந்து, அயூப்கானையும் ராமனையும் வாசலிலேயே சில மகாராஷ்டிரப் போலீஸ் வீரர்களின் பந்தோப்ஸ்தில் நிறுத்தி விட்டு, நெட்டாஜியை மாத்திரம் திரியம்பக

ராவ் படுத்திருந்த அறையின் பக்கல் இட்டுச் சென்றான். நெட்டாஜி அங்கு சென்றதும், மெல்ல திரியம்பகராவி னுடைய அறையின் வாசற் கதவண்டை நின்றுகொண்டு "வீரவிருது பூண்டு வெற்றிக்கொடி நாட்டி ஜயகோஷம் புரிந்து திக்குகளெல்லாம் செவிடுபடும்படி கொர்ச்சனை புரிந்து வருகின்ற ஸிவாஜி மகாராஜரின் சேவர்களில் சிறியோனாகிய நெட்டாஜி என்போன் நின் வாசலில் நிற்கின்றான்" என்று உரைக்கவே திரியம்பகராவ் திடீரென்று எழுந்திருந்து வாசற்கதவைத் திறந்து வெளியில் வந்து நின்றான்; பார்த்தான் நெட்டாஜியையும் வாசற் காவலாளியையும். கோபம் பொங்கிவிட்டது. பல்லை நறநறவென்று கடித்தான்; மீசை துடித்தது. "என்னுடைய நித்திரையை பங்கம்பண்ண ஈசனும் துணியமாட்டானே; அப்படியிருக்க, உங்களுக்கு அவ்வளவு துணிவா!," என்று திரியம்பகராவ் கொதித்துப் பொங்கி காவலாளியை வாய்கொண்ட மட்டும் வைது நெட்டாஜியைக்கூட அடிக்கச் சென்றான். ஆனால் நெட்டாஜியி னுடைய நெஞ்சஞ்சாமையையும் வீரப் பார்வையையும் கண்டு திரியம்பகராவ் அப்படியே பிரமித்துவிட்டான். "நீ யார்? நீ எங்கிருந்து வருகிறாய்? இந்நடுநிசியில் உனக்கு என்ன வேலை இங்கு?" என்று அதட்டிக் கேட்ட திரியம்பகராவி னிடத்தில் நெட்டாஜியானவன் "நீங்கள் என்ன நினைத்துக் கொண்டு இப்படி அதட்டுகிறீர்கள்? நான் தங்களிடத்தில் பிச்சை கேட்க வந்திருக்கிறேனென்று நினைத்துக்கொண் டிருக்கிறீர்களோ? தங்களையும் தங்கள் படையையும் எனது ஜாதியின் கௌரவத்தையும் காப்பாற்றுவதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன். அதிகாலையில் பீஜப்பூர் சமஸ்தானத் துப் படைகள் வந்து இந்தக் கோட்டையைச் சூழ்ந்து கொள்ளப் போகின்றன. ஆதலால் அப்படைகளை யெதிர்ப் பதற்குத் தயாராக வேண்டியது தங்கள் கடமையல்லவா?

அதை விட்டு விட்டு என்னிடத்தில் தங்களுடைய அதிகாரத்தை யெல்லாம் காட்டிவிடலாமா?" என்ருன். திரியம்பகராவ் இப்பொழுதுதான் விழித்துக்கொண்டான். கோபம் எங்கோ போய்விட்டது; ஆனால் அதற்குப் பதிலாக ஆத்திரமும் கவலையும் குடிகொண்டன. உடனே கோட்டையின் பலவீனமான பாகங்களைப் பலப்படுத்திச் செப்பனிடும்படி தனது படைகளுக்கு உத்தரவு செய்தான். நித்திரையினிடத்து அவ்வளவு பிரியம் வைத்துள்ள அவனுக்கு நித்திரை பிடிக்கவேயில்லை. நெட்டாஜியினுடன் கலந்துயோசனைகள் செய்து கொண்டான். நெட்டாஜிக்குக் கிடைத்த வந்தனங்கட்குக் குறைவேயில்லை; அக்கோட்டையின் சைந்நியாதிபதியா யிருந்த திரியம்பகராவ் அவசரமாக அங்கும் இங்கும் ஓடி உத்தர விடுவதையும் ஆத்திரப்படுவதையும் நெட்டாஜியுடன் கூடவந்த ராமன் என்பான்—அயூப்கானுடைய குதிரைக்காரன்—கண்டு "இதென்ன? விளக்கில் எண்ணெ யில்லை யென்றால் செக்கை பாட்டுவதற்கு முயற்சி செய்வதுபோ லிருக்கிறதே" என்று கூற எல்லோரும் சிரித்தார்கள். ஆயினும் அவ்விரவுக்குள் அக்கோட்டை எவ்வளவு பலப்படுத்த முடியுமோ, அவ்வளவும் பலப்படுத்தப்பட்டது. கோட்டைச் சுவர்களின்மீது பீரங்கிகள் ஒழுங்காக ஏற்றி நிறுத்தப்பட்டன. நாலா பக்கங்களிலும் பலமான காவல்கள் வைக்கப்பட்டன. என்னதான் இவர்கள் ஜாக்கிரதை யெடுத்துக்கொண்ட போதிலும், இங்கு இப்பொழுது இருந்த படை மிகச் சிறியதா யிருந்தது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர்தான் இங்கிருந்து கொங்கணப் பிரதேசத்தில் கலியாணம் என்ற நகாருத்தருகில் பீஜப்பூர் படைகளை எதிர்த்துக் கொண்டிருந்த ஸிவாஜி மகாராஜருக்கு உதவி செய்யும் பொருட்டு பெரும்படை யொன்று அனுப்பப்பட்டது. ராஜமாச்சி கோட்டையை மகம்மதியர்

கள் தாக்கப் போகிறார்களென்று நெட்டாஜி வந்து கூறும் வரையில்-நெட்டாஜிக்கு அயூப்கான்கூறி அகப்பட்டுக்கொள்ளும் வரையில்—எவருக்கும் தெரியாது. ஆயினும் ராஜமாச்சியிலிருந்த சிறு படையானது உடனே யுத்த கோலம் பூண்டு மகம்மதியர்களின் வரவை எதிர் பார்த்துக்கொண்டேயிருந்தது.

இவ்விதமாக யுத்த முயற்சிகள் நடந்துகொண்டிருக்க, நமது நெட்டாஜி தனது பாலியத் தோழியாகிய காசிபாயை நினைத்துக்கொண்டு அவளுடைய பிதாவின் வாச ஸ்தானம் நோக்கி ஓடினான். காசிபாயினுடைய தகப்பனாகிய தத்தாஜியானவர் நெட்டாஜியைக் கண்டவுடன் சொல்லொணாத ஆநந்தம் பொங்கி அவனைக் கட்டி யணைத்துக்கொண்டு, "அப்பா! அருமை நெட்டாஜி, உனது சகோதரியை மகம்மதியர்கள் தூக்கிக்கொண்டு சென்ற பொழுது, உன்னையும் கொன்று போட்டுவிட்டுப் போய்விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். நீ எப்படிப் பிழைத்தாய்? உனது பெற்றோரைப் பார்த்தாயா? அவர்கள் சௌக்கியமா?" என்று க்ஷேம சமாச்சாரம் விசாரிக்கவே, நெட்டாஜி தனது விருத்தாந்தங்களையெல்லாம் கூறிவிட்டு, ராஜமாச்சி கோட்டையை மகம்மதியர்கள் விடியற் காலையில் தாக்கப் போகிறார்களென்றும் ஆதலால் அப்பொழுதே, அந்த நிமிஷமே தத்தாஜி தம்முடைய பெண் காசிபாயைக் கூட்டிக்கொண்டு அக்கோட்டைக்கு வெளியே சென்று ஓடிவிட வேண்டுமென்றும் இல்லையேல் தனது சகோதரியாகிய கங்காபாய்க்கு நேர்ந்த கதி காசிபாய்க்கும் நேர்ந்துவிடலா மென்றும் கூறி, வழித்துணைக்குத் தன்னிடத்தில் விசுவாசம் மிகுந்தவனாகிய ராமனையும் அனுப்புவதாகச் சொன்னான். உடனே தத்தாஜி தம்முடைய சேவகர்கள் சிலருடனும் ராமனுடனும் தம்முடைய

பெண்ணையும் கூட்டிக்கொண்டு அக்கோட்டைக்கு வெளியே புறப்பட்டுவிட்டார்.

நெட்டாஜி காசிபாயைக் கண்டவுடன் இழந்த கண்களை யடைந்த குருடனைப்போல மனம் பூரித்து அவளிடத்தில் மகாராஷ்டிர தேசத்தின் துக்க நிவர்த்தியின் பொருட்டுத் தான் பாடுபடத் துணிந்திருப்பதாகக் கூறவே, அவளுக்கு இன்னும் அதிக மகிழ்ச்சி யுண்டாயிற்று. இருவரும் குழந்தைகளா யிருந்த பொழுது தௌரிநதிக் கரையில் விளையாடிய விளையாட்டுக்களையெல்லாம் நினைத்துக் கொண்டார்கள். காசிபாய் நெட்டாஜியின் பரந்த மார்பையும் கம்பீரப் பார்வையையும் முகத்தில் ஜ்வலிக்கும் தீரத்தையும் திரும்பத் திரும்பப் பார்த்து மனப்பால் குடித்து மகிழ்ந்தாள். நெட்டாஜி அவளுடைய அதிசுந்தர உருவத்தில் சொக்கி, மதுர மொழியில் மயங்கி, அவளே தன்னுடைய மனைவியென்று சங்கற்பம் செய்து கொண்டான்.

ராஜமாச்சி கோட்டை நிற்கும் பர்வதமானது மேற்குத் தொடர்ச்சி மலைகளுடன் முந்நூறு கஜதூரத்தில் சம்பந்தப் பட்டிருக்கின்றது. இச்சம்பந்த பூமியினூடே 17-அடி உயரமும் எட்டு அடி கனமுமுள்ள ஒரு பலமான சுவர் கட்டப்பட்டிருக்கிறது. அச்சுவரின் மூலமாகத் துப்பாக்கிகள் சுடுவதற்கு துவாரங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இன்னும் பீரங்கிகளும் அச்சுவரில் ஆங்காங்கு பதிப்பிக்கப்பட்டிருந்தன. அம்மலையில் இரண்டு சிகரங்கள், ஒன்றிலிருந்து ஒன்று அரை மைல் தூரத்தில் உயர்ந்து விளங்கின. அவற்றுள் ஒன்றின் பெயர் ஸ்ரீவர்த்தனம்; மற்றதின் பெயர் மனோரஞ்சனம். இச்சிகரங்களிரண்டிலும் இரண்டு கோட்டைகள் இருந்தன. எதிரிகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து ராஜமாச்சி கோட்டை வரை

யில் கட்டப்பட்டிருந்த சுவரைத் தகர்த்துவிட்டு உள் நுழைந்து விடுவார்களானால், மகாராஷ்டிரப் படையானது இவ்விரண்டு சிகரக்கோட்டைகளினுள்ளும் இருந்துகொண்டு எதிரிகளுடன் போர் புரியலாம்.

மறுநாள் விடியற்காலம் அருணோதயத்திலேயே எதிரிகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஓரத்தில் காணப்பட்டு விட்டார்கள். ராஜமாச்சி கோட்டையைத் திடீரென்று தாக்குவது என்ற எண்ணத்துடன் மகம்மதியப் படைகள் புல் பூண்டுகளையும் அசையவொட்டாது மகா மௌனத்துடன் வந்து கொண்டிருந்தன. ஆனால் மகாராஷ்டிரர்களும் மகம்மதியர்கள் ஆச்சரியப்பட்டுத் திடுக்கிடும்படியாகத் தங்கள் தங்கள் ஆயுதங்களை நேரே குறிவைத்து சுவரின் பின்புறம் நின்றுகொண் டிருந்தார்கள். மகா மௌனமே எங்கும் நிரம்பி யிருந்தது. மகம்மதியர்களும் மௌனத்துடன் எதிர்க்கப் போகிறார்கள்; மகாராஷ்டிரர்களும் மௌனத்துடன் எதிர்க்கப் போகிறார்கள்.

மகாராஷ்டிரர்கள் யுத்தத்திற்குத் தயாராக யிருக்கிறார்கள் என்று மகம்மதியர்கள் நினைக்காதபடி, மகாராஷ்டிரர்கள் சில கன்று காலிகளைக் கோட்டைக்கு வெளியே மேய விட்டிருந்தார்கள். பார்த்தான் மகம்மதியத் தலைவன்; கோட்டையிலே யுத்த கோஷத்தைக் காணவில்லை. அக் கோட்டையை திடீரென்று தாக்கி அந்த நிமிஷத்திலேயே ஆயிரக் கணக்கான மகாராஷ்டிரர்களை வெட்டிச் சாய்த்து கோட்டையைக் கைப்பற்றி விட்டதாக மனோராஜ்யம் செய்துகொண்டான். சிறிதும் சத்தமிடாமல் கோட்டைச் சுவரின்மீது ஏணிகளை வைத்து எண்ணற்ற போர்வீரர்கள் ஏறிச் சுவரினுட்புறம் குதித்துக் கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டுவிட வேண்டுமென்று அவன் உத்தரவிட்டான்.

உடனே 50-மகம்மதியர்கள் ஏணிகளுடன் சுவரை நெருங்கிச் சென்றார்கள். இன்னும் பத்துகஜ தூரத்தில் சுவர் இருக்கிறது; திடீரென்று அம்புகளும் குண்டுகளும் எங்கிருந்தோ பொழிந்துவிட்டன. திரியம்பகராவினுடைய தூக்கமும் தாமத குணமும் நெட்டாஜி வந்த நிமிஷத்திலேயே விடைபெற்றுச் சென்றுவிட்டன. திரியம்பகராவினுடைய கட்டளை மொழி அவன் வாயினின்றும் வெளிப்பட்டது தான் தாமதம்; மகாராஷ்டிரப் போர்வீரர்கள் குண்டுகளையும் அம்புகளையும் சரமாரியாகப் பொழிந்து விட்டார்கள். முன் சென்ற ஐம்பது பெயர்களில் முக்கால் பகுதி அடிபட்டு வீழ்ந்துவிட்டது. மகாராஷ்டிரர்களைத் திடுக்கிடச் செய்யவந்த மகம்மதியர்கள் திடுக்கிட்டார்கள்! இவர்கள் கண்களைப் பிசைந்துகொண்டு சுற்றிப் பார்ப்பதற்குள் அம்புகளும் குண்டுகளும் மறுபடியும் பொழியப்பட்டன. விழுந்தவர் போக மிகுதிப் பெயர்கள் ஓடினர்.

இனிமேல் முன்போல கோட்டையை நெருங்குவதற்கு மகம்மதியர்கள் பித்தர்களா? உடனே செத்த பிணங்களையப்புறப் படுத்தும் நிமித்தம் மகம்மதியர்கள் வெள்ளைக் கொடி உயர்த்தி சிறிதுநேரம் யுத்தத்தை நிறுத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பிரேதங்களை யெடுத்து அடக்கம் செய்தார்கள். இதற்குள்ளாகப் பீரங்கிகள் வசதியான இடங்களில் பலப்படுத்திக் கொள்ளப்பட்டன; பீஜப்பூர் யுத்த தளவாட சாலையில் செய்யப்பட்ட பெரும் பீரங்கிகள் சுவரைத் தகர்க்க ஆரம்பித்துவிட்டன. மகாராஷ்டிரர்களுடைய துருப்பிடித்த பழம் பீரங்கிகளினால் அவற்றை எதிர்த்து நிற்க முடியவில்லை. சீக்கிரத்தில் சுவர் உடைபட்டு விடும்போலத் தோன்றிற்று. நடுப்பகலாய் விட்டது; பீஜப்பூர்ப் படைவீரர்களின் பீரங்கிகள் ஒரு நிமிஷமேனும் சும்மா விருக்கவில்லை. பீஜப்பூர்ப் படைகளுக்குள்ள மிக

மிகப் பலம் பொருந்தியவனென்று கருதப்பட்ட ஒரு நீகி ரோவன்—காட்டுக் குரங்கினது போன்று மார்பு படைத்த ஒரு தடியன்—அப்படைகட்குத் தலைவனா யிருந்தான். அவன் இருவர் தூக்கமுடியாத ஒரு கேடயத்தைத் தாங்கிக் கொண்டு தனது வாளை அங்கும் இங்குமாக வீசி, சைந்நியத்தை நடத்திக்கொண்டிருந்தான். அவனுடைய படை வீரர்களிற் பெரும் பான்மையோரும் மகாராஷ்டிரர்களின் ஆயுதங்களினால் அங்கும் இங்கும் விழுந்து கொண்டிருக்க, அவன் மாத்திரம் எப்படியோ தப்பித்துக் கொண்டிருந்தான். அவனுடைய சரீரத்திலே எவ்வாயுதமும் படவில்லை. அவன் உடைபடுகின்ற சுவரை நெருங்கினான். மகாராஷ்டிர வீரர்கள் இவனுடைய பேயுருவத்தைக் கண்டதும் பயந்து "இவன் மானிட உடல் படைத்த மகாவீரனல்லன்; எதிர்ப்பட்டதை யெல்லாம் விழுங்கி ஏப்பமிடுகின்ற ராட்சதனைப்போலத் தோன்றுகிறது" என்று கூறிக்கொண்டே பின் வாங்கி யோடினார்கள். கோட்டைச் சுவரின் பக்கத்தில் மகாராஷ்டிரர்களுக்குத் தலைமை வகித்து நடத்திய நெட்டாஜி யானவன் அந்நீகிரோவனைப் பார்த்துக் குறிவைத்துத் தனது அம்பை எய்தான்; நீகிரோவனுடைய கறுப்புத் தோலினுள்ளிருந்து ரத்தம் பீறிட்டுக் கொண்டது. உடனே நெட்டாஜி தனது வீரர்களைப் பார்த்து "பார்த்தீர்களா? இவன் ராவணனு மல்ல; கும்பகர்ணனு மல்ல; நம்மைப்போலவே ரத்தமும் சதையுமுள்ள சாதாரண மனிதனே யாவன்" என்று கூறவே, மகாராஷ்டிர வீரர்கள் ரோஷம் மிகுந்தவர்களாய் இன்னும் பன்மடங்கு ஆவேசத்துடன் எதிரிகளை எதிர்த்தார்கள்.

அந்த நீகிரோவன் இன்னும் கோபம் மிகுந்து மகாராஷ்டிரப் படைகளுக்குள் பசி மிகுந்த சிங்கம்போலப் பாய்ந்து அதம் செய்துகொண்டு வருகிறான்; நெட்டாஜி

அந்த நீகிரோவனண்டையில் வருவதற்குள்ளாக, அந்த நடி யன் இரண்டு மகாராஷ்டிர வீரர்களை ஈட்டிகொண்டு ஒரே குத்துக்குத்தி எமனுலகம் சேர்த்து விட்டான். நீகிரோவன் நெட்டாஜியின் மீது விழுந்தானுல், மூட்டைப்பூச்சி நசுங்குவதைப்போல நெட்டாஜி நசுங்கி விடுவான். இருவரும் ஒருவரை யொருவர் நெருங்கிக்கொண்டார்கள். நீகிரோவன் நெட்டாஜியின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்; ஆனுல் நெட்டாஜி சட்டென்று பின்னுக்கு வாங்கி வலம் இடம் பாய்ந்து, சமயம் பார்த்து அந்த நீகிரோவனுடைய வலது விலாவில் தனது—தன்னுடைய குருவினுடைய—ஈட்டியினுல் ஓங்கி ஒரு குத்துக் குத்தினுன். நீகிரோவன் கோபதீபிதனுய்க் கண்களில் நெருப்புப்பொறி பறக்க, தனது கையிலிருந்த உலக்கை யொன்றினுல் அடியடி யென்று அடித்தான். அத்தனை அடிகளையும் நெட்டாஜி தனது கேடயத்தினுல் தட்டிக்கொண்டு தன் கையிலிருந்த ஈட்டியை இடுப்பில் செருகிக் கொண்டு, தனது வாளை யுருவி நீகிரோவனுடைய மார்புக்கு நேரே குத்தவே, அது ஊடுருவிப் பாய்ந்துவிட்டது; நீகிரோவன் நிலத்தில் விழுந்து உயிர் நீத்தான். மொகலாயப் படைகள் மூலைக் கொன்ருகச் சிதறியோடின. ஆனுல் மகாராஷ்டிரர்கள் மகம்மதியர்களை அங்கு நெடுநாட்களுக்கு எதிர்த்து நிறகமுடியாது. ஆகையால் மகாராஷ்டிர வீரர்கள் யோசனை செய்து தரை மட்டத்துக்கு மேல் 600 - அடி உயரத்தில் ஸ்ரீவர்த்தன சிகரத்திலிருக்கும் கோட்டைக்குச் சென்று அதற்குள்ளிருந்து கொண்டு எதிர்ப்பது என்று தீர்மானித்தார்கள். அக்கோட்டைக்குள் அவசர காலத்திற்கென்று ஏராளமான உணவுப் பொருள்களும் பரிசுத்த ஜல ஊற்றுக்களும் இருந்தன. சில மாதங்களுக்குள்ளாவது ஸிவாஜி ரட்சிப்பதற்கு வரமாட்டாரா? அது வரையில் நாம் எதிரிகளை எதிர்த்து நின்று

தாங்கிக் கொள்ளலாம் என்று மகாராஷ்டிரர்கள் நினைத்தார்கள்.

---

## அத்தியாயம்—8.

ஆனால் இந்தச் சமாச்சாரத்தை-இவர்கள் இவ்விதமாக மகம்மதியர்களால் முற்றுகை போடப்பட்டிருக்கிறார்கள் என்ற சமாச்சாரத்தை—ஸிவாஜிக்கு எப்படித்தெரிவிப்பது? என்று எல்லோரும் யோசனை செய்தார்கள். நெட்டாஜிக்கு அக்கோட்டைக்குள் அடைபட்டுக் கிடக்கச் சற்றும் மனமேயில்லை. ஆதலால் "நான் போய் ஸிவாஜி மகாராஜரிடத்தில் தெரியப்படுத்தி வருகிறேன்" என்று கூறவே, சேனையின் தளகர்த்தனாகிய திரியம்பகராவுக்குச் சந்தோஷமாயிற்று. மகாராஷ்டிர வீரர்கள் எல்லோரும் நெட்டாஜியைப் புகழ்கிறார்கள். இது திரியம்பகராவுக்கு பொறுக்கவில்லை. நெட்டாஜி போவதாகக் கூறியபொழுது, திரியம்பகராவுக்குச் சிறிது சந்தோஷமுண்டாயிற்று.

அடிபட்ட மகம்மதியப் படைகள் மறுபடியும் ஆர்ப்பரித்து வருவதற்குள்ளாக மகாராஷ்டிரர்கள் ஸ்ரீ வர்த்தன சிகரக் கோட்டையில் சேர்ந்துவிட்டார்கள். மனோரஞ்சித சிகரமும் கோட்டையும் மகம்மதியர்கள் கைவசமாய் விட்டன. மகம்மதியர்கள் ஸ்ரீ வர்த்தன சிகரத்தைச் சுற்றி வளைந்து முற்றுகையிட்டார்கள். இனிமேல் ஸிவாஜிக்குச் சமாச்சாரம் போகவேண்டியது தான் பாக்கி. நெட்டாஜி எதிரி சைந்நியங்களுக்குள் நுழைந்து எப்படி வெளியே செல்வது என்பதைப்பற்றி யோசனை செய்துகொண் டிருந்தான். ஒரு யோசனை தோன்றிற்று. தான் கைதியாகப் பிடித்துவந்த அயூப்கானிடத்தில் சிறிதுநேரம் சம்பாஷித்து மகம்மதியப் படைகளின் அந்தரங்கங்களை அறிந்து கொள்வ

தென்று நிச்சயித்து அயூப்கானை அடைத்து வைத்திருக்கும் அறையண்டை வந்து சேர்ந்தான்.

அப்பொழுது அயூப்கான் தான் சிறைபட்டுக்கிடக்கும் நிலைமையைப் பற்றித் தானே வருந்திக்கொண்டும் தன்னைத்தானே கோபித்துக் கொண்டும் முறுமுறுத்துக் கொண்டிருந்தான். நெட்டாஜி அவன் பக்கல் சென்றதும் அவன் மிகுந்த ஆங்காரத்துடனே தனது கத்தரித்த தாடியைத் தடவிக்கொண்டே "என்னையார் என்று நினைத்துவிட்டீர்கள்? மகாராஷ்டிரப் புழுக்களை மண்ணோடு மண்ணாகத் தேய்த்து வருகின்ற மண்டலாதிபர் பீஜப்பூர் மகாராஜருடைய மைத்துனன் நான் என்பதை நீங்கள் அறியீர்கள் போலும்! சிறை பிடிக்கப்பட்ட ஒரு சாதாரணப் போர்வீரனைப் போலவா என்னை நடத்துவது? கஞ்சியும் கூழுமா நான் கரைத்துக் குடிப்பது? இருக்கட்டும் சொல்கிறேன்" என்றான். நெட்டாஜிக்கு இது ஒரு முக்கியமான சமாச்சாரம். பீஜப்பூர் அரசனுடைய மைத்துனன் அகப்பட்டுக் கொண்டானென்றால் அவன் கஷ்டப்படாமலிருக்கும் பொருட்டு அவ்வரசன் தனது கொடுமைகளைச் சிறிதேனும் குறைப்பானல்லவா? அயூப்கான் பிடிபட்டது பீஜப்பூர் அரசனுக்குப் பீதியை உண்டாக்குமல்லவா? நெட்டாஜி இச்சமாச்சாரத்தினால் தனக்கு உண்டான சந்தோஷத்தை அடக்கிக்கொண்டு "நீ உனது அந்தஸ்துக்குத் தக்கபடி நடத்தப்படவில்லை யென்பது உண்மையாயினும், நீ இத்தகைய அந்தஸ்துள்ளவன் என்பதை எவர் அறிவார்? இப்பொழுது தானே தெரியவந்தது. இதோ இப்பொழுதே திரியம்பகராவினிடத்தில் சொல்லி உன்னைக் கௌரதையுடன் நடத்துதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறவும், அயூப்கான் "நீ என்ன ஏற்பாடு செய்கிறது? அதோ, எங்கள் தளகர்த்தர் ஹபீஸ்கானுடைய பீரங்கிச்சத்தம் கேட்கிறது. ராஜமாச்சி

மலையில் வளைகளினுள் நுழைந்துகொண் டிருக்கும் இந்தப் பெருச்சாளிகளை யெல்லாம் தூரத்தித் துரத்தி யடிப்பதற்கு அதோ வந்துவிட்டான் ஹபீஸ்கான்" என்றான். இதனால் எதிரிகளின் சேனா நாயகனா யிருப்பவன் பெயர் ஹபீஸ்கான் என்று நெட்டாஜிக்குத் தெரியவந்தது. இன்னும் அயூப்கானுடைய 'வாயைக்கிண்டி' ;சமாச்சாரங்களை யறிந்து கொள்ளலாமென்ற எண்ணத்துடன் நெட்டாஜி "இந்தக் கோட்டையைத் தகர்ப்பதற்கு ஹபீஸ்கானாலும் முடியாது, அவன் அப்பனாலும் முடியாது. இம்மதில்களை இடிப்பதற்கேற்ற வன்மை பொருந்திய பீரங்கிகள் அவனிடம் ஏது?" என்று சொல்லிச் சிரிக்கவே, அயூப்கான் தற்பெருமையாக "எங்கள் படையின் வல்லமையை நீ என்ன அறிவாய்? பீஜப்பூர் சமஸ்தானத்துப் பீரங்கிகளுள் முதற்றரமானவையாக ஆறு பீரங்கிகள் பொறுக்கி யெடுக்கப்பட்டு ஹபீஸ்கானுடைய சேனையுடன்கூட வருகின்றன. அவற்றினின்றும் வெளிக் கிளம்புகின்ற குண்டுகள் அப்படியே மதில்களை ஆகாயத்தில் எடுத்து எறிந்துவிடும். அதிலே ஸிதிஹஸான் என்பவன் இருக்கின்றான். என்னைத் தவிர, வேறெவரும் அவனுக்கு நிகரே இல்லை" என்றான்.

இவனுடைய மூடத்தனத்திற்கும் தற்பெருமைக்கும் நெட்டாஜி நிந்தனைச் சிரிப்புச் சிரித்து "நல்லது, ஹபீஸ்கானுடைய படைகள் முறியடிக்கப்பட்டு விட்டதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவனுக்கு உதவி செய்தற்குத் துணைப்படை இல்லையே. அவனும் அவனுடைய படைகளும் சிறைப்பட்டுத் திண்டாட வேண்டியது தானே. பார் சீக்கிரத்தில் ஹபீஸ்கானையும் உன் பக்கத்தில் உன்னைப் போலவே கொண்டுவந்து வைத்து விடுகிறேன்" என்று சொல்லவே, அயூப்கான் "ஹபீஸ்கானுக்குத் துணைப்படை யொன்றும் வாராது என்பது உண்மையேயாயினும் அவனுக்

குத் துணைப்படை அவசியமில்லையே. திருடன் ஸிவாஜி பிடித்திருக்கும் கோட்டைகளை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பிடித்துக்கொண்டு தட்சிணதேசம் முழுதையும் அழித்துச் சின்னாபின்னமாக்கி ஆண் சிறை பெண் சிறை பிடிக்கப் போகிறான் பார் ஹபீஸ்கான்! அடுத்த மாதத்திலே பிஜப்பூரிலிருந்து பெரும் படையொன்று கிளம்பி கொங்கணதேசத்திற் குள்ளே நுழைந்து எங்கெங்கும் ஜயகோஷம் புரிந்துகொண்டு கலியாணம் என்ற கோட்டையைப் பிடிப்பதற்கு வாய்போகின்றன" என்று உளறி உளறி உண்மையை யெல்லாம் உரைத்துவிட்டான். ஆயினும் வாசல் காப்போர்களுக்குள் வழங்கும் ரகஸியக் குறிப்புச் சொல் இன்னதென்று நெட்டாஜி அயூப்கானிடத்திலிருந்து அறிவதற்கு எவ்வளவோ தந்திரங்கள் பேசிப் பிரயாசைப்பட்டுப் பார்த்தும் அது மாத்திரம் அயூப்கான் கூறவில்லை. அயூப்கானை அவனுடைய அந்தஸ்தின் பிரகாரம் நடத்தும்படி ஏற்பாடு செய்வதாகச் சொல்விட்டு நெட்டாஜி திரியம்பகராவினிடத்தில் சென்று விடைபெற்றுக்கொண்டான். கோட்டையிலுள்ள உணவுப்பொருள்கள்முதலியவற்றை அளந்து கணக்கிட்டுப் பார்த்துவிட்டதாகவும் இன்னும் ஆறுவாரங்கட்குத் தாங்குமென்றும் அதற்குள்ளாக ஸிவாஜி மகாராஜரை இட்டுக்கொண்டு வந்துவிட வேண்டுமென்றும் திரியம்பகராவ் நெட்டாஜினிடத்தில் கூறி யனுப்பினான்.

மாலை நேரம். இருள் சூழ்ந்துவிட்டது. நெட்டாஜிக்கு இதுதான் நல்ல சமயம் புறப்படுதற்கு. ஒரு மகம்மதியப் போர்வீரனைப் போல வேஷம் தரித்து ஆயுதங்கள் தாங்கி "என்றைக் கிருந்தாலும் ஒருநாள் இறப்பது நிச்சயம் 'இட்டமுடன் என் தலையில் இன்னபடி யென்றெழுதி விட்ட சிவனும் செத்து விட்டானோ' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு சாட்சாத் சர்வேஸ்வரன் மீது

எல்லாப் பாரத்தையும் போட்டுவிட்டுப் புறப்பட்டான். கோட்டைச் சுவரிலிருந்து ஒரு பக்கமாகக் கீழே இறங்கி அங்குக் கோட்டைச்சுவரி ணோரமாக நின்ற மரங்களின் பின்னால் ஒளிந்து ஒளிந்து சென்று, மகம்மதியப் படைகள் இறங்கிக் கூடார மடித்திருக்கின்ற இடத்தை யணுகினான். இவனுடைய அதிர்ஷ்டம் அவர்கள் இன்னும் ஸ்திரமாகக் கூடாரங்களை யடித்து உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை. இப் பொழுதுதான் அவர்கள்சீர்ப்படுத்தி ஒழுங்குசெய்துகொண் டிருந்தார்கள்; தவிர இராப்போசனம் சமையலாய்க்கொண் டிருந்தது. எல்லோரும் சாப்பாட்டையே நினைத்துக்கொண்டு தாங்கள் சண்டைக்கு வந்திருப்பவர்கள் என்ற எண்ணமே யில்லாமல் சுகமே சுற்றிக்கொண்டிருந்தார்கள். ஜயமுள்ள வரையில் பயமில்லை யென்று நெட்டாஜி நினைத்துக்கொண்டு மகம்மதியர்கள் தங்களுடைய உத்தியோகஸ்தர்களுள் இவ னும் ஒருவனென்று நினைத்துக்கொள்ளும்படியாகச் சிறிதும் லட்சியமேயில்லாமல் எதிரிகளின் மத்தியில் நுழைந்து நடந் தான். மகம்மதியச் சிப்பாய்கள் பலரும் இவனைப் பார்த்த பொழுதிலும், இவனுடைய கம்பீரப் பார்வையையும் இவன் வேகமாக—ஏதோ அவசரமாகச் செல்பவனைப்போன்று— நடக்கும் அதிகாரநடையையும்கண்டு மெய்ம்மறந்து மெச்சி நின்றார்கள். எவரும் இவனைச் சற்றும் சந்தேகிக்கவில்லை. நெட்டாஜி எதிரிகளின் படைகளை யெல்லாம் கடந்து விட் டான்.

ஆனால் இங்கு ஒரு சம்பவம் நடந்தது. நான்கு மகம் மதியச் சிப்பாய்கள் இரண்டு மகாராஷ்டிரக் குடியானவர் களின் தலைகளின் மீது இரண்டு பெரிய தாங்கமுடியாத புல் சுமைகளைத் தூக்கிவைத்து நடத்திக்கொண்டு வருகிறார்கள். மகாராஷ்டிரக் குடியானவர்கள் மிகக் களைத்து நடக்கமுடி யாதபடி மிகத் தவிக்கிறார்கள். மகம்மதியச் சிப்பாய்கள்

தங்களுடைய ஈட்டிகளினால் அம்மகாராஷ்டிரர்களைக் குத்திக்குத்தி வேகமாக நடக்கும்படி ஏவிச் சித்திரவதை செய்து கொண்டே போகிறார்கள். அம்மகாராஷ்டிரர்களுடைய நெற்றிகளினின்றும் மார்புகளினின்றும் வெயர்வை ஆறாக ஒழுகுகின்றது; அவர்கள் அம்மகம்மதியச் சிப்பாய்களைக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டே போகிறார்கள்.

பார்த்தான் நெட்டாஜி! கோபம் பொங்கிவிட்டது. தன்னுடைய தேச பந்துக்கள் தன் கண்ணுக்கு முன்னாலேயே சித்திரவதை செய்யப்படுவதைப் பார்த்தும் நிகரில்லா வீரனாகிய நெட்டாஜி சகிப்பானா? மகம்மதியர்கள் தன்னை இன்னானென்று கண்டு பிடித்து விடுவார்களேயென்று நெட்டாஜி சற்றும் யோசிக்கவில்லை. தன்னுடைய தேச ஜனங்களுக்குள் ஒருவனுக்காவது ஒரு கஷ்டத்தை நிவிர்த்தி செய்யும் பொருட்டுத் தன்னுடைய உயிரை இழந்துவிட்டால்தானென்ன? வென்று நினைத்தான் நெட்டாஜி.

அதட்டினான் அந்த மகம்மதியப் படைவீரர்களை! "பத்திரம், இனிமேல் இவ்வேழைகளை இம்மாதிரி தொந்தரை செய்வீர்களானால், சரியானபடி உங்களை நான் தண்டிக்க வேண்டிவரும்" என்றான் நெட்டாஜி. அவனுடைய அதிகார த்வனியையும் வீரப்பார்வையையும் கண்ட அந்த மகம்மதியப் படைவீரர்கள் ஒரு நிமிஷநேரத்திற்கு நடுங்கிவிட்டார்கள். ஆயினும் அவர்களில் ஒருவன் மனதைச் சிறிது திடப்படுத்திக்கொண்டு "நாங்கள் எங்கள் கடமையைத்தான் செய்கிறோம். குதிரைகட்குப் புல் வேண்டாமா? அறிவற்ற மாடுகளைக் கும்பிடுகின்ற இந்த ஹிந்துக்கள் அம்மாடுகளினும் கேடுகெட்ட மிருகங்கள்தானே. மாடுகளையே தார்க்கொம்பிட்டுக் குத்தித்தானே ஓட்டவேண்டியிருக்கி

றது. மாட்டைப் பணிகின்ற இம்மடையர்களை என் ஈட்டி கொண்டு குத்தி நடத்தக்கூடாது?" என்றான்.

நெட்டாஜி "இனி யொருதரம் இவர்களை நீ ஈட்டி கொண்டு குத்துவையாயின் நான் உடனே ஹபீஸ்கானிடத்தில் அறிவித்து உங்களுக்குச் சரியான தண்டனை வாங்கிக் கொடுப்பேன். இவர்களும் பீஜப்பூர் அரசனுடைய குடிகளன்றோ? அவ்வரசன் இவர்களையும் காக்கக் கடமைப்பட்டவன் அன்றோ?" என்றான். அப்படை வீரர்கள் பரிகாசச் சிரிப்புச் சிரித்தார்கள். "இக்கழுதைகளை யடித்ததற்கு ஹபீஸ்கானிடத்திலா அறிவிக்கப் போகிறீர்கள்? நேற்று அவரே 12-பெயர்களை அவர்கள் தானியம் ஒளித்து வைத்திருக்கும் இடம் சொல்லாததினாலே ஈட்டியினால் குத்தித் தொளைக்கும்படி உத்தரவு செய்யவில்லையா? நல்லது, நல்லது. இப்படி உத்தரவு செய்கிற நீ யார்? நீ பேசுவதைப் பார்த்தால் துலுக்கனைப்போல் தோன்றவில்லையே" என்று ஒரு போர்வீரன் கூறி முடித்தலும் இன்னொருவன் சட்டென்று கையிலிருந்த லாந்தரைத் தூக்கி நெட்டாஜியின் முகத்திற்கு நேரே காட்டி அவனைப் பார்த்தான்.

"ஆ! இவன் மகம்மதியனல்லன், பழுத்துக் கொழுத்த மகாராஷ்டிரப் பையல்; இதோ நெற்றியில் சந்தனப்பொட்டு தெரிகிறது. இவன் ஒரு ஒற்றன், இவன் ஒரு ஒற்றன், நமது படைத்தலத்தில் நுழைந்து இரகஸியங்கள் அறிந்து போகிறான் போலும்!" என்று அவன் கூச்சலிட்டு உறையிலிருந்த கத்தியை உருவினான். அவனைச் சேர்ந்த மற்ற மூவரும் அப்படியே கத்தியை உருவினார்கள். நெட்டாஜி அவர்களை எதிர்ப்பதற்குத் தயாராக நின்றுகொண்டு புல் சுமந்து வந்த ஏழைக் குடியானவர்கள் இருவரையும் உயிர் தப்புவதற்கு ஓடிவிடும்படி கூறினான். அவ்விருவரும் வயிற்றுப் பிழைப்

புக்காகவும் வேறு விதியின்றியும் மகம்மதியர்களுக்கு அடங்கி பயந்து நடந்துகொண்டிருந்தபோதிலும், தங்களைக் காத்து ரட்சித்த வீரனைக் காட்டிக் கொடுத்துவிட்டு ஓடிவிடும்படியாக அவ்வளவு கோழைகளல்லர். அவர்கள் தங்களுடைய புல் சுமைகளைத் தங்களுக்கும் மகம்மதியர்களுக்கும் இடையில் போட்டுக்கொண்டு அப்புல் சுமைகளுள் செருகி வைத்திருந்த பெருந்தடிகளை உருவி யெடுத்துக் கொண்டு நெட்டாஜிக்கு இருபுறமும் நின்றார்கள். மூன்று மூடர்களுடன்—அதுவும் இம்மூவரில் ஒருவன் அசகாய சூரன்—திடீரென்று எதிர்த்து நிற்கவேண்டி வந்ததைப்பற்றிப் பிரமித்து விட்டார்கள். மகம்மதியர்கள் கோ,கூவென்று கூச்சலிடத் தொடங்கினார்கள். கோட்டைச் சுவரினருகிலிருந்து காலடிகளும் சத்தங்களும் கேட்டன. என்ன நடந்து விட்டதோவென்று மகம்மதியப் படைவீரர்கள் ஓடியோடி வருகிறார்கள். நெட்டாஜி தனது கத்தியை உருவினான். ஆனால் அவனுடன்கூட விருந்த இருவரில் ஒருவன் "பேசாமல் என்னைப் பின்தொடர்ந்து வந்துவிடுங்கள்" என்று கூவிக்கொண்டே ஓட, மற்றவனும் ஓடினான். நெட்டாஜியும் ஒரு நிமிஷநேரம் யோசனைசெய்து பின்னர் ஓடினான். அவனுக்கு ஓடுவதற்குப் பிரியமில்லையாயினும், அப்பொழுது ஓடித் தப்பித்துக் கொள்வதே நலமென்று பட்டது. அவன் ஓடாமல் இருந்திருப்பானேயானால், அவன் நிச்சயமாகப் பிடிபட்டிருப்பான் அல்லது கொல்லப்பட்டிருப்பான்; மகாராஷ்டிரதேசத்தின் நன்மைக்காக அவன் வேறு யுத்தம் செய்யமுடியாது போயிருக்கும்; அது மாத்திரமன்று, சிவாஜியினுடைய முக்கிய கோட்டைகளுள் ஒன்றாகிய ராஜமாச்சி கோட்டைக்கு நேரிடவிருக்கும் அபாயத்தை இவன் சிவாஜிக்கு தெரிவிக்க முடியாது போயிருக்கும். இதையெல்லாம் ஆலோசித்துத்தான் நெட்டாஜி ஓடினான்.

மகம்மதியப் படைவீரர்கள் அநேகர் அவனைத் துரத்தினார்கள்; எங்கும் இருள்சூழ்ந்திருந்ததினால் அவர்கள்சென்ற இடம் மகம்மதியர்களுக்குத் தெரியவில்லை. அக்குடியானவர்களுக்கு மலைப்பாதைகளெல்லாம் நன்றாகத் தெரியுமாதலால் அவர்கள் எப்பாதையிலோ எவருமறியாமல் ஓடிவிட்டார்கள். கடைசியாக ஒரு மரத்தடியில் சென்று அவர்கள் படுத்து உறங்கினார்கள்.

---

## அத்தியாயம்—9.

### நெட்டாஜியும் ஸிவாஜியும்

நெட்டாஜிக்கு நல்ல நித்திரை வரவேயில்லை ராஜமாச்சி கோட்டையின் நிலைமையைப் பற்றி ஸிவாஜியினிடத்தில் அறிவிக்கும் வரையில் அவனுக்குத் தூக்கம் எப்படி வரும்? ஆதலால் கோழி கூவும் முன்னமே எழுந்திருந்து தனது குடியானவத்தோழர்களை எழுப்பினான். மகம்மதியர்களிடத்தினின்றும் தப்பித்துக்கொண்டு வெளியே வந்து ஆய்விட்டது. இனிமேல் ஸிவாஜி இருக்கும் இடத்தையறியவேண்டும். ஸிவாஜி எங்கோ புனாவின் சமீபத்தில் இருந்ததாகச் சின்னாட்களுக்கு முன் ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். அவர் இன்றைக் கோரிடத்தில் இருப்பார்; நாளை வேறிடத்தில் இருப்பார். அவர் இன்று ஒரு வேஷத்தில் இருப்பார்; நாளை வேறு வேஷத்தில் இருப்பார். ஒரு வேளை அருகிலேயே இருந்தாலும் இருப்பார். அவரைக் கண்டு பிடித்தல் கஷ்டம். அவரைப்பற்றி உண்மையான சமாச்சாரம் கிடைக்க வேண்டுமானால் அவருடைய முக்கியமான கோட்டைகளில் ஏதேனும் ஒன்றிலிருக்கும் தளகர்த்தரைக் கேட்டால் தான் தெரியவரும். லோக கட்

டம் என்னும் கோட்டையானது நெட்டாஜி அப்பொழுது இருந்த இடத்திலிருந்து 16-அல்லது 17-மைல் தூரத்தில் உள்ளது. அங்கு சென்றால் ஸிவாஜி இருக்கும் இடம் அறிந்துகொள்ளலாம். ஆதலால் நெட்டாஜி லோக கட்டத்துக்குப் போவது என்று தீர்மானித்தான்.

காண்டல்லாவை நோக்கிச் சென்று, அங்கிருந்து அயூப்கானுடைய குதிரையை விட்டுப்போயிருந்த இடத்துக்குப் போவதற்காக ஒருபக்க வழியே திரும்பினான். அந்தக் குதிரையானது நன்றாகப் பராமரிக்கப்பட்டுப் போஷிக்கப் பட்டிருக்குமென்று நெட்டாஜி நினைக்கவே இல்லை; அந்தக் குதிரையை அந்த ஏழைக் குடியானவன் விற்றிருப்பானென்றே நெட்டாஜி நினைத்திருந்தான். ஆனால் நெட்டாஜி அங்கு சென்றவுடனே, குதிரையை ஒப்புக்கொண்டிருந்த குடியானவன் வெகு சந்தோஷமாக நெட்டாஜியை வரவேற்றுக் குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தவே, நெட்டாஜிக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் உண்டாயின. இன்னும், அவன் காசிபாயும் அவள் தகப்பனாரும் ராஜமாச்சி கோட்டையினின்றும் தப்பியோடிய பொழுது அவ்வழியே தான் சென்றார்களென்றும் இரவு அங்கு தங்கிப் போனார்களென்றும் லோக கட்டத்துக்குப் போயிருக்கிறார்களென்றும் கூறவே, நெட்டாஜிக்கு இச்சமாச்சாரமானது இன்னும் அதிக சந்தோஷத்தை யுண்டாக்கிற்று. நெட்டாஜி அந்தக் குடியானவனுடைய உண்மைக்கும் நல்லெண்ணங்கட்கும் அவனை வாயார வாழ்த்தி அவனிடம் விடைபெற்றுக் கொண்டு அக்குதிரை மீதேறிப் புறப்பட்டான். அவனுடன் வந்த இருவரும் இப்பொழுது அவனைவிட்டு நீங்கித் தம் தம் இல்லம் ஏகினர். முதலாவது நெட்டாஜிக்கு இப்பொழுது ஒரு பெரிய ரஸ்தா குதிரையில் செல்வதற்குக் கிடைத்து விட்டது; ஆதலால் வழித்துணை எவரும் அவசியமில்லை.

இரண்டாவது, இவனுக்குத் தன் தேச வேலை என்ற தீராப் பைத்தியம் பிடித்திருக்கிறது; அவர்களுக்கு வேறு வேலை யில்லையா? அவர்களுக்கு பெண்டு பிள்ளைகளில்லையா? அவர்களுக்கு வீடு வாசல்கள் இல்லையா? தேச பக்தியின் ஆதிக்கத்தால் எல்லாவற்றையும் தியாகம் செய்வதற்கு எல்லோராலும் முடியுமா?

நெட்டாஜி குதிரையேறவே, அவனுக்கு ஒருவித குதூகலம் உண்டாயிற்று. இவன் இம்மாதிரி அரபிக் குதிரையில் ஏறினதே இல்லை. அவன் சவுக்கம் கிராமத்திலே சிறு பையனு யிருந்தபொழுது நாட்டுக் குதிரைகளின்மீதேறிச் சவாரி செய்திருக்கிறுன். அவனுடைய குடும்ப வறுமை யானது அவனுக்கு நல்ல குதிரைச் சவாரிக்குப் பிரதிகூலமா யிருந்துகொண்டே யிருந்தது. தவிர, இப்பொழுது அவன் குதிரை யேறி நெடுநாட்களாய்விட்டன. அவனுக்குக் குதிரை யேறுவதில் ஆசை அதிகம். உயிரைத் துரும்பென மதித்துப் புறப்படுகின்ற சுத்த வீரனுக்குக் குதிரை யேற்றத்தில் ஆசை யிராதா? இப்பொழுது, ஆ! ஆ! அரபி தேசத்திலிருந்து பீஜப்பூர் சமஸ்தானத்திற்கு வரவழைக்கப் பட்ட மிகமிக அழகிய, சிறந்த குதிரைகளில் ஒன்றின் மீது தான் ஏறிச் சவாரி செய்வதை நினைத்து நினைத்து அவன் மகிழ்ந்த மகிழ்ச்சியை எங்ஙனம் எடுத்துரைப்பது? அது புதுக் குதிரை; சவாரியில் அதிகமாகப் பழகாத · குதிரை. அது குதித்துக் குதித்துச் சுற்றிச்சுற்றி அங்கு மிங்குமாக மருண்டு ஓட ஆரம்பித்தது. ஒரு சாதாரண சவாரிக்காரனு யிருந்தால், நெட்டாஜிக்கு அந்தக் குதிரையே சத்துருவா யிருந்திருக்கும். ஆனுல் நெட்டாஜி “உஷார்” ஆய் குதிரை யின்நடைக்குத் தக்கபடி தான் உட்கார்ந்துகொண்டு தனது கையிலே கடிவாளமானது பலமாயிருக்க,குதித்துக்குதித்துத் தனது வாலிபம், பலம், ஆண்மை, உயர்ந்த ஆசைகள், தேச

பக்தி இவற்றில்தானே மகிழ்ச்சி அடைந்துகொண்டு அந்த அரபிக் குதிரைமீது ஆநந்தமாகச் சவாரி செய்து சென்றான்.

லோக கட்டம் என்ற கோட்டையின் வெளிப்பிர தேசத்தில் வந்துவிட்டான். இக்கோட்டையானது தட்சிண தேசத்திலுள்ள மிக மிகப் பலமான மலைக்கோட்டைகளுள் ஒன்று. இப்படி இவன் வந்துகொண்டிருந்த பொழுதே அருகிலிருந்த ஒரு தோப்பினின்றும் ஒரு மனிதன் வெகு வேகமாக வெளியே ஓடிவந்து இவன் குதிரையின் முன்னே விழுந்துகொண்டு "அபயம், அபயம், ஆபத்துக் குதவி செய்" என்று கதறினான். ஆ! இது யார்? அயூப்கானுடைய குதிரைக்காரனா யிருந்து, பின்னர் நெட்டாஜியினிடத்தில் அன்பு மிகுந்து அவனுடைய உத்தரவுப்படி ராஜமாச்சி கோட்டையிலிருந்து காசிபாயையும் அவளுடைய பிதாவை யும் இட்டுச்சென்ற ராமன். பார்த்தான் நெட்டாஜி; சட் டென்று குதிரையினின்றும் கீழே குதித்து அவனைத் தூக்கி யெடுத்து "அப்பா, ராமா, உனக்கு என்ன நேரிட்டது? காசிபாயையும் அவளுடைய பிதாவையும் எங்கே விட்டாய்? உடனே சொல்" என்று கேட்டுக்கொண்டே தனது உறையி லிருந்த கத்தியை உருவினான்.

ராமனுக்கு நெட்டாஜியைப் பார்க்கவே ஆச்சரியமும் சந்தோஷமும் அடுத்தடுத்து உண்டாயிற்று. ஒரு கொள் ளைக் கூட்டத்தார் தங்களை எதிர்த்துப் பிடித்துக்கொண்டு போனார்களென்றும் தான் தந்திரமாகத் தப்பியோடி அவர் கள் மறுபடியும் கண்டுபிடித்து விடாதபடி அத்தோப்பில் ஒளிந்துகொண்டதாகவும் காசிபாயையும் அவளுடைய பிதா வையும் அக்கொள்ளைக் கூட்டத்தார் அங்கு அருகிலிருக்கும் ஒரு குகையில் கொண்டுபோய் வைத்திருக்கிறார்களென்றும் ராமன் சொல்லவே, நெட்டாஜிக்கு இடி விழுந்ததுபோ

லாயிற்று. தன்னுடைய துரதிர்ஷ்டம் தான் எங்கு சென்றாலும் பின்தொடர்ந்து வருகிறதே யென்று ஏங்கினன்; ஆயினும் மனத்தைத் தேற்றிக்கொண்டு "கொள்ளைக் கூட்டத்தார் சுமார் எத்தனை பெயர் இருக்கலாம்?" என்றான்; ராமன் நூற்றுக்குக் குறையாது என்று கூறவே, நெட்டாஜி ராமனையும் கூட்டிக்கொண்டு சென்றாலும் இருவரால் நூறு பெயர்களை எதிர்க்க முடியாதே என்று சற்று யோசித்து, முடியாவிட்டாலும் முயற்சிசெய்து தீரவேண்டும் என்னும் நியாயத்தை யநுசரித்து, அக்கொள்ளைக்காரர்களின் குகைக்குத் தன்னை யிட்டுச் செல்லும்படி ராமனிடம் கூறினன்.

நெட்டாஜியும் ராமனும் சிறிது தூரம் செல்வதற்குள்ளாக ஒரு அடர்ந்து படர்ந்த மாமரத்தினடியில் பாதையோரத்தில் இருவர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள்; இவ்விருவரில் ஒருவர் ஒரு கிழட்டுச் சந்நியாசி; இவர் பைராகிபோலக் காணப்பட்டார்; இவர் அம்மாத்தினடியே சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். மற்றவர் இக்கிழவரின் முன்னே மிகுந்த பயபக்தியுடன் ஒரு முரட்டு நாட்டுக் குதிரையைக் கையில் பிடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார்; இவர் ஒரு மகாராஷ்டிர யுத்தவீரரைப் போலக் காணப்பட்டார். இவர் உருவத்தில் குள்ளராயிருந்த போதிலும், சுறுசுறுப்பில் புலிபோன்று தோன்றினர். அவருடைய மூக்குச் சிறிது நீண்டு வளைந்திருந்தது; அவருடைய கண்கள் பிரகாசத்தைக் கக்கிக்கொண்டே யிருந்தன; ரஜபுத்திரர்கள் மாதிரி தாடி வளர்த்திருந்தார். அவருடைய முகத்திலே ஒருவித ஒளி ஜொலித்துக்கொண் டிருந்தது. இவரைப் பார்த்தவுடனே, ஒருவித ரகஸ்ய சக்தி நெட்டாஜியை இவரிடம் அத்தியந்த அன்பு செலுத்தச்செய்தது. நெட்டாஜிதான் முதலில் பேச ஆரம்பித்தான். "ஐயன்மீர்.

நீங்கள் யார்? இம்மரத்தின் அடியில் சாவகாசமாக நீங்கள் சம்பாஷித்துக்கொண்டு இருக்கிறீர்களே; நீதி நியாயமில்லாத இப்பூமியிலே, கொள்ளையும் கொடுங்கோன்மையும் மிகுந்த இப்பூமியிலே, நீங்கள் இவ்வளவு சாவகாசமாகப் பேசிக்கொண்டிருப்பதற்கு உங்களுக்குச் சௌகரியமும் வாய்த்ததோ?'' என்று நெட்டாஜி கேட்டதும் அந்தக் கிழவர் நெட்டாஜி திடுக்கிடும்படியாக ஒரு ஆச்சரியமான விடை பகர்ந்தார். "நாங்கள் மானிடர்கள் அல்லேம்; நாங்கள் கடவுளர்கள். சின்ச்வாட் என்னும் ஊரில் வசிக்கும் மெரோபா என்பவர் நான்தான். எனது சரீரத்தினுள் மகா கணபதி வாசஞ் செய்கிறார்; இன்னும் ஏழுதலை முறைக்கு மகா கணபதி எனது வம்சத்தார்களில் வசிப்பதாக எனக்கு வரமும் கொடுத்திருக்கிறார். என்னுடன்கூட இருப்பவர் சாட்சாத் பரமசிவனுடைய அவதாரமாவார். மகாராஷ்டிர தேசம் இப்பொழுது அநுபவித்து வரும் துன்பத்தினின்றும், துக்கத்தினின்றும், தூக்கத்தினின்றும் நிவிர்த்திசெய்வதற்காகப் பரமேஸ்வரன் இப்பொழுது இக்கோலங் கொண்டு எழுந்தருளி யிருக்கிறார். உனக்கு முன்னே நிற்பவர் உனது அரசராகிய சிவாஜி, அவரடிகளில் உனது முடிதாழ்த்தி அவரிடம் அன்பு செலுத்து, உனக்காக அவர் இங்கு சூரியோதயம் ஆனது முதல் காத்துக்கொண்டிருக்கிறார். மதோரான் மலைச் சந்நியாசியினுடைய சிடனாகிய நீ இங்கு வருவா யென்றும் உன்னுடைய உதவியின்றி சிவாஜியால் ஒன்றும் செய்ய முடியாதென்றும் பவானிதேவி அவருக்கு அறிவித்திருக்கிறாள்'' என்று அக்கிழவர் சொல்லவே, நெட்டாஜிக்கு ஆச்சரிய முண்டாயிற்று. இந்தக் கிழவர் தன்னைப்பற்றி எப்படி யறிந்திருப்பார்? இவர் நிச்சயமாக ஏதோ தெய்வசக்தி யுடையரா யிருத்தல்வேண்டும். ஆதலால் அவரைப்பற்றி இன்னும் அறிய விரும்பி நெட்டாஜி சிவாஜியை நோக்கினான்.

உடனே சிவாஜி "மொரோபா சொல்வது முற்றிலும் உண்மையே. இவர் கணபதியை இரவு பகலாக உபாசனை செய்து வந்ததினாலே, மகாகணபதி இவர்மீது அருள் மிகுந்து இவரிடத்திலும் இவருடைய சந்ததியில் தோன்றும் ஏழு தலைமுறையாரிடத்திலும் வசிப்பதாக வாக்களித்திருக்கின்றார். இவர் சித்த புருஷர்; எனக்கு இரண்டு கண்களும் திடீரென்று மயங்கிவிட்டன; நான் குருடனாய்விட்டேன். மருந்தில்லை, மாயமில்லை; இவர் தனது கைகளினால் எனது இரண்டு கண்களையும் திறந்து ஊதினார். உடனே கண்கள் தெரிந்துவிட்டன. நானோ ஈஸ்வராக்ஞையால் நடத்தப்படுகின்றேன். மாதா—மகாசக்தி—பவானிதேவி அடிக்கடி எனக்குக் கனவில் தோன்றுவாள். நான் செய்ய விரும்புவதை அவளுடைய உத்தரவு கிடைத்தால் அவ்வுத்தரவுப் பிரகாரமே செய்வேன். நேற்றிரவு பவானிதேவி எனது கனவில் தோன்றி கான்டல்லாவிலிருந்து வருகின்ற ஒரு யுத்த வீரனுக்காக நான் இங்குக் காத்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும் அவன் வந்தவுடனே அவனையும் கூட்டிக் கொண்டு டோர்ணா கோட்டைக்குச் செல்ல வேண்டுமென்றும் எனக்கு ஆக்ஞையிட்டாள். எனது ஹிருதயத்திலே ஏதோ ஈஸ்வர சக்தி யிருக்கிறதென்று நான் உணர்கிறேன். இது எப்படியாயினும், மகாராஷ்டிர தேசத்தை மகம்மதியக் கொடுங்கோன்மையினின்றும் விடுவிப்பதற்காகவே நான் உயிர் வாழ்கின்றேனென்பதும் அதன் பொருட்டு நான் ஒரு வேளை மரித்தாலும் மரிக்க நேரிடும் என்பதும் எனக்குள் ஊறி யிருக்கும் ஒரு எண்ணம்" என்று கூறவே, நெட்டாஜி தானும் அதே காரியத்தின் பொருட்டுத் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்துவிட்டதாகச் சொல்லி சிவாஜியை சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான். சிவாஜி அவனைத் தூக்கி யெடுத்துச் சந்தோஷம் மிகுந்து,

இருவரும் என்றும் பிரியாத் தோழர்கள் என்று ஆணையிட்டுக்கொண்டு தலைப்பாகைகளை மாற்றிக் கொண்டார்கள்.

பின்னர் நெட்டாஜி சிவாஜியினிடத்தில் ராஜமாச்சி கோட்டையில் நடந்த சமாசாரங்களையும், காசிபாயும் அவளுடைய பிதாவும் கொள்ளைக்காரர்களால் பிடிபட்டிருப்பதையும் கூறவே சிவாஜிக்கு இடிமேல் இடி விழுந்தது போலாயிற்று. "ஐயோ, ஈசா! நான் என்னசெய்வது? பராசக்தீ, பவானிமாதா! ஜகதம்பிகை! என்னுடைய படைகளெல்லாம இப்பொழுது கொங்கணதேசத்தில் இருக்கின்றனவே? இங்கு தக்ஷிணதேசத்தில் என் வசம் உள்ள சைந்நியம் போதுமானதன்றே. இச்சிறிய சைந்நியத்திற்குக்கூட உணவும் உடையும் கொடுக்கப் போதுமான பணமும் இல்லாது இப்பொழுது தவிக்கின்றேனே. மகாசக்தீ! எனது தேசத்திற்கு உயிர் கொடுக்கவேண்டுமென்ற ஆசையை என்னுள் ஏன் ஊட்டினாய்? அப்படித்தான் ஊட்டினையே, அதற்கு வேண்டிய சாதகங்களும் செய்துகொடுக்க வேண்டாமோ? ஐயோ, இந்த எண்ணம், இந்த தேசபக்தி என்னை ஒரு நிமிடநேரமேனும் விட்டு அகல்கிறதில்லையே. ஏன் இக் கஷ்டங்கள்? தேசத்தை முன்னேற்றத்தில் கொண்டுவருதற்கு நான் யார்? இப்படியெல்லாம் நினைத்து இவ்வெண்ணத்தை விட்டு விடலாமென்று தீர்மானித்துக் கொண்டாலும், என்னால் முடியவில்லையே. இவ்வெண்ணமானது எனது நாடி நரம்புகளிலெல்லாம் ஊடுருவிச் சென்றுகொண்டிருக்கின்றதே. இவ்வெண்ணம் கைகூட வேண்டுமென்று சதா எனது மூளையானது கொதித்துக்கொண் டிருக்கின்றதே; எனது ஹிருதயம் துடிக்கின்றதே. மகாகாளீ, எல்லாம் நினது அருளே, எல்லாம் நினது ஆக்ஞையே. உன்னை விட்டால் எனக்கு புகலிடம் எது? ஐயோ, அம்பிகை! உன்னையே நம்பினேன், உன்னையே நம்பினேன்" என்று சிவாஜி

தனக்குத்தானே பேசிக்கொண்டும் பிரார்த்தித்துக் கொண்டும் பிதற்றவே, அவனுக்குத் திடீரென்று ஒரு எண்ணம் உதித்தது. "நான் ஏன் இப்படியெல்லாம் யோசனை செய்ய வேண்டும்? இப்பொழுது நான் டோர்ணு கோட்டைக்குச் செல்லவேண்டுமென்று பவானிதேவி ஆக்ஞை யிடுகிறாள். அப்படியே செய்கிறேன். பின்னர் அவளுடைய ஆக்ஞை எப்படியோ அப்படி நடக்கிறேன். ஆனால் எனது லோக கட்டம் கோட்டைக்கு முன்னாலேயே குடிகொண்டு எனது ஆருயிர்த்தோழன் தத்தாஜியையும் அவருடைய பெண்ணையும் சிறைபிடித்துச் சென்ற கொள்ளைக்காரர்களிட மிருந்து அவர்களை மீட்டவேண்டியது எனது முதற்கடமையாகும்" என்று தானே கூறிக்கொண்டு, நெட்டாஜியைப் பார்த்து, "நமது நண்பர்களைச் சிறைகொண்டு சென்ற திருடர்கள் வெங்கடவாகன் என்னும் பெயரிய ஒருவனுடைய கூட்டத்தாராகும். இவன் சிலகாலமாக பாஜாவிலுள்ள பழைய பௌத்தக்குகைகளில் ஒளிந்துகொண்டு புனாவிலிருந்து போவார் வருவாரையெல்லாம் கொள்ளை யடித்துக்கொண்டிருக்கிறான். அஞ்சா நெஞ்சம்படைத்த அநேகர் அவனுடன் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும்-என்னிடம் மாத்திரம் அவர்களுக்கு வேண்டியன கொடுக்கப் போதுமான திரவியம் இருந்தால்—மகாராஷ்டிர தேசத்திற்காக என் கீழ் இருந்து எதிரிகளுடன் போர்புரியச் சித்தமாயிருப்பார்கள். ஆ! ஆ! எதற்கும் வேண்டியது பணமாகவல்லவோ இருக்கிறது. நல்லது, நாம் இப்பொழுது ஒரு காரியம் செய்வோம். லோக கட்டத்திற்குச் சென்று கொள்ளைக்காரர்களை எதிர்ப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்வோம்" என்று சொல்லி முடித்தார்.

அப்பொழுது அவர்களுடன் இருந்த கிழட்டுச் சந்நியாசி "நான் முன்னதாகச் சென்று அக்குகைகளி னருகில்

உட்கார்ந்துகொண்டு அக்கொள்ளைக்காரர்களின் எண்ணங்கள், பலாபலம் முதலியவற்றை அறிகிறேன். பின்னர் லோககட்டத்தையும் விஷ்ணுபுரம் என்ற மலைக்கோட்டையையும் ஒன்று சேர்க்கின்ற திட்டண்டையில் ஷேக் உமார் என்ற மகம்மதியப் பக்கிரி குதிரையினின்றும் இறங்கிய இடமென மண்ணால் குதிரைகள் செய்து நிறுத்திக் குறிப்பிடப்படுகின்ற இடத்தில் நான் வந்து உங்களுக்காகக் காத்திருக்கிறேன்'' என்று சொல்லி எழுந்து நடந்தார்.

---

## அத்தியாயம்—10.

வழித் துணைக்கு ராமனைக் கூட்டிக்கொண்டு புறப்பட்ட தத்தாஜியும் காசிபாயும் அர்த்தராத்திரியில் ராஜமாச்சியை விட்டு நீங்கி, காண்டல்லாவை நோக்கிச் செல்லும் பெரிய ரஸ்தாவின் வழியாகச் சிறிதுதூரம் சென்று, பின்னர் ராஜமாச்சிகோட்டையை எதிர்ப்பதற்கு வரும் பீஜப்பூர்ப் படைகள் வழியில் எங்கே தென்பட்டுவிடுவார்களோ? என்று பயந்து,ஒருபக்கப் பாதையில் திரும்பி அங்கு கொள்ளைக்காரர்களுக்குப் பயந்து குடிசைகளைவிட்டு ஓடிவிட்டவர்களின் பாழுங்குடிசைகள் பலவற்றுள் ஒன்றில் இரவில் தங்கி, மறுநாட்காலையில் பீஜப்பூர்ப்படைகள் அவ்வழி கடந்திருக்கலாமென்று ஊகித்துக்கொண்டு, மறுபடியும் பெரிய ரஸ்தாவுக்கு வந்து காண்டல்லாவை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்பொழுதுதான் அவர்கள் அயூப்கானுடைய குதிரையை வைத்து ஆதரித்து நெட்டாஜியினிடம் கொடுத்த குடியானவன் வீட்டில் தங்கியது. அக்குடியானவன் அவர்களை மிகவும் மரியாதையுடன் வரவேற்று, தன்னுடைய சிறிய குடிசையில் அவர்கள் அன்றிரவு தங்கிக் களைப்பாற்றிக்கொண்டு செல்லும்படி வேண்டிக்கொண்டான். அவர்களும் நெடுந்தூரம் பயந்துபயந்து ஓடிவந்ததினால் களைப்பு மிகுந்து அயர்ந்து

நித்திரை செய்தார்கள். ராமனுடைய இருப்புச் சதைகட்கும் சிரமசாந்தி செய்யவேண்டி வந்தது.

மறுநாட் காலையில் அவர்கள் சூரியோதயத்துக்கு முன்னதாகவே எழுந்திருந்து லோககட்டத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். வருகிறவழி லோககட்டத்துக்குச் சமீபம். இன்னும் கொஞ்சதூரம் தான் இருக்கிறது. வழியில் இருபுறமும் பாறைகள் காடாந்தகாரமா யிருக்கிறது. இடது பக்கத்தில் ஒரு பெரும் பாறையி னடியிலிருந்து ஒரு அதிகாரத்வனி கேட்டது. இவர்கள் திரும்பிப்பர்த்தார்கள். சத்தம்வந்த அப்பாறையினடியில், ஈட்டி, கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்கள் தாங்கி மகாபலிஷ்டனான ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அடுத்த நிமிஷத்தில் ஒரு கூட்டம் கொள்ளைக்காரர்கள் அழுக்குமிகுந்த ஆடைகள் அணியப் பெற்றவர்களாய் சிலர் ஈட்டிகளுடனும் சிலர் அம்பு வில்லுக ளுடனும் சிலர் பலத்த தடிகளுடனும் கத்தி கேடயம் முத லிய பலவித ஆயுதங்களுடனும் திடீரென்று இவர்களை வந்து சூழ்ந்து கொண்டார்கள். தத்தாஜியோ கிழவர்; காசிபாயோ சிறுபெண். ராமன் மாத்திரம் சிறிது ரத்தக்கொழுப்புள்ள வன்; ஆயினும் அவன் ஒருவன் இத்தனைபேர்களுக்கும் பதில்சொல்ல முடியுமா? ஆதலால் ஓடவும் முடியாது, எதிர்க்கவும் முடியாது இன்னது செய்வதென்றும் அறி யாது, இவர்கள் விழித்துவிட்டார்கள். வணங்கினால்தான் இப்பொழுது உயிர் தப்பலாமென்று தத்தாஜி அறிந்து கொண்டு நயமான வார்த்தைகளால் "எங்களை நீங்கள் பிடித் துக்கொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்? ஆயுதந்தாங்கிய அசகாய சூரர்களாகிய நீங்கள் அநாதைகளாயும் அகதிக ளாயுமுள்ள எங்களை என்ன செய்யப் போகிறீர்கள்? ஈஸ்வர னுக்குப் பயந்தாவது எங்களை விட்டுவிடுங்கள். ஈஸ்வரனுக் குப் பயப்படாவிட்டாலும் எங்களுக்கெல்லாம் எப்பொழு

தும் பலத்துக்குப் பலமாய் பக்கத்துணையா யிருக்கப்பட்ட சக்கரேஸ்வரன் சிவாஜிக்குப் பயந்தாவது விட்டுவிடுங்கள். ஈஸ்வரனாவது நின்று ஒறுப்பார்; எங்கள் சிவாஜி இன்றே ஒறுப்பார். ஆகையால் சிவாஜிக்குப் பயந்தாவது எங்களை விட்டுவிடுங்கள்'' என்று கூறவும், கொள்ளைக்காரர்களின் தலைவனாகிய வெங்கிடவாகன் என்பவன் ''நான் சிவனுக்கும் பயப்பட்டவனல்லன்; சிவாஜிக்கும் பயப்பட்டவனல்லன். பிச்சையேற்றுண்ணும் பெருந் தரித்திரனாகிய சிவனுக்கோ நான் பயப்படுவது? பெண்பித்துப்பிடித்துப் பேய்க்கோலம் கொண்டுதிரியும் பித்தனுக்கா நான் பயப்படுவது? மானிட வர்க்கத்தை விட்டு நீங்கி மசானத்தில் வாழும் மடையனுக்கா நான் பயப்படுவது? அல்ல, இருக்கட்டும். உங்கள் சிவாஜிதான் என்ன? என்னைப்போலொரு கொள்ளைக்காரன்தானே. அவன் எனக்கு எதிர்ப்படுகிறதில்லை. எப்பொழுது எதிரில் வந்து அகப்பட்டுக்கொள்வானோ என்று சமயம் பார்த்துகொண்டிருக்கிறேன். என்றாவது ஒருநாள் என் கையில் அவன் அகப்படாமல் இருக்கமாட்டான். அப்பொழுது தெரியும் வெங்கிடவாகனுடைய சமர்த்தும் சிவாஜியினுடைய சமர்த்தும். மூட்டைப்பூச்சியை நசுக்குவது போல் நசுக்கி யெறிந்துவிடுவேன். ஒரே அறையில் பொடிப்பொடியாக்கி பூவென்று ஊதிவிடுவேன். அவனுடைய பிரதான கோட்டைகளுள் ஒன்றாகிய இந்த லோக கட்டத்துக்கு எதிரிலேயே நான் எனது வாசஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டிருப்பதே எனது செளரியத்தை எடுத்துக்காட்டவில்லையா? எனது கடவுளாகிய ஈட்டி எனது கையிலுள்ள வரையில் எனக்கும் எனது பரிவாரங்களுக்கும் என்ன குறை?'' என்று பதில் உரைத்தான். இச்சொற்களைக்கேட்டவுடனே ராமனுக்குச் சிரிப்புப் பொறுக்க முடியவில்லை. அழுக்குக் கந்தைகளைத் தவிர வேறு ஆடைகளில்லாத இக்

கூட்டத்தாரின் தலைவனுடைய ஜம்பப்பேச்சு ராமனுக்குச் சிரிப்பை யுண்டாக்கிவிட்டது. ஆயினும் சிரிப்பை யடக்கிக் கொண்டான். கொள்ளையர்களில் இருவர் ராமனுடைய கைகளைப் பின்புறமாகச் சேர்த்துக்கூட்டினார்கள். தத்தாஜி கிழவனும் காசிபாய் ஸ்திரீயுமாயிருந்தபடியால் கொள்ளைக்காரர்கள் அவர்களைக் கட்டவில்லை. ஆனால் அவர்கள் இம்மூவரையும் தங்களுடைய வாசஸ்தானமாகிய குகைக்கு இட்டுச் சென்றார்கள். வெங்கிடவாகன் தத்தாஜியின் பக்கலில் நடந்துகொண்டே அவர் யாரென்றும் எங்கு செல்கிறாரென்றும் விசாரித்தான். அவரை இன்னாரென்று அறிந்து கொண்டதின்மேல் "நீ பெரிய தனவந்தன்; ஏராளமான பணம் லஞ்சம் கொடுத்து நீ மீண்டுபோகலாம். ஆனால் நான் உன்னைக் கஷ்டப்படுத்தேன். வனப்பிற்சிறந்த வனிதையாகிய உனது மகளை நீ எனக்கு மனைவியாகச் சம்மதிப்பாயானால், உன்னை விட்டு விடுகிறேன்" என்று சொல்ல, தத்தாஜிக்குக் கோபம் பொங்கிவிட்டது. "வீடுவாசலில்லாத வெறியனாகிய உனக்கு வாழ்க்கைப்பட்டு இம்மண்ணில் இருப்பதினும் எனது பெண் இறப்பதே எனக்குச் சம்மதம்" என்று மீசை படபடத்துத் தத்தாஜிகூற, வெங்கிடவாகன் "ஏ, பைத்தியக்காரக் கிழவா, உன்னை நான் எனது மதிப்பு மிகுந்த மாமனாக்க நினைத்திருக்கிறேன். இன்று நான் திருடனாயிருக்கிறேனென்று நீ நினைக்கிறாய்போலும். நாளை நான் தேர்வேந்தனாகமாட்டேனென்று உனக்கு எப்படித் தெரியும்? கலக்கம் மிகுந்த இக்காலங்களில் பிச்சைக்காரனும் பேரரசனாய் விடலாமன்றோ? நேற்றுவரையில் என்னைப்போன்று ஒரு கொள்ளைக்காரனாயிருந்த சிவாஜியை உன்னைப்போன்ற எத்தனை பேர் சக்கரேஸ்வரனாக்கி வைத்திருக்கிறார்கள்? ஏன் நானும் அப்படி ஆகக்கூடாது?" என்று கேட்டான். தத்தாஜி அவனை நோக்கி "உதயபுரம் சமஸ்தானத்து ராஜபரம்பரை

யில் சூரியவம்சத்தில் உதித்த ஷாஜியினுடைய அருந்தவப் புதல்வன், அசகாயசூரன், அவதார புருஷன்-சிவாஜியினுடன் உன்னை ஒப்பிட்டுக் கொள்கிறாயா? பளா! பளா! வெகு நேர்த்தி! இரவில் செத்தால் விளக்கெண்ணெய்க்கு விதியில்லாமல், பகலில் செத்தால் வாய்க்கரிசிக்கு வழியில்லாமல் ஓட்டாண்டியாயிருக்கும் ஒருவன் தனது நிலைமையை தேவேந்திரனுடைய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டது போலிருக்கிறது" என்று சொல்ல, அவன் "நான் என்ன? அவனிலும் பலத்தில் குறைந்தவனா? தைரியத்தில் குறைந்தவனா? அழகில்தான் குறைந்தவனா? அவன் ஏதோ தாழ்ந்த வம்சத்தில் பிறந்தவன். உன்னைப்போன்ற தொடை நடுங்கிகளும் மூடர்களும் பலர் சேர்ந்து அவனைச் சூரியவம்சத்தில் நுழைத்துவிட்டார்கள். அவன் அவதார புருஷனென்றாய். எவன் தன்னுடைய சொந்த முயற்சியாலும் சாமர்த்தியத்தினாலும் மேன்மை யடைகிறானோ, அவனே அவதார புருஷன்" என்று கூறிவிட்டு தத்தாஜியை நோக்கி ஒரு பரிகாசப் பார்வை பார்த்து, காசிபாயைக் காமநோக்கினால் கண்டு "நீ சம்மதித்தாலும் சம்மதியாவிட்டாலும் இவள் எனது நாயகியே. நீ சம்மதித்துக் கொடுத்தால் சந்தோஷம். நீ சம்மதிக்காவிட்டாலும் சந்தோஷம். எப்படியாயினும் இவள் என்னுடையவளே" என்று மொழிந்து காசிபாய் ஏறியிருக்கும் குதிரை யருகிற்சென்று கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு "கண்டோரைக் காமத்தினால் கலக்குகின்ற காசி, நினது அழகு மகாராஷ்டிர தேசம் முழுதும் வியாபித்திருக்கிறது. இன்று உன்னைக்கண்டேன், அளவிலா ஆநந்தம் கொண்டேன். எனது அதிர்ஷ்டமே நீ என் ஃகையில் சிக்கிக் கொண்டாய். தேவராயினும் சரியே, மூவராயினும் சரியே, எவராயினும் சரியே, அவர் சம்மதித்தாலும் சரியே, சம்மதிக்காவிட்டாலும் சரியே, நீகூடச் சம்மதித்தாலும் சரியே,

சம்மதிக்கா விட்டாலும் சரியே, நீ எனது மனைவி யென்பது நிச்சயம். எமனுலகு சென்றவர்கள் திரும்பவும் தப்பித்து வந்துவிட்டாலும், என் கையில் சிக்கியவர்கள் தப்புவது முடியாது. என்மீது கோபித்துக் கொள்ளாதே. கோபம்வந்தால் உன் அழகைக் கோபித்துக் கொள். என்னுடைய இச் சாகசச் செய்கைக்குக் காரணம் உன் அழகே. ஆ! ஆ!! உனது கண்களினின்றும் காமன்கணை கள் புறப்பட்டு எனது ஹிருதயத்தைத் துளைக்கின்றனவே. ஆ! இதென்ன இருபக்கமும்? கன்னங்களா? கண்ணாடிக ளென்றல்லவோ நினைத்துவிட்டேன். உனது தகப்பனார் மகம்மதியர்களுக்குப் பயந்து ஓடிவந்தபொழுது தம்மிட மிருந்த உயர்ந்த ஆணி முத்துக்களையெல்லாம் எடுத்து உன் னிடம் கொடுத்து உனது வாய்க்குள் அடக்கி யொளித்து வைத்துக்கொள்ளச் சொன்னாரோ? எங்கே? உன் வாயைத் திற! பார்ப்போம். சீ! இல்லை, இல்லை. இவை உன்னுடைய பற்களா? நான் பிரமித்துவிட்டேன். உன்னுடைய ஒவ் வொரு அவயவத்தின் அழகும் என்னைப் பித்துப்பிடிக் கச் செய்துவிட்டது. காசி! காசி! என்னைக் காப்பாய். ஈஸ் வரனையும் லட்சியம் செய்யாத நான் உனது பாதார விந்தங் களில் பணிகின்றேன்'' என்று பற்பலவாறாகப் பிதற்றிக் கொண்டு அவளுடைய கால்களைப் பிடித்துக்கொண்டான்.

காசிபாய் மிகவும் புத்திசாலிப் பெண். இச்சமயத்தில் எதிர்த்து வார்த்தையாடுவது மடமை யென்று அறிந்து கொண்டு, தந்திரமாகத் தப்பித்துக்கொள்ளக் கருதி அவ னைப் பார்த்து "நல்லது, மகாராஷ்டிர தேசமானது இப் பொழுது இருக்கும் நிலைமை யுனக்குத் தெரியாதா? இந்தத் தாழ்ந்த நிலைமையினின்றும் மகாராஷ்டிர ஜனங்களைக் கை தூக்கி விடுவதற்குக் கங்கணம் கட்டிக்கொள்ளாத எவனை யும் நான் கலியாணம் செய்துகொள்வதில்லை யென்று ஒரு

சபதம் செய்துகொண் டிருக்கிறேன். பீஜப்பூர் சமஸ்தானத்து ஆட்சியினின்றும் இத்தேசத்தை விடுவிப்பதற்கு சிவாஜி யரசர் செய்யும் முயற்சியில் நீயும் சேர்ந்துகொண்டு உதவி செய்வாயானால், என்னை உனக்கு விவாகம் செய்விப்பதற்கு என் பிதா ஒரு வேளை இணங்கினாலும் இணங்குவார்; எனது சபதத்துக்கும் பங்கம்வராது'' என்று தனது திங்குரலால் உரைக்கவே, இவளுடைய வாக்கினின்றும் வந்த வார்த்தைகளைக் கேட்கவே, அவனுக்கு பூரிப்பு உண்டாயிற்று. ஆயினும், சிவாஜியினும் தன்னைத் தாழ்ந்தவனாக அவள் கருதியது அவனுக்குச் சிறிது வருத்தத்தைக் கொடுத்தது. சிவாஜி எவ்விதத்தில் என்னிலும் உயர்ந்தவன்? அவன் உருவத்தில் குள்ளன், தைரியத்தில் குறைந்தவன், சேர்த்துப் பிடித்தால் செத்துவிடுவான், அவ்வளவுதான் அவனுடைய பலம். அவனுடன் சேர்ந்து அவன் கீழ் இருந்து நான் எனது சமர்த்தைக் காட்டவா? நன்று பேசினாய். உன்னுடைய காதல் இன்று திருடனா யிருக்கும் என்னை நாளை தேசாபிமானி யாக்கி விடாதோ? உனது காதற் பெருமையினால் தேச முன்னேற்றத்தின் பொருட்டு நானே முன்னின்று சிவாஜி பின்னடையும் படியாக அவ்வளவு ஆண்மையும் அறிவும் எனக்கு ஏற்படாதோ?'' என்று வெங்கடவாகன் கூறிவிட்டு, தத்தாஜியினிடத்தில் தான் தன்னுடைய நடத்தையைச் சீர்திருத்திக்கொண்டு தேச முன்னேற்றத்தின் பொருட்டுப் பாடுபடத் தீர்மானித்து விட்டதாகவும் அப்படிச் செய்தால் காசிபாய் தன்னை விவாகம் செய்துகொள்வதாகக் கூறிவிட்டதாகவும் சொன்னான்.

தத்தாஜி தமது புத்திரியின் தந்திரத்தை யறிந்துகொண்டார். நல்லது, உன்னுடைய நடத்தையைச் சீர்திருத்திக் கொள்ளப் போகிறாயென்று கேட்க, நான் மிக மிகச் சந்

தோஷிக்கிறேன். நீ ஒரு வெறுந்திருடனுயிருக்கும் வரையில் என் மகளை உனக்கு விவாகம் செய்விக்க ஒரு பொழுதும் சம்மதியேன். நீ சீர்திருத்திக் கொள்ளப்போவது உண்மையாயின், எங்கே பார்ப்போம்? எங்களை நீ இப்பொழுது அக்கிரமமமாகத் தானே பிடித்திருக்கிருய்! எங்களை விட்டுவிடு. ஆனல் தான் நீ இப்பொழுது சொன்னது உண்மையென்று நம்பலாம்'' என்று தத்தாஜி கூறவே, வெங்கட வாகன் நகைத்து ''ஆ! ஆ! நான் என்ன மூடனென்று நினைத்தாயோ? இப்பொழுது உங்களை விட்டுவிட்டால், நீங்கள் சிவாஜியினிடம் லோக கட்டத்தில் போய்ச் சேர்ந்துகொள்வது நிச்சயம். கையில் அகப்பட்ட குருவியை விட்டு விட்டு காட்டில் சென்று குருவி தேடும் புத்தியுடையவனல்லன் நான். நீ பாஜா குகைக்கு என்னுடன் கூட வரத்தான் வேண்டும். விவாக மஹோற்சவத்திற்கும் அங்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்'' என்று மொழிந்தான்.

இங்கே இவர்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது, ராமன் தன்னருகில் தனக்குக் காவலாகச் சென்றுகொண்டிருந்த கோபாலன் என்னும் பெயருடைய ஒரு திருடனிடத்தில் காதோடு காதுவைத்து ''நான் தப்பியோடுவதற்கு உதவி செய். தத்தாஜி அதிக தனவந்தர்; உன்னுடைய தலைவனிடத்திலிருந்து நீ எதிர் பார்க்கும் வெகுமதியினும் அதிக வெகுமதி தத்தாஜி உனக்குக் கொடுக்கும்படி செய்கிறேன்'' என்றான். ''சரிதான், உன்னை நான் ஓடித் தப்பித்துக் கொள்ளும்படி விட்டுவிடுவேனுனல், வெகுமதி வாங்குபவர் எவர்? இந்த வெங்கடவாகன் என்னைச் சும்மா விட்டுவிடுவானு? என் சரீரத்தைக் காக்கைகளும் கழுகுகளும் விருந்துண்ணும்படி ஏதேனும் ஒரு மரத்துடன் எனது கழுத்தில் கயிறு இட்டுத் தூக்கிவிடுவானே'' என்று பதி

லுரைத்தான். ராமன் "நான் கேட்பதெல்லாம் என்னை நீ கட்டிப் பிடித்திருக்கும் துணியைக் கொஞ்சம் நீ நெகிழவிட்டால் போதும் என்பதே. நாம் இருவரும் நமது குழந்தைப் பருவத்தில் விளையாட்டுத் தோழர்களா யிருந்தோமே, அதை யாவது நினைத்து இப்பொழுது இவ்வுபகாரம் செய்யக் கூடாதா?" என்று சொல்ல, கோபாலன் சம்மதித்தது போலத் தலையை யசைத்தான். ஒருவரோடொருவர் கட்டி யுருண்டு புரண்டு விளையாடி வளர்த்த சிநேகத்தின் மகிமை யும் வல்லமையும் அவ்வளவு பெரியன!

ஆகையால் அவர்கள், அக்காட்டின் வழியாகச் சென்று கொண் டிருக்கையில், கோபாலன் ராமனைக் கட்டி யிருந்த கட்டைச் சிறிது தளர்த்திவிட, ராமன் திமிறி விடுவித்துக் கொண்டு ஓடினான். உடனே அத்திருட்டுக் கூட்டத்தாரில் பலர் அவனைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள்; அம்புகளெய் தார்கள். அவன் அகப்படவே இல்லை. அவன் ஓடியோடி அக்காட்டைக் கடந்து இன்னொரு காட்டிற்குள் நுழைந்து ஒரு பெரிய புதரினுள் ஒளிந்துகொண்டான்; நெட்டாஜி யைக் காணும் வரையில் அவன் அப்புதரினின்றும் வெளியே வரவே யில்லை.

# அத்தியாயம்—11.

பூமியிலிருந்து நானூறு அடி உயரத்திலுள்ள ஒரு சிறிய குன்றின் மேலே அந்தத் திருட்டுக் கூட்டத்தார் தத்தாஜியையும் காசிபாயையும் இட்டுச் செல்லவே, அங்கே மேற்கு முகம்நோக்கி அநேக பழைய பௌத்தகுகைகள் இருந்தன; இவர்கள் சுமார் 10 குகைகளைத்தாண்டிச்சென்றார்கள். இவற்றையெல்லாம்விடப் பெரிய குகையொன்று தென்பட்டது. அறுபது அடிநீளமும் முப்பதடி அகலமுமுள்ளதாய் இரு வரிசைத் தூண்களுடன் அமைக்கப்பெற்று இருபக்கங்களிலும் தாழ்வார அறைகளுடன் விளங்கிய அக்குகைதான் இக்கொள்ளைக்காரர்களின் இருப்பிடம். இக்குகைக்குள் சென்றவுடன், வெங்கடவாகன் ஓர் உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு, காசிபாய்க்கும் தத்தாஜிக்கும் ஆசனங்கள் கொடுத்து உட்காரும்படி சொன்னவுடன், அவனுடைய வேலைக்காரர்களில் ஒருவன் அவனுடைய தலையிலிருந்து தொப்பியைக் கழற்றினான்; இன்னொருவன் அவனுடைய அரைக்கச்சையை அவிழ்த்து, அதையும் அதில் சொருகப்பட்டிருந்த வாளையும் அவன் முன் வைத்தான்; இன்னொருவன் பாதரட்சைகளைக் கழற்றிவிட்டான். இதற்குள் ஒருவன் ஒரு பெரிய பாத்திரத்தில் நன்றாகக் காய்ச்சிய பாலும் கொஞ்சம் சர்க்கரையும் கொண்டுவந்து எதிரில் வைத்தான். வெங்கடவாகன் ஒரு கோப்பைப் பால் சாப்பிட்டுவிட்டு, காசிக்கும் தத்தாஜிக்கும் ஒவ்வொரு கோப்பை கொடுத்து சாப்பிடச் சொல்லி, பின்னர் ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டு, அவர்கள் இருவருக்கும் அடுத்த குகையில் தனியே ஒரு அறை கொடுக்கும்படி உத்தரவு செய்துவிட்டு,

தத்தாஜியை நோக்கி "கிழவா, உனது பெண்ணும் நானும் மனைவியும் மணவாளனுமாகிச் சகலசந்தானசம்பத்துக்களும் பெருகி நீடூழி காலம் நிலை நின்று வாழவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தனை செய்" என்று சொல்லி காசிபாயைப் பார்த்து "இன்பானுபூதி வேண்டி எல்லோரும் காசிக்குச் செல்கிறார்கள். இன்பத்திற்கு இருப்பிடமாகிய காசியாகிய உன்னையே நான் என் கைக்குள் வைத்திருக்கிறேன். இனி மேல் எனக்கென்ன குறை? என் கண்ணே! என்னை மறந்து விடாதே. இன்றிரவு, என்ன தெரியுமா? தயாராயிரு" என்று கூறியவர்களை யனுப்பிவிட்டு, வேறு இரண்டு வேலைக்காரர் களைக் கூப்பிட்டு தத்தாஜியும் காசிபாயும் தப்பித்து ஓடி விடாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டு மென்றும் ஆனால் அவர்களுக்கு எவ்வித தொந்தரவும் ஏற் படக் கூடாதென்றும் உத்தரவு செய்து அனுப்பினான். அவர்கள் தங்களுக்கென்று காண்பிக்கப்பட்ட தனி யறைக் குச் சென்ற பிற்பாடு, பால், சர்க்கரை, ரொட்டி முதலியன அவர்களுக்கு போஜனத்திற்குக் கொடுக்கப்பட்டது.

பின்னர் கொள்ளைக்காரர்கள் அனைவரும் அக்குகையினுள் பந்தி பந்தியாக உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள். அக் கூட்டத்திற் சேர்ந்த இந்துக்கள், மகம்மதியர்கள் அனைவ ரும் பஞ்சமாபாதகங்கள் கொஞ்சமும் கூசாமல் செய்பவர்க ளாயினும் ஜாதிமத ஆசாரங்களில் மிகப்பற்றுள்ளவர்களா யிருந்தார்கள். ஆகையால் அந்த அந்த வகுப்பார் வேறு வேறாக உட்கார்ந்து கொண்டுதான் சாப்பிட்டார்கள். ஆனால் ஒரு சிலர் முற்றத் துறந்த முழு ஞானிகள்போல வித்தியாச பாவனைகளை வெறுத்து வேற்றுமையற்று எல்லாம் ஏகமே யென்று இறுமாப்புற்றிருந்தார்கள். இவர்களுடைய தலைவ னாகிய வெங்கடவாகன் தான் பிராம்மணஜாதியில் பிறந்தவ னென்று சில சமயங்களில் பெருமை பேசிக்கொண்டபொழு

திலும், மதுவும் மாமிசமும் இல்லாவிட்டால் அவனுக்கு சாப்பாடு இறங்காது.

காலைச்சமயம். நேரம் மணி பத்திருக்கும். இக்கொள்ளைக் காரர்களின் அப்பெரிய குகையின் எதிரேயுள்ள ஒருபெரிய மாமரத்தடியில் ஒரு விருத்தாப்பியர் வந்து தமது மான் தோலாசனத்தை விரித்து அதன்மீது உட்கார்ந்தார். இவர் தாம் சிவாஜியினிடத்தில் முன்னே பேசிக்கொண்டிருந்த வர். அக்கொள்ளைக் கூட்டத்தாரில் பலருக்கும் இவரைத் தெரியும். ஆகையால் அவர்களில் சிலர் இவரிடத்திற்கு வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, பால், பழம் முதலியன கொண்டுவந்து அவர்முன் வைத்தார்கள். அவர் அவற்றை யெல்லாம் சிறிதும் கவனியாது தீர்க்க நிஷ்டையிலிருப்பவர் போல இருந்துவிட்டுப் பின்னர் அவர்களை மிகுந்த கோபக் குறியுடன் பார்த்து "கணபதி உபாசனாகிய என்னிடத்தில் உங்களுக்கு என்னவேலை? மார்க்கவனம் என்னும் இடத்தி லுள்ள க்ஷேத்திரத்திலிருந்த கணபதி விக்கிரகத்தை உங்கள் தலைவன் உடைத்துத் தூள் தூளாகச் செய்யவில்லையா? அவ னுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் நீங்களும் அவனைப்போன்று தானே இருப்பீர்கள். போங்கள், போங்கள், தூரப்போங் கள். உங்களுக்கு முடிவுகாலம் சீக்கிரம் வரப்போகின்றது. சண்டாளச் செய்கைகளைச் செய்பவர்கள் சாட்சாத் ஈஸ்வர னுடைய ஆக்ஞைக்குத் தப்பமுடியாது. போங்கள், தூரப் போங்கள், மிலேச்சர்களே, என் முகத்தில் விழிக்காதீர்கள்" என்றுகூறவே, அவர்களுக்குத் திடீரென்று ஒரு திகில் உண் டாயிற்று. ராமன் தப்பி யோடுவதற்கு உதவியாயிருந்த கோபாலன் என்பவனும் அங்கு வந்திருந்தான். அவன் அவ ரைப் பார்த்து, "சுவாமி, நாங்கள் என்செய்வோம்? உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா? உப்பிட்டவரை உள் ளளவும் நினைக்கவேண்டாமா? இத்தனை நாட்களாக இந்த்

வெங்கடவாகன் எங்கள் எல்லோருக்கும் அன்னம் கொடுத்து ஆதரித்திருக்கிறனே. இப்பொழுது இவனைக்கைவிட்டு விடுவது தர்மமாகுமா?'' என்று கேட்டுக்கொண்டிருக்கையிலேயே, குகையின் வாசலிலிருந்து வெங்கடவாகன் "அங்கே வந்திருக்கின்ற பிச்சைக்காரப் பையல் எவன்? சந்நியாசிகளுக்கும் பக்கிரிகளுக்கும் இங்கு என்னவேலை? அவனை உடனே அங்கிருந்து ஓடிவிடச் சொல்லுங்கள். இன்னும் கொஞ்சநாள் இவ்வுலகில் அவன் இருக்கவேண்டுமாயின், இப்பொழுதே ஓடித் தப்பித்துக்கொள்ளட்டும்'' என்று கத்தினன்.

கிழவர் தம்மைச் சுற்றிநின்றவர்களைப் பார்த்து மெதுவாக "கேட்டீர்களா அந்தச் சண்டாளன் சொல்லும் வார்த்தைகளை! அடியார்க் கடியனாய் அம்பலவாணனையே எப்பொழுதும் தியானித்துக்கொண்டிருக்கும் இந்த எளிய பக்தனைப் பயமுறுத்துகிருன், பார்த்தீர்களா? நான் இங்கிருந்து அசையமாட்டேன். அவன் என்னசெய்தாலும் செய்யட்டும்'' என்ருர். அவரைச் சுற்றி நின்றவர்கள் தங்களுடைய தலைவன் மிகவும் கொடியோனென்றும் குடிவெறியில் எத்தகைய கொடியசெயலையும் செய்துவிடுவானென்றும் அவரிடத்தில் எவ்வளவோசொல்லியும், அவர் அங்கிருந்து அசையமாட்டேனென்று மறுத்துவிட்டார். "இதுவரையில் எனக்கு நேரிட்ட இடையூறுகளை யெல்லாம் களைந்து என்னை ஆதரித்து வந்திருக்கின்ற மகா கணபதி இப்பொழுது என்னைக் கைவிட்டுவிடுவாரா? பார்க்கலாம். மனிதனுடைய பலத்தையும் கடவுளுடைய பலத்தையும் பரீட்சித்துப் பார்க்கலாம்'' என்று அந்தக் கிழவர் சொல்லிக்கொண்டேயிருக்கையில், வெங்கடவாகன் அங்குவந்து கோபாலனைப் பார்த்து அந்தச் சந்நியாசி அங்கிருந்து அசையாவிட்டால் அவரை நன்ருகப்

புடைக்கும்படி உத்தரவு செய்யவே, கோபாலன் 'எசமானே, தாங்கள் என்னைக் கொன்றுவிட்டாலும் சரி, நான் அவரைத் தொடமாட்டேன்'' என்று சொல்லிவிட்டான். வெங்கடவாகனுக்குக் கோபம் வந்துவிட்டது; கத்தியை உருவி, கோபாலன்மீது வீசினான். அது நல்லவேளையாய் அவனுடைய கழுத்தில் படாமல், தோளில் சிறிது சிதைத்துக் கொண்டு போயிற்று. இதற்குள் கொள்ளைக்கூட்டத்தினர் அனைவரும் வந்து கூடிவிட்டார்கள். அவர்கள் மிக மிகக் கொடிய செயல்களையெல்லாம் செய்யப் பழகியிருந்த பொழுதிலும், ஏழைச் சந்நியாசியொருவர் அநாவசியமாக, அகாரணமாக துன்புறுத்தப் படுவதைப் பார்க்கச் சகிக்கவில்லை. எல்லோரும் கோபத்துடன் முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். வெங்கடவாகன் பார்த்தான்; இச்சமயத்தில் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்தாது அடங்கி விடுதல்தான் உத்தமமென்று அறிந்துகொண்டு ஒன்றும்பேசாது குகைக்குத் திரும்பிவிட்டான். இப்பொழுது அச்சந்நியாசி பேசுவதைத் தடுப்பவர் எவர்? அவர் தமது அருகில்வரத் துணிந்த கொள்ளைக்காரர்கள் பலரிடத்தும் தாராளமாகப் பேச ஆரம்பித்தார். கூட்டத்தில் நல்லவனும் கெட்டவனும் இருப்பார்களாதலால் அவரவர்களுடைய மன உணர்ச்சியை அறிந்துகொண்டு அதற்கேற்றவாறு தேசாபிமானக் கிளர்ச்சியை உண்டுபண்ணவேண்டிய இடத்தில் தேசாபிமானத்தையும் ஈவிரக்க முள்ளவர்களிடத்தில் ஈவிரக்கச் சித்தத்தையும் கிளப்பிவிட்டு, பணத்திற்காகப் பாடுபடுகின்ற மனிதர்களிடத்தில் சிவாஜியினுடைய தாராள தர்மகுணத்தை யெடுத்துரைத்துப் பலருடைய மனத்தையும் பற்பலவிதமாகக் கரைத்துவிட்டார். இப்படியெல்லாம் இவர் பேசியபொழுதிலும், எவரும் வெங்கடவாகனிடத்துச் சென்று கூறவிரும்பவில்லை. இதற்குள்ளாக வெங்கடவாகனும் குடிவெறி

மிருந்து தனது படுக்கையில் உருண்டு புரண்டு உறங்கிக் கிடந்தான்.

சூரியன் நடு ஆகாயத்தைக் கடந்து மேற்குப் பக்கம் சாய்ந்து விட்டான். இரண்டுமணி ஆய்விட்டது. இன்னும் வெங்கடவாகன் எழுந்தபாடில்லை. பாஜா குகைகளின் வாசல்களில் வெயில் அதி உக்கிரமாக வீசுகிறது. ஆயினும் வெங்கடவாகனுக்கு உணர்ச்சி வரவேயில்லை. இப்படி வெங்கடவாகன் கும்பகர்ணனுக்குத் தம்பிபோலக் கொடுந்தூக்கந் தூங்கிக்கொண் டிருந்தபொழுது ஒருவன் ஓடோடி வந்து அவனைத் தட்டிப்புரட்டி எழுப்பி லோக கட்டத்திலிருந்து ஒரு பெரும்படை பாஜா குகைகளை நோக்கி வருகின்றது என்று கூறினன். வெங்கடவாகனுடைய முகமானது சிவந்து ஊதிக்கிடந்தது; கண்விழிகள் இரண்டும் முன்தள்ளி நின்றன. தலை பாரமாயிருந்தது அவனால் எழுந்திருக்க முடியவில்லை. ஆயினும், பெரும்படையொன்று புறப்பட்டு வருகின்றது என்று கேட்டும் அவன் எழுந்திருக்காமலிருக்க முடியுமா? மெல்ல எழுந்திருந்தான்; தனது கழுத்திலும் தலையிலும் ஒரு செம்பு தண்ணீர் ஊற்றும்படி ஒருவனிடம் உத்தரவு செய்தான். பின்னர் தலையைத் துடைத்துக் கொண்டு, கொஞ்சம் தெளிந்து எழுந்திருந்து யுத்தத்திற்கு ஆயத்தமானன். குகையின் வாசலுக்கு நேரே அநேக மரங்கள் நெருக்கமாக நடப்பட்டிருந்தன. தவிர, கற்கள் ஒன்று மேலொன்று அடுக்கப்பெற்று, ஒரு மூட்டு மதிலொன்று கிளப்பப்பட்டிருந்தது. ஆதலால் எதிரிகள் வந்து வளைந்து கொண்டால், இந்த வாசலைத்தவிர, இக்கொள்ளைக்காரர்கள் ஓடித் தப்பித்துக் கொள்வதற்கு வேறு வழி கிடையாது. எதிரிகளுடன் எதிர்த்துப் போராடி ஜயிக்காவிட்டால், இவர்கள் கொல்லப்படுவார்கள் அல்லது கைதிகளாகப் பிடிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம். ஆகையால் கொள்ளையர்

கள் தங்கள் தலைவனைவிட்டுத் தப்பியோடிவிட முடியாது. இது வெங்கடவாகனுக்குச் சந்தோஷந்தான். எதிரிகள் வருகிறார்களென்று கேள்விப்பட்ட வெங்கடவாகன் தன் மனிதர்களைப் போருக்குத் தயாராகும்படி உத்தரவு செய்துவிட்டு, தத்தாஜியையும் காசிபாயையும் இட்டுவரும்படி கட்டளையிட்டான். அவர்கள் வந்து சேர்ந்ததும், அவர்களை குகையின் வாசலோரத்தில் உட்காரும்படி செய்து, காசிபாயைப் பார்த்து, "எனது ஆசைக்கிளியே, இங்குவா, இப்படி உட்கார். இப்பொழுது நான் செய்யப்போகும் போர்த்திறத்தைக் கண்டு நீயல்லவோ மெச்சவேண்டும். எமனும் இங்குவர நடுங்குவான். அப்படியிருக்க, எவனோ ஒருமடையன், எனது சமர்த்தை யறியாதவன் சிலரை இட்டுக்கொண்டு வருகிறான்போலும்!" என்றான்.

காசிபாய் அவனைநோக்கி "உன் ஆசையை எல்லாம் என்னிடம் வைத்திருக்கிறாயே. தப்பித்தவறியாவது ஒரு அம்பு பாய்ந்து நான் மரித்துவிடும்படியான இந்த இடத்தில் நீ என்னை வைக்கலாமா? நான் மரித்துவிடுவேனாயின் நீ ஜெயித்துத்தான் பயன் என்ன? இந்தக்குகையின் அதோ அந்தமூலையில் எங்களை உட்காரும்படி செய்தால் நாங்கள் யுத்தத்தையும் நன்றாகப் பார்க்கலாம், எங்களுக்கு எவ்வித பயமுமில்லை" என்றாள். அவனும் உண்மைதான், உண்மைதான் என்று அவர்களை பந்தோபஸ்தான இடத்தில் உட்கார வைத்துவிட்டுத் திரும்பவும், சிவாஜியினிடமிருந்து ஒரு தூதன் அவன்முன் தோன்றி "நான் சக்கரேஸ்வரனாகிய சிவாஜிமகாராஜரிட மிருந்து வந்திருக்கிறேன். அவர் தமது நண்பராகிய தத்தாஜியையும் அவருடைய பெண்ணையும் நீங்கள் சிறைபிடித்து வைத்திருக்கிறதாகக் கேள்விப்பட்டு மிகுந்த கோபத்துடன், இதோ எதிரே பாளையமடித்து இறங்கி இருக்கிறார். ஆகையால் நீயும் உன்னைச்சேர்ந்தவர்களும் இப்

பொழுது தத்தாஜியையும் அவருடைய பெண்ணையும் விடுதலே செய்துவிட்டு மரியாதையாக இந்தக்குகைகளையும்விட்டு நீங்கிவிட வேண்டுமென்றும், இஷ்டமிருந்தால் தமது சைந்நியத்தில் சேர்ந்துகொள்ளலாமென்றும் உத்தாவு அனுப்பி இருக்கிருர்'' என்று உரைக்கவே, வெங்கடவாகன் ''அவ்வுத்தாவுக்கு நான் கீழ்ப்படியாவிட்டாலோ'' என்ருன். வந்த தூதன் ''இவ்வுத்தாவுக்கு நீ கீழ்ப்படியாவிட்டால், நீங்கள் இங்கிருந்து பலவந்தமாகத் துரத்தப்படுவீர்கள். உங்கள் எல்லோருக்கும் கூட்டத்தோடு எமலோகம் செல்ல ஆசையிருந்தால்; இவ்வுத்தாவுக்குக் கீழ்ப்படியவேண்டாம்'' என்று கூறவே, வெங்கடவாகன் மீசையை முறுக்கிக்கொண்டு ''நல்லது, இப்பொழுது நான் கூறப்போகும் மறுமொழியை நீ உனது எஜமானனிடம் சொல்லு. காசிபாய்க்கு நான் கணவனென்றும் அவளுடைய பிதாவே சம்மதித்துவிட்டாரென்றும் சொல்லு. என்னைப்போல் சிவாஜியும் ஒரு கொள்ளைக்காரனே யென்றும் அவனைவிட நான் பலம் மிகுந்தவனு? அல்லவா? என்பது அவன் என்சமீபத்தில் வந்துவிட்டால் தெரிந்துவிடுமென்றும் சொல்லு. காசிபாயும் அவளுடைய தகப்பனும் குகைவாசலின் நடுமத்தியில் உட்கார வைக்கப்பட்டிருக்கிருர்களென்றும் எங்களை எதிர்த்தால் அவர்கள் இறப்பது நிச்சயமென்றும் சொல்லு'' என்று மொழிந்துவிட்டு, ''நீ இவ்வளவு சிரமமெடுத்துக்கொண்டு இங்கு வந்ததற்கு வெகுமதி இதோ கொடுக்கிறேன், வாங்கிக்கொள்'' என்று அந்தத்தூதனுடைய மண்டையில் தனதுகத்திப்பிடியினுல் ஓங்கி ஒரு அடி அடித்து அவனை ஓடிவிடும்படி சொன்ஞன். அவன் அப்படியே குதிரைமீதேறி வேகமாக ஓட, கொள்ளைக்காரர்களிற் சிலர் அவன்மீது கல்மாரி பொழிந்தார்கள்.

# அத்தியாயம்—12.

## காசி விடுதலை யடைந்தாள்

தூதன் சென்று சிவாஜியினிடத்தில் வெங்கடவாகன் சொன்னதை யெல்லாம் சொல்லவே, சிவாஜி நெட்டாஜியையும் இன்னும் இரண்டு படைத்தலைவர்களையும் கலந்து இப்பொழுது என்னசெய்வ தென்பதைப்பற்றி யோசனை செய்தார். தத்தாஜியையும் காசிபாயையும் அபாயத்திற் குட்படுத்துவதாக வெங்கடவர்கன் சொல்லியனுப்பியது சிவாஜியின் மனத்தைக் கலைத்துவிட்டது. இப்பொழுது தத்தாஜிக்கும் அவருடைய புத்திரிக்கும் எவ்வித அபாயமும் நேரிடாமல், கொள்ளைக்காரர்களைக்கொன்று அவர்களுடைய வாசஸ்தானத்தைப் பிடிக்கவேண்டும். ஆனால் எப்படியாவதுகொள்ளைக்காரர்களின்கொட்டத்தை அடக்கித்தீரவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. சிவாஜியினுடைய படைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பிரிவு குகையின் வாசலுக்கு நேரே எதிர்ப்பதென்றும் மற்ற இரண்டு பிரிவுகளும் குகையின் வலது பக்கமும் இடது பக்கமுமாக நெடுந்தூரம் பின்வாங்கி மறுபடியும் சந்தடி செய்யாமல் முன் சென்று திடீரென்று குகையின் வாசலின் இருபுறங்களிலும் தாக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. குகையின் வாசலில் எதிர்க்கும் படை சண்டையாரம்பித்ததுபோலக் காட்டவேண்டுமென்றும் அப்படிச் செய்துகொள்ளைக்காரர்களின்கவனத்தை இழுத்துவைத்துக கொள்ளவேண்டுமென்றும் திடீரென்று இருபுறமும் தாக்கப்படும் பொழுது, அவர்கள் குழப்ப மடைந்து திகிலுண்

டாகிச் சிதறி விடுவார்களென்றும் யோசனை செய்யப் பட்டது.

தூதன் வந்து அரைமணி நேரம் வரையில் குகையை நேரே எதிர்ப்பதுபோல சிவாஜி தமது படைகளை நடத்திக் காட்டினார். கொள்ளைக்காரர்கள் அனைவரும் குகையின் வாசலில் ஒழுங்காக நின்று தயாராக இருந்தார்கள். இருபுறமும் நெடுந்தூரம் சென்று படைகள் மெல்ல மெல்ல நகர்ந்து குகையண்டை வந்து சேர்ந்துவிட்டன. பின்னர் யுத்தம் ஆரம்பிப்பதற்கு அடையாளமாகக் கொடி போடப்பட்டது. குகையை எதிர்க்கும்படி சிவாஜி தமது படைகளுக்கு உத்தரவிட்டுவிட்டார். படை வீரர்கள் குரங்குகளைப்போல தொத்தித் தொத்தி அக்குன்றின் மீது ஏறினார்கள். குகை வாசலின் இருபுறமும் இரண்டு படைகள் தாக்கின. நெட்டாஜி வலது புறம் சென்ற படைக்குத் தலைமை வகித்து மிகுந்த ஆங்காரத்துடன் முன் சென்று, முன்னின்ற மதில் சுவரை உடைத்து, திடுக்கென்று எதிரிகளின் நடுவே குதித்தான். கொள்ளைக்காரர்கள் பிரமித்துவிட்டார்கள். நெட்டாஜி தனது கையிலிருந்த கோடரியை நாலா புறங்களிலும் வீசிக்கொண்டு, எதிர்த்தோரெல்லாம் எமனுலகுக் கேகும்படி செய்து "சிவாஜியினுடைய கோபத்திற்கும் தண்டனைக்கும் பாத்திரமாகாமல் எல்லாரும் பணிந்து விடுங்கள், பணிந்து விடுங்கள். இல்லையேல், உங்களை இக்கோடரிக்குப் பணியச் செய்வேன்" என்று ஆர்ப்பரித்து அட்டகாசம் செய்தான். கோபாலனும் வேறு சிலரும் "ஐயோ, அழிந்தோம், அழிந்தோம்" என்று கத்திக்கொண்டே, அக்குகையின் ஒரு மூலையில்போய் ஒளிந்துகொண்டார்கள். காசிபாயும் திடுக்கிட்டு எழுந்திருந்து, தனது தகப்பனாரைக் கூட்டிக்கொண்டு, அதே மூலைக்குச் சென்றாள்.

கொள்ளைக்காரர்களின் தலைவன் குகை வாசலின் வலது பக்கத்தில் நின்றுகொண்டு, காசிபாய் தனது சாமர்த்தியத்தைப் பார்க்கும்படியாக தனது பட்டாக் கத்தியை வலம் இடமாக வீசி, சிவாஜியினுடைய படை வீரர்களில் இருவரைக் கொன்றுவிட்டான். இதற்குள்ளாக அவனுக்குப் பின்புறம் ஒரு கூச்சல் கிளம்பிற்று. அது என்னவென்று திரும்பிப் பார்த்தான். நெட்டாஜி மதிலை யுடைத்து உள்ளே குதித்துவிட்டதையும் குகையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதையும் வெங்கடவாகன் கண்டு தன் பட்டாக் கத்தியை வீசிக்கொண்டு நெட்டாஜியின்மேல் பாய்ந்தான். இப்பொழுது நெட்டாஜியின் பாடு திண்டாட்ட மாய்விட்டது. நெட்டாஜியைச் சேர்ந்த படைவீரர்கள் எவரும் இன்னும் உள்ளே நுழையவில்லை. நெட்டாஜி தனியே அகப்பட்டுக் கொண்டான். அவனுடைய கோடரி வீச்சைக் கண்டு ஓடியகொள்ளைக்காரர்கள் இப்பொழுது நெட்டாஜியை வந்து சூழ்ந்துகொண்டார்கள். வெங்கடவாகனும் எதிர்த்து நின்றான். ஆயினும் நெட்டாஜி தனது கோடரியைத் தலைக்கு மேலும் கீழுமாகப் பலவிதமாகச் சுழற்றி எதிர்த்தவர்களெல்லாரும் தூரவே நிற்கும்படி செய்தான். வெங்கடவாகன் தனது கையிலிருந்த பட்டாக் கத்தியை ஓங்கி நெட்டாஜியின் தலையை நோக்கி யடிக்கவே, நெட்டாஜி தனது கோடரியினால் அவ்வடியைத் தடுத்தான். ஆனால் நெட்டாஜி கையிலிருந்த கோடரியின் பிடி படாரென்று ஒடிந்து, பிடியும் கோடரியும் கீழே விழுந்துவிட்டன. உறையிலிருந்த கத்தியை உருவுதற்குக்கூட நெட்டாஜிக்கு நேரம் இல்லை. கீழே விழுந்த கோடரியை மறுபடியும் கையிலெடுத்துக்கொண்டு, தன்னாலானமட்டும் சமாளித்துப் பார்த்தான். ஆனாலும், கொள்ளைக்காரர்கள் அவனைக் கால்களிலும் கைகளிலும் அடித்து, அநேக காயங்களை யுண்டாக்கிவிட்டார்கள்.

நல்ல வேளையாய் வெங்கடவாகனுடைய பட்டாக் கத்தியும் கோடரி யடியில் முறிந்துவிட்டது. இல்லையேல், நெட்டாஜி அன்று உயிர் தப்பி யிருக்கமாட்டான். வெங்கடவாகன் இப்பொழுது வேறொரு கத்தியை உருவிக்கொண்டு நெட்டாஜியின்மேல் பாய்ந்தான். நெட்டாஜியோ மற்றவர்களுக்கே ஈடுகொடுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்க, இப்பொழுது வெங்கடவாகனும் சேர்ந்து கொண்டால் அவன் என்னசெய்வான்? ஆனால் கொள்ளைக்காரர்கள் அனைவரும் சிறிதும் யோசனையின்றி நெட்டாஜியைச் சூழ்ந்து கொள்ளவே, சிவாஜியின் படைகள் எதிர்ப்பாரின்மையால்மதிலேறிக் குதித்துவிட்டன. நெட்டாஜியின் கழுத்துக்கு நேரே வெங்கடவாகன் தனது கத்தியை வீசினான். நெட்டாஜி திடீரென்று கீழேகுனிந்து அவ்வீச்சுத் தன்மீது விழாதபடி தப்பித்துக்கொண்டான். இச்சமயத்திலே சிவாஜி தனது நீண்ட கத்தியை வெங்கடவாகனுடைய வலது விலாப் பக்கத்தில் ஊடுருவிச் செல்லும்படி குத்தவே, வெங்கடவாகன் கீழே விழுந்து இறந்தான். தலைவன் விழுந்துவிட்டதைக் கண்ட மற்றவர்கள், இனிமேல் சிவாஜியை எதிர்த்து நிற்பதில் பிரயோசன மில்லையென்று அறிந்துகொண்டு, ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சிவாஜியினிடத்தில் சரணமடைந்து விட்டார்கள்.

கொள்ளைக்காரர்களின் வாசஸ்தானமாகிய பாஜா குகை பிடிபட்டுவிட்டது. கொள்ளைக்காரர்கள் அனைவரும் சிவாஜியின் படையில் சேர்ந்து கொண்டார்கள். கொள்ளையடித்த சொத்துக்களை யெல்லாம் வெங்கடவாகன் பத்திரமாகப் பூட்டி வைத்திருந்த ஒரு இரும்புப் பெட்டி அங்கிருந்தது. அதைத் திறந்து பார்க்கவே, அதில் ஏராளமான தங்கமும் வெள்ளியும் ரத்தினங்களும் இருந்தன. மார்க்கவனம் என்னும் கணபதி க்ஷேத்திரத்தை வெங்கடவாகன் கொள்ளை

யடித்த பொழுது கிடைத்த தங்கமெல்லாம் இங்கிருந்தது. ஆதலால், அத்தங்கத்தை யெல்லாம் கணபதி உபாசகராகிய கிழவருக்குக் கொடுத்துவிடும்படி சிவாஜி உத்தரவு செய்தார். இன்னும் இந்தச் சொத்திலிருந்து சிவாஜி தனது படையாட்களுக்குப் பாக்கியாக நின்றிருந்த சம்பளத்தை யெல்லாம் கொடுத்ததுமன்றி, கொள்ளைக்காரர்களா யிருந்து இப்பொழுது தம்மிடத்தில் வந்து சேர்ந்தவர்களுக்கும் வெகுமதிகள் கொடுத்தார்; ராமனைத் தப்பி யோடவிட்ட கோபாலனுக்குப் பிரத்தியேகமாக வெகுமதிகள் பல கொடுத்தார். பின்னர் சிவாஜி தம்முடன் புதிதாக வந்து சேர்ந்திருக்கும் கொள்ளையர்களை நோக்கி "நீங்கள் எக்காரியம் செய்யினும், உங்கள் ஸ்வய நன்மையை மறந்துவிடுங்கள். தேசத்தின் முன்னேற்றமே உங்களுடைய லட்சியமாயிருக்க வேண்டும். ஒருவரை யொருவர் உள்ளன்புடன் நேசியுங்கள். ஏழைகள், தாழ்ந்தவர்கள், துன்புறுத்தப்படுவோர் இவர்களை ரட்சிப்பதே உங்களுடைய தர்மமா யிருக்கட்டும்" என்று பலவாறாக புத்தி போதித்தார்.

சிறையினின்றும் க்ஷேமமாக விடுதலை யடைந்ததைப் பற்றி தத்தாஜிக்கும் காசிபாய்க்கும் உண்டான சந்தோஷத்திற்கு ஒரு அளவும் கூறமுடியுமோ? அவர்கள் சிவாஜியையும் நெட்டாஜியையும் புகழ்ந்து மனமார நன்றி செலுத்தினார்கள். சிவாஜி தத்தாஜியை ஒரு குதிரையின்மேல் ஏற்றி வைத்து, காசிபாயை ஒரு பல்லக்கிலேற்றி இருவரையும் லோக கட்டத்துக்கு மிகுந்த மரியாதையுடன் கொண்டு சென்றார். லோக கட்டத்துக்கும் விஷ்ணு புரத்துக்கும் நடுவில் உள்ள மேடு வரையில் ஒரே வழியாகச் சென்று, பின்னர் மேற்குப் பக்கமாகத் திரும்பி ஹநுமந்த வாசலை யடைந்து லோக கட்டம் சென்று அடைந்தார்கள். காசிபாயும் அவளுடைய பிதாவும் சௌகரியமாக விருப்பதற்கு

வேண்டிய விடுதிகளை சிவாஜி தயார்பண்ணிக் கொடுத்தார். அன்று மாலையில் சிவாஜி நெட்டாஜியுடன் கால நிலைமையைப் பற்றியும் செய்யவேண்டிய காரியங்களைப் பற்றியும் நெடுநேரம் சம்பாஷித்துக் கொண்டு யோசனை செய்தார். படைகளுக்கு ஊண், உடை, ஆயுதங்கள் முதலியன உதவுவதற்குப் போதுமான பணமில்லையே என்ற இந்த ஒரு விசாரம்தான் சிவாஜியின் மனத்தை இரவும் பகலும் வருத்திக்கொண்டிருந்தது. சில சமயங்களில் தேச முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டுமென்ற இந்த எண்ணத்தை விட்டுவிட்டு, சகலமும் துறந்த சந்நியாசியாய் விடலாமா? என்றுகூட அவர் நினைத்ததுண்டு.

"நெட்டாஜி, மாவுலி ஜாதியைச் சேர்ந்த நாற்பதினாயிரம் பேர் இன்று, இந்த நிமிஷத்தில்,எனக்காக, தங்களுடைய தேசத்துக்காகக் கத்தியை உருவி நிற்கத் தயாரா யிருக்கிறார்கள். அவர்களுக்குக் கத்தி வாங்கிக் கொடுப்பதற்குக்கூட என்னிடம் பணமில்லையே. எதிரிகளின் பீரங்கிகளின் முன்னும் துப்பாக்கிகளின் முன்னும் நமது தடியும் அரிவாளும் என்னசெய்ய முடியும்? தக்ஷிண தேசத்திலும் கொங்கண தேசத்திலும் உள்ள முக்கியமான கோட்டைகள் என் வசம் இருக்கின்றன வென்பது உண்மையேயாயினும் அக் கோட்டைகளெல்லாம் அழிந்துபோகின்றனவே. அவற்றைப் பலப்படுத்தலா மென்றால் கூலியாட்களுக்குக் கூலி கொடுப்பதற்குக்கூட என்னிடம் பணமில்லையே. ஆனால் இதுவரை பவானி மாதா என்னைக் கைவிட்டதில்லை. எனது புதிய தோழனாகிய உன்னைக் கூட்டிக்கொண்டு டோர்னாவுக்குச் செல்ல நினைக்கிறேன். அங்கு ஏதேனும் நமக்கு நன்மையுண்டாகலாம். இல்லாவிட்டால், சிவாஜி தேச முன்னேற்ற வேலையை என்னிலும் பெரிய—வேறு எவருக்காவது—ஒரு வேளை நெட்டாஜிக்கே, விட்டு

விட்டு, சந்நியாசியாய்ப் போய்விட்டானென்று நீ கேள்விப்படுவாய்'' என்று சிவாஜி சொல்ல, நெட்டாஜி "தாங்கள் தான் தலைமைவகிக்க வேண்டும். நான் அவசியம் நேரிட்ட காலத்து மரணத்திற்கும் அஞ்சாது தங்களைப் பின்பற்றி நடப்பவனே'' என்று கூறிவிட்டு, தனது குருவாகிய மதேரான் மலைச் சந்நியாசி தன்னிடம் கூறிய தீர்க்க தரிசனங்களையெல்லாம் உரைத்தான்.

சிவாஜி "இப்படி என்னுடைய தேச கைங்கரியத்திலே எனக்கு வலதுகை போன்று இருக்கப்போகிற உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்'' எனலும் நெட்டாஜி "நான் எனது கடமையைச் சரிவரச் செய்தேனென்றுள்ள ஆறுதலையும் தங்களுடைய நல்லெண்ணத்தையும் தவிர வேறு கைம்மாறு வேண்டேன்; ஆயினும் தாங்கள் எனக்காக ஒரு உபகாரம் செய்யவேண்டும். எங்களுடைய குழந்தைப் பருவத்திலேயே, தத்தாஜியின் மகளாகிய காசிபாய் எனக்கு தேச கைங்கரிய எண்ணத்தையே எப்பொழுதும் ஊட்டி இப்பொழுது நான் இந்த நிலைமையிலிருப்பதற்கும் காரணமாயிருக்கின்றாள். ஆதியிலிருந்தே அவள்மீது எனக்கு அளவற்ற காதல் ஏற்பட்டிருக்கின்றது. ஈஸ்வர கிருபையால் நான் அவளுக்கு மணவாளனாகும் பட்சத்தில் எனது ஹிருதயம் பூரிப்படைந்து நான் இன்னும் அதிக ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் எனது தேசத்திற்கு ஊழியம் செய்ய வல்லவனாவேன்'' என்று சொன்னான். இவ்வார்த்தைகளைக் கேட்ட சிவாஜி தத்தாஜியினிடத்தில் கூறி எப்படியாவது காசிபாயை நெட்டாஜிக்கு விவாகம் செய்விப்பதாக வாக்குத் தத்தம் செய்துவிட்டு, தத்தாஜியினிடத்தில் சென்று சமாச்சாரத்தைத் தெரிவிக்கவே, முதலில் தத்தாஜி கொஞ்சம் முறுமுறுத்தார்; ஏனென்றால் தத்தாஜி தனவந்தர்; நெட்டாஜியோ, கௌரவமுள்ள குடும்

பத்தில் பிறந்தவளாயினும் மிகவும் ஏழை. ஆகையால் சரி சமானமான சம்பந்தமல்லவே யென்று தத்தாஜி கொஞ்சம் விழித்தான். பின்னர் சிவாஜியைத் திருப்திப் படுத்துவதற் காகவும் நெட்டாஜி தங்களை விடுவிக்கப் பட்ட கஷ்டங்களை நினைத்தும் குழந்தைப் பருவத்திலிருந்தே விளையாட்டுத் தோழனா யிருந்த நெட்டாஜியை விவாகம் செய்து கொள்வ தினால் காசிபாய்க்கு க்ஷேமமே யொழிய யாதொரு குறை யும் நேரிடாதென்று கருதியும் தத்தாஜி கடைசியாக ஒரு வாறு சம்மதித்தான். இச்சங்கதியைக் கேள்விப்பட்ட காசி பாயும் நெட்டாஜியும் உள்ளம் பூரித்து உவகை பொங்கி களிக்கடலில் ஆழ்ந்தார்கள். ஒருவரை யொருவர் சந்தித் தார்கள். நெட்டாஜி அவளை கட்டிக்கொண்டு, எனது ஆசைக் கிளியே! அருமை மணியே! ஐயோ! நீ அப்படுபாவிகள் கையில் அகப்பட்டிருந்தபொழுது என் மனம் பட்ட பாட் டை எவர் உரைக்கவல்லார்? என்னுடைய உயிரும் மனமும் உன்னிடத்திலேயே இருந்தன. எனது கட்டிக்கரும்பே! காமக் களஞ்சியமே! இனிமேல் நீ என்னுடையவளே, நான் உன்னுடையவனே; நானும் நீயும் ஒன்றே" என்று கொஞ் சிக்கொண்டு அவளைச் சேர்த்து அணைத்து ஒரு முத்தம் கொடுத்தான்.

காசிபாய் சற்றுநேரம் தலை குனிந்து மௌனமா யிருந்துவிட்டு, பின்னர் மெல்ல ஒரு புன்சிரிப்பு சிரித்துக் கொண்டே நெட்டாஜியை நோக்கி "ஆ! தௌரிநதிக் கரை யிலே நான் சொன்ன சொல் உனக்கு நினைப்பிருக்கிறதா? என்னுடைய குழந்தைச் சொல் தவறாது, நீ உன் வாழ் நாட்களைத் தேச கைங்கரியத்திற் கென்று விட்டுவிட்டாய். ஆதலால் உன்னைத் தவிர, வேறெவர் எனக்குகந்த கணவனாக முடியும்? அந்தச் சண்டாளர்கள் வசம் நாங்கள் அகப்பட்டுக் கொண்ட காலத்திலே, எப்படியாவது நீ என்னை விடுவிப்ப

தற்கு எங்கிருந்தாலும் வந்துசேர்வா யென்று நான் நினைத்துக்கொண்டு தான் இருந்தேன். அப்பப்பா! நீ குகையின் வெளி மதிலை யுடைத்து உள்ளே குதித்து, கையில் கோடரி யுடன் நீ நின்ற நிலையையும் பார்த்த பார்வையையும் கொள்ளைக்காரர்கள் உயிரைக் கொள்ளைகொண்ட கூத்தையும், ஆ! நினைக்கும் பொழுதே, எனக்குப் பயமா யிருக்கின்றது. நீ அப்பொழுது சர்வ சம்ஹார ருத்திரனைப்போலல்லவோ தோன்றினாய். அந்தத் தடியன் வெங்கடவாகன் பட்டாக் கத்தியை உருவிக்கொண்டு உன்மீது பாய்ந்த பொழுது, நான் அப்படியே மூர்ச்சையாய் விட்டேனே. திடீரென்று எழுந்து ஓடிவந்து அவனுக்கும் உனக்கும் இடையில் விழுந்து விடலாமா? வென்றுகூட நினைத்தேன். ஆனால் என்னைப் போன்ற துர்ப்பலையால் என்னமுடியும்? நீ ஜயிப்பா யென்று எனக்கு முன்னமேயே தெரியும் பவானி மாதா உன்னைக் கைவிடாளென்று எனக்கு முன்னமேயே தெரியும்'' என்றாள்.

இவ்விதமாக இவர்கள் லோக கட்டம் கோட்டை மதில்களை யெல்லாம் சுற்றிக்கொண்டு, குன்றின் மீதேறி நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தார்கள். அஸ்தமான சமயம். தட்சிண தேசத்துப் பரப்பு நிலமெல்லாம் தெளிவாகத் தெரிந்தது; ஆங்காங்குள்ள பல மலைகள் தென்பட்டன. ஒரு பக்கத்திலே இந்திராயணி நதியானது சலசல என்ற சத்தத்துடன் அழகாக ஓடிக்கொண் டிருக்கிறது; ஒரு பக்கத்திலே விஷ்ணுபுரம் கோட்டையானது ஒரு குன்றின் மேலே கம்பீரமாகக் காணப்படுகிறது. இருவரும் சவுக்கம் என்ற தங்களுடைய சொந்த கிராமத்தை நினைத்துக்கொண்டார்கள். ஆனால் அந்த கிராமம் மாத்திரம் அவர்களுடைய பார்வைக்கு அகப்படவில்லை. மேற்குத் தொடர்ச்சி மலைகள் ஆகாயத்தை அளாவினபோலக் கிளம்பி அந்த கிரா

மத்தை அவர்களுக்குத் தெரியவொட்டாமல் மறைத்துவிட்டன. ஆனால் அவ்விருவருடைய மனமும் அம்மலைகளையும் கடந்து சவுக்கத்திற்குச் சென்று அவர்களுடைய குழந்தைப் பருவத்துச் செயல்களை யெல்லாம் நினைப்பூட்டிவிட்டது. அவ்விருவரும் ஆநந்த போதத்துடன் அகமகிழ்ந்திருக்கும் அவ்வேளையில், அவர்களுக்குத் திடீரென்று துக்கமுண்டாய் விட்டது. நினைத்துக் கொண்டார்கள் நெட்டாஜியின் சகோதரியாகிய கங்காபாயை. அவளுடைய கதி என்னவா யிருக்கலாம்? இவ்விருவரும் இன்புற்று இளைப்பாறும் இவ்வேளையிலே, கண்டு களிப்பதற்கு அவளில்லையே.

---

## அத்தியாயம்—13.

### பவானி தரிசனம்

ஆனால் நெட்டாஜி காசிபாயுடன் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருப்பதற்குச் சாவகாசமில்லை. பவானி தேவியின் ஆக்ஞைப்பிரகாரம் அவன் மறுநாள் அதிகாலையிலேயே சிவாஜியுடன் டோர்ண கோட்டைக்குச் செல்ல வேண்டி வந்துவிட்டது. சிவாஜியினிடத்திலே அப்பொழுது போதுமான சைந்நியங்களில்லை. ராஜமாச்சி கோட்டையை பிஜப்பூர்ப் படைகளின் முற்றுகையினின்றும் காப்பாற்றுவதற்கு எவ்வித முயற்சியும் செய்தற்கேதுவில்லாமற் போயிற்று. சிவாஜியும் நெட்டாஜியும் விடிய நான்கு நாழிகைக்கு முன்னதாகவே புறப்பட்டு லோககட்டம் கோட்டையை விட்டு நீங்கி வெளியேவந்தார்கள். அயூப்கானுடைய அரபிக் குதிரை நெட்டாஜியைச் சுமந்துசென்றது. சிவாஜி தக்ஷிண தேசத்துக் குதிரையொன்றில் ஏறிச்சென்றார். பத்துமைல்

தூரம் சென்றவுடனே கௌரிகட்டம் என்ற ஒரு கோட்டை தென்பட்டது. இது சிவாஜி புதிதாகப்பிடித்த கோட்டைகளுள் ஒன்று. இருவரும் அங்கு சிறிதுநேரம் தங்கி, அந்நகர தேவதையாகிய கௌரி தேவிக்கு அபிஷேக அர்ச்சனைகள் செய்து, பூஜை முதலியன முடித்து, அங்கிருந்து புறப்பட்டு நல்ல நடுவெய்யிலில் மூல்ஷி என்ற கிராமம் போய்ச்சேர்ந்தார்கள். இங்கு இவர்களின் குதிரைகளும் தாங்களும் இளைப்பாறிவிட்டு மறுபடியும் புறப்பட்டார்கள். இன்னும் சரிபாதி தூரம் — இருபது மைலுக்குக் குறையாது — போனால் டோர்ணுகோட்டை போய்ச்சேரலாம். வேகம்வேகமாகக் குதிரைகளைத் தூரத்திக்கொண்டு டோர்ணுகோட்டை வந்துசேர்ந்தார்கள். அக்கோட்டை ஒரு செங்குத்தான ஒரு மலையின் மேல் இருக்கிறது. ஆதலால் இருவரும் குதிரைகளினின்றும் கீழே இறங்கி, செங்குத்தான அம்மலையில் செதுக்கப்பட்டிருந்த படிகளின் வழியாக மெல்லமெல்ல ஏறிச்சென்றார்கள். அக்கோட்டையிலிருந்த ஜனங்கள் சிவாஜி வந்துவிட்டாரென்று அறிந்தவுடனே கூட்டம் கூட்டமாகக் கூடி "ஜயவிஜயீபவ, ஸிவாஜி மகாராஜாவுக்கு ஜயமுண்டாகுக" என்று ஆரவாரித்து ஆநந்த கோஷம் செய்தார்கள்.

சிவாஜியும் நெட்டாஜியும் சிரம பரிகாரம் செய்துகொண்டு, தாங்கள் தங்கியிருந்த வீட்டின் தாழ்வாரத்தில் பேசிக்கொண்டிருக்கையில், ஒரு வேலைக்காரன் வந்து இரண்டு பேர் சிவாஜியைப் பார்க்கவந்து வெளியே காத்துக்கொண்டிருப்பதாகக் கூறினான். உடனே சிவாஜி அவர்களை ஒவ்வொருவராக உள்ளே விடும்படி உத்தரவு செய்ய, முதலில் ஒருவன் வந்து நின்றான். இவன் கோட்டை கொத்தளங்களையெல்லாம் பழுது பார்க்கின்ற கூலியாட்களின் தலைவன். அவன் உள்ளே நுழைந்தவுடன் சிவாஜியை நோக்கி "ராம், ராம், சிவாஜி மகாராஜ், என்னுடைய வேலை

யாட்களுக்கு நெடுநாட்களாகச் சம்பளம் கொடுக்கப்பட வில்லை; குடிக்கக் கஞ்சிகூடக் கிடையாமல் தவிக்கிறார்கள். இவர்கள் எவ்வாறு பாறைகளை வெட்டி மதில்களைக் கட்டிக் கோட்டையைப் பலப்படுத்த முடியும்? இனிமேல் கூலி கொடுக்காவிட்டால் அவர்கள் வேலை செய்வார்கள் என்று நம்பமுடியாது. அவர்கள் வேலையை அப்படி யப்படியே போட்டுவிட்டு உடனுக்குடனே கூலி கிடைக்கும் இடம் நோக்கிச் சென்றுவிடுவார்கள் என்று தோன்றுகிறது. ராஜாதிராஜ, ராஜபூஜித மண்டலேஸ்வரா! நானோ களைத்து விழுந்து என் கைகால்கள் ஒடுங்கும் வரையில் தங்களுக்காக ஊழியம் செய்யத் தயாராயிருக்கிறேன். பெண்டு பிள்ளை களையும் திண்டாட விட்டுவிட்டு, தாங்களும் பட்டினி கிடந்து கொண்டு இக்கூலியாட்கள் வேலைசெய்வார்களா?'' என்று கூறித் தலைவணங்கி நின்றான்.

சிவாஜி இதைக்கேட்டு நெட்டாஜியைப் பார்த்து மெது வாக "பார்த்தாயா? பெரும் பெரும் காரியங்கள் நடைபெறு தற்குப் பாழாய்ப்போன பணமல்லவா அவசியமாகவேண்டி யிருக்கிறது'' என்றுகூறிப் பின்னர் வேலையாட்களின் தலைவ னிடத்தில் "நண்ப, என்னுடைய கஜானா காலியாயிருக்கி றது. இன்னது செய்வதென்று எனக்கே தெரியவில்லை. பவானிதேவிதான் துணைபுரியவேண்டும்'' என்றார்.

அதற்கவன் "சக்கரேஸ்வரா! ஒரு பதினாயிரம் ரூபா இப்பொழுது தாங்கள் கொடுக்கமுடியுமானால், இந்த டோர்னா கோட்டையைப் புதுப்பித்துப் பலமாகக்கட்டி, பீஜப்பூரிலிருந்தாகட்டும், டில்லியிலிருந்தாகட்டும், எத்தனை ஆயிரம் படைகள் வந்தாலும் எதிர்க்கமுடியாதபடி செய்து விடுவேன்'' என்று சொல்லிவிட்டு அவன் தரை வரையில் தாழ்ந்து "ராம், ராம்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

உடனே இன்னொருவன் உள்ளேவந்தான். நெட்டாஜிக்கு இவனைப் பார்க்கவே ஆச்சரியமுண்டாயிற்று. அவன் இதற்குமுன் இம்மாதிரி மனிதனைப் பார்த்ததேயில்லை. அவனுடைய நிறம் வெள்ளை வெளேரென்று இருந்தது. அவன் கால்சட்டைகள் தரித்திருந்தான். ஆனால் இக் கால்சட்டை மகம்மதியர்கள் தரிக்கும் கால்சட்டைகள் போன்றிருக்கவில்லை. அவனுடைய சட்டையும் நூதனமாகத் தைக்கப்பட்டதாக விருந்தது. இன்னும் விசேஷமென்னவென்றால், அவன் சிவாஜியினெதிரே பாதரட்சைகளை யணிந்துகொண்டும் மொட்டைத் தலையுடனும் வந்துநின்றான். இவன் யார்? ஐரோப்பாவிலிருந்து அவ்விடத்திய கைத்தொழிற் சாக்குக்களைக் கப்பலிலேற்றி ஆயிரக்கணக்கான மைல்தூரம் கடலைக்கடந்து திரவியம் சம்பாதிப்பதற்கு இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர்களுள் ஒருவன். இவன் போர்த்துக்கல் தேசத்தைச் சேர்ந்தவன். ஒரு பெரிய வியாபாரி. இவனுக்கு மகாராஷ்டிரபாஷையுந் தெரியாது. ஒரு துவிபாஷியின் உதவியைக்கொண்டு இவன் அங்குவந்த காரியமென்னவென்று சிவாஜி விசாரிக்கலானார்.

"நான் ஒரு போர்த்துக்கேசிய வியாபாரி. என்னுடைய கப்பல்களில் எவ்வளவோ சரக்குகள் ஏற்றிக்கொண்டு வந்தேன். அவற்றுடன் ஏராளமான ஆயுதங்களும் கொண்டுவந்திருக்கிறேன். டோலிடோ நகரத்தில் எஃகினால் செய்யப்பட்ட பதினாயிரம் வாள்கள், ஐயாயிரம் இரும்புக் கேடயங்கள், ஓராயிரந் துப்பாக்கிகள், பித்தளையினால் செய்யப்பெற்ற ஒரு டஜன் பீரங்கிகள், ஏராளமான யுத்த தளவாடங்கள் இவையெல்லாம் நான் கொண்டுவந்திருக்கிறேன். மொகலாய சக்கரவர்த்திக்காவது பீஜப்பூர் அரசனுக்காவது விற்றுவிடலாமென்ற எண்ணத்துடன் இவற்றையெல்லாம் தாஞ்

என்ற எங்கள் கோட்டையில் எடுத்து வைத்திருக்கிறேன். இந்த நோக்கத்துடன் ஜுன்னர் கோட்டையிலுள்ள மொகலாய சைந்நியாதிபதியையும் கலியாண நகரிலுள்ள பீஜப்பூர் மாகாணபதியையும் பார்த்துப் பேசினேன். ஆனால் இன்னும் ஒன்றும் முடிவு செய்யவில்லை. இப்பொழுது நான் ஊருக்கு ஊர் யாத்திரை செய்தேன்; தங்களுடைய கீர்த்தி எங்கும் வியாபித்திருக்கின்றது. பிராம்மணர் முதல் பறையர் ஈருகவுள்ள சகல ஜாதியாரும் உம்மையேபுகழ்கிறார்கள். ஆயினும் தங்களுடைய படை வீரர்களுக்கு ஆயுதங்கள் இல்லை. அஞ்சா நெஞ்சம் படைத்த அசகாய சூரர்களாயினும் ஆயுதங்களில்லாவிட்டால், அவர்களால் என்ன செய்ய முடியும்? ஆகையால்தான் நான் தங்களிடத்திற்கு வந்தேன். நான் வந்தது தங்களுடைய அதிர்ஷ்டமே. காரியம் ஜயம்பெறுதற்குக் கருவிகள் வேண்டும்; கருவிகள் இதோ தாணு கோட்டையில் கிடக்கின்றன. தாங்கள் அவற்றை வாங்கிக்கொள்ள முடியுமா?" என்று அவன் கேட்டான்.

சிவாஜிக்கு இவ்வாயுதங்கள் பவானி மாதா அனுப்பியதுபோலத் தோன்றின; ஆயினும் விலைகொடுத்து வாங்குவதற்குக் கையில் பணமில்லையே. சிவாஜி தமது வறுமையைக் காட்டிக்கொள்ளவில்லை. அவை மொத்தம் என்ன விலையாகும்? என்று சிவாஜி அந்த வியாபாரியைக் கேட்டார். வியாபாரி ஒன்றரை லட்சம் ரூபா கொடுத்தால் அவற்றையெல்லாம் கொடுத்துவிடுவதாகக் கூறினான். சிவாஜி தாம் யோசித்து மறுநாள் பதில் சொல்வதாகக் கூறி வியாபாரியை யனுப்பிவிட்டு, தாமே யோசனை செய்துகொண்டு சிறிதுநேரம் அவ்வறையில் அங்கும் இங்குமாக உலாவினார். "நெட்டாஜி! இவ்வைரோப்பிய வியாபாரியின் யுத்த சாமான்கள் என்னைச் சேர்ந்துவிட வேண்டுமென்று

பவானி மாதா இச்சிக்கிருள் என்று தெரிகிறது. அவை என்னுடையவையாக இருக்கத்தான் வேண்டும். ஆனால் எப்படி அவை என்னுடையவை யாகிவிடும்? என்னுடைய கஜானுவோ காலியா யிருக்கிறது. என்னிடத்திலே பண மில்லை. பணமின்மை காரணமாக, கண்ணுக்கு முன் இருக்கும் ஆயுதங்களைக் கைவிட்டு விடுவதா? விலைகொடுத்து வாங்க முடியாவிட்டால், பலாத்காரமாயாவது, மோசம் செய்தாவது அவற்றை நான் கைப்பற்றிக் கொண்டுவிட வேண்டும். எனது அஞ்சா நெஞ்சம் படைத்த படைவீரர்களில் ஆயிரவர் உன்னுடைய தலைமையின்கீழ் இரவில் தோரு கோட்டையின் மதில்களிலேறி உள்ளே இறங்கிக்கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டுவிட வேண்டும். இதற்காகத் தான் பவானி தேவி என்னை உன்னுடன் டோர்ணு கோட்டைக்கு வரச்சொன்னுள் போலும்! நான் சொல்வது உனக்குச் சிறிது கடூரமாகத்தான் இருக்கும்; ஆனால் கடூரமான வியாதிகள் தீர கடூரமான ஔஷதங்கள் தானே சாப்பிட வேண்டும். எனக்கு இப்பொழுது பணமும் ஆயுதங்களும் உடனே கிடைக்காவிட்டால், ஸ்ரீ வர்த்தன கோட்டையானது எதிரிகளிடம் பிடிபட்டுவிடும்; நன்ருகப் பழுத்த பழங்கள் மரங்களினின்றும் தாமே கீழேவிழுந்து விடுவதுபோல, எனது கோட்டைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக எதிரிகளின் கைவசமாய்விடும்; இவ்வழகிய மகாராஷ்டிர தேசமானது சீரழிந்துவிடும்" என்று சிவாஜி தேசாபிமான உணர்ச்சி மேற்கொண்டு கூறிவிட்டு, தமது தேச நிலைமையை நினைத்துக்கொண்டு பச்சைக்குழந்தை அழுவதுபோல்த்தேம்பித் தேம்பி யழுதார்; சிறிதுநேரம் கழித்து, நெட்டாஜியை அத்தாழ்வாரத்திலேயே விட்டு விட்டு ஒன்றும் பேசாமல் பவானி தேவியின் க்ஷேத்திரம் நோக்கிப் பிரார்த்தனை செய்யும் பொருட்டு நடந்தார்.

சிவாஜி கோயிலிலே பிரார்த்தனை செய்துகொண்டிருந்த பொழுது, தாழ்வாரத்திலே நெட்டாஜி ஏதேதோ யோசித்துக்கொண்டிருந்தான்; நெடுந்தூரம் குதிரை சவாரி செய்து வந்ததினாலே, மிகவும் களைப்புற்றுத் தூங்கி வழிந்துகொண்டிருந்தான், தூக்க மயக்கத்திலே, சந்திரன் பால்போல் பிரகாசிப்பது அவனுக்குத்தெரிந்தது. சந்திரப் பிரகாசத்தினூடே பார்த்தான்; எதிரே யொரு சிறு கோவில் தோன்றிற்று. அக்கோவிலிலே ஒரு பெரிய அடர்ந்து படர்ந்த ஆல விருட்சம் தென்பட்டது. அவ்விருக்ஷத்தினடியிலே ஒரு புற்று இருந்தது. அப்புற்றுக்குள்ளிருந்து ஒரு கிருஷ்ண சர்ப்பம் வெளிவந்தது. அது கிருஷ்ண சர்ப்பம்தானா! நன்றாய் உற்றுப் பார்த்தான். அக்கிருஷ்ண சர்ப்பம் இருந்த இடத்தில் ஒரு திவ்ய ஜோதி தோன்றிற்று. திடீரென்று அங்கே ஒரு பெரிய பயங்கரமான உருவம் தோன்றிவிட்டது. பவானி தேவி பிரசன்ன மாகிவிட்டாள். நெட்டாஜியானவன் பிரமித்து இமை கொட்டாமல் அப்படியே பார்த்துக்கொண்டிருக்க, பவானிதேவி "மகாராஷ்டிர தேசத்தை முன்னேற்றத்தில் கொண்டுவருவதற்கு நீதான் தகுந்தவன். உனது தலைவன் எனது கோவிலில் என்னை வேண்டிப் பிரார்த்தனை பண்ணுகிறான். அவனுக்கு உதவி செய்யாமலிரேன். காளையதினம் எனக்குப் பலி கொடுத்துவிட்டு, இக்கோவிலின் கீழே தோண்டிப் பார்ப்பாயானால், உனக்கு வேண்டியது கிடைக்கும்" என்று சொல்லி மறைந்துவிட்டாள். நெட்டாஜி திடீரென்று விழித்துக்கொண்டு எழுந்திருந்து கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டு தான் கண்டது கனவோ நினைவோ என்று ஆச்சரியப்பட்டு, இதை சிவாஜியினிடம் சொல்வதற்காகப் புறப்பட்டான். அவன் கண்டது கனவாயினும், அக்காட்சியானது அவன் மனத்தை விட்டு அகலவே யில்லை.

இதற்குள்ளாக சிவாஜி கோவிலிலிருந்து திரும்பி வந்து, நெட்டாஜியை நோக்கி, "நெட்டாஜி, நான் பவானிதேவியைக் குறித்து மனம் உருகப் பிரார்த்தித்தேன். எனது பிரார்த்தனையைக் கேட்டாள். எனக்குத் தேறுதல் அளித்தாள். நெட்டாஜியாகிய நீ எனது துன்பத்தை நிவிர்த்தி செய்வாய் என்று கூறினாள். தாணு என்ற போர்த்துக்கேசியக் கோட்டையை நீ தாக்கி அங்குள்ள ஆயுதங்களைக் கொள்ளை கொண்டு அவற்றை எனது படைவீரர்களுக்கு அளிக்கவேண்டுமென்பது பவானிதேவியின் கருத்துப் போலும்! எனது படைவீரர்களில் பொறுக்கியெடுத்து யாதுவரினும் அஞ்சாத மனத்திண்மையையுடைய 500 பேர்களை இதோ உன்னுடன் அனுப்புகிறேன். நீ சென்றால் தான் காரியம் ஜயமாகும். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"ஈஸ்வராக்ஞையை ஏற்று நடப்பதுபோல, தங்களுடைய ஆக்ஞையைத் தலைமேற்கொண்டு நடக்க நான் தயாரா யிருக்கிறேன். ஆனால் தாங்கள் கோவிலில் பிரார்த்தனை செய்துகொண் டிருந்தபொழுது, நான் இங்கே கண்டதைச் சற்று கேளுங்கள்" என்று ஆரம்பித்து பவானி தேவி தனக்குத் தரிசனம் கொடுத்ததையும் மற்றும்விரிவாக எடுத்துரைத்தான்.

சிவாஜி கேட்டுவிட்டு "ஆ! எப்பொழுது விடியப்போகிறது? எனக்குப் பொறுமை யில்லையே; இன்றிரவு முழுதும் ஒருயுகம்போலத் தோன்றுகிறதே.நெட்டாஜி! உனக்குத் தூக்கம் வந்தால் நீ தூங்கு. எனக்கு உறக்கம் வரவே வராது" என்று சொன்னார்.

# அத்தியாயம்—14.

## புதையல் கிடைத்தது

மறுநாள் விடிந்தது. ஒரு எருமைக்கிடாவும் ஒரு ஆட்டுக்கிடாவும் பவானிதேவிக்குப் பலி கொடுக்கப்பட்டன. பின்னர் சிவாஜி கோட்டையைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரர்கள் பலரையும் நெட்டாஜியினால் ஆரம்பிக்கப்பட்ட கோவிலுக்கு இட்டுச்சென்று அவ்வால மரத்தடியில் நாலாபக்கங்களிலும் தோண்டும்படி உத்தரவு செய்தான். எல்லோரும் மண்வெட்டிகளை எடுத்துத் தோண்ட ஆரம்பித்தவுடனே, அவ்வாலமரத்தடியி லிருந்த ற்றிலிருந்து ஒரு கிருஷ்ணசர்ப்பமானது கிளம்பிச் சற்றும் மிராளாமல் சாவதானமாக வெளியே போய்விட்டது. இது ஒரு நற்சகுனமாகக் கருதப்பட்டது.

பின்னர் வேலைக்காரர்கள் அங்கு தோண்ட ஆரம்பித்தார்கள். நெடுநேரம் தோண்டிப்பார்த்தும் பயன்படவில்லை. எவ்வளவோ ஆழம் தோண்டிப்பார்த்தார்கள்; மண்ணைத் தவிர, ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு வேலைக்காரனுடைய மண்வெட்டியானது ஏதோ கடினமான வஸ்துவில் அடிபட்டது; வேலைக்காரர்களின் தலைவன் இனிமேல் தோண்டுவதில் பிரயோசனம் இல்லையென்றும் சொல்லிவிட்டான். மண்ணெல்லாம் கடந்து பாறை தட்டுப்பட்டு விட்டதென்றும் இனிமேல் வெடிமருந்தினால் பாறையை உடைத்துப் பார்க்கவேண்டுமே யொழிய, வேறு வழியில்லையென்றும் அவன் கூறிவிட்டான். இப்படி இவன் சொல்லிக்கொண் டிருக்கையிலேயே, ஒரு வேலைக்காரன் தன்னுடைய மண்வெட்டியில் கல் அல்ல,இரும்பு தட்டுப்படு

கிறதென்று கூவி, மேன்மேலும் அந்த இடத்தில், அடிக்க இரும்புச் சத்தம்தான் கேட்டது. அந்த இடத்திலே வேறு சில வேலைக்காரர்களும் வந்து இன்னும் அதிகமாகத் தோண்ட ஒரு பெரிய இரும்புவளையம் தென்பட்டது. உடனே அந்த இடத்தைச் சுற்றியுள்ள மண்ணை யெல்லாம் எடுத்துவிட அந்த வளையத்திலே ஒரு சங்கிலி மாட்டப்பட்டிருந்தது. இந்தச்சங்கிலியைப்பிடித்துச் சுமார் இருபது பலசாலிகள் மேலே இழுக்க, மெல்ல அந்த வளையத்துடன் ஒரு கல்மூடி கிளம்பிற்று. அதன் அடியிலே நான்கு புறமும் நன்றாகக் கட்டப்பெற்று ஒரு சிறிய அறைபோல ஒரு பெரிய பள்ளம் இருந்தது. அப்பள்ளத்தினுள் பன்னிரண்டு மண்பானைகள் இருந்தன. அவற்றை மேலே எடுக்க எத்தனித்தபொழுது, அவை மிகப் பாரமாயிருந்தன. இன்னும் அப்பள்ளத்தி னுள்ளிருந்து அழகிய சித்திரவேலை செய்யப் பெற்ற ஒரு வெள்ளிப்பெட்டி யொன்று எடுக்கப்பட்டது.

சிவாஜி அம் மண்பானைகளையும் வெள்ளிப்பெட்டியையும் தம்முடைய அந்தரங்க அறைக்குக் கொண்டுபோகும்படி உத்தரவு செய்துவிட்டு, நெட்டாஜியைக் கூட்டிக் கொண்டு அவற்றை எடுத்துப் பரிசோதித்துப் பார்ப்பதற்குச் சென்றார். மண்பானைகளிலெல்லாம் இந்தியாவை பேபர் சக்கரவர்த்தி படையெடுத்து மொகலாய வமிசத்தை ஸ்தாபிப்பதற்கு முன் அரசாட்சிசெய்த மகம்மதிய அரசர்கள் பெயரால் வழங்கப்பட்ட நாணயங்கள் நிறைந்திருந்தன. அவற்றுள் ஆறனுள் வெள்ளி நாணயங்களும் பாக்கி ஆறனுள் தங்க மோகராக்களும் இருந்தன. வெள்ளிப் பெட்டியிலே விலையுயர்ந்த ரத்தினங்களும் ஆபரணங்களும் முத்துக்களும் இன்னும் பற்பலவிதக் கற்களும் இருந்தன.

சிவாஜியும் நெட்டாஜியும் இவற்றைப் பேராசைக்கண்களால் பார்க்கவில்லை. தர்மஸேவை செய்வதற்குப் பவானி

தேவி இவற்றை அநுக்கிரகித்திருக்கிறுள் என்ற எண்ணத்துடன் பார்த்தார்கள். இப்பொழுது சிவாஜி நெட்டாஜியை நோக்கி "இப்பானைகளில் வெறும் தங்கமும் வெள்ளியும் மாத்திரம் இருப்பதாக நீ நினைக்கிருயோ? அவற்றுள் இருப்பவை இன்னும் சிரேஷ்டமானவை; என்னுடைய படை வீரர்களுக்கு ஆயுதங்களும் என்னுடைய குன்றுக்கோட்டைகளுக்குப் பீரங்கிகளும் அவற்றுள் இருக்கின்றன. அவற்றுள் இருப்பவை மகாராஷ்டிரத்தின் சுவதந்தரமேயாகும்" என்று சொல்லிவிட்டு அவ்வூரிலுள்ள ஒரு ரத்தினவியாபாரியைக் கூட்டிக்கொண்டு வரும்படி உத்தரவுசெய்தார். அந்த ரத்தின வியாபாரி அந்தத் தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் பார்த்துப் பிரமித்துவிட்டான். இன்னும், ஆபரணப்பெட்டியைப் பார்த்தவுடனே அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். இரண்டொரு நிமிஷங்கள் கழித்து அவன் ஒரு ரத்தினத்தைச் சுட்டிக்காட்டி "இது டில்லி சக்கரவர்த்தியினுடைய கிரீடத்திற் கேற்பத் தயார் செய்யப்பட்டதா யிருக்கவேண்டும். இந்த முத்துமாலை அவனுடைய ஆசைநாயகி எவளுக்கோ பொறுக்கி யெடுக்கப்பட்டதா யிருக்கவேண்டும்" என்று சொன்னுன். சிவாஜி அந்தச் சொத்துக்களுக்கு மொத்த மதிப்பிடும்படி சொல்லவே, ரத்தினவியாபாரி வியாபார முறையில் ஒவ்வொன்றுக்கும் விலைமதிக்க ஆரம்பித்தான். முத்துமாலையும் அந்த ரத்தினமும் ஒவ்வொன்றும் லட்சம் ரூபாய்க்கு மேலேயே விலை போகுமென்றும், நாணயங்களை எல்லாம் சேர்த்து எடுக்கப்பட்ட அப்புதையல் நிதி முழுதும் பத்துலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் மதிக்கப்படலாமென்றும் கூறினுன்.

நல்லதென்று அந்த ரத்தினவியாபாரியை சிவாஜி அனுப்பிவிட்டு, போர்த்துக் கேசியக் கப்பல் வியாபாரியைக் கூட்டிக்கொண்டு வரும்படி ஆள் அனுப்பினுன். அந்த

ஐரோப்பியனும் ரத்தினப் பரீட்சையில் கைதேர்ந்தவன். அவன் அந்த சிறந்த ரத்தினத்தையும் முத்து மாலையையும் நாணயங்களையும் மற்றவற்றையும் பார்த்தவுடனே, அவனுக்கு அவற்றினிடத்தில் அதிக ஆசை விழுந்துவிட்டது. சிவாஜி அவனைப்பார்த்து "நீ விற்பனைக்கு வைத்திருக்கும் ஆயுதங்களையெல்லாம் நான் பார்க்க விரும்புகிறேன். அவை நல்லவையென்று எனக்குத் தோன்றும் பட்சத்தில் நான் கட்டாயமாக வாங்கிக்கொள்கிறேன். உன் ஆயுதங்களுக்கு விலை நாணயங்களில் வாங்கிக்கொள்கிறாயா? அல்லது ரத்தினங்களில் வாங்கிக்கொள்கிறாயா? என்றார். அவ்வைரோப்பியன் அரை லட்சம்ரூபாய் மதிப்பிட்டு அந்தச் சிறந்த ரத்தினத்தை எடுத்துக்கொள்வதாகக் கூறினான். சிவாஜி "நான் என்ன, பைத்தியக்காரனென்று நினைத்தாயோ? இந்த ரத்தினத்தின் விலை எனக்குத் தெரியாதா?" என்று கூறவும் அவ்வைரோப்பியன் சிவாஜியை ஏமாற்ற முடியாதென்று கண்டு கொண்டு நெடுநேரம் ஆலோசனை செய்வதுபோல் நின்றுவிட்டுக் கடைசியாக, அந்த ரத்தினத்தை ஒருலட்சம் ரூபாய்க்கு எடுத்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டான். பாக்கி விலையைப் பச்சை, மரகதம் முதலிய கற்களில் வாங்கிக்கொள்வதாகவும் ஒப்புக்கொண்டான். இன்னும் ஆயுதங்கள் வேண்டுமானாலும் இரண்டு, மூன்று மாதங்கட்குள் இன்னொரு கப்பல் வருமென்றும் அதில் வரும் ஆயுதங்களை முத்துமாலைக்குக் கொடுத்துவிடுவதாகவும் கூறினான்.

இந்த ஏற்பாடு ஆனவுடனே, சிவாஜி தமக்காக உயிரையும்விடத் தயாராயிருக்கின்ற மாவுலி ஜாதியாரைப் படை சேர்த்து, தாணா கோட்டைக்கு இட்டுச்சென்று அங்கே புதிதாக வாங்கப்போகின்ற ஆயுதங்களை அவர்களுக்குக் கொடுத்து அப்படியே அவர்களைக் கலியாணநகர மார்க்கமாக

இட்டுக்கொண்டு ஸ்ரீவர்த்தன கோட்டைக்குள் அடைபட்டு மகம்மதியர்களால் முற்றுகை இடப்பட்டிருக்கும் திரியம் பகராவையும் படையையும் விடுவித்து வரவேண்டுமென்று தீர்மானித்தார். கூலியாட்களின் தலைவனைக் கூப்பிட்டு, அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளபாக்கியை எல்லாம் கொடுத்துவிட்டு, இன்னும் ஒரு மாதத்திற்கு முன் சம்பளமும் கொடுத்தார். தவிர, அடுத்த மலையிலுள்ள கோட்டையை நன்றாகப் பழுதுபார்த்துப் பலப்படுத்த வேண்டுமென்றும் அதற்கு இனிமேல் ராஜகட்டம் என்று பெயர் வைக்கவேண்டுமென்றும் அவனிடம் கூறினார்.

இவ்வேற்பாடுகளை யெல்லாம் செய்துவிட்டு சிவாஜி நெட்டாஜியையும் அவ்வைரோப்பியனையும் கூட்டிக்கொண்டு மலையினின்றும் கீழே இறங்கி தாணு கோட்டைக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் முன்னமே வந்தவழியே கௌரிகட்டம் வரையில் திரும்பி, பின்னர் இடது பக்கமாக அம்பாவணிக் கணவாயைக் கடந்து பம்பாயிலிருந்து புனாவுக்குச் செல்லும் ரஸ்தாவிலே சவுக்கம் என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இங்கே நெட்டாஜி தன் வீட்டுக்குச் சென்று பெற்றோரைக் கண்டவுடன், அவர்கள் அகமகிழ்ந்து ஆநந்தம் பொங்கி அவனை அணைத்து உச்சிமோந்து முத்துமிட்டுச் சந்தோஷித்தார்கள். நெட்டாஜி அவர்களைவிட்டுப் பிரிந்தது முதல், தான் கண்டது, செய்தது எல்லாவற்றையும் சொன்னான். சிவாஜி நெட்டாஜியினுடைய தைரியத்தையும் வீரத்தனத்தையும் பற்றி அவனுடைய பெற்றோர்களிடத்தில் புகழ்ந்து, நெட்டாஜி இன்னும் கொஞ்சநாட்கள் சென்றால் மிகுந்த கீர்த்திப் பிரதாபத்தை யடைவானென்றுங்கூறினார். தேச ஜனங்களெல்லோரும் அவதாரபுருஷனென்று கொண்டாடிக்கொண்டிருக்கின்ற சிவாஜி மகாராஜரே நெட்டாஜியைப் புகழ்ந்து கூறுவதைக்கேட்ட அப்பெற்றோர்களுக்கு

நெட்டாஜியைப் பெற்றதிஞலாயபயன் இதனினும் வேறு என்னவேண்டும்? தவிர, இந்தக்கிராமத்திலே நெட்டாஜியின் குழந்தைப் பருவத்திலே விளையாட்டுத் தோழர்களாயிருந்த பலரும் இப்பொழுது சிவாஜியின் படையில் சேர்ந்துகொண்டார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே அவர்கள் எழுந்திருந்து சவுக்கத்தை விட்டுப் புறப்பட்டு அங்கிருந்த பன்னிரண்டு மைல் தூரமுள்ள பான்வெல் என்ற கிராமத்தை யடைந்து அங்கிருந்து தாணுவை நோக்கிச் சென்ருர்கள். இதற்குள்ளாக சிவாஜிக்கு ஏராளமான படைகள் சேர்ந்துவிட்டன. சிவாஜி கௌரி கட்டத்தைவிட்டுப் புறப்படுவதற்கு முன்னதாகவே தமது தூதர்களை தேசமெங்கும் அனுப்பிவிட்டார். "ஹர ஹர! மகாதேவா! திக்விஜய கோலாகல சிவாஜி மகாராஜர் வருகிருர்! வாருங்கள்! வாருங்கள்!! இம் மகாராஷ்டிர தேசத்தினின்றும் மகம்மதியக் கொடுங்கோன்மையை ஒழிப்பதற்குக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் ஜயப்பிரதாபசாலி சிவாஜி மகாராஜர் வருகிருர்" என்று அந்தத் தூதர்கள் எங்கெங்கும் முழங்கிக்கொண்டு போகவும் ஆயிரக் கணக்கானவர்கள் சிவாஜியினுடைய படையிலே வந்து சேர்ந்துவிட்டார்கள்.

தாணு கோட்டைக்கு மூன்றுமைல் தூரத்திலே பேர்ஸிக் என்று ஒருகோட்டை உண்டு. புதிதாகவந்துசேர்ந்த படைகளனைத்தையும் இக்கோட்டையில் நிறுத்திவிட்டு, இக்கோட்டையையும் நன்ருகப் பழுது பார்க்கும்படி உத்தரவு செய்துவிட்டு, சிவாஜியும் நெட்டாஜியும் இருபது பெயர்களை பந்தோபஸ்துக்கு இட்டுக்கொண்டு அவ்வைரோப்பியனுடன் தாணு கோட்டைக்குப் படகேறிச் சென்ருர்கள். நெட்டாஜி இதற்குமுன் ஸால்ஸெட் என்ற பெயரையுடைய அந்தத் தீவைப் பார்த்ததில்லை; அந்தத் தீவானது அப்பொழுது

போர்த்துகேசிய அரசாங்கத்தின்கீழ் இருந்தது. ஓடு அடுக்கிய அழகிய வீடுகளையும் ஒழுங்காய், லட்சுமி விலாசமாயிருக்கப்பட்ட தெருக்களையும் கண்டு களித்தான் நெட்டாஜி. ஹிந்துக்களுடைய கோவில்களையும் மகம்மதியர்களுடைய பள்ளி வாசல்களையும் நெட்டாஜி பார்த்திருக்கிறான்; கிறிஸ்தவக் கோவில்களை அவன் பார்த்ததே யில்லை. இங்கு தான் அவன் முதன் முதலாக கிறிஸ்தவக் கோயில்களைப் பார்த்தது.

கோட்டைக்குள்ளே சென்றார்கள். அங்கு ஒரு பிரமாண்டமான மாளிகை. அது கப்பல் தளகர்த்தனுடையது. மாளிகையின் நாற்புறங்களிலும் பெரும் பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இப்பீரங்கிகளின் பந்தோபஸ்தில் தான், வியாபாரச் சரக்குகள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வைரோப்பிய வியாபாரி சிவாஜியினிடத்தில் விலைபேசிய ஆயுதங்களும் இங்குதான் வைக்கப்பட்டிருக்கின்றன. சிவாஜி ஆயுதங்களையெல்லாம் பதம் பார்த்துப் பரிசோதித்து, அவ்வைரோப்பியன் கூறியதுபோல, உயர்ந்த சரக்குகள் தான் என்று கண்டுகொண்டு விலைபேச ஆரம்பித்தான். ஐரோப்பியன் "இந்த ஆயுதங்களைப்போல தங்களுக்கு எங்குமே கிடைக்காது இதோ இந்தக் கத்திகளைப் பாருங்கள். கையாள்வதற்கு எவ்வளவு லகுவா யிருக்கும், தெரியுமா? இதோ, இந்தப் பீரங்கிகளைப் பாருங்கள். எல்லாம் தற்கால ஐரோப்பிய முறையால் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லாம் யந்திர வேலை. இப்பீரங்கிகளை வைத்துக்கொண்டு ஒரு சில பேர்—பெரும்படை வேண்டியதில்லை—எவ்வளவு பெரிய படைகள் வந்தெதிர்த்த போதிலும் ஜயித்துவிட முடியும்! இதோ, இந்தக் கேடயங்களைப் பாருங்கள், உங்களுடைய பாரதத்திலே சொல்லப்பட்டிருக்கிற பீமனுடைய கதை விழுந்தாலும் அந்தக் கதைதான் பொடிப்பொடியாக போகு

மேயொழிய, இந்தக்கேடயம் சிறிதும் உடைபடாது. இதோ இந்தத் துப்பாக்கிகளைப் பாருங்கள்; எல்லாம் புதுமாதிரியே. இவ்வளவுசிறந்த ஆயுதங்கள் இக்காலத்தில், அதுவும் இந்தத் தேசத்தில், கிடைப்பது அருமை" என்று பலவாருகத் தன்னுடைய சாக்கைப் புகழ்ந்து காட்டி, விலையையும் ஏராளமாகச்சொன்னன். சிவாஜி "இந்தக் கத்திகளெல்லாம் துருப்பிடித்திருக்கின்றன, இந்தக் கேடயங்களெல்லாம் சாதாரண இரும்பிஞலாக்கப்பெற்றவைபோலத் தானே தோன்றுகின்றன. இந்தத் துப்பாக்கிகளெல்லாம் அழுக்கேறி, அப்பப்பா, என்ன, இப்படியிருக்கின்றனவே! பீரங்கிகள் பார்வைக்கு அழகாயிருந்தாலும், அவ்வளவு நயமென்று தோன்றவில்லை" என்று பலவாருக அவ்வாயுதங்களைக் குறைவாகக் கூறி விலையை மிகவும் இறக்கிச் சொன்ஞர். ஆயினும் சிவாஜி என்ன விலையாஞலும் அவ்வாயுதங்களை வாங்கிவிடத் தயாராயிருந்தார். ஆயிரக்கணக்கான மாவுலி ஜாதியார் தம்முடைய சொற்படி நடக்கத் தயாராயிருக்கிருர்களென்று அவருக்கு நன்ருகத் தெரியும். ஆயுதங்கள் இல்லாவிட்டால், அத்தனை ஆயிரம் ஜனங்களும் இருந்து என்ன பயன்? ஆஞல் அவ்வைரோப்பிய வியாபாரிக்கு இந்த விஷயம் தெரியாது. தெரிந்திருந்தால், அவன் ஆயுதங்களின் விலையை ஒன்றுக்கு இரண்டு மடங்காக சிவாஜியினிட மிருந்து வாங்கிக்கொண்டு போயிருப்பான். கடைசியாக, அவ்வைரோப்பியன் பிரதானமான சிறந்த ரத்தினத்தையும் இன்னும் இருபது ரத்தினங்களையும் எடுத்துக்கொண்டு ஆயுதங்களைக் கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டான். இதுமாத்திரம் அன்று, இன்னும் இரண்டு மூன்று மாதத்திற்குள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்ற கப்பல் வந்து சேர்ந்தவுடனே அக்கப்பலிலுள்ள ஆயுதங்களையும் சிவாஜிக்கே கொடுப்பதாக வாக்குத் தத்தம் செய்தான்.

வியாபாரம் பேசிமுடிந்த பின்னர், அவ்வைரோப்பிய னும் கப்பல் தலைவனும் சிவாஜியையும் நெட்டாஜியையும் அவ்வூரைச்சுற்றிப் பார்க்க இட்டுச் சென்றார்கள். அங்கு கட்டப்பட்டிருந்த கிறிஸ்தவர்களுடைய பல அழகிய கோயில்கள், மடங்கள், பட்டு, பருத்தி முதலியன வஸ்திரமாக்கப் படுகின்ற நெசவு சாலைகள், சித்திரத் தச்சுவேலைப்பரடுகள் முதலியவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டு, அவர்கள் அப்பட்டணத்தை விட்டு வெளி வந்து சுற்றிலும் பார்க்க, நிலங்களெல்லாம் செழித்துக் கொழுத்திருந்தன. ஆங்காங்கு வயல்களுக்கு நடுவே அலங்காரமான மாளிகைகள் பல தோன்றின. எங்கு பார்த்தாலும் தனலட்சுமியும் தான்யலட்சுமியும் தாண்டவ மாடிக்கொண் டிருந்தார்கள். சிவாஜியும் நெட்டாஜியும் கண்டு அப்படியே பிரமித்துவிட்டார்கள்.

சிவாஜியும் நெட்டாஜியும் சுற்றிப் பார்த்துவிட்டுத் தாங்கள் இறங்கி யிருந்த இடத்துக்குத் திரும்பிவந்த பிற்பாடு, சிவாஜி நெட்டாஜியை நோக்கி "ஆ! ஆ! என்ன நேர்த்தியான பட்டணம் இது! எவ்வளவு பணச்செழிப்பு இங்கே! இது குபேரபட்டணம் போலல்லவோ இருக்கிறது. என்ன செய்யலாம்? நான், முதலில் யோசித்த மாதிரியே செய்திருந்தால், நீ ஒரு சிறு படையுடன் திடீரென்று இவ்வூரின் மீது பாய்ந்து தாக்கி யிருந்தால், இவ்வாயுதங்களுக்கெல்லாம் வீணாக விலை கொடுத்திருக்க வேண்டாம்; இதுமாத்திரமன்று, இவ்வூரையே கொள்ளைகொண் டிருக்கலாமே" என்றார்.

நெட்டாஜி "தாங்கள் சொல்வது நியாயமென்று எனக்குத் தோன்றவில்லை. நமக்கு எவ்வித தீங்கும் இழைக்காத இவ்வூர் ஜனங்களை இம்சித்து இவ்வூரைக் கொள்ளை

கொண்டிருந்தால், ஈஸ்வரனுக்கு நம்மீது என்று மில்லாத கோபம் உண்டாகாதோ? எதிர்க்கத் துணியாத ஏழைகளை இம்சிப்பது பாபமன்றோ?'' என்று கேட்க, சிவாஜி "பவானி மாதா இவ்வெண்ணத்தை என் மனத்தில் திடமாக ஊன்றி யிருந்திருப்பாளாயின், நான் பாப புண்ணியங்களைப் பார்த்துக்கொண்டு இவ்வூரைக் கொள்ளையடிக்காம லிருந்திருக்க மாட்டேன். பெருங் காரியங்கள் செய்து தேசஸேவை புரியும்பொழுது பாபத்தையும் புண்ணியத்தையும் பார்த்து முடியாது. நீ ஸ்வய நன்மையற்றிருக்கிறாயா? மகம்மதியக் கொடுங்கோலினின்றும் கஷ்டப்படுகின்ற மானிட ராசிகளைப் பார்த்து உனது மனம் உருகுகிறதா? தேசம் க்ஷேமம் அடையவேண்டுமென்ற ஒரே எண்ணம் சித்தத்தில் குடி கொண் டிருக்கிறதா? தேச மாதாவின் ஊழியத்துக்காக நீ உன்னை ஜகன் மாதாவினிடத்தில் திரிகரண சுத்தியாய் ஒப்பு வித்து விட்டாயா? இவ்வளவுதான் பார்க்கவேண்டியது. மகாராஷ்டிர தேசத்தை மகம்மதியக் கொடுங்கோன்மையி னின்றும் விடுவிப்பதற்கு நீ செய்யும் எக்காரியமும் பரிசுத்த மானதே. இப்படிதான் நான் நினைத்துக்கொண் டிருக்கி றேன்'' என்றார்.

"அப்படி என்னுடைய குரு எனக்குப் போதிக்கவில் லையே. சத்தியத்தையும் நியாயத்தையும் பரிபாலனம் பண் ணாத விஷயத்தில் ஈஸ்வரானுக்கிரகம் உண்டாகாதென்றும், அசத்தியத்தையும் அநியாயத்தையும் ஆதாரமாகக் கொண்டு கட்டப்பட்ட அதிகாரமானது நிலைக்காதென்றும், பீஜப்பூர் சமஸ்தானமும் மொகலாய ராஜாங்கமும் இப்பொழுது அழிந்துபோய்க் கொண்டிருப்பதற்குக் காரணம் அவை செய்துவரும் அநியாயங்களும் அக்கிரமங்களுமே யென்றும் எனது குருஎனக்குப்போதித்திருக்கிறார். ஆகையால் தாங்கள் கூறுவது எனக்குச் சரியென்று தோன்றவில்லை'' என்றான்

சிவாஜி "நானும் மகாத்மா ராமதாசர் போன்ற அநேக மகான்களுடன் சம்பாஷிக்கும்படியான பாக்கியம் அடைந் திருக்கிறேன். ஆனால் மகாராஷ்டிர தேசத்தில் எனக்குள்ள அபிமானமானது என்னுடைய மற்றெல்லாக் கொள்கைகளை யும் எரித்துவிடுகிறது; மகாராஷ்டிர தேசத்தின் நன்மைக் காக என்னுடைய ஜீவியத்தையும் எனக்கு மிகவும் வேண்டி யவர்களுடைய ஜீவியங்களையும் தியாகம்செய்ய நான் தயாரா யிருக்கிறேனென்பது மாத்திரமன்று, மானுஷ நீதிகளையும் தெய்வ நீதிகளையும் உடைத்துத் தகர்த்தெறியத் தயாரா யிருக்கிறேன்" என்று கூறவும்,

நெட்டாஜி "எல்லா மனிதர்களுடைய ஹிருதயங்களி லும் மிகத் தெளிவாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிற ஈஸ்வர நீதியைக் கடந்தால், ஈஸ்வரனுக்கு நம்மீது எப்படி கிருபை யுண்டாகும்? என்று கேட்டான். சிவாஜி "அதெல்லாம் என்னைக் கேட்காதே. பவானிதேவி என்னை தூண்டுகிற மாதிரி உன்னையும் தூண்டுவாளானால், நான் நினைக்கிற மாதிரி, செய்கிற மாதிரி நீயும் நினைப்பா யென்பதிலும் செய்வா யென்பதிலும் சந்தேகம் இல்லை. ஆனால் உன் னுடைய குரு போதித்ததற்கு விரோதமாக நீ எக்காரியத் தையும் செய்யும்படி நான் ஒருபொழுதும் உன்னிடம் கூறேன். அத்தகைய செய்கைகள் எப்பொழுதாவது செய் யப்பட வேண்டிய அவசியம் நேரிடுமாயின், அவற்றை நானே செய்கிறேன்" என்று சொன்ன பின்னர், இருவரும் படுத்துத் தூங்குவதற்குச் சென்றார்கள்.

---

# அத்தியாயம்—15.

## ஒரு சிறு சண்டை

கல்வா என்ற ஒரு கோட்டை. தானா கோட்டைக்குச் சமீபத்திலுள்ளது. இங்குதான் சுமார் பதினாயிரம் மாவுலி ஜாதியார் சிவாஜியை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உருவத்தில் குள்ளர்களாயினும் மகாபலிஷ்டர்கள். இவர்கள் மலைநாட்டினர் என்பது இவர்கள் அடிக்கடி மலைகளிலே ஏறியும் இறங்கியுமுள்ள பழக்கத்தினாலே ஏற்பட்ட பாதங்களின் அளவைப் பார்த்தாலே தெரியவரும். இவர்கள் எல்லாரும் சிவாஜியைக் கண்டவுடனே ஆநந்தகோஷம் புரிந்து ஆர்ப்பரித்தார்கள். நெட்டாஜிக்கும் அதேமாதிரி சந்தோஷ மரியாதை நடந்தது. அவர்கள் நெட்டாஜியைப் பார்த்திராவிடினும் எங்கும் பிரபலமாய்ப் பரவியிருந்த நெட்டாஜியின் பெயரையும் கீர்த்தியையும்பற்றி இவர்கள் முன்னதாகவே கேள்விப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய கூட்டத்தில் நெட்டாஜியின் பழைய நண்பனாகிய ராமனும் வந்திருந்தான். அவன் நெட்டாஜியைக் கண்டு ஆநந்தம்பொங்கி அருகில்வந்து தான் நெட்டாஜியை விட்டுச் சிறிதும் நீங்காமல் பக்கத்திலேயேயிருந்துகொண்டு பணிவிடைசெய்ய விரும்புவதாகவும் அதற்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்.

அங்கு கூடியவர்களெல்லோருக்கும் தலைக்கு ஒருகத்தியும் கேடயமும் கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு அப்பொழுது உண்டான ஆநந்தத்தை யளவிட்டுக்கூற நம்மால்முடியாது. அவர்கள் சமுத்திரகோஷத்திலும் பெரிய சத்த

மிட்டு, சண்டை, சண்டையென்று சந்தோஷக் கூச்சலிட்டார்கள். பொறுக்கி யெடுக்கப்பட்ட சிலருக்குத் துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டன. சிவாஜியினுடைய இப்புதிய படைகள் போர்க்கோலங் கொண்டு புறப்பட்டு நிற்பதை தாணு நகரில் கப்பல் தலைவனுடைய கோட்டையின் மேல்மெத்தை வாசற்புறத்தில் காவலிருந்தவன் தனது தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாகப் பார்த்து வியர்த்து விறுவிறுத்துக் கப்பல் தலைவனிடம் ஓடி, ஒரு பெரும்படை நமது கோட்டையைத் தாக்குவதற்கு வந்துகொண்டிருக்கின்றது என்று கூறவும், உடனே அக் கப்பல் தலைவன் பயந்து நடுநடுங்கித் தன்னுடைய சிறிய படையைத் தயாராக அணிவகுத்து நிறுத்தினான்.

சிவாஜியோ, பீஜப்பூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த வட கொங்கண தேசத்தின் பிரதான நகராகிய கலியாணம் என்ற ஊரை எதிர்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன், அவ்வூரைச் சுற்றி யோடுகின்ற உல்லாசம் என்ற நதியின் முகத்துவாரத்திலுள்ள பெர்ஸிகம் என்ற கோட்டையருகே படகுகளிலே பீரங்கிகளை ஏற்றி, வேண்டிய குண்டு மருந்துகளை யெல்லாம் தயாராக வைத்து, சில மாவுலிகளையும் அப்படகுகளில் ஏற்றி, ஆற்றின் வழியாகச் சென்று கலியாண நகருக்குச் சிறிது தூரத்தில் பீரங்கிகளை இறக்கித் தக்க இடங்களில் நிறுத்தும்படியாக உத்தரவு செய்தார்.

சென்ற சில மாதங்களாகவே, கலியாண நகரமானது அப்பாஜி சாந்தேவர் என்னும் பெயரிய ஒரு பிராமணருடைய தலைமையின்கீழ் நடத்தப்பட்ட ஒரு மகாராஷ்டிரப் படையினால் பயமுறுத்தப்பட்டு வருகிறது. அவ்வூரை எதிர்த்துத் தாக்குவதற்குப் போதுமான படை அப்பாஜி சாந்தேவரிடத்தில் இல்லாததினாலே அவர் அவ்வூரை எதிர்க்காமல் அவ்வூருக்கும் பீஜப்பூருக்கும் நடுவிலேயுள்ள

போக்கு வரத்துக்களைத் தடைப்படுத்தித் தொந்தரவு செய்து செய்துகொண்டு வந்தார். கலியாண நகருக்குள்ளே யுள்ள மகம்மதியப் படைகள் சிறியதாயிருந்தாலும் ஆயு தங்களும் பிறவும் முதற்றரமானவையா யிருந்தமையால், அப்பாஜி சாங்தேவர் அதை எதிர்ப்பது யுக்தமன்று என்று கருதி, கலியாணத்திற்கும் கல்கவனம் என்ற ஊருக்கும் மத்தி யிலேயுள்ள ரஸ்தாவினருகே தனது டேராவை அடித்துக் கொண்டு, பீஜப்பூர் சமஸ்தானத்திற்கு விரோதமாகக் கிளம்பி யிருக்கின்ற பெருங் கிளர்ச்சியில் சேராது மகம்மதிய அர சாங்கத்துக்கு வரி கொடுத்துக்கொண்டு மமதையுடனே இருக்கின்ற ஜனங்களைப் பயப்படுத்தும் பொருட்டும் தண் டிக்கும் பொருட்டும் சுற்றிலுமுள்ள தேசத்தைக் கொள்ளை யடித்துக்கொண் டிருந்தார்.

சிவாஜி அப்பாஜி சாங்தேவருடன் கலந்துகொண்டு கலி யாணத்தை முற்றுகைபோடக் கருதினார். ஆதலால் அவர் தமது புதிய படையை உல்லாச நதியின் இடதுகரை வழி யாக பெர்ஸிகம் என்ற கோட்டையினின்று கலியாணத் திற்கு ஆறு மைல் தூரத்திலுள்ள போபுரம் என்ற ஊர்வரை யில் இட்டுச் சென்று அங்கே டேரா அடித்து இறங்கினார். இங்கே அவர் தமது படையின் பெரும் பாகத்தையும் நிறுத்திவிட்டு, தாமும் நெட்டாஜியுமாக முந்நூறு குதிரை வீரர்களுடனும், 500 காலாட் படையுடனும் புறப்பட்டு வலதுபுறமாகத் திரும்பி அப்பாஜி சாங்தேவருடைய படை யுடன் சேரக் கருதி, ஒரு சுற்று வழியில் சுற்றிவந் தார். இவர் கோவிற்பாறையென்ற ஒரு குன்றினருகே வந்தவுடனே, அங்கே சில குடியானவர்கள் விறகு வெட்டிக் கொண்டிருந்தார்கள். எதிரியின் படைகளைப் பற்றி ஏதே னும் தெரியுமோ? வென்று அவர்களைக் கேட்க, அவர்கள் ஒன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டு, ஆனால் இப்பொ

ழுதுதான்—சுமார் மூன்றுமணி நேரத்துக்கு முன்புதான். சுமார் 500 குதிரைவீரர்க ளடங்கிய மகம்மதியப் படையொன்று அநேக கோவேறு கழுதைகளின் மீது பெரும் பாரங்களை யேற்றிக்கொண்டு இவ்வழியே சென்றது என்று கூறினார்கள் கோவேறு கழுதைகளின்மீது சென்ற பாரங்கள் பீஜப்பூர் சமஸ்தானத்துக் கஜானுவாகத்தா னிருக்க வேண்டுமென்றும், அவை அப்பாஜி சாங்தேவருடைய கைகளில் அகப்பட்டுக் கொள்ளாதபடி இச்சுற்று வழியாகக் கொண்டுபோகப்படுகிறது என்றும் சிவாஜி ஊகித்துத் தீர்மானித்துக்கொண்டு "அந்தத் திரவியம் பீஜப்பூர் போய்ச் சேரவே கூடாது. நெட்டாஜி! நீ முந்நூறு குதிரை யாட்களையும் கூட்டிக்கொண்டு ஓடு! அம்மகம்மதியப் படையைத் துரத்து! இதோ இக் காலாட்படையைக் கூட்டிக்கொண்டு உன் பின்னாலேயே நானும் வருகிறேன். ஓடு! ஓடு!!" என்றார்.

உடனே நெட்டாஜி ஒரு நிமிஷம்கூடத் தாமதியாமல் குதிரைப் படைகளை இட்டுக்கொண்டு வெகு வேகமாகச் சென்றான். அவனுடைய அதி விசுவாசமுள்ள, அன்பு மிகுந்த நண்பனாகிய ராமனும் அதிவேகமாகத் தன்னுடைய புதிய எஜமானனாகிய நெட்டாஜியைப் பின் தொடர்ந்து சென்றான். இக்குதிரைப் படைகள் ஓடி ஓடி மூன் செல்கின்ற மகம்மதிய கஜானுப் படையைக் கண்டு கொண்டன. மகம்மதியப் படையும் இவர்களைக் கண்டுவிட்டது. மகம்மதியப் படை ஓட ஆரம்பித்தது. இவர்களும் துரத்திக்கொண்டே ஓடினார்கள். மகம்மதியப் படை சவுக்கம் என்ற கிராமத்தைக் கடந்துவிட்டது; மகாராஷ்டிரப் படை அக்கிராமத்தைக் நெருங்கிவிட்டது. நெட்டாஜி அக் கிராமம் தனது சொந்த ஊராகையால், தனது பெற்றோர்களைக் கண்டு பேசிவிட்டு வாலாமா? வென்று நினைத்தான். ஆனால் அதற்கு நேரமில்லை. ஒரு நிமிஷம் தாமதித்தால்

மகம்மதியப் படை ஓடிவிடும். மகம்மதியர்களுடைய கஜானு மூட்டையைத் தூக்கிக்கொண்டு செல்லும் கோவேறு கழுதைகளால் மகாராஷ்டிரக் குதிரைகளைப்போல் வேகமாக ஓட முடியவில்லை. ஆகையால் மகாராஷ்டிரப் படைகள் மகம்மதியப் படையை மேன்மேலும் நெருங்கிவருகின்றன. மகம்மதியப்படை சுமார் நானூறு குதிரைவீரர்க ளடங்கியதாயிருந்தது. நெட்டாஜி கண்டான்; யுத்தத்தில் அதிகப் பழக்கமில்லாத முந்நூறு குதிரைவீரர்க ளடங்கிய தனது படையுடன் அப்படையை எதிர்ப்பது யுக்தமன்று என்று நினைத்து யோசனை செய்தான். தான் கீர்த்தி பெறுவதை மாத்திரம் ஒரு பொருட்டாக நினைத்திருந்தானே யானல், நெட்டாஜி தன்னுடைய சிறிய படையுடன் அப்பெரிய படையை எதிர்ப்பதற்குத் துணிந்திருப்பான். ஆனல், சிவாஜி சீக்கிரம் காலாட் படையுடன் வந்து சேர்வாரென்றும் பின்னர் சண்டை யாரம்பித்தால் அதிக ஆட்சேத மில்லாமல் ஜயம் கிடைப்பது நிச்சயமென்றும் நினைத்து, இப்பொழுது சண்டை செய்யக்கூடாதென்று தீர்மானித்தான்.

ஆனல் சண்டை செய்யாமல் சும்மா மகம்மதியப் படைக்குப் பின்சென்று கொண்டிருந்தால், மகம்மதியப் படை பீஜப்பூர் போய்ச்சேர்ந்தாலும் சேர்ந்துவிடும். ஆகையால் அப்படையை லகுவில் விடக்கூடாது என்று நெட்டாஜி நினைத்துக்கொண்டு, மகம்மதியப்படையைத் தாக்குவதுபோல பாவனை பண்ணும்படியாகத் தனது படைக்கு உத்தரவு செய்தான். அப்படியே மகாராஷ்டிரப்படை மகம்மதியப்படையைத் தாக்குவதுபோலக்காட்ட, மகம்மதியப்படை பின் திரும்பி எதிர்த்தது. உடனே மகாராஷ்டிரப்படை பின்வாங்கி வெகுதூரம் ஓடிநின்றது. மகம்மதியப்படையும் மகாராஷ்டிரப்படையைத் துரத்திவந்து, தாங்கள் முன்சென்றிருந்த வழியில் அதிகதூரத்தை இழந்துவிட்டது. இம்மாதிரியே

அடிக்கடி மகாராஷ்டிரப்படை மகம்மதியப்படையை எதிர்ப்பதுபோலப் பாவனைகாட்டுவதும் மகம்மதியப்படை திரும்பி நின்று எதிர்க்க, மகாராஷ்டிரப்படை ஓடுவதும் மகம்மதியப் படை துரத்துவதுமாகி, இப்படியே மகம்மதியப்படை வேகமாகச்செல்லமுடியாமல் தாமதம்செய்யப்பட்டது. ஆயினும், திரவியம் கொண்டுசெல்லும் கோவேறு கழுதைகள் தடைப்படாது சென்று கொண்டுதான் இருந்தன. நெட்டாஜி யோசித்தான்; சிவாஜி காலாட்படையுடன் இன்னும் வந்து சேரவில்லை. சிறிது தாமதித்தால், மகம்மதியப்படை கஜானாவைக்கொண்டு பீஜப்பூர்போய்ச் சேர்ந்துவிடும். பின்னர் இவ்வளவு பாடுபட்டும் பயனில்லாமற் போய்விடும். ஆதலால் நெட்டாஜி ஒரு தகுந்தயோசனை செய்தான். தன்னுடைய நண்பன் ராமனைக் கூப்பிட்டு "ராமா! இன்னும் 5-மைல்தூரம் நாம் சென்றால், கால்புரம் என்ற ஊருக்குப் பின்னால் ஒரு நெருக்கமான கணவாய் இருக்கின்றது. நமது வலது பக்கத்திலே ஒரு மலையிருக்கின்றது. நீ நமது குதிரை வீரர்களில் ஒரு நூறு பெயர்களைக்கொண்டு இம்மலையைச் சுற்றி வெகு வேகமாகச்சென்றால், எதிரிகள் அறியாமல் அக்கணவாயைப்போய் அடைத்துக்கொள்ளலாம். அக்கணவாய் வழியாகத்தான் இம் மகம்மதியப்படை செல்லவேண்டும். நீ முன்புறமும் நான் பின்புறமும் எதிர்த்தால் மகம்மதியப் படைகளின் கதி அதோகதிதான். ஆதலால் நீ அங்கு வேகமாகச் செல்" என்றான் நெட்டாஜி. ராமன் தனக்கும் அவ்வழி தெரியுமென்று கூறி, தன்னுடன் ஒருநூறு குதிரை வீரர்களை இட்டுக்கொண்டு மலையைச்சுற்றி வேகமாகச்சென்றான். பீஜப்பூர்ப்படைகள் காலபுரத்தண்டையில் வருவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னமேயே, ராமனுடைய படைகள் வந்து சேர்ந்துவிட்டன. ராமன் உடனே அவ்வூராரையெல்லாம் கூட்டம்போட்டு, "மகாராஷ்டிர தேசத்தை ரட்

சிப்பதற்கு என்று அவதரித்திருக்கின்ற மகாபுருஷர், ராஜாதி ராஜர், ராஜமார்த்தாண்டர், ஜகத்துக்கதிபதி சிவாஜி மகாராஜர் இதோ பின்னாலே வருகிறார். மகம்மதியப்படையொன்று கஜானா எடுத்துக்கொண்டு அதோ வருகிறது. சிவாஜி மகாராஜர் துரத்திக்கொண்டு வருகிறார். நீங்கள் அவருக்கு உதவி செய்வீர்களாயின், அவருடைய தேச கைங்கரிய புண்ணியத்திற்கு நீங்கள் பாத்திரர்களாவீர்கள். இன்னும், அவர் உங்களுக்கு வேண்டியனசெய்து, உங்களுக்கு க்ஷேமமுண்டாக்குவார். நீங்கள் உதவிசெய்யத் தவறுவீர்களாயின், அவர் உங்கள் ஊரைச் சுட்டுக்கொளுத்திச் சாம்பராக்கிவிடுவது நிச்சயம்'' என்று கூறவே, அவ்வூரிலுள்ள பலசாலிகளிற் பெரும்பான்மையோரும் கையில் மண்வெட்டிகளையும் கோடரிகளையும் மகாராஷ்டிரப்படைக்கு உதவி செய்ய ஓடி வந்தார்கள். கணவாயில் பெரும்பாறைகளை உருட்டிவிட்டும், பெரிய விருட்சங்களை வெட்டிக் கொண்டுவந்து போட்டும் வழியை அடைத்துக்கொண் டிருக்கும்பொழுதே, மகம்மதியப்படை வந்துவிட்டது. பின்புறம் ஒரு மகாராஷ்டிரப்படை துரத்திக்கொண்டு வருகிறது; முன்புறம் வழி அடைபட்டுக் கிடக்கிறது. மகம்மதியப்படை திடுக்கிட்டுவிட்டது. இரு பக்கங்களிலும் மலை செங்குத்தாக இருக்கிறது. ஆகையால் பக்கவழியாக எங்கேனும் ஓடிச் சுற்றிச் செல்லலாமென்றாலும் முடியாது. வழியைத் தடைப்படுத்திக் கிடக்கின்ற பாறைகளையும் மரங்களையும் ஒதுக்கி எடுத்துப்போட்டுவிட்டுப் போகலாமென்றாலோ, அப்பாறைகளுக்குப் பின்னே எத்தகைய, எவ்வளவு பெரிய படை எதிர்ப்பதற்குத் தயாராக நிற்கின்றதோ, அதுவும் தெரியாததினால் பயமாயும் இருக்கின்றது. ஆகையால் மகம்மதியப் படைத்தலைவன் தனது படைவீரர்களைப் பின்னுக்குத் துரத்திவருகின்ற மகாராஷ்டிரப்படையை எதிர்த்து ச்வுக்கம் என்ற கிராமத்துக்

குத் துரத்தும்படி உத்தரவு செய்தான். ஆனால் நெட்டா ஜியோ, இதுவும் நல்லதுதான் என்று கருதி, பயந்தோடுவது போலத் தன்னுடைய குதிரைவீரர்கள் பின்னுக்கு ஓடிவிடும் படி உத்தரவு செய்தான். பீஜப்பூர்ப் படையானது இம் மகாராஷ்டிரப் படையை நெடுந்தூரம் துரத்துவதற்குத் துணியவில்லை. ஏனென்றால் திரவியம் சுமந்து செல்லும் கோவேறு கழுதைகளை விட்டுப்பிரிந்து எப்படி நெடுந் தூரம் செல்வது? ஆகையால் பீஜப்பூர்ப்படைகள் மறுபடி யும் திரும்பிக் கோவேறு கழுதைகள் நிற்கும் இடத்திற்கு வரும்படி நேரிட்டது. நெட்டாஜியும் தனது படையை மகம் மதியப்படையின் பின்னே செலுத்தினான்.

இதற்குள்ளாக,வேடிக்கை பார்க்கவந்த அவ்வூர் ஜனங் களிற் பெரும்பான்மையோருக்கும் மகம்மதியர்களுடைய பரிதாபநிலை நன்றாக விளங்கிவிட்டது. ஜயசாலியின் பக்கமே சகலரும் சேர்வார்கள் என்னும் உண்மைக்கிணங்க, இதற்கு முன் யோசித்துச் சந்தேகித்துக்கொண்டிருந்த பலரும் இப் பொழுது மகாராஷ்டிரப்படையின் பக்கம் சேர்ந்துகொண் டார்கள். அவ்வூராரில் இருநூறு, முந்நூறுபேர்கள் வில்லு களையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு கணவாயில் மகம் மதியப்படையின் மார்க்கத்தைத் தடுப்பதற்கு ஓடி வந்தார் கள். சண்டை யாரம்பமாகிவிட்டது. மகம்மதியப்படையின் மீது அம்புகள் பொழிகின்றன; இருபக்கங்களிலும் பெரும் பாறைகள் உருட்டிவிடப்படுகின்றன. மகம்மதியப்படையின் பாடு திண்டாட்டமாய்விட்டது. மகம்மதியப்படைத்தலைவன் நெட்டாஜியைச் சந்தித்துப்பேச விரும்புவதாகச் சொல்லி யனுப்பினான். நெட்டாஜி சம்மதித்து, இருபடைகளுக்கும் மத்தியில் ஓரிடத்தில் மகம்மதியத்தலைவனைச் சந்தித்தான்.

பீஜப்பூர்ப் படைத்தலைவன் கன்னங்கரேலென்று கருப் பனைச்சாமியைப் போன்ற நிறமுடைய, நீண்டதாடி யுடை

யான்; அடர்ந்து செழித்த மீசைகளுள்ளான்; நல்ல யௌவன பருவம்; மகா பலசாலி. ஆனால் அவன் நெட்டாஜியின் அளவு உயரமில்லை; அவனுடைய அகன்ற மார்பானது அவ னுள் அடங்கியிருக்கும் அளவற்ற சக்தியைக் காட்டிற்று; அவனுடைய முகத்திலே இருந்த இரண்டு தழும்புகள் அவன் சில கடூரமான சண்டைகளில் கலந்திருக்கிறான் என் பதைக் காட்டிற்று. அவன் நெட்டாஜியைக் கண்டவுடனே வெகு நிந்தனையான சொற்களுடன் பேச ஆரம்பித்தான். "கூட்டமிட்டு ஊளையிடுகின்ற குள்ள நரிகள்போன்ற குடி யானவர்களாகிய நீங்கள் புலிகளாகிய எங்கள்முன் நிற்க முடியுமா?" என்றான் மகம்மதியத்தலைவன். நெட்டாஜி "புலிகளாகிய நீங்கள் குள்ளநரிகளாகிய எங்களைக்கண்டு ஏன் ஓடவேண்டும்? இனிமேல் அப்படி பிதற்றாதே. உங்க ளைப்போலவே நாங்களும் ஆண்பிள்ளைகள்தான்; ஆயினும் என்னுடையதிலும் இரட்டிப்பு மடங்குள்ள உனது படை யை ஏன் நான் அநாவசியமாக எதிர்த்துத் தோல்வியடைய வேண்டும்? நீ வீண்பேச்சுப்பேசி, உனது பேச்சுத்திறமை யைக் காட்டவந்திருக்கிறாயானால், இதோ நான் போகி றேன்" என்று சொல்லிப் புறப்பட்டான்.

மகம்மதியத் தலைவன் "வேறு காரியமும் இருக்கிறது. இதோ சொல்கிறேன். கலியாணத்திலிருந்து பீஜப்பூருக்கு ஏராளமான திரவியம்கொண்டுபோய்க்கொண் டிருக்கிறோம். அந்தத் திரவியத்தை எங்களிடத்தினின்றும் அபகரித்துக் கொள்வதற்குப் போதுமான வலிமை உங்களிட மில்லை. ஆனால் நீங்கள் எங்களுக்கு வழியில் மிகுந்த தொந்தரை கொடுக்கமுடியு மென்பது உண்மைதான். அதற்காக நான் இப்பொழுது 5000 ரூபா கொடுக்கிறேன். அதைப் பெற்றுக் கொண்டு, நீ உனது கொள்ளைக் கூட்டத்தாரை இட்டுக் கொண்டு போய்விடு. உங்களுடைய உயிரை அநியாயமாகக்

கொள்ளை கொடுத்து பீஜப்பூர் நவாப்பினுடைய கோபத்திற்குப் பாத்திரமாவதைப் பார்க்கிலும் இது மேலல்லவா? என்ன சொல்கிறாய்?'' என்று கேட்க, நெட்டாஜிக்குக் கோபம் பொங்கிவிட்டது. "என்ன சொன்னாய்? நாங்கள் என்ன, வழிப்பறிக் கொள்ளைக்காரர்களா? சிவாஜி மகாராஜருடைய சிஷ்யப் படைகளல்லவா நாங்கள்! உங்கள் அரசனுடைய கொடுங்கோன்மையினின்றும் மகாராஷ்டிர தேசத்தை மீட்டு ரட்சிக்க வந்திருக்கும் மன்னர் சிவாஜி மகாராஜருக்கு நாங்களா துரோகம் செய்பவர்கள்? இப்படித் தைரியமாகச் சொன்ன உன் நாவை அறுத்துவிட்டால்தான் என்ன? இதோ உன்னை இருதுண்டாகப் போட்டுவிடுகிறேன்'' என்று நெட்டாஜி கத்தியை உருவினான். மகம்மதியத் தலைவனும் கத்தியை உருவினான்.

"என்னை எத்தனையோ பேர் தனியாகவும் கூட்டத்தின் மத்தியிலும் எதிர்த்துப் போர்புரிந் திருக்கிறார்கள், ஆனால் இதுவரை எவரும் ஜயித்ததில்லை. நீ கத்தியை உருவுகிறாய், உனது உயிர் உனது உடலில் தரித்திருக்குமா வென்று நீயே யோசித்துப் பார். உனக்கு யுத்தம் செய்வதற்கு உண்மையான ஆசை யிருந்து, எனக்குப் படை அதிகமா யிருக்கிறதே யென்று நீ பயப்படுவது உண்மையானால் ஒரு காரியம் செய்வோம். உன்னுடைய படைவீரரில் ஐவர் என்னுடைய படைவீரரில் ஐவருடன் போர் புரியட்டும், அப்பொழுது மகம்மதியனுடைய சாமர்த்தியமும் மகாராஷ்டிரனுடைய சாமர்த்தியமும் தெரிந்துவிடும்'' என்றான் மகம்மதியத் தலைவன்.

இவ்வளவு நேரமும் சண்டை செய்வதுபோலப் பாவனை செய்துகொண்டு அடிக்கடி பின்வாங்கி ஓடும்படி நேரிடுகின்றதே என்று நெட்டாஜி வருத்தப்பட்டுக்கொண் டிருந்தானாதலால், இப்பொழுது நேருக்குநேர் சண்டை செய்யும்படி

யான சமயம் கிடைத்ததைப் பற்றிச் சந்தோஷித்தான். இன்னும் இரு கட்சிகளிலும் வீரர்களைப் பொறுக்கி யெடுத்துச் சண்டை யாரம்பிப்பதற்குச் சிறிது நேரம் செல்லுமாதலால், அதற்குள் சிவாஜி தமது படையுடன் உதவிக்கு வந்து விடுவாரென்று கருதியும் நெட்டாஜி சந்தோஷித்தான். பாத சாரிகளாய் நின்று சமர் புரிவதா? அல்லது குதிரையின்மீது ஏறிப் போர்புரிவதா? என்ற கேள்வி கிளம்பிற்று. கணவாய் மிகவும் நெருக்கமா யிருத்தலால் குதிரையின்மீது ஏறிப் போர் புரிவதற்குப் போதுமான இடம் இல்லை என்றுகூறி, பாதசாரிகளாகவே சண்டைசெய்வதுதான் உத்தமமென்று மகம்மதியத் தலைவன் சொன்னான். படையாட்கள் குதிரை வீரர்களா யிருத்தலால், குதிரையின் மீதேறிச் சண்டை செய்வதே நியாயமானதென்று நெட்டாஜி ஒரே பிடிவாதமாகக் கூறினான்; மகம்மதியத் தலைவனும் கடைசியாக இதற்கு இணங்கவேண்டித்தான் வந்தது. நெட்டாஜி தனது படையாட்கள் நெடுந்தூரம் ஒரே யடியாக ஓடி வந்திருக்கிறார்களாதலால் மிகவும் களைத்திருக்கிறார்களென்றும், ஆகையால் களைப்பாறுவதற்கு இரண்டு மூன்று மணி நேரம் சாவகாசம் கொடுக்கவேண்டுமென்றும் பின்னர், யுத்தம் செய்யலாமென்றும் சொல்லவே, மகம்மதியத் தலைவன் இதற்கும் சம்மதித்தான். பின்னர் இருவரும் தம் தம் படைகளிருக்கும் இடம் நோக்கிச் சென்றார்கள்.

நெட்டாஜியின் வீரர்கள் சண்டை செய்யும்படியான பாக்கியம் கிடைத்ததைப் பற்றிச் சந்தோஷித்தார்கள்; அவர்கள் உள்ளம் பொங்கி, உவகை மிகுந்து, புஜங்கள் பூரித்து ஆர்ப்பரித்தார்கள். இவர்களுக்குள் ஐவர்களைப் பொறுக்கி யெடுக்கும்படி நேரிட்டது; இன்னாரைத்தான் பொறுக்கி யெடுப்பது என்று கூறமுடியவில்லை; எல்லோரும் "நான்,

தான்" என்று முந்தி வந்தார்கள். இச்சிறிய யுத்தத்தில் நெட்டாஜி தனது உயிரை ஆபத்துக் குள்ளாக்கிக்கொள்ளக் கூடாதென்று கூறி அனைவரும் அவனைத் தடுத்தார்கள். ஆனால் அவன் தான் கௌரவத்தில் தலைமை வகிப்பது போலவே, ஆபத்திலும் முன் நிற்கக் கடமைப்பட்டவ னென்று ஒரே உறுதியாகக் கூறினான். மற்ற நால்வர்களும் படைவீரர்களால் பொறுக்கி யெடுக்கப்பட்டார்கள். ஐவரும் முதற்றரமான, உயர்ந்த ஆயுதங்கள் தரித்துக்கொண்டு முன் வந்து நின்றார்கள். மூன்று மணி நேரமாய்விட்டது. இரு கட்சிகளிலிருந்தும் ஐவைந்து வீரர்கள் முன்வந்து, சந்தித் துக் கொண்டார்கள். நெட்டாஜி மகம்மதியத் தலைவனைச் சந்தித்துக் கைகலந்தான். மற்ற நால்வர்களும் எதிர்க்கட்சி யில் அவரவர்களுக் கேற்றவர்களைக் கண்டு கைகலந்து கொண்டார்கள். இவ்விரு கட்சியாரும்—பத்துப் பெயர் களும்—நெருங்கி நின்று போர்புரிய ஆரம்பித்தவுடனே பீஜப்பூர்ப் படைகளிடத்தினின்றும் "தீன், தீன், மகம் மத்" என்று ஒரு பெருங் கூச்சல் கிளம்பிற்று; பீஜப்பூர்ப் படைகள் அனைத்தும் திடீரென்று ஒரே பாய்ச்சலாக மகா ராஷ்டிரப் படைவீரர்கள் ஐவர் பேரிலும் பாய்ந்தன. மகம் மதியத் தலைவனுடைய மோசக் கருத்தைச் சட்டென்று அறிந்துகொண்டான் நெட்டாஜி. இரு பக்கத்திலுமுள்ள மொத்தப் படைகள் அனைத்தும் கைகலந்து யுத்தம்செய்ய வேண்டுமென்பதும், நெட்டாஜியின் படை சிறியதாதலால் வெற்றி பெறாது தோற்கடிக்கப் படுமென்பதும் மகம்மதியத் தலைவனுடைய கருத்து என்று நெட்டாஜி உணர்ந்து கொண்டு, அதிகோப தீபிதனாகி, தான் பத்து ஆட்களின் பலத்தை ஒன்றாகக் கொண்டவன்போலக் குதித்து "ஹர, ஹர, மகாதேவ" என்று அட்டகாசக் கூச்சலிட்டு, தன்னு டைய படைவீரர்கள் எவரேனும் தன்னைப் பின்தொடர்ந்து

வருகிறார்களா என்றுகூடக் கவனியாமல், அம்மகம்மதியத் தலைவன் இருக்கும் இடம் நோக்கித் தன்னுடைய அரபிக் குதிரையை அதட்டி விரட்டினான். அது ஓரே யடியாகத் தாவி, அம்மகம்மதியத் தலைவனுடைய குதிரைக்கு மேலே கிளம்பி, அவனைத் தன்னுடைய முன்னங் கால்களினால் எத்தித் தள்ளிக் கீழே வீழ்த்திவிட்டது; அவன் விழுந்து மூர்ச்சையாகினான்; அவனுடைய படைகளே அப்பொழுது அங்கு உண்டான அலங்கோலத்தில், ஆள் தெரியாது அவன் மீதேறித் துவைத்து அவனைக் கொன்றுவிட்டன. நெட்டாஜி எதிரியின் சைந்நியங்களின் மத்தியில் தனிமையாகப் பாய்ந்து, மகம்மதியக் கொடியை அறுத்துத் தள்ளி, அக்கொடி தூக்கி யிருந்தவனையும் கொன்று, தன்னுடைய சரீரத்தை மறந்து நாலா பக்கங்களிலும் சுற்றிச் சுற்றி, எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் வீசி வீசி, வெட்டி வெட்டி வீழ்த்தினான். எதிரியின் படையில் எவரும் இவனுக் கெதிர் நிற்கத் துணியாது ஓடினார்கள். இவ்விதமாக இவன் எதிரியின் படையினூடே புகுந்து, அப்படையை இரண்டாகப் பிளந்து எதிர்ப்பாரின்றி கடைசி வரையில் செல்லவே, அங்கே ராமன் தன்னுடைய நூறு பெயர்களுடன் வந்து கலந்துகொண்டான். நெட்டாஜி அவர்களையும் கூட்டிக்கொண்டு, மறுபடியும் எதிரிகளைத் துரத்த ஆரம்பித்தான். இதற்குள்ளாக நெட்டாஜியின் பிரதான படையானது மகம்மதியர்களுடைய மோசம் தெரியவந்தவுடனே ஜாக்கிரதையாகி மகம்மதியப் படையை அடிக்க ஆரம்பித்தது.

மகம்மதியர்கள் தங்கள் தலைவன் இறந்து விட்டாலும், தாங்கள் இரண்டு பக்கத்திலும் யுத்தம் செய்ய வேண்டி நேரிட்டாலும், தொகையில் பெருத்திருந்ததினால் தோல்வி அடைந்திருக்க மாட்டார்கள்; ஆனால்,

அவர்கள் மெல்ல மெல்ல மகாராஷ்டிரர்களை அடக்கி வந்து கொண்டிருக்கையிலேயே, நூற்றுக்கணக்கான புதிய வீரர்கள் தோன்றிவிட்டார்கள். சிவாஜியினுடைய காலாட் படை வந்துவிட்டது; சிவாஜியும் வந்துவிட்டார். சிவாஜியும் அவருடைய காலாட் படையும் வந்ததை இருதிறத்தாரும் கவனிக்கவேயில்லை; இருதிறத்தாரும் போரிலேயே கவனம் செலுத்தியிருந்தார்கள். பீஜப்பூர்ப் படையானது முற்றிலும் முறியடிக்கப்பட்டது. இப்படையில் அநேகர் விழுந்து மரித்துவிட்டார்கள்; எஞ்சியவர்கள் பணிந்து சரணடைந்து விட்டார்கள். பொறுக்கமுடியாத கோபத்தினலோ, அல்லது பவானிதேவியின் அருட் சக்தியினலுண்டான ஆவேசத்தினலேயோ நெட்டாஜி தன்னுடைய பலத்தினும் பதின்மடங்கு அதிக பலத்தை உபயோகித்துச் செய்த யுத்த சாகசத்தினல் களைத்து, சிவாஜியைக் கண்டவுடனே, அப்படியே சிவாஜியின் மார்பின்மீது சாய்ந்துவிட்டான். சிறிதுநேரம் கழித்து அவன் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கவே, சிவாஜி அவனைப் பலவிதமாக உபசரித்து, அவன் அடைந்திருந்த காயங்களுக்கு வருந்தி மிகவும் மெச்சிக்கொண்டாடினர்.

ஜயித்தவர்களும் தோற்றவர்களும், அன்றிரவு பக்கத்துக் கிராமமாகிய காலபுரத்தில் தங்கிக் காலங்கழித்தார்கள். மறுநாட் காலையில், தோற்றுத் தம்மிடம் சரண்புகுந்திருக்கும் மகம்மதியர்களிடம் சிவாஜி மிகுந்த அநுதாபங் காட்டிப் பிரியம் பாராட்டினன். ஜயமடைந்தவுடனே அன்பே யுருவாய் விளங்குவது சிவாஜியின் இயற்கை. மகம்மதியர்களுடைய ஆயுதங்களெல்லாம் அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன. வழியாகாரத்திற்கு வேண்டிய தானியாதிகளுடன் அவர்கள் பீஜப்பூருக்குச் செல்லும்

படி விடைகொடுத் தனுப்பப்பட்டார்கள். பின்னர் சிவாஜி நெட்டாஜியைப் பார்த்து "நெட்டாஜி! நாம் இப்பொழுது முதலாவது செய்யவேண்டியது இந்தத் திரவியத்தை ராஜகட்டத்திற்கு உடனே அனுப்பிவிடவேண்டியது; ராஜகட்டமானது தட்சிண தேசத்திலேயுள்ள கோட்டைகளெல்லாவற்றிலும் பலம் மிகுந்த கோட்டையாகப்போகிறது. அங்கே இதைக்கொண்டு செல்வது எனது வேலை; உன்னுடன் நேற்றுத் தைரியமாக நின்று போர்புரிந்த குதிரைவீரர்களைக் கூட்டிக்கொண்டு நான் போகிறேன். மகாராஷ்டிர தேசத்திற்காகப் பாடுபடுதற்கு நீ ஆத்திரம் மிகுந்தவனாயிருக்கிறாயென்பது எனக்குத் தெரியும். ஆதலால் நீ இக்காலாட் படையை இட்டுக்கொண்டு கலியாணநகரை நோக்கிச் சென்று அப்பாஜி சாங்தேவருடைய முயற்சிகள் பலிக்குமாறு உன்னாலான உதவியை நீ செய்யச்செல்வாய்" என்று நெட்டாஜியை அப்பாஜி சாங்தேவர் இறங்கியிருக்கும் இடமாகிய கற்கவனத்திற்கு அனுப்பிவிட்டுத் தாம் ராஜகட்டத்தை நோக்கிச்சென்றார்.

---

# அத்தியாயம்—16.

## கலியாணநகர் பிடிபட்டது

நெட்டாஜியும் அவனுடைய ஆட்களும் நெடுந்தூரம் நடந்து கல்கவனத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால், அப்பாஜி சாங்தேவர் அங்கிருந்து நீங்கி கலியாண நகருக்கு நான்கு மைல் தூரத்திலுள்ள அம்பர்நாதம் என்ற கிராமத்தில் இருக்கிறாரென்று கேள்விப்பட்டு அங்கு சென்று, அவரிடத்தில் சிவாஜி தட்சிணதேசத்திற்குச் சென்றிருக்கிறாரென்றும், அப்பாஜி சாங்தேவரை கொங்கணதேசத்திலுள்ள படைகளுக்கெல்லாம் சைந்நியாதிபதியாக நியமித்திருக்கிறாரென்றும், கலியாண நகரை எவ்விதத்திலாவது பிடித்துவிடவேண்டுமென்றும், முடியுமானால் ஸ்ரீவர்த்தன கோட்டையில் அடைபட்டுக்கிடக்கும் திரியம்பகராவ் மகம்மதியர்களிடம் சரண் அடைந்து விடாதபடி சீக்கிரம் ராஜமாச்சியை மீட்டுவிடவேண்டுமென்றும் நெட்டாஜீ கூறினான். சிவாஜி தம்மீது இவ்வளவு நம்பிக்கையும் அன்பும் வைத்திருக்கிறாரென்று அப்பாஜி சாங்தேவர் சந்தோஷித்து, சீக்கிரத்தில் கலியாண நகரைத் தகர்த்துவிடுவதாகத் தீர்மானித்தார். அவர் இதற்கு முன்னமேயே சிவாஜி போபுரத்திற்கு அனுப்பியிருந்த பலத்த படையுடனே சமாச்சாரப் போக்குவரவு வைத்துக்கொண்டிருந்தார். ஆற்றின் வழியாக அனுப்பப்பட்ட பித்தளை பீரங்கிகள் கரையில் இறக்கப்பட்டுத் தக்க இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. போர்த்தொழில் பயிற்றுவிக்கும் வேலையொன்று தேடிவந்த போர்த்துகேசியன் ஒருவன் அப்படை வீரர்களுள் புத்திசாலிகளான சிலருக்கு பீரங்கியைக் கையாளும் விதம் இப்படியென்று கற்றுக்

கொடுத்திருந்தான். கலியாணநகரக் கோட்டையைக் காத்துக்கொண்டிருந்த பழயகாலத்துப் பீரங்கிகளினும் ஐரோப்பாவிலிருந்து புதிதாகக் கொண்டுவரப்பட்ட இப்பீரங்கிகள் உயர்ந்தவையே என்று கருதப்பட்டன.

கலியாண நகரானது உல்லாச நதியின் கிழக்குக் கரையிலே கட்டப்பட்டு ஒரு காலத்திலே மகாராஷ்டிர தேசத்திற்கு ராஜதானி நகரா யிருந்தது. 70 ஏகரா பூமியடங்கிய இந்நகரைச் சுற்றிலும் ஒரு சுவர் எழுப்பப்பட்டிருந்தது. அச்சுவரின் வடமேற்கு மூலையில் நதிமுகமாகக் கோட்டை கட்டப்பட்டிருந்தது; நகர்ச் சுவருக்கும் இக்கோட்டைக்கும் நடுவே ஒரு பெரும் பள்ளம் இருந்தது. அக்கோட்டையானது நதிப்பக்கத்திலே மிகப் பலமாகக் கட்டப்பட்டிருந்த பொழுதிலும், நகர்ச்சுவர்கள் பலவீனமாயும் சிறியவையாயும் இருந்தன. அவ்வூருக்குள்ளே அடுக்கடுக்காக அநேக உப்பரிகைகளுள்ள வீடுகள் பல இருந்தன; இன்னும் அழகிய கோவில்களும் பள்ளி வாசல்களும் எங்கு பார்த்தாலும் இருந்தன. நகருக்கு வடபுறத்திலும் கீழ்ப்புறத்திலும் நகர்ச் சுவர்கள் வரையில் அடர்ந்து செழித்த காடுகள் வளர்க்கப் பட்டிருந்தன. இந்நகரைப் பிடிக்கவேண்டுமென்று இப்பொழுது சிவாஜியினுடைய ஆக்ஞையா யிருக்கிறது. நெட்டாஜி வந்து சேர்ந்தவுடனே, அப்பாஜி சாந்தேவர் தமது இருப்பிடத்தை உல்லாச நதியின் மேல்கரையாகிய கோணம் என்ற இடத்துக்கு மாற்றிக்கொண்டு, கலியாண நகர்க் கோட்டைக்கு நேர் எதிராக தமது பித்தளை பீரங்கிகளை நிறுத்திவைத்தார். இவ்விடத்தி லிருந்துகொண்டு மகாராஷ்டிரப் படைகள் போர்த்துக் கேசியனுடைய தலைமையின் கீழ் பீரங்கிகளைப் பிரயோகிக்க ஆரம்பித்து, கோட்டைக்குள்ளும் வடகிழக்கு மூலையிலும் குண்டுகளை யெறியத் தொடங்கினார்கள். இதுமாத்திர மன்று, நகரின் மேற்குச் சுவரின்

மத்தியிலேயுள்ள இறங்கு துறையிலே நதியின் வழியாக வரப்பட்ட ஆகாரப் பொருள்களேயும் வியாபாரச் சரக்குக் களேயும் மகாராஷ்டிரர்கள் பிடித்துக்கொண்டார்கள். அடிக் கடி இடைவிடாது நதியின் மறு கரையிலிருந்து கோட்டை தாக்கப்பட்டு வந்ததால், கோட்டையிலிருந்த மகம்மதியப் படையின் பெரும்பாகமும் கோட்டையின் மேல் சுவருக் குள்ளே வைக்கப்பட்டிருந்தது; நகரின் மற்றப் பக்கங்கள் அவ்வளவு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்படவில்லை. இன் னும் மத்தியான வேளைகளில் மகாராஷ்டிரர்கள் தாக்காம லிருந்தால், மகம்மதியர்கள், கோட்டைச் சுவர்ப் புறத்தி னின்றும் நீங்கி, இளைப்பாறுவது வழக்கம். இவற்றையெல் லாம் ஊகித்துக்கொண்டே, அப்பாஜி சாங்தேவர் மேற் கண்டவிதமாக ஏற்பாடு செய்திருந்தார். ஒருநாட் காலே யில் வழக்கம்போல பீரங்கிப் பிரயோகம் நடந்துகொண் டிருக்கையில், அப்பாஜி சாங்தேவர் நெட்டாஜியை இரண்டு அல்லது மூவாயிரம் மகாராஷ்டிரர்களை இட்டுக்கொண்டு நதி யின் மேற்புறமாக மேலேறிச் செல்லும்படியும் கோட்டை யின்மேல் மேலுள்ள காவல்காரர்கள் கண்டுபிடிக்க முடி யாதபடி அவ்வளவு தூரத்திலே செல்லவேண்டுமென்றும் கூறி அனுப்பினர். நெட்டாஜியின் ஆட்கள் மிகவும் லேசான ஆனால் வன்மையான மூங்கில்களினால் ஆக்கப்பெற்ற ஏணி கள் பல எடுத்துக்கொண்டு சென்றார்கள். நதியிலே இவர் கள் நதியை எதிர்த்து நான்கு, ஐந்து மைல் தூரம் சென்று, பின்னர் படகுகளினின்றும் கீழே இறங்கி, அங்கிருந்த ஒரு தோப்பிலே மறைந்து மறைந்து, நகரின் வடக்குப் பக் கத்தை எதிர்ப்பதற்குச் சென்றார்கள். நல்ல நடு மத்தியா னத்திலே, சூரியன் உச்சந்தலையிலே வீசி உருக்கிக் கொண் டிருக்கும் சமயத்திலே—மகம்மதியர்கள் இளைப்பாறிக் கொண் டிருக்கும் சமயத்திலே—கோட்டையை எதிர்ப்பதென்று

தீர்மானிக்கப்பட்டது. இச்சமயத்திலே காவற்காரர்களும் எங்கேனும் ஒரு மூலையைத் தேடி ஒளிந்துகொள்வது வழக்கம். நகரின் இப்பாகமானது இதுவரையில் எதிர்க்கப்படாததினாலே, மகம்மதியர்கள் எப்பொழுதும்போல அஜாக்கிரதையா யிருந்தார்கள். மகாராஷ்டிரர்கள் திடீரென்று வந்து பாய்ந்துவிட்டார்கள். மகம்மதியர்கள் கூச்சலிடுவதற்குக் கூட சமயம் இல்லை; நிமிர்ந்து பார்ப்பதற்கு முன் மகாராஷ்டிரர்கள் ஏணிகள் வைத்து ஏறிவிட்டார்கள். சிறிதும் சண்டை யில்லாமல், ஒருதுளி ரத்தம்கூடக் கீழே விழாமல், நகரானது மகாராஷ்டிரர்களுடைய கைவசமாய்விட்டது. நெட்டாஜி அங்கிருந்த படையைத் துரத்திக்கொண்டே கோட்டையை அணுகினான்; மகம்மதியப் படையாட்களில் அநேகர் ஆயுதங்களை எறிந்துவிட்டு, நெட்டாஜியின் அடி பணிந்தார்கள். நகர் பிடிபட்டு விட்டாலும் பீஜப்பூர் சமஸ்தானத்தாரால் அந்நகருக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த முல்லாஹு ஆமத் என்பவன் கோட்டையை விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டான். ஆகையால் அப்பாஜி சாங்தேவர் நதியின் மறு கரையிலிருந்த பித்தளை பீரங்கியைச் சுற்றி எடுத்துவந்து வடமேற்குப் பக்கத்தில் ஒரு உயர் நிலத்தில் கொண்டுவந்து நிறுத்தினார். போர்த்துக்கேசியன் பீரங்கியை உபயோகிக்க ஆரம்பித்தான். நதிப் பக்கத்திலுள்ள கோட்டைச் சுவரைவிட, இப்பக்கத்திலுள்ள கோட்டைச் சுவர் பலவீனமா யிருந்தது; ஆதலால் மகாராஷ்டிரர்களுக்கு இது ஒரு அநுகூலம்தான். கோட்டைச் சுவர் சீக்கிரத்திலே உடைபட்டுவிட்டது; இன்னும் அந்நகரத்து அதிபதி எதிர்க்கத் துணிவானானால், சிறிதும் தாமதமின்றி அவ்விடம் நொறுங்கிவிடும். அநாவசியமாக யுத்தம் செய்வது சிவாஜியின் வழக்கமல்லவாதலால், அப்பாஜி சாங்தேவர் அந்நகரத் ததிபதியைப் பணிந்துவிடும்படி சொல்லி

அனுப்பினூர். முல்லானு ஆமத்தும் வேறுகதியின்றிப் பணிந்து விட்டான். அப்பாஜி சாங்தேவர் அவனை வெகு மரியாதை யுடன் நடத்தி, அவனுக்கு வேண்டியன அளித்து அவனைப் பீஜப்பூருக்கு அனுப்பி வைத்தார். மகாராஷ்டிரப் படைகள் எங்கும் ஜயகோஷம் புரிந்தன; பேரிகைகள் முழங்கின. "சிவாஜி மகாராஜருக்கு ஜய, ஜய" என்று கட்டியங்கள் முழங்கின. அப்பாஜி சாங்தேவர், நெட்டாஜி முதலிய தலை வர்கள் தங்களுக்குக் கிடைத்த ஜயமெல்லாம் பவானிதேவி யின் அநுக்கிரகமே என்று பவானி மாதாவைப் பிரார்த்தனை செய்தார்கள்.

இந்த முக்கியமான ஜயத்தைக் கொண்டாடுவதற்காக அப்பாஜி சாங்தேவர் கோட்டையிலே தமது பரிவாரங்க ளுக்கு ஒரு பெரிய விருந்துசெய்தார். பவானி மாதாவுக்கு அநேக ஆடுகள் பலியிடப்பட்டன. மிகுந்த பரிமளத்துடன் புலவ் என்ற மாமிசப்பலகாரம் செய்யப்பட்டது. பலவித பட்சணவகைகள் செய்யப்பட்டன. வெவ்வேறு விதமான மதுபான வர்க்கங்கள் கொடுக்கப்பட்டன. நெட்டாஜியினு டைய நிகரற்ற வீரர்கள் அனைவரும் அருமையான விருந் துண்டு அமிர்த மது குடித்து ஆநந்தக்கூத்தாடினூர்கள். மாம் சம் உண்ணாத மற்ற உயர்ந்த பிராமண வீரர்களுக்குப் பரு ப்பு, நெய், பாயசம், பலகார வர்க்கங்களுடன் சம்பிரமமான விருந்து நடந்தது. பின்னர் பந்தயவிளையாட்டுக்கள் நடந் தன. கத்தி விளையாட்டுக்கள், சிலம்ப வித்தைகள், குதிரை யோட்டம், குஸ்தி முதலியவை நடைபெற்றன. கத்தி விளை யாட்டுக்களிலே கைதேர்ந்த பலர் கைகளிலே எலும்மிச்சம் பழத்தை வைத்துக்கொண்டு இரண்டு துண்டாகும்படி ஒரே வீச்சில் வெட்டி எறிவார்கள்; கைகளிலே ஒரு சிறிதும் கத்தி படாமலே தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுவார்கள். குதிரை வீரர்கள் குதிரை வேகமாக ஓடிக்கொண்டிருக்கும்

பொழுதே, ஒரு குறிவைத்து அக்குறி தப்பாமல் ஈட்டியை எறிவார்கள். எதிரியைத் துரத்துவதுபோல் துரத்தியோடி திடீரென்று பின்வாங்கி நெடுந்தூரம் ஓடித் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுவார்கள். அம்புகளை எய்து, ஆச்சரியகாமான வித்தைகளைக் காட்டுவார்கள்; புதிதாகத் துப்பாக்கிப் பயிற்சிபெற்ற வீரர்கள் தங்கள் சாமர்த்தியங்களைக் காட்டுவார்கள். இவ்விதமாகப் பற்பல வித்தைகளாடிய பின்னர், எல்லோருக்கும் வெற்றிலை பாக்குக் கொடுக்கப்பட்டது; வித்தைகளிலே சாமர்த்தியம்காட்டியவர்களுக்குத்தக்கபரிசுகள் அளிக்கப்பட்டன. அந்நகர் பிடுபடுவதற்கு முக்கியஸ்தர்களாயிருந்த நெட்டாஜி, போர்த்துகேசியன் முதலியவர்களுக்கு ஆடம்பரமான உடைகள், ஆபரணங்கள் முதலியவை அளிக்கப்பட்டன. கடைசியில் பன்னீர் தெளிக்கப்பெற்று எல்லோரும் வாசனைத் திரவியங்கள் பூசிக்கொண்டு சந்தோஷமாய் வீற்றிருக்கும்பொழுது, எவனோ ஒருவன் ஏதோ அவசர காரியமாய் வந்திருக்கிறதாக வெளியேயிருந்து சொல்லியனுப்பினான். உடனே வந்தவனை உள்ளே இட்டுக்கொண்டு வரும்படி அப்பாஜி சாங்தேவர் சொல்லியனுப்பவே, அவன் உள்ளே வந்தான். நெடுந்தூரம் ஓடி வந்ததினால் அவன் மிகக் களைத்திருந்தான். அவனுடைய உடைகள் வழிப்பிரயாணத்தினால் அழுக்கடைந்திருந்தன; அவன் களைப்பு மிகுதியினால் ஒரு குடி வெறியனைப்போல, தள்ளாடித் தள்ளாடிக் கொண்டே உள்ளேவந்தான். அப்பாஜி சாங்தேவர் அவனைப் பார்த்து என்ன சமாச்சாரம் என்று கேட்க, அவன் முதலில் பேசமுடியாமல் தவித்து, பின்னர் மெல்ல மெல்லச் சொல்ல ஆரம்பித்தான். ஸ்ரீவர்த்தன கோட்டைக்குள்ளே அடைப்பட்டுக் கிடக்கும் திரியம்பகராவ் அப்பாஜி சாங்தேவரிடத்திற்கு உதவி வேண்டி இவனை அனுப்பி மூன்று நாட்கள் ஆயின. இவன் ராஜமாச்சியிலிருந்து மேல

மதில் வழியாக மாறுவேடத்துடன் ஏறிக்குதித்து மகம்ம தியப் படையினூடே புகுந்து எவரும் அறியாமல் வெளியே வந்து விட்டான். இவன் முந்தியநாள் பகலிலேயே அப்பாஜி சாந்தேவரிடத்திற்கு வந்திருக்கலாம். ஆனால் வழியில் அவ னுக்குக் கடூரமான ஜுரம் வந்துவிட்டது. வழியிலே ஒரு கிராமத்தில் இவன் மூர்ச்சையாகி ஒரு விறகு வெட்டியினு டைய குடிசையில் வெகுநேரம் விழுந்துகிடந்தான். எவ்வ ளவுநேரம் விழுந்து கிடந்தானென்று அவனுக்கேதெரியாது. அவனுடைய மனமானது குழம்பிக்கிடந்தது. அவனுக்கு இன்னது சொல்வதென்றே தெரியவில்லை. திரியம்பகாவும் அவருடைய சிறியபடையும் மிகுந்த கஷ்டத்திற் குட்பட் டிருக்கிறார்களென்று மாத்திரம்தான் அவனுக்குத் தெரியும். ஆனால் அவன் ஒருகடிதம் கொண்டுவந்திருந்தான். கொங் கணதேசத்திலே மகாராஷ்டிரப் படைகளுக்கு அதிபதியா யிருப்பவர் எவரோ அவருக்கு இக்கடிதம் வருகிறது என்று அக்கடிதத்தின் மேல்விலாசம் எழுதப்பட்டிருந்தது. அக்கடி தம் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"ஸ்ரீவர்த்தன கோட்டையினுடைய பலத்தினாலும், நம்மை என்றும் பாதுகாக்கின்ற பவானிதேவியின் கிருபை யினாலும், உலகிலே என்றென்றும் துன்புறுபவர்களை ஈடேற் றுவதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் பெரியோர்களு டைய கடாட்சத்தினாலும் ஆகாரப்பொருள்கள் உள்ளவரை யில் கோட்டையைப் பாதுகாத்துக் கொள்ளலாமென்று நம் பினோம். ஆனால் எதிரிகள் கோட்டையின் தெற்கு மதிலில் ஒரு பெரிய சுரங்கம்வெட்டி அதிலே வெடி மருந்துகளை வைத்துக் கொளுத்த யோசனைபண்ணி யிருக்கிறார்கள். இன் றைய தினத்திலிருந்து இன்னும் 5-நாட்களுக்குள்ளாக சுரங்கம் வெட்டி முடிந்துவிடுமென்று கேள்விப்படுகிறேன். இதைத் தடுப்பதற்கு என்னால் முடியவேமுடியாது. இன்

னும் 5-நாட்களுக்குள் உதவி வராமற்போனால், எங்கள் பாடு திண்டாட்டந்தான். நாங்கள் பணிந்து சரண்புகுந்துவிடத் தான் வேண்டிவரும். மகாராஷ்டிரர்கள் மகம்மதியர்களுக் குப் பணிந்து விட்டார்களென்ற இழிசொல் வாராமல் பவானிமாதா அநுக்கிரகிப்பாளாக. இன்று நாலாவதுநாள் இரவு பதினொரு மணிக்குச் சந்திரன் உதயமாகிறது. அன்றி ரவு, சந்திரோதயமானவுடன் எங்களைச் சுற்றிநிற்கும் எதிரி களை எதிர்த்து நீங்கள் அடித்தால், நாங்கள் ஸ்ரீவர்த்தன கோட்டைக்குள்ளிருந்து வெளியே கிளம்பி எதிரிகளை யடிக் கிறோம். இப்பொழுது எதிரிகளின் தொகை ஆயிரம் இருக் கலாம். லோககட்டம், விஷ்ணுபுரம் என்ற இரண்டு கோட் டைகளையும் தாக்குவதற்கு இங்கிருந்த மகம்மதியப்படைக ளிற் பாதி சென்றுவிட்டது. ஆகையால் நாங்கள் இன்று நாலாநாள் உதவியை எதிர்ப்பார்த்திருக்கிறோம்''

இக்கடிதத்தைப் பார்த்தார் அப்பாஜி சாந்தேவர்; நெட் டாஜியினிடம் காட்டினார். படைவீரர்கள் அனைவருக்கும் சங்கதி தெரிவிக்கப்பட்டது. அக்காலத்திலே ஏதேனும் ஒரு பெரிய காரியத்திற்குப் புறப்பட்டால் தலைமை வகிப்பது யார் என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒரு வழக்கம் இருந்தது. அரசனாவது சைந்நியாதிபதியாவது படைவீரர்கள் எல்லோ ரையும் கூட்டம்போட்டு, அவர்களின் நடுவே ஒரு வெற்றி லையை எடுத்தெறிவது வழக்கம். எவன் தலைமை வகிக்க விரும்புகிறானோ, அவன் சென்று அவ்வெற்றிலையைக் கையி லெடுப்பது வழக்கம். அதேமாதிரி அப்பாஜி சாந்தேவர் தமக்குமுன் விரிக்கப்பட்டிருந்த ரத்தின கம்பளத்தின்மீது ஒரு வெற்றிலையை வீசியெறிந்தார். அச்சபையிலே கீர்த் தியை விரும்பிய வீரர்கள் பலர் இருந்தார்கள்; தேசத்தின் நன்மையின் பொருட்டு உயிரைத் திரணமாகக் கருதிய சூரர் கள் பலர் இருந்தார்கள். ஆயினும் எவரும் அவ்வெற்றி

லையை எடுக்கவில்லை. நெட்டாஜியும் தன்னைவிட சாமர்த்திய சாலிகள் செல்லட்டுமென்று கருதி அதிக அடக்கத்துடன் பேசாதிருந்தான். இப்பொழுது வெற்றிலையண்டையில் எவரும் வாராமலிருந்ததைப் பார்த்து நெட்டாஜி சமேலென்று தனது ஆசனத்திலிருந்து எழுந்து அவ்வெற்றிலையைக் கையிலெடுத்துத் தனது தலைப்பாகையில் அணிந்துகொண்டான். எல்லோரும் சந்தோஷித்து நெட்டாஜியை மெச்சிக் கை தட்டி ஆர்ப்பரித்தார்கள்; இவனைவிட வேறு எவரும் இக் காரியத்திற்கு ஏற்றவர்களல்லர் என்று எல்லோரும் ஒரே வாக்காகக் கூறினார்கள். அப்பாஜி சாந்தேவருக்கு உண்டான சந்தோஷத்திற்கோ அளவே இல்லை. அவர் நெட்டாஜியை நோக்கி "அப்பா! நெட்டாஜி! உனக்கு எத்தனை போர் வீரர்கள் வேண்டும்?" என்று கேட்க, நெட்டாஜி "ஒரு மகம்மதியனுக்கு ஒரு மகாராஷ்டிரன் விழுக்காடாக, ஆயிரம்பேர் எனக்குப்போதும். நான் ஸ்ரீவர்த்தன கோட்டைக்குள்ளே நுழைந்துகொண்டேனேயானால், பின்னர் பிரம்மா வந்தாலும் அக்கோட்டை என்னிடமிருந்து நீங்காது. ராஜமாச்சியை நாம் கைப்பற்றிக்கொள்வோமானால், அது கொங்கணதேசத்தின் வாசல் துவாரத்தைக் கைப்பற்றியதுபோலாகும்" என்று கூறினான்.

## அத்தியாயம்—17.

### ராஜமாச்சி பிடிபட்டுவிட்டது

ஆகிவிட்டது. அடுத்த நாளிரவு பதினேரு மணிக்கு சந்திரோதய சமயத்திலே திரியம்பகராவ் ஸ்ரீ வர்த்தன கோட்டைக்குள்ளிருந்து வெளியே கிளம்பிவிடுவார். அதற்குள்ளாக நெட்டாஜி உதவிக்குப் போய்ச் சேரவேண்டும். இனிமேல் ஒரு நிமிஷமேனும் தாமதிக்கக் கூடாது. தாமதித்தால் ஸ்ரீ வர்த்தன கோட்டை மகம்மதியர்களின் வசமாய்விடும்; திரியம்பகராவும் அவருடைய படையும் இத்தனை நாட்களாக எதிர்த்து நின்றது வீணாகி, மகம்மதியர்களிடம் சரண் அடையவேண்டி வந்துவிடும். தவிர, மறுபடியும் ராஜமாச்சியை ஜயிப்பதென்றால் லேசான காரியமன்று. ஆதலால் நெட்டாஜி ஒரு நிமிஷங்கூடத் தாமதியாது தனது விசுவாச நண்பனாகிய ராமனைக் கூப்பிட்டு, சங்கதியைச் சவிஸ்தாரமாகச் சொல்லி “ராமா, நாளையதினம் சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னதாக நீ எப்படியாவது ராஜமாச்சி கோட்டைக்குள் நுழைந்துகொள்ள முடியுமா?” என்று கேட்டான்.

ராமன் “தாங்கள் இடும் வேலை எதுவாயினும், அதைச் செய்து முடிப்பதற்கு நான் முயற்சியாவது செய்யமாட்டேனு? என்றால் ஆனமட்டும் முயன்று பார்க்கிறேன். ராஜமாச்சிக்குள் எப்படியாவது நுழைந்து விடலாமென்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் ஆயுதபாணியாகச் செல்லவேண்டுமோ?” என்று கேட்டான்.

“வேண்டியதில்லை; உன்னுடன்கூட ஒரு பெரிய நீளமான கயிறு ஒன்றை நீ எடுத்துக்கொண்டு சென்றால் போதும்” என்றான் நெட்டாஜி.

"அது மிகச் சுலபமே. புல் விற்பவர்கள் எத்தனையோ பேர் கோட்டைக்குள்ளே புல் சுமை சுமந்துகொண்டு தினந் தோறும் போய்வருகிறார்கள். ஆகையால் நானும் ஒரு பெரிய புல் சுமையை எடுத்துக்கொண்டு, அப் புல் சுமையைச் சுற்றிக் கட்டியாவது அல்லது அப்புல் சுமைக்குள் வைத்துக்கொண்டாவது ஒரு பெரிய கயிற்றை கோட்டைக்குள் கொண்டுபோவது பெரிய காரியமன்று. கயிற்றைக் கொண்டுபோய் நான் என்னசெய்வது?" என்று ராமன் கேட்க, நெட்டாஜி "ராஜமாச்சியின் கிழக்குப் பக்கத்திலே கோட்டையின் மதில் பாறையே யாகும். இப்பாறையானது செங்குத்தா யிருக்கின்றது. அவ்விடத்திலே அச்செங்குத்துப் பாறையின் வழியாக நீ இந்தக் கயிற்றைக் கட்டி வெளியேவிடு. நாங்கள் கீழே காத்துக்கொண்டிருப்போம். சந்திரோதய சமயத்திலே, நாங்கள் இக்கயிற்றின் உதவியால் கோட்டையில் ஏறிப் புகுந்துகொள்வோம்" என்றான்.

"நான் முயற்சி செய்கிறேன். ஒருவேளை பலிக்காமற் போய்விட்டாலோ?"

"பலிக்காவிட்டால், கோட்டைக்குள் நுழைவதற்கு வேறு ஏதேனும் உபாயம் தேடவேண்டும். ஆனால், நேரமாகிறது. நீ உடனே புறப்பட வேண்டும்"

ராமன் சரியென்று சொல்லி விடைபெற்றுச் சிறிது தூரம் செல்வதற்குள்ளாக, நெட்டாஜி அவனை மறுபடியும் கூப்பிட்டு "எங்கே நமது எண்ணம் எதிரிக்குத் தெரிந்துவிடுமோ வென்று எனக்குக் கவலையா யிருக்கிறது. அப்பாஜி சாங்தேவர் வெற்றிலையை ரத்தின கம்பளத்தின்மீது எறிந்த பொழுது, அநேகர் பார்த்திருக்கிறார்கள். அங்கிருந்தவர்களிற் சிலர் பீஜப்பூர் அரசாங்கத்தினிட மிருந்து பணம் பெற்றுக்கொண்டு நமது ஆலோசனைகளை அறிந்து செல்வ

தற்கு வந்த ஒற்றர்களா யிருக்கலாம். அப்படி ஏதேனும் மோசம் நடந்துவிடாதபடி நாம் ஜாக்கிரதை யிருக்கவேண்டும். நான் உன்னுடன் நகரவாசல் வரையில் வந்து உன்னை வழி யனுப்புகிறேன்" என்முன்.

பாஜா குகையில் கொள்ளைக் கூட்டத்தாரில் ஒருவனு யிருந்த கோபாலன் இப்பொழுது நெட்டாஜியின் படையில் ஒரு பெயர்பெற்ற—விசுவாசமுள்ள குதிரை வீரனுகிவிட்டான். அவன் ராமனுக்கு முன்னமேயே சிநேகிதனல்லவா? ராமன் அவனையும் கூட்டிக்கொண்டு பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து நகரவாசலண்டையில் வந்தான். நெட்டாஜியும் கூட வந்தான். கோட்டை வாசலில் வந்தவுடன் அங்கு காவலிருந்தவன் நெட்டாஜியினிடத்தில் இப்பொழுதுதான் சுமார் 10-நிமிஷங்கட்கு முன் இரண்டு பெயர்கள் குதிரைமீதேறிக்கொண்டு கோட்டைக்கு வெளியே சென்றூர்கள் என்று சொல்லவும், நெட்டாஜி திடுக்கிட்டு, ராமனைப் பார்த்து மெல்லிய குரலுடன் "நான் நினைத்த மாதிரியே இருக்கலாம். நாம் வருவதை ஹபீஸ்கானிடத்தில் முன்கூட்டி தெரிவிப்பதற்காக அனுப்பப்பட்டவர்களா யிருக்கலாம் இவர்கள். அப்படியாயின், இவர்களை நாம் உயிருடன் ராஜமாச்சிக்குச்செல்லும்படி விடக்கூடாது. ஆனால் அவர்கள் இருவரை எதிர்த்துக் கொல்வதற்கு நீ ஒருவனுகப் போவது சரியன்று. உனது நண்பனுகிய கோபாலன் உன்னுடன் செல்வதற்கு இசைவாஞு? அவனிடத்தில் உனக்கு நம்பிக்கைதாஞு?" என்று கேட்க, ராமன் "அவன் மிகவும் நல்லவன்; அவனை மனப்பூர்த்தியாக, பரிபூரணமாக நம்பலாம்" என்முன். நெட்டாஜி "அப்படியாயின், அவன் உடனே குதிரையைத் தயார் பண்ணட்டும். அவர்கள் அப்படியே துரோகிகளாயின், அவர்களை அடித்து வீழ்த்திக் கொன்றுவிடுதற்கு வேண்டிய அம்புகளையும் வில்லுகளையும்

கோபாலனை எடுத்துக்கொள்ளச் சொல்'' என்று கூறவே, கோபாலன் உடனே லாயத்திற்கு ஓடிச் சென்று ஒரு குதிரையின்மீதேறித் தனக்கு வழிக்கு ஆகாரத்தை ஒரு மூட்டையாகக் கட்டித் தோளிலிட்டுக்கொண்டு இரண்டு வில்லுகளுடனும் ஒரு டஜன் அம்புகளுடனும் தயாராகக் கோட்டை வாசலில் வந்து நின்றான். ராமனும் கோபாலனும் நெட்டாஜியினிடம் விடைபெற்றுக்கொண்டு கலியாண நகரின் கிழக்குக் கோட்டை வாசலிலிருந்து ராஜமாச்சியை நோக்கிப் புறப்பட்டார்கள். சிறிது தூரம் செல்வதற்குள்ளாக, ஒரு குன்றைச் சுற்றிச் செல்லும்படி நேரிடவே, இருவரும் தங்கள் தங்கள் குதிரைகளை வேகமாகத் தட்டி விட்டார்கள். அக்குன்றைச் சுற்றித் திரும்பினார்கள்; இவர்களுக்கு முன் சென்றதாகக் கூறப்பட்ட இரண்டு குதிரைக்காரர்களும் சில மைல் தூரத்திற்கு முன் செல்வதைக் கண்டார்கள்; உடனே இன்னும் வேகமாகக் குதிரையைத் தட்டி விட்டார்கள். ஆயினும் முன் சென்ற இரண்டு குதிரைகளின் வேகத்தைவிட அதிக வேகமுடையனவாயிருக்கவில்லை இவர்களுடைய குதிரைகள். நெடுந்தூரம் இப்படியே பின்வந்தவர்கள் துரத்த, முன் சென்றவர்கள் ஓட, இடையில் ஒரே விதமான தூரம் இருந்தது. உடனே அவர்களுக்குப் பின்னால் ஒரு குதிரை வெகுவேகமாக ஓடிவருகிற குளம்படிச் சத்தம் கேட்டது. ராமனும் கோபாலனும் திரும்பிப் பார்த்தார்கள்; ஆகாயத்திலே தூள்பறக்கும்படி அதட்டிக் குதிரையைத் துரத்திக்கொண்டு வருகிறான் நெட்டாஜி. இவ்விருவரையும் அனுப்பிவிட்டு, நெட்டாஜி யோசனை செய்து பார்த்தான்; முதன் முதலாகக் குதிரையேறிக் கோட்டைக்கு வெளியே சென்ற இருவரும் மகம்மதியர்களின் கட்சியைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கலாம் என்றும் அவர்கள் மகாராஷ்டிரர்கள் ராஜமாச்சியைப் படையெடுக்கப் போகும் சங்

கதியை முன்கூட்டியே தெரிவிப்பதற்குச் சென்றவர்களா கத்தான் இருக்கவேண்டும் என்றும் தீர்மானித்துக் கொண்டான்; அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை; தானும் பின்னாலேயே புறப்பட்டுவிட்டான். ராஜமாச்சியினருகே தன்னுடைய படைகள் வந்து சேரும்படி உத்தரவு செய்துவிட்டு நெட்டாஜி ஒரு நொடியில் வந்து சேர்ந்துவிட்டான். அவனுடைய அரபிக் குதிரை அதிவேகமாக அவனைக் கொண்டு சென்று ராமனையும் கோபாலனையும் அணுகிவிட்டது. கலியாண நகரிலிருந்து நான்கு அல்லது ஐந்து மைல் தூரம் தான் நெட்டாஜி சென்றிருக்கலாம்; இதற்குள்ளாக ராமனையும் கோபாலனையும் கண்டுவிட்டான்; முன்னே செல்கின்ற மோசக்காரர்கள் இருவரையுங்கூடக் கண்டுவிட்டான். தான் பின்னாலேயே வந்த காரியத்தை ராமனிடத்திலும் கோபாலனிடத்திலும் சொல்வதற்காகச் சிறிது மெல்லக் குதிரையை நடத்தி அவர்களிடம் பேசிவிட்டு, முன்னே செல்கின்ற இருவரையும் துரத்திக்கொண்டு வெகு வேகமாக ஓடினான். வழியோ மலைவழி; பெரிய பெரிய பாறைகளெல்லாம் குத்துக் குத்தாக வழியில் நிற்கின்றன; இவற்றை யெல்லாம் நெட்டாஜி ஒரே தாண்டாகத் தாண்டி காடு மலைகளையெல்லாம் லட்சியம்செய்யாது கனத்த வேகத்துடன் வருகிறான். முன்னே சென்ற மோசக்காரர் இருவரும் தங்களைப் பின் தொடர்ந்து வருகின்ற நெட்டாஜியைக் கண்டு விட்டார்கள். நெட்டாஜியின் அரபிக்குதிரை மேன்மேலும் வேகம் மிகுந்து தங்களை நெருங்கி வருவதைப் பார்த்த மோசக்காரர் இருவரும் நெட்டாஜியை மற்ற இருவரும் உதவிக்கு வருமுன் அடித்து வீழ்த்திவிட வேண்டுமென்று எண்ணங்கொண்டவர்களாய்த் திரும்பி நின்று கத்தியை உருவினார்கள். நெட்டாஜி அவர்களை எதிர்க்குமுன், அவர்கள் யார் என்றும் என்ன காரியமாகச் செல்கிறார்களென்றும் கேட்டான்.

"நாங்கள் யாரானால் உனக்கென்ன? நீ ஏன் இவ்வளவு வேகமாக எங்களைப் பின்தொடர்ந்து வருகிறாய்? உன் உயிரினிடத்து உனக்கு ஆசையுண்டானால், நீ இப்படியே திரும்பி விடு. நீ எங்களைப் பின்தொடராமல் தடுப்பதே எங்களது வேலை" என்று அவ்விருவரில் ஒருவன்கூற, உடனே இருவரும் நெட்டாஜியை எதிர்த்தார்கள். நெட்டாஜி இருவரையும் ஒரே சமயத்தில் எதிர்ப்பதற்குச் சிறிது யோசனை செய்து வலதுபக்கம் நின்றவனை முதலில் அடித்து வீழ்த்திவிடக் கருதி இடது பக்கமாக ஒதுங்கித் திரும்பிநின்று அவனுடன் வாட்போர் புரிய, மற்றவன் பத்து இருபதுகஜ தூரத்திற்கு அப்புறம் நின்றுவிடும்படி நேரிட்டது. நெட்டாஜி முன்னவனை மண்டையில் பார்த்து ஒரு அடி அடித்து, மண்டையைத் தகர்த்து வேலையை முடித்துவிட்டான். அவன் இறந்து வீழ்ந்தான். பின்னர் நெட்டாஜி மற்றவன் பக்கமாகத் திரும்பி அடிக்க எத்தனிக்கவே, அவன் நெட்டாஜியினுடைய கத்தியானது முன்னவனுடைய ரத்தத்தில் மூழ்கி நனைந்திருப்பதையும் அவன் அருகே வீழ்ந்து இறந்து கிடப்பதையும் கண்டு பிரமித்துப் பயந்து வந்த வழியே திருப்பி ஓடினான்; அங்கே இருவர் தூக்கி வருவதைக் கண்டு, இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்து, பாட்டையினின்றும் விலகிக் காட்டுவழியே ஓடினான். அப்பொழுதும் அவன் தப்பித்திருக்கலாம்; ஆனால் நெட்டாஜியினுடைய புத்தித் திறமையானது ராமனையும் கோபாலனையும், அம்பு, வில் முதலிய ஆயுதங்களைத் தரிக்கச் செய்திருக்கிறதல்லவா? அவர்கள் உடனே தங்கள் வில்லுகளில் அம்புகளைப் பூட்டி குறிதப்பாது எய்யவே, அவனுடைய குதிரையில் ஒரு அம்பும் அவனுடைய வலதுகாலில் ஒரு அம்பும் பட்டு, குதிரை உடனே கீழேவிழுந்து இறந்தது; அவன் கீழே விழுந்து ஓடமுடியாது தவிக்கவே, ராமனும் கோபா

லனும் அவனைப் பிடித்துக்கட்டினார்கள். நெட்டாஜியும் இதற்குள்ளாக வந்துவிட்டான்; பிடிபட்டவனைக் கூப்பிட்டு விசாரிக்கவே கலியாணநகரில் ஒரு தனவான் சிவாஜியின் பக்கம் சேர்ந்தவன்போலப் பாவனைபண்ணிக்கொண்டு பீஜப்பூர் சமஸ்தானத்துக்கு அநுகூலமா யிருக்கிறானென்றும் அவன் தான் தங்கள் இருவரையும் ராஜமாச்சிக்கு மகாராஷ்டிரர்களின் படை எடுப்பைத் தெரிவிப்பதற்கு அனுப்பிவைத்ததென்றும் கூறி, தான் உளவுகூறும் ஒற்றனே என்பதை ஒப்புக்கொண்டான். நெட்டாஜி அவனை கல்கவனத்திலிருந்த ஒரு சிறு மகாராஷ்டிரப் படையினிடத்தில் கைதியாக ஒப்புவித்துவிட்டு, ராஜமாச்சிக்குச் செல்லும்படி தான் பணித்திருந்த படை சென்ற இடத்தை நோக்கிச் சென்றான். ராமனும் கோபாலனும் ராஜமாச்சியை நோக்கிச்சென்றார்கள்.

ராமனும் கோபாலனும் பகலெல்லாம் சென்று, சூரியன் அஸ்தமித்து சந்திரோதயமானவுடனே ஒருமலைக் கணவாயினூடே சென்றார்கள்; அர்த்தராத்திரி சமயத்திலே ராமனுடைய பழைய நண்பனாகிய—அயூப்கானுடைய குதிரையைப் பாதுகாத்துக் கொடுத்த—குடியானவனுடைய குடிசைபோய்ச் சேர்ந்தார்கள். அவனுடன் சிறிதுநேரம் சம்பாஷித்து அவனது மனப்பான்மையைப் பரிசோதித்து அறிந்துகொண்டு அவனை நம்பலாமென்று நிச்சயித்து அவனிடத்தில் உண்மையைத் தெரிவித்தார்கள்; அவனும் வெகுவாகச் சந்தோஷித்து, மகாராஷ்டிரதேசம் மேம்படப்போகிறதைப்பற்றி மகிழ்ந்தான். புல் கட்டுகளுக்குள் கயிறுகளை ஒளித்துக் கோட்டைக்குள் கொண்டு சென்று, அவற்றின் மூலமாக மகாராஷ்டிரப் படைவீரர்களை உள்ளே ஏற்றிவிடுவதே தகுந்தமார்க்கம் என்று அக்குடியானவனும் ஒப்புக்கொண்டு, தானும் கூடவருவதாகப் புறப்பட்டான். ராஜ

மாச்சியிலுள்ள பீஜப்பூர்ப்படைகளின் குதிரைகளுக்கு எப்பொழுதும் புல் கட்டுக்கள் ஏராளமாக அவசியம். ஆதலால் எத்தனைபேர் எத்தனை கட்டுக்களைக் கொண்டுவந்து கொடுத்தாலும் அத்தனை கட்டுக்களையும் வாங்கிக்கொள்ள பீஜப்பூர்ப் படைகள் தயாராயிருந்தன. ஆதலால் அக்குடியானவன் ஒரே கல்லெறியில் இரண்டுபட்சிகளை வீழ்த்திவிடலாமென்று எண்ணினான். புல் கட்டுக்களை ஏராளமான விலைக்கு விற்றுவிடலாம்; இரண்டாவது, மகாராஷ்டிரதேசத்தை மகம்மதியக் கொடுங்கோன்மையினின்றும் விடுவிக்கின்ற பெருங் காரியத்தில் உதவி புரியும்படியான பாக்கியமும் கிடைத்தது. விடியும்வரையில் அக்குடியானவனுடைய குடிசையிலேயே ராமனும் கோபாலனும் தங்கி அவனுடன் கலந்து யோசனைசெய்து, அருணோதய சமயத்திலேயே எழுந்திருந்து மூவருமாக மூன்று கூலியாட்களின் மீதும் இரண்டு கழுதைகளின்மீதும் புல் கட்டுக்களையும் தானியக்குவியல்களையும் ஏற்றிக்கொண்டு ராஜமாச்சியை நோக்கிப் புறப்பட்டார்கள். மேற்குத் தொடர்ச்சி மலைகளுடன் ராஜமாச்சியைச் சேர்க்கின்ற பூப்பிரதேசத்தண்டையில் அவர்கள் வந்து சேர்ந்தவுடன், அவர்கள் கூலியாட்கள் சுமந்து வந்த புல் மூட்டைகளை வாங்கித் தங்கள் தோட்களிலே வைத்துக் கொண்டு, மூட்டைகள் சுமந்து இரண்டு கழுதைகள் முன்னேசெல்ல, ராஜமாச்சிக் கோட்டையின் வாசலில் வந்து சேர்ந்தார்கள்.

இவர்களுக்குக் கோட்டைக் கதவுகள் தயாராகத் திறந்து விடப்பட்டன. குடியானவன் பீஜப்பூர்ப்படைகளின் ஆகாராதிகளை மேல்பார்க்கும் உத்தியோகஸ்தருடன் புல் கட்டுக்களுக்கும் தானிய மூட்டைகளுக்கும் விலைபேசித் தீர்மானித்துப் பணத்தையும் வாங்கிக்கொண்டவுடனே,

அவ்வதிகாரியை நோக்கித் தானும் தன்னுடைய நண்பர்களும் அன்றைய இரவு கோட்டைக்குள் சயனிப்பதற்கு அநுமதி கொடுக்கும்படி கேட்டுக்கொண்டான். அப்படியே உத்தரவு கொடுக்கப்பட்டது. அக்குடியானவனும் ராமனும் கோபாலனும் அக்கோட்டைக்குள் இருந்த ஒரு சிறிய க்ஷேத்திரத்தின் குருக்கள் வீட்டிற்குச் சென்று, அங்கே படுத்து எப்பொழுது அஸ்தமிக்குமோவென்று காத்துக் கொண்டிருந்தார்கள். நன்ருக இருட்டினவுடனே, நெட்டாஜி ஏறுவதற்குக் குறிப்பிட்ட செங்குத்தான பாறையிருக்கும் இடம் சேர்ந்து காத்துக்கொண்டிருந்தார்கள். இங்கே, கழுதைகட்குக் கடிவாளமாகவும் கைப்பிடிக்கயிருகவும் கட்டி வந்த கயிறுகளையும், புல் கட்டுக்களைக் கட்டிவந்த கயிறுகளையும் சேர்த்து முடிந்து, நீளமாக ஒரு கயிறு தயார்செய்து வைத்துக்கொண்டார்கள். செங்குத்தாயிருந்த அப்பாறையே கோட்டையின் அப்பாகத்திற்கு மதிலாயிருந்தது. மகம்மதியர்கள் ஸ்ரீவர்த்தன கோட்டையிலேயே கண்ணையும் கருத்தையும் செலுத்திக்கொண் டிருந்தார்களே யொழிய, இப்பாகத்தைப்பற்றி கவனிக்கவேயில்லை. இயற்கையிலேயே செங்குத்தாக அமைந்துள்ள இப்பெரும் பாறையைக் கடந்து எவர் உள்ளே வரமுடியும்? என்று மகம்மதியர்கள் கருதினார்கள். அச் செங்குத்துப் பாறையின் ஓரத்திலே ஒரு பெரிய தேக்குமரம் வளர்ந்து செழித்துக்கொழுத்திருந்தது. அவர்கள் தயார்செய்த நீளமான கயிற்றின் ஒரு முனையை அத்தேக்கு மரத்தைச் சேர்த்துக்கட்டினார்கள்; மறுமுனையில் ஒரு கல்லைக்கட்டி அப்பாறைக்கு வெளியே பள்ளத்திலே எறிந்துவிட்டார்கள். பின்னர், அருகிலிருந்த புதர்களினிடையில் ஒளிந்துகொண்டு, சந்திரோதயமான வுடனே நடக்கப்போகின்ற விஷயத்தை மிகுந்த ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இதற்குள்ளாக, நெட்டாஜியும் அவனுடைய படைகளும் ராஜமாச்சிக்குப் பக்கத்தில் வந்து சேர்ந்துவிட்டன. நெட்டாஜி தனது படையாட்களில் எதற்கும் அஞ்சாத, இணையற்ற வீரர்களாக நூறு பெயர்களைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு, கயிறுவிடும்படி கூறி அனுப்பியிருந்த செங்குத்துப் பாறையின் அடிவாரத்திற்கு இட்டுச் சென்றான்; மற்றவர்களை கிழக்குக் கோட்டை வாசலில் போய் காத்திருந்து கோட்டைக் கதவுகளை உடைத்தெறிந்து உள்ளே நுழைவதற்குத் தயாரா யிருக்கும்படியும் இல்லாவிட்டால் சுவரேறியாவது உள்ளே குதித்துவிட வேண்டுமென்றும் உத்தரவு செய்து அனுப்பிவிட்டான்.

சூரியன் அஸ்தமனமாய், எங்கும் இருட்டானவுடனே, நெட்டாஜி செங்குத்துப் பாறையின் ஓரத்திலே கயிறு விடப்பட்டிருக்கிறதா? என்று பார்ப்பதற்கு வெகு ஆத்திரத்துடன் சென்றான். ஒருவேளை? ராமன் அவ்வழியாகக் கயிற்றை வெளியே எறிய முடியாமலிருந்தால், நெட்டாஜி வேறுயோசனை ஏதேனும் செய்யவேண்டும்; எப்படியாவது ஸ்ரீ வர்த்தன கோட்டையானது சுரங்கத்தினால் அடிபடுவதற்கு முன்னால் ராஜமாச்சி பிடிபடவேண்டும். மிகுந்த கவலையுடனும் யோசனையுடனும் கயிற்றை எதிர்பார்த்து காத்துக்கொண்டு கலங்கியிருக்கும் சமயத்திலே, கடைசியாக கயிறு கீழே இறங்குகிற சத்தம் கேட்டது; கண்டான் கயிற்றை! களித்தான் கண் தலை தெரியாமல்! கயிறு விழுந்த இடம் நோக்கிக் கிட்டச் சென்று, அக்கயிற்றை எட்டிப்பிடிக்க எத்தனித்தான். ஆனால் அங்கொரு கஷ்டம் ஏற்பட்டது. கயிறு எட்டவில்லை. வெகு தூரத்திலேயே கயிறு நின்றுவிட்டது. இவனுடைய தலைக்கு மேலே சுமார் 20-அடி தூரத்திலே கயிறு நின்றுவிட்டது. கயிறு நீளம் போதவில்லை. இதென்ன சங்கடம்? கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லை. இப்

பொழுதுதான் கண் தலை தெரியாது களித்தான்; இதே அடுத்த நிமிஷத்தில் கண் தலை தெரியாது கலங்கி ஏங்க ஆரம்பித்துவிட்டான். கயிரின் இருபது அடி நீளக் குறைவானது இவனுடைய யோசனைகளை யெல்லாம் சிதற அடித்துவிட்டது; இவன் செய்திருந்த ஏற்பாடுகளெல்லாம் பறந்துவிட்டன. இன்னது செய்வதென்று தெரியாது திகைத்தான்; தனது படைவீரர்களிற் சிலரைக் கூப்பிட்டு நடந்திருக்கும் சங்கதியைச் சொன்னான். "ஒரு குரங்கு கூட இச்செங்குத்துப் பாறையில் ஏறமுடியாது. இதிலே நம்மால் ஏறிக் கோட்டைக்குள் பிரவேசிக்க முடியுமா? அப்படி ஏறினாலொழிய நமக்கு இப்பொழுது வேறு வழியில்லை. நாம் இந்த இடத்தை விட்டு இப்பொழுது நீங்கி, கோட்டையின் கீழ்வாசலிலுள்ள பிரதான படையுடன் போய்ச் சேர்ந்துகொள்ள வேண்டும்" என்று நெட்டாஜி கூறவே, அவனுடைய படைவீரர்களுள் ஒருவன் "இதுதானா பெரிய கஷ்டம்? இதோ இதற்கு ஒரு வழி பண்ணலாம்" என்று சொல்லிவிட்டு, கூடவிருந்தவர்களில் மூவரைக் கூப்பிட்டு, ஒருவன் தோட்களின்மேல் ஒருவனாக நால்வர் ஏறிநிற்க, கயிறு எட்டிவிட்டது. இவ்விதமாக ராஜமாச்சி கோட்டையின் செங்குத்துப்பாறையின் சுவர் ஏறிக் கடப்பதற்கு மானிட ஏணியும் கயிறும் உபயோகிக்கப்பட்டது. பார்வைக்குக் கஷ்டம்போலத் தோன்றியது இப்பொழுது நிவிர்த்தியாகிவிட்டது. சந்திரோதய சமயமும் ஆய்விட்டது. ஆபத்து வருங்காலத்தி லெல்லாம் நெட்டாஜிதான் முன் நிற்பது. அவன் முன்னே சென்றான்; மற்றவர்களெல்லோரும் ஒருவர்பின் ஒருவராக மெல்லமெல்லச் சென்று செங்குத்துப் பாறையின் அடிவாரத்தில் சென்று சேர்ந்தார்கள்.

கயிற்றைப் பிடித்தார்கள்; மடமடவென்று ஒருவர்பின் ஒருவராக எல்லோரும் ஏறிக் கோட்டைக்குள்ளே நுழைந்து

விட்டார்கள்; ராஜமாச்சியின் கிழக்குச் சுவாண்டை சென்று உட்புறமாக இவர்கள் எதிர்த்தார்கள். அதே சமயத்தில் வெளியே மகாராஷ்டிரர்கள் எதிர்த்தார்கள். அடைபட்டிருந்த திரியம்பகராவும் எப்பொழுது சந்திரோதயமாகுமோவென்று எதிர்பார்த்துக்கொண்டு, தனக்கு உதவி வருமோ? வாரதோ? என்று மிகுந்த கவலையுடன் யோசனை பண்ணிக்கொண்டிருந்தான். ஆ! ஆ!! உள்ளே வெகு வேகமாக வருகின்ற காலடிச் சத்தங்களைக் கேட்டவுடனே, அவனுக்குண்டான சந்தோஷம் இவ்வளவென்று எவரால் சொல்லமுடியும்? திரியம்பகராவ் உடனே தனது ஆட்களை வெளியே புறப்பட்டு எதிரிகளையடித்து, தங்களுக்கு உதவி செய்ய வந்தவர்களுக்கு உதவி செய்யும்படி உத்தரவு கொடுத்துவிட்டான். இரை அகப்படாத புலிகள்போல இது வரை காத்துக்கொண்டிருந்த திரியம்பகராவினுடைய படை வீரர்கள் மிகுந்த ஆவேசத்துடன் மகம்மதியப் படைகளின் மீது பாய்ந்து, ஒரு நூறு கஜதூரம் வரையில் துரத்தியடித்துவிட்டார்கள். மகம்மதியப்படை திடுக்கிட்டுவிட்டது. உள்ளேயும் வெளியேயும் இருபுறமும் தாக்கப்படவே, மகம்மதியர்கள் நிலைகலங்கி ஓடத்தொடங்கினார்கள். கோட்டைக் கதவு திறந்துவிடப்பட்டது; மகாராஷ்டிரப்படைகள் வெளியேயிருந்து உள்ளே நுழைந்து குவிந்துவிட்டார்கள். எங்கு பார்த்தாலும் யுத்தபேரிகை முழங்கிற்று; பீஜப்பூர்ப் படைவீரர்கள் தீவர்த்திகளைக் கொளுத்திக்கொண்டு, யுத்த உடை தரித்து ஆயுதங்கள் தாங்கி அங்கும் இங்குமாகத் தயாரானார்கள். எங்கு பார்த்தாலும் ஏகக் குழப்பமாயிருந்தது. எதிரியிருக்கும் இடமே தெரியாமல், மகம்மதியர்கள் திகைத்து நின்றார்கள்; இன்னும் அச்சமயத்திலே தலைமை வகிப்பதற்கு ஆட்களில்லாமல், மகம்மதியர்கள் கூட்டம் கூட்டமாகக்கூடி குலைந்து நின்றார்கள். நெட்டாஜியின்படை மகம்மதியர்களை

ஓட ஓட அடித்துக்கொண்டு, மெல்ல மெல்ல ஸ்ரீவர்த்தன கோட்டையை சமீபித்தது. இதற்குள்ளாக திரியம்பகாரவும் அவனுடைய ஆட்களும் மகம்மதியக் கூட்டங்களுக்கு நடுவே அகப்பட்டுக்கொண்டார்கள்; மகம்மதியர்களிடம் அபயமடைந்து விடும்படியாக ஆபத்து நேரிடும்போ லிருக்கிறது. நெட்டாஜியின் படை உதவிக்கு சமீபத்தில் வருவதற்கு முன்னேயே, திரியம்பகாவ் தனது படையை வெளியே புறப்படும்படி உத்தரவு கொடுத்தது பெருந் தப்பிதம். நெட்டாஜியும் அவனுடைய படையும் ஸ்ரீவர்த்தனத்திற்குச் சமீபத்தில் வரவே, மகம்மதியர்கள் ஓடி, திறந்திருந்த ஸ்ரீவர்த்தன கோட்டையின் வாசலுக்குள்ளே நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டார்கள். மற்ற மகம்மதியர்களில் அநேகர் சரண்புகுந்தார்கள்; அநேகர் கொல்லப்பட்டார்கள்; அநேகர் ஓடி ஒளிந்தார்கள்; சிலர் செங்குத்துப் பாறையின் வழியாக விழுந்து செத்துக்கிடந்தார்கள். என்ன ஆச்சரியம்! மேலே இருந்த கை கீழாய்விட்டது. மகம்மதியர்கள் ஸ்ரீவர்த்தன கோட்டையை வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ராஜமாச்சியின் மற்றப் பாகங்களெல்லாம் மகாராஷ்டிரர்களின் வசமாய்விட்டது. மகாராஷ்டிரர்கள் ஸ்ரீவர்த்தன கோட்டைக்குள் ளிருந்துகொண்டு நெடுங்காலம் எதிர்த்து நின்றதுபோல, இப்பொழுது மகம்மதியர்களும் எதிர்த்து நெடுங்காலம் தள்ளலாம். அதுபோலவே, மகாராஷ்டிரப்படை அக்கோட்டை வாசலைத் திறக்கமுயன்றபொழுது, மகம்மதியர்கள் மகாராஷ்டிரர்களைப் பெரும்பாடுபடுத்திவிட்டார்கள்; நெட்டாஜியின் காலிலேயே ஒரு ஈட்டி வந்து விழுந்து, ஒரு பெரிய ரணக்காயம் உண்டுபண்ணிவிட்டது. இப்பொழுது ஸ்ரீவர்த்தன கோட்டையைப் பிடிப்பது எப்படியென்பது பெருத்த யோசனைக்கிடம் கொடுத்துவிட்டது. நெட்டாஜி நெடுநேரம் நிலைகலங்கி யோசனைசெய்தான்.

கடைசியில் ஒரு யோசனை தோன்றிற்று. மகம்மதியர்கள் தயார் செய்த சுரங்கம் எங்கேயென்று நெட்டாஜி விசாரணை செய்தான். சென்று பார்த்தபொழுது, அச்சுரங்கமானது தயாராக இருக்கிறது, மருந்துவைத்துக் கொளுத்தவேண்டியதுதான் பாக்கி. மறுநாட்காலையில் அச்சுரங்கத்தைக் கொளுத்தி விடுவதற்கு ஹபீஸ்கான் தீர்மானித்திருந்தான். இன்னும் பன்னிரண்டு மணிநேரம் பொறுத்து நெட்டாஜி வந்திருப்பானேயானால், ஸ்ரீவர்த்தன கோட்டை மகம்மதியர்களின் வசமாய்விடும். நல்ல வேளையாய் நெட்டாஜி முன்னதாகவே வந்துவிட்டான். இப்பொழுது நெட்டாஜி ஸ்ரீவர்த்தன கோட்டைக்குள்ளிருக்கும் பீஜப்பூர்ப் படைகளைச் சரண்புகுந்து விடும்படிக்கும் இல்லையேல் அவர்கள் தயார்செய்த சுரங்கத்தை அவர்களுக்கே ஆபத்து வரும்படி கொளுத்தி விடுவதாயும் பயமுறுத்திச் சொல்லியனுப்பினான். அம்மகம்மதியர்களுக்கு மண்டையில் மூளையில்லை; களிமண்தான் இருந்தது. அவர்கள் நெட்டாஜியின் உத்தரவுக்குக் கீழ்ப்படியவில்லை. சுரங்கத்தில் மருந்து வைத்து நெருப்புக் கொளுத்தும்படி உத்தரவு செய்துவிட்டான் நெட்டாஜி; பாறையும் மதில்களும் துகள் துகளாக்கப்பட்டன; மகாராஷ்டிரர்கள் உள்ளே நுழைந்து மகம்மதியர்களைச் சிறை பிடித்துவிட்டார்கள். ராஜமாச்சி மகாராஷ்டிரர்களின் வசம் ஆய்விட்டது.

# அத்தியாயம்—18.

## சிவாஜிக்கு ஒரு ஆபத்து

கலியாண நகரும் ராஜமாச்சியும் பிடிபட்டது சிவாஜிக்கு வடகொங்கணத்தையும் பீமநதிக்கும் நீரா நதிக்கும் இடையிலுள்ள தட்சிணதேசப் பிரதேசத்தையும் உட்படுத்திவிட்டது. டோர்ண கோட்டையில் கிடைத்த புதையல் திரவியத்தினலும் காலபுரத்தில் கிடைத்த கஜான திரவியத்தினலும் சிவாஜி ராஜகட்டத்தைப் பலப்படுத்தி பாாக்கிரமம் மிகுந்த காலாட்படையொன்று, குதிரைப்படையொன்று தயார் செய்தார். ஆனல் கொஞ்ச காலம் அவர் பீஜப்பூர் சமஸ்தானத்தைத் தொந்தரை செய்யாமல் சும்மாயிருந்துவிட்டார். பீஜப்பூர் நவாப்பாகிய மகம்மத் அடில்ஷா என்பவன் சிவாஜியின் பிதாவாகிய ஷாஜியை சிறைபிடித்து பீஜப்பூரில் வைத்துக்கொண்டிருந்தான்; சிவாஜி செய்யும் காரியங்களுக்கு அவரை எங்கே உத்தரவாதியாக்கி தண்டனை செய்வானே என்று சிவாஜி பயந்து கொஞ்சநாள் சும்மாயிருந்தார். தமது பிதாவை அடில்ஷா விடத்திலிருந்து விடுவிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் சிவாஜி டில்லி பாதுஷாவுடனும் கடிதப் போக்குவரவு செய்துகொண்டிருந்தார். ஆனல் சிவாஜி சும்மா இருக்கவில்லை; தமது படைகளை பலப்படுத்திக்கொண்டும் விருத்தி செய்துகொண்டும் தம்முடைய முயற்சியில் சேராமல் இன்னும் மகம்மதியர்களின் சார்பாகவே இருந்த இந்து அரசர்களை எப்படியேனும் தம் பக்கம் சேருமாறு தூண்டிக்கொண்டும் இருந்தார். இப்பொழுது சிவாஜிக்குச் சொந்தமாய்விட்ட பிரதேசத்துக்குத் தெற்கே ஜாவளி என்று ஒருநகரம் இருந்தது. இந்நகரம்

இப்பொழுது பம்பாய் அரசாங்கத்தார் கோடைகாலத்தில் குளிர்ச்சி வேண்டிச் செல்கின்ற மகாபலேஸ்வரம் என்னும் மலை நகருக்கு மூன்றுமைல் தூரத்தில் இருக்கிறது. இந்நகர அரசன் மகாராஷ்டிர தேசத்திலே சீரும் செல்வாக்கும் மிகுந்து மகா பராக்கிரமசாலியா யிருந்தான்; இவனிடத்தில் பெரும்படை யிருந்தது. இவ்வரசன் மாத்திரம் பீஜப்பூருக்கு விரோதமாகக் கிளம்புவானானால், சிவாஜியின் பக்கம் சேர் வானானால், பீஜப்பூர் சமஸ்தானம் மிக மிகச் சிறுத்துவிடும்; இந்நகர அரசன் பெயர் சந்திரராவ். இவனுடைய குடும்பத்தார் நெடுநாட்களாக, தலைமுறை தலைமுறையாக பீஜப்பூர் சமஸ்தானத்தினிடத்தில் விசுவாசம் மிகுந்திருந்தார்கள்; இவனும் அவ்விசுவாசத்திற்கு துரோகம் செய்ய விரும்ப வில்லை; ஏழு தலைமுறையாக இடைவிடா திருந்த நட்பிற்கு பங்கம் செய்துகொள்ள இவன் துணியவில்லை. இவ்வரசனை எப்படியாவது கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டு மென்று சிவாஜி தீர்மானித்து நெட்டாஜியை வரவழைத்து யோசனை செய்தான். இதற்குள்ளாக நெட்டாஜி காசி பாயைக் கலியாணம் செய்துகொண்டு இரண்டு மூன்று வருஷங்களாயிற்று; ஆநந்தகரமாகக் காலங் கழித்து வருகிறான். தனது சவுக்கம் என்ற பழைய கிராமத்திலே, தனது சொந்த வீட்டிலே, தனது சொந்த உற்றார் உறவினருடனே, சுகமாகக் காலம் கழித்து வருகிறான். ஆனால் சமயம் நேர்ந்த பொழுது, சிவாஜி இவனுடைய உதவியை நாடுகின்ற பொழுது, மகாராஷ்டிர தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதற்குத் தயாராகத்தான் இருந்தான்; அவனுடைய பத்தினியாகிய காசிபாய் இவ்விஷயத்தில் இவனைவிட உற்சாகம் மிகுந்தவள் தானே. ஆகையால் இப்பொழுது சிவாஜி நெட்டாஜியை ராஜ கட்டத்திற்குக் கூப்பிட்டனுப்பிய பொழுது, அவன் உடனே அவ்வுத்தர

வுக்குக் கீழ்ப்படிந்து, ஆயுதங்கள் தாங்கி அரபிக் குதிரையேறி வீட்டினின்றும் புறப்பட்டு, சிவாஜியினிடம் வந்து சேர்ந்தான். ஆனால் இப்பொழுது சிவாஜி நெட்டாஜியை யுத்தம் செய்யச்சொல்வதற்கு அழைக்கவில்லை; ஜாவளி யரசனிடத்திற்கு அனுப்பி அவனை எப்படியாவது கைக்குள் போட்டுத் தம் பக்கம் சேருமாறு செய்வதற்கு அனுப்பினான்.

நெட்டாஜி நயத்திலும் பயத்திலும் சிவாஜியின் பெருமையைச் செப்பியும் தேசாபிமான உணர்ச்சியைக் கிளப்பியும் சந்திராவை வசப்படுத்தப் பார்க்கவேண்டும்; இன்னும் சந்திராவ் தனது பெண்ணை சிவாஜிக்குக் கலியாணம் செய்து கொடுப்பானா? என்பதைப் பற்றியும் மெல்ல அறிந்து கொள்ளவேண்டும். சந்திராவ் அப்படி தனது பெண்ணை விவாகம் செய்து கொடுப்பானானால் சிவாஜிக்கும் சந்திராவுக்கும் பலமான பந்தம் ஏற்பட்டுவிடு மல்லவா? இதெல்லாம்தான் இப்பொழுது நெட்டாஜி செய்யவேண்டிய வேலை. இச்சங்கதிகளை சிவாஜியினிட மிருந்து கேட்டுக் கொண்டும், 25-குதிரை வீரர்களைத் துணையாக இட்டுக் கொண்டும், விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் பல எடுத்துக்கொண்டும் நெட்டாஜி ஜாவளி நகரை நோக்கிப் புறப்பட்டான்.

சந்திராவ் நெட்டாஜியை மிகுந்த மரியாதையுடன் வரவேற்கும்படி ஏற்பாடு செய்து, அன்று பிற்பகலில் தனது கொலு மண்டபத்திற்குக் கூட்டிக்கொண்டு வரும்படி சொல்லி யனுப்பினான். நெட்டாஜிக்கு இவ்வரசனைத் தனியே கண்டு பேசவேண்டுமென்று விருப்பம். ஆனால் சந்திராவ் கட்ட நடுச் சபையிலேதான் நெட்டாஜியைப் பார்ப்பதென்று வைத்துக்கொண்டான். கொலு மண்டபத்திலே, அரசனுக்கு இரு புறத்திலும் அரசனுடைய இரண்டு புத்திரர்கள்,

அவனுடைய மந்திரியாகிய ஹிம்மத் ராவ், பீஜப்பூர் சமஸ்தானத்திலிருந்து தூது வந்திருந்த பாஜிஷாம் ராஜ் என்பவன் முதலியோர் வீற்றிருந்தார்கள். நெட்டாஜியைக் கூப்பிட்டுக் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கச் செய்தவுடன், ஒரு கூட்டம் அழகிய தாசிகள் பலவித நடனங்கள் செய்து சபையை ரமிக்கச் செய்தனர்.

நெட்டாஜி எத்தனையோ தரம் அவ்வரசனைத் தனியே கண்டு பேசவேண்டுமென்று சொல்லி யனுப்பியும், அவ்வரசன் தனியே காண முடியாதென்று சொல்லவும் செய்யாது, இன்று நாளையென்று ஏமாற்றிக் கொண்டே வந்தான். ஆனால் நெட்டாஜி எப்பொழுதும் குதுகலமா யிருக்கும்படி வேண்டிய ஏற்பாடுக ளெல்லாம் செய்யப்பட்டிருந்தன. மகா பலேச்வா மலையிலே, கிருஷ்ணா பாய் க்ஷேத்திரத்தினருகே ஒரு பெரும் பாறையில் 5-பிளவுகள் இருக்கின்றன. அப்பிளவுகளினின்றும் 5-நதிகள்—கிருஷ்ணா, கொயினா, என்னா, காயித்திரி, சாவித்திரி என்னும் பெயருடைய நதிகள்—உற்பத்தியாகிச் சலசலவென்று சப்தித்துக் கொண்டு செல்கின்றன. நெட்டாஜியை அரசனுடைய மந்திரிகள் இவ்விடத்திற்கு இட்டுச் சென்று களிக்கச் செய்தார்கள். அரசனுடைய மந்திரிகளுடனாவது, பிள்ளைகளுடனாவது, தனியாகவாவது நெட்டாஜி அம் மலைப்பிரதேசத்திலே சுற்றித் திரிந்து, ரமணீயகரமான காட்சியைக் கண்டு களிப்பான். இது மாத்திரம் அல்ல, இன்னும் அவனுக்கு நேரம் போவது தெரியாமல் இருக்கும்படி அம்மலையிலே ஏராளமாக மிகுந்திருந்த புலி, காடிகளை வேட்டையாடி விளையாடும்படிக்கும் அவ்வரசன் ஏற்பாடு செய்திருந்தான். ராஜமாச்சி பிடிபட்டதற்குப் பின் நெட்டாஜி தனது ஆயுதங்களை தாராளமாக உபயோகிப்பதற்கு சமயம் கிடைக்

காது தவித்துக் கொண்டிருந்தான். இவன் வேட்டையாடி காட்டு மிருகங்களைக் கொன்றது எல்லாக் குடியானவர் களுக்கு எவ்வளவோ நன்மையா யிருந்தது; ஏனென்றால் காட்டு மிருகங்கள் கேள்விமுறை யில்லாமல் ஆடு மாடுகளை யடித்துக் கொன்றுகொண் டிருந்தன.

ஒருநாள் நெட்டாஜி அரைக் கச்சையிலே தொங்கு கின்ற வாளுடனும், கையிலே ஈட்டியுடனும் மகாபலேச்வா மலைகளின் தென்புறத்திலே உலாவிக்கொண் டிருந்தான்; அப்பொழுது திடீரென்று ஒரு பிராமணன் ஓடோடி வந்து நெட்டாஜியின் எதிரில் நின்றான்; நெட்டாஜி அவனை முன் னொரு தரம் எங்கேயோ பார்த்ததுபோல் ஞாபகம் வந்தது. நினைத்து நினைத்துப் பார்த்து, மகா பலேச்வாத்திலே பூஜை செய்கின்ற பிராமணர்களுள் இவன் ஒருவனென்று நெட்டா ஜிக்கு நினைப்பு வந்தது. எதிரிலே வந்து நின்ற பிராமணன் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, மகாபலேச்வா கிராமத்திற் கும் நெட்டாஜியைக் கண்ட இடத்திற்கும் நடுவேயுள்ள ஏழு மைல் தூரம் ஓடிவந்த சிரமத்தினால் களைத்து பேசமுடியாது நாக்குழற, "ஏன் நீ இங்கே சுற்றிக்கொண்டிருக்கிறாய்? உனது அரசனாகிய சிவாஜி ஆபத்திற் குட்பட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது நீ இப்படி திரிந்து கொண்டிருத் தல் யோக்கியதையோ? நலமோ?" என்று சொன்னான். "எனது அரசன் சிவாஜி ஆபத்திற் குட்பட்டிருக்கிறா னென்று உனக்கு எப்படித் தெரியும்? எவர் சொன்னவர்? நீ சொல்வது உண்மை யென்று வைத்துக்கொண்டாலும் இவ்வளவு தூரத்திலிருக்கும் நான் எனது அரசனுக்கு எவ் விதமாக உதவிசெய்ய முடியும்?" என்று நெட்டாஜி கேட்க, பிராமணன் "நான் எப்படி தெரிந்துகொண்டா லென்ன? நாம் வெகு வேகமாக இப்பொழுது செல்லவேண்டும். அபா யம் அவரை அணுகுவதற்கு முன்பாக, நாம் விரைந்து

செல்லவேண்டும். நாம் அங்கு சென்றவுடனே, நேரமிருந்தால், நான் அறிந்ததையெல்லாம் சொல்கிறேன்'' என்று கூறி, நெட்டாஜியை இட்டுக்கொண்டு மலைப்பாதை வழியே மேற்கு முகமாக அதிவேகமாக ஓடினான். ஒன்று அல்லது இரண்டு மைல் சென்றவுடனே, அபாயம் நேரிட விருக்கும் இடத்திற்கு வந்துவிட்டார்கள். அங்கே ஒரு குடியானவன் இவர்களைக் கண்டு சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்னர்தான் இருபது முப்பது பேர் ஆயுதபாணிகளாக அவ்வழியே சென்றார்களென்று கூறினான். இவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள்; எவரும் புலப்படவில்லை.

''அவர்கள் அதோ அந்தக் காட்டில் ஒளிந்துகொண்டிருக்கவேண்டும்; அதோ, அதற்கப்புறம் இரண்டு மைல் தூரத்தில் இன்னொரு கூட்டம் ஜனங்கள் போகிறார்களே, அவர்கள் சிவாஜியும் அவருடைய ஆட்களும்போலத் தோன்றுகிறது. அவர்களுக்கு இப்பொழுது எச்சரிக்கை செய்யாவிட்டால், அவர்கள் அனைவரும் இறந்தவர்களேயென்பதில் சந்தேகம் இல்லை'' என்று பிராமணன் கூறவும், இருவரும் வெகு வேகமாக பாறைகளையெல்லாம் தாண்டித் தாண்டிக்கொண்டு ஒளிந்திருந்தவர்களின் கண்களுக்கும் அகப்படாமல் வெகு வேகமாக ஓடினார்கள். ஆயினும், சிவாஜிக்கு வழியிலே சிறிது தாமதம் நேரிடாமல் நேரே வந்திருந்தால், நெட்டாஜியால் அவருக்கு எவ்வித உதவியும் செய்யமுடியாது போயிருக்கும்; அவருக்கும் ஆபத்து நேரிட்டிருக்கும். ஒரு சிறிய பெண்ணும் பையனும் சிவாஜி வந்தவழியே விளையாடிக்கொண்டிருந்தார்கள். சிவாஜியினுடைய குதிரை வீரர்களுள் ஒருவனுடைய குதிரை அப்பெண்ணைக் கீழே தட்டிவிட்டுப் போய்விட்டது. அப்பெண் தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தாள். சிவாஜி சட்டென்று குதிரையினின்றும் கீழே குதித்து அப்பெண்ணருகே வந்து

அவளுக்குத் தேறுதல் கூறித் தமது சட்டைப் பொத்தான்களில் ஒன்றைக் கழற்றிக் கொடுத்து விட்டு அப்புறம் போனார். இதனால் சிறிது நேரம் தாமதப்பட்டது. இப்படி தாமதித்ததினாலேயே நெட்டாஜி சமயத்தில் வந்து சேரும்படி நேர்ந்தது.

நெட்டாஜியும் அப்பிராமணனும் அடியிலே மறைந்து மறைந்து சென்றுகொண் டிருக்கையில், பாதையினருகேயுள்ள புதர்களில் சிலர் ஒளிந்திருப்பதைக் கண்டார்கள். ஒளிந்திருந்தவர்கள் வில்லுகளில் நாணேற்றி எய்வதற்குத் தயாரா யிருந்தார்கள். இவர்களின் நடுவே, பாஜி ஷாம் ராஜ் என்னும் பெயருடைய பீஜப்பூர் தூதன் நின்றுகொண் டிருந்தான். அவன் கையில் ஒரு பெரிய துப்பாக்கி வைத்துக்கொண் டிருந்தான். அவர்கள் செய்ய நினைத்திருக்கும் வேலையானது அவர்களுக்கு நரம்பு நடுக்கத்தை யுண்டாக்கி விட்டது. சிவாஜியைக் கொல்வதற்கு அல்லது பிடிப்பதற்கு என்று இவர்கள் கொண்டுவரப்பட் டிருந்தார்கள். அக்காலத்திலே சிவாஜியை ஹிந்துக்கள் அனைவரும் அவதார புருஷனென்றே நினைத்தார்கள். இப்பொழுது அவரைப் பிடிக்க வந்திருப்பவர்களும் ஹிந்துக்கள் தானே. அதனால் அவர்களுக்கு அவர்களுடைய எண்ணம் நடுக்கத்தை யுண்டாக்கிவிட்டது. பாஜி ஷாம் ராஜ் அவர்களைப் பார்த்து "அதோ வருகிறான் சிவாஜி. என்னுடைய துப்பாக்கியினின்றும் கிளம்பும் நெருப்புக்கு அவன் தப்பிவிடுவானானால், அவன் அவதார புருஷனே" என்று சொல்லி தனது துப்பாக்கியை நேரே குறி வைத்து, மற்றவர்களும் அம்புகளெய்யும்படிக்கும் பின்னர் ஓடிச் சென்று, சிவாஜி மரிக்காத விஷயத்தில் அவரைக் கட்டிப் பிடித்துவிடும்படிக்கும் உத்தரவு செய்தான். ஆய்விட்டது, பாஜி ஷாம் ராஜ் துப்பாக்கியை தோளுக்கு நேரே நிறுத்திச் சுடப்போகிறான்.

சிவாஜிக்கு ஒன்றுமே தெரியாது. இச்சமயத்திலே எங்கிருந்தோ ஒரு ஈட்டியானது திடீரென்று பாய்ந்து பாஜி ஷாம் ராஜினுடைய முதுகைத் துளைத்து மார்பின் வழியாக ஊடுருவிச் சென்றது. அவன் விழுந்து உடனே இறந்தான்; அவனுடன் வந்தவர்கள் "ஐயோ, அப்பா" என்று கூச்சலிட்டுக் கொண்டு மூலைக்கொருவராக ஓடினார்கள். நெட்டாஜி ஈட்டி யெறிந்ததை எவரும் பார்க்கவில்லை. ஆதலால் பவானி தேவியின் அருளே சிவாஜியை இப்பொழுது காப்பாற்றிற்றென்றும் பவானிதேவியே பாஜி ஷாம் ராஜைத் தண்டித்துக் கொன்றுளென்றும் அவர்கள் நம்பினார்கள்.

நெட்டாஜியும் பிராமணனும் ஓடிவந்து சிவாஜியைக் கண்டு வாழ்த்தினார்கள். பிராமணன் கடைசியாகத் தான் ரகஸியமாக அவ்வூரில் தேச முன்னேற்றத்தை முன்னிட்டு ஏற்படுத்தப்பட் டிருக்கும் சபையில் ஒரு அங்கத்தினனென்றும், பாஜி ஷாம் ராஜியினுடைய இவ்வெண்ணம் தன்னுடைய ஒரு சிநேகிதனால் தனக்குத் தெரிய வந்ததென்றும் கூறினான். சிவாஜி அப்பிராமணனை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து வந்தனங்கள் செய்துவிட்டு, நெட்டாஜியைக் கட்டியணைத்துக்கொண்டு "உனக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்? இருக்கட்டும். என்னைக் காத்து ரட்சிக்கும் பவானி மாதா உன்மீது அருள் மழை பொழிவாள். இப்பொழுது இவ்விதமாக ஒன்றும் நடவாததுபோல, நீ ஜாவளி நகருக்குச் சென்றுவிட வேண்டும். அவ்வரசனுடன் பகிரங்கமாகப் போர் ஆரம்பிப்பதற்கு இது சமயமன்று. அவனுக்குத் தகுந்த தண்டனை விதிப்பதற்கு சமயம் சீக்கிரத்தில் வரும்" என்றார். நெட்டாஜி "அவ்வரசன் செய்த மோசத்தை என்முகம் வெளிக் காட்டிவிடும். அவன்மீது எனக்கு உண்டாகும் கோபத்தை என்னால் அடக்க முடியவில்லையே" என்று சொல்ல, சிவாஜி "உண்மைதான்; உன்

னுடைய நேர்மைக் குணமானது முன் வந்து நிற்கின்றது. நீ கபடமாகக் காரியங்கள் சாதித்துக் கொள்வதற்குத் தகுந்தவன் அல்லன். ஆயினும், சின்னாட்கள் வரை பொறுத்துக் கொண்டிரு" என்று சொல்லி நெட்டாஜியை அனுப்பி விட்டு, சிவாஜி சென்றார்.

---

## அத்தியாயம்—19.

### நெட்டாஜிக்கு நேர்ந்த விபத்து

ஜாவளி நகரிலே இருந்த நெட்டாஜிக்குப் பதிலாக, சிவாஜி ரகுவள்ளல் என்னும் பெயருடைய ஒரு பிராமணன் நெட்டாஜியை அவனுடைய கிராமத்திற்கு செல்லும்படியாகவும் வேண்டிய பொழுது வரவழைத்துக் கொள்வதாகவும் சிவாஜி சொல்லி அனுப்பினாரென்று கூறி நெட்டாஜியின் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டான். நெட்டாஜி தனக்குத் துணையாக வந்திருந்த இருபத்தைந்து குதிரை வீரர்களையும் அப்பிராமணனுக்கு துணையா யிருக்கும்படி நிறுத்திவிட்டுத் தன்னுடைய அரபிக் குதிரையின் மீதேறி தனது கிராமம் நோக்கித் தனியே சென்றான். பாஜி ஷாம்ராஜினுடைய குமாஸ்தா தனது எஜமானன் மரித்ததற்குப் பதிலாக நெட்டாஜியைக் கொன்றுவிடுவது அல்லது சிறை பிடித்து அடைத்து விடுவதென்று தீர்மானித்துக்கொண்டு, ஆறு குடியர்களுக்கு நிரம்பக் குடிக்கக் கொடுத்து, கைநிறையப் பணமும் கொடுத்து நெட்டாஜியின்மீது பாயும்படி ஏவிவிட்டிருந்தான். இப்பொழுது நெட்டாஜி தனியே சென்றுகொண் டிருந்தான்; இது நல்ல சமயம். நெட்டாஜியை இவ்வறுவரும் பின் தொடர்ந்து சென்றார்கள். நெட்டாஜி மலையின்மீதேறிக் கீழே யிறங்கி,

நெட்டாஜி சரித்திரம்

ஒரு குளிர்ந்த மாந்தோப்பினூடே செல்கின்ற ஒரு சிறு... றின் கரையிலே பகல் போசனம் செய்யும் பொருட்டு உட கார்ந்தான். குதிரைக்குத் தண்ணீர் காட்டிவிட்டு, தானும் போசனம் செய்து பாறையினின்றும் கொந்தளித்துக் கிளம்பி வருகின்ற ஊற்றுத் தண்ணீரில் ஒருவாய் குடித்துத் தாகசாந்தி செய்து கொள்ளலாமென்று குனிய, உடனே அவ்வூர் குடியர்களும் திடீரென ஓடிவந்து, அவன் கத்தியை உருவுவதற்கு முன்பாக அவன் கைகளைப் பின்னுக்குச் சேர்த்துக் கட்டிவிட்டார்கள். அவனுடைய ஆயுதங்களை அவனிடத்திலிருந்து பிடுங்கிவிட்டு, பின்புறமாகக் கட்டிய கைகளுடன் அவனை குதிரையின்மீது ஏற்றிக் கொண்டு சென்றார். மகா பலேச்வர மலையைச் சுற்றி எவரும் செல்லாத காட்டுப் பாதைகளின் மூலமாக அவனைக் கொண்டுபோனார்கள். நெட்டாஜி பிடிபட்டது சிவாஜியினுடைய காதுகளுக்கு—முடியுமானால் எட்டக்கூடாது என்பது இவர்களது விருப்பம். ஆதலால்தான் இவர்கள் அவனைக் காட்டுப் பாதையின் வழியாக இட்டுச் சென்றார்கள். நெட்டாஜியின் சங்கதி வெளியே எவருக்கும் தெரியவில்லை. சிவாஜி நெட்டாஜியைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த பொழுதிலும், அவன் கதியாதாயிற்று என்று தெரிந்து கொள்ள எவ்வாற்றானும் முடியவில்லை.

சத்தாரா நகருக்கு அவனைக் கொண்டு சென்றவுடன், எவரும் அவனைப் பார்க்கக்கூடாதென்று அவனுடைய முகத்தைத் துணிகொண்டு மூடி, அந்நகருக்கு தெற்கே ஆயிரம் அடி உயரத்தில் கிளம்பி நிற்கின்ற குன்றின்மீது கட்டப்பட்டுள்ள கோட்டைக்கு இட்டுச் சென்றார்கள். நெட்டாஜி பீஜப்பூர் ஸமஸ்தானத்திற்கு விரோதமாகக் கிளம்பியவனென்று குற்றஞ் சாற்றப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டான். வெளியுலக விஷயமே ஒன்றும் தெரியாதபடி

..க மாதங்கள் இவன் கைதியாக வைக்கப்பட்டிரு
..தான். வெளியே நடக்கும் ஆச்சரியகரமான சம்பவங்க..
ஒன்றும் அவன் அறியான். நெட்டாஜிக்கு பதிலாக ஜாவளி
நகருக்குச் சென்ற ரகுவள்ளல் என்பவன் ஜாவளி அரச..
னுடன் தனித்துப் பேசிக்கொண்டிருந்த பொழுது அரச..
னைக் குத்திக் கொன்றுவிட்டான்; அதே சமயத்தில் ஸாம்..
பாஜியென்பவன் அரசனுடைய சகோதரனைக் கொன்..
விட்டான். இதையெல்லாம் ஏற்பாடு செய்து வைத்..
சிவாஜி மகா பலேச்வாத்திலே பெரும் படைகளைச் சேர்த்..
வைத்திருந்து, மேற்படி கொலைகள் நடந்து ஜாவளி நகரி..
குழப்பம் மிகுந்திருந்த சமயத்திலே, அந்நகரின்மீது சென்று
அவ்வரசனுடைய பிள்ளைகளையும் மந்திரியாகிய ஹிம்மத்
ராவையும் தோற்கடித்து அந்நகரைக் கைவசப்படுத்திக்
கொண்டுவிட்டார். இப்பொழுது ஜாவளி நகர்ப்படையும்
சிவாஜியினுடையதாய் விட்டது. இந்த சங்கதியொன்றும்
நெட்டாஜிக்குத் தெரியாது. பிரதாப கட்டம் என்னும்
பெயருடன் பிரமாண்டமான கோட்டையொன்று கட்டப்
பட்டது. இதுவும் நெட்டாஜிக்குத் தெரியாது. நெட்ட..
வேலையொன்று மில்லாமல் வீணாகக் காலம் கழி..
பற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருந்த பொழுதிலும்
னுடைய சரீர ஆரோக்கியத்துக்குக் குறை வொ..
நேரிடவில்லை. கோட்டைச் சுவர்களின்மீது தினந்..
ஒருமணி நேரம் உலாவி வருவதற்கு அவனுக்கு ..
கொடுக்கப்பட்டிருந்தது. தவிர, அவன் அடைபட்..
அறையிலேயே தினந்தோறும் அவன் கஸரத், பஸ்..
லிய சரீராப்பியாசம் செய்துகொள்வான். இம்மாதி..
ஆரோக்கியமும் கட்டும் குறைவுபடாதபடி ஜாக்கிர..
சரீரத்தைக் காப்பாற்றிக்கொண்டு வந்தான். நெட்டாஜி
சிறை அதிகாரிகள் கொடூரமாக நடத்தவில்லை; அன்பு